சுவேதாசுவதரம்
(உபநிடதம்)
மூலமும் உரையும்

உரை

ஏழாலை ஐ. பொன்னையா

குமரன் புத்தக இல்லம்

சுவேதாசுவதரம்
(உபநிடதம்)

மூலமும் உரையும்

உரை

ஏழாலை ஐ. பொன்னையா

பரிசோதித்துப் பதிப்பித்தது

ஏழாலை சி. முருகவேள்

குமரன் புத்தக இல்லம்

கொழும்பு – சென்னை

2007

வெளியீட்டு எண் : 000

சுவேதாசுவதரம்: உபநிடதம்: மூலமும் உரையும்

– உரை: ஏழாலை ஐ. பொன்னையா

பதிப்பு: ஏழாலை சி. முருகவேள்

பதிப்புரிமை © :2007

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12, தொ.பே. 2421388, மி. அஞ்சல் : kumbh@sltnet.lk
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை – 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12,

Svetasvatara Upanidatham : Mulamum Uraiyum

- Commentary by Ealalai I. Ponnaiya

Edited by S. Murugaverl

Copyright : © 2007

Published by **Kumaran Book House**
- 361,1/2 Dam Street, Colombo -12, Tel. - 2421388, E.mail : kumbh@sltnet.lk
- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by **Kumaran Press (Pvt) Ltd.**
- 361,1/2 Dam Street, Colombo -12

ISBN 978 - 955 - 659 - 000 - 0

All rights reserved. No part of this book may be reproduced, translated, stored in a retrieval system, or transmitted in any form or by means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior written permission from the Author or the Publisher.

ஓ, ருத்திரமூர்த்தியே,

எங்களுடைய புத்திரர்களையும்,
சந்ததியையும்,
பசுக்களையும்,
ஆயுளையும்,
குதிரைகளையும் துன்புறுத்தவேண்டாம்

கோபம் கொண்டு
எங்கள் வீரர்களைக் கொல்ல வேண்டாம்

எஞ்ஞான்றும் அவிசை எந்தியவர்களாய் உம்மை
அழைத்து வணங்குகின்றோம்

- சுக்ல யசுர், xvi, 9
சுவே. உபநி. iv, 22

உள்ளுறை

	Forword	viii
	அறிமுகம்	x
	பதிப்புரை	xv
	முன்னுரை	xvii
1.	முதலாம் அத்தியாயம்	02
2.	இரண்டாம் அத்தியாயம்	37
3.	மூன்றாம் அத்தியாயம்	70
4.	நான்காம் அத்தியாயம்	97
5.	ஐந்தாம் அத்தியாயம்	127
6.	ஆறாம் அத்தியாயம்	148
	அனுபந்தம்	161
	குறிப்புகள்	168
	நூற்பட்டியல்	182

Forword

In our villages, we use the word Om frequently in our everyday speech. It is always there almost as a manner of speech. Our elders for any question start answering with an Om. If there is a knock on the door, in Tamil culture, the door is opened with Om yar athu - Yes, who is that?

Yogar Swami, the sage of north Srilanka says, "Athu is That", that which is in everything, activating everythink- the imperishable, the Eternal. For this question who is 'That', Svetasvatara offers an answer.

He pervades all directions in their entirety. He is the first born. He has entered the womb. He alone is born and is to be born in the future. He is inside all persons, as the indwelling self, facing all directions. Salutations to Him who is in the fire, Who is in the plants, Who is in the trees, Who has persvaded the whole universe?

Svet. up. ii, 16, 17.

Not only Svet. Up. tells us who He is, but also shows us a way to get hold of him.

Fire is not perceived in it's source, the fire - stick till it is ignited by stricking, rubbing, one against the other.

Nevertheless the fire is always there in the fire - stick. Like these two (fire - sticks) are the body and the Pranava the upper one, meditating, churnning as it were, one should behold Him as one hidden.

Svet. up. I, 13, 14.

By uttering, articulaling and contemplaling on the sacred "Om" we not only affirm but also accept the Devine, in whatever form it comes, whether it comes in the form of a person, or in

the form of activicty, , or in the form pain, or in the form of pleasure.

To forget the Divine is the source of all misery.

Yogar Swami put it beautifully "Every thing is sent in advance"

Uttering, OM, meditating on it, cleans us of all dirt and leads us from darkness to light.

Sri Sittampalam Murugaverl has with much effort brought out this commentary on Svetasvataram by Iyampillai Ponniah.

As one who has known him, I trust he has fulfilled the commentator's wish to see it in the book form.

I pray that lord Siva showers his blessings on him, in ample measure.

November 2007 **G. Devadevan**

அறிமுகம்

ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகள் எமது நாடு சில ஐரோப்பிய நாடுகளின் ஆட்சிக்குட்பட்டிருந்தமை வரலாற்றுண்மை.

அதனால், இந்நாட்டுக்கும் இந்நாட்டு மக்களுக்கும் ஏற்பட்ட விளைவுகள் பலவாறு விமர்சிக்கப்பட்டுள்ளன, விமர்சிக்கப்பட்டு வருகின்றன.

சில விமர்சகர்கள் நல்ல விளைவுகளையே மிகுத்துக் கூறுகின்றனர். இன்னும் சிலர் தீமைகளையே மிகுத்துக் கூறுகின்றனர். இவ்விமர்சனங்களில் உண்மையும் நம்பகத் தன்மையும் இருக்கலாம்; இல்லாமற் போகலாம். ஆனால் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. இங்கு வந்து ஆட்சி புரிந்த, இவ்வைரோப்பியர்கள், எங்களுக்கு எங்கள் முன்னோர்களில், பாஷைகளில் இலக்கியங்களில் சமயங்களில், கலைகளில், சாஸ்திரங்களில் இருந்த, இருக்கக் கூடிய ஆன்மார்த்தமான நேர்மையான நம்பிக்கையையும், அதனால் விளையக் கூடிய பெருமித உணர்ச்சியினையும் செருக்கையும் அல்லவா சிதைத்துக் குலைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்கள் பெயரளவில் ஆட்சியினை விட்டுப் போய் ஐம்பது அறுபது ஆண்டுகளுக்குப்பின் இப்பொழுது கூட, நிலைமை இதுதான்.

ஒரு வகையான இருள், தன்னைக் காட்டிக் கொள்ளாத பயங்கர இருள்.

இது அகச் சூழல்.

புறச் சூழலோ எனின், கூறத் தேவையில்லை. இதனையும், உருவாக்கி நிலைபெறச் செய்து கொண்டிருப்பதில் அவர்களுக்குப் பங்குண்டு என்று சிலர் கூறுகின்றார்கள்.

இத்தகைய அகச் சூழலில், புறச் சூழலில், என்னதான் செய்வது? எமக்கிருக்கக்கூடிய மூலாதார ஊற்றுக்களுக்கு, உரிய நம்பிக்கையுடனும் பயபக்தியுடனும் சிரத்தையுடனும் போகவேண்டிய தேவை இருக்கிறது, தேவை யென்ன, நிர்ப்பந்தம் இருக்கிறது; சுவேதாசுவதரத் தொடரில் 'இது தவிர வேறு வழியில்லை'.

மூலாதார ஊற்றுகள் என்றேன். அவையாவன, பொதுவாக எமது இலக்கியங்களும், சமய, ஞான நூல்களும், சிறப்பாக வேதமும், தமிழ்மறை யெனப்படும் திருமுறைகளும் ஆகும்.

வேதம்

வேதத்தினைப் பற்றி சில மேற்கத்திய ஆய்வாளர்கள், உண்ணின்று ஒற்றித்துணர மாட்டாதவர்களாய் விபரீதக் கருத்துக்களை, புரட்டுகளை விதைத்து விட்டிருக்கிறார்கள். இவையொன்றிலும் அகப்படாது, எங்களுக்கே உரித்தான, நேர்மையான ஆத்ம உணர்வுடன், வேதத்தினை அணுக வேண்டியது அவசியம்.

இவ்வகையிற்றான், சுவேதாசுவதர உரையென்னுமிந்நூல் வெளியீடு நியாயப்படுத்தப்படுகின்றது. சுவேதாசுவதரம் யசுர்வேத தைத்திரீய சாகையைச் சார்ந்தது. ஆறு அத்தியாயங்களில் நூற்றுப்பதின் மூன்று மந்திரங்களைக் கொண்டது. காரணமாகிய பிரமம் யாது என்று வினாவிக்கொண்டு தொடங்கி, நித்தியமான அடிப்படையான சமய மெய்யியற் கருத்துக்களை விளக்க முயல்கிறது. கீதை போன்று மீண்டும் மீண்டும் படிப்பதற்கும், சிந்தித்துத் தெளிவதற்கும், பாராயணம் செய்வதற்கும் உகந்தது. இதற்கு சங்கரர் முதலியோர் பாடியங்கள் வரைந்துள்ளார்கள். தொடர்ச்சியாகப் போல, சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏழாலை, அருளானந்த சிவமென்னும் ஐயம்பிள்ளை பொன்னையா பதவுரை, குறிப்புரை, பொழிப்புரை ஆக அமைந்த ஒரு சிறு உரை எழுதியுள்ளார். உரை தமிழர்தம் சமய ஞான நோக்கில் அமைந்தது, சுவானுபவத் திருவாக்குகளையும் கொண்டது.

உரையாசிரியர்

உயர்ந்த ஆஜானுபாகுவான தோற்றம், கருமை சார்ந்த நிறம்; திருநீறு பரவப் பூசப்பெற்ற மேனி; கழுத்தில் மஞ்சட்கயிற்றில், உருத்திராக்கம், ஒற்றைத் திருமணி; அணியும் திருவெண்ணீற்றினைப் போலவே, வெண்மையான நாலுமுளம்; ஆழப்பதிந்த தீட்சண்யமான, கருணைததும்பும், கண்கள்; நிமிர்ந்த பெருமிதமிக்க நடை; வீடும் வேண்டாவிறல்!

இத்தகையதொரு தோற்றத்தினையும் ஆளுமையினையும் கொண்டு, வலி-வடக்கில் சில ஆண்டுகள் சிவஞானத் திருவொளி பரப்பியவர், சுவேதாசுவதரத்துக்கு உரைவரைந்த அருளானந்தசிவம் என்னும் ஐயம்பிள்ளை பொன்னையா.

ஐயம்பிள்ளை பொன்னையா, பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதி தசாப்தங்களில், ஏழாலை கிழக்கில் ஐயம்பிள்ளை

தெய்வானைப்பிள்ளை தம்பதிகளுக்கு சிரேஷ்ட புத்திரனாகப் பிறந்தவர்.

ஐயம்பிள்ளை அக்காலத்தில், பிரபல்ய தமிழ் வைத்தியர்; அம்பாள் உபாசகர்; பூசைமுடித்தன்றி உணவு கொள்ளாத நியமம் பூண்டவர்.

பொன்னையா அவர்கள் இளம்வயதிலேயே தந்தையாரிட மிருந்து, தமிழ் வைத்தியக் கலையின் அடிப்படைத் தத்துவங்களையும், மருந்தாக்கச் செயல் முறைகளையும், சிகிச்சை நுட்பங்களையும் கற்றவர். அத்துடன் தந்தையிடமே முதல்நிலை மொழியறிவையும் இலக்கியப் பயிற்சியினையும் பெற்றுக் கொண்டார். தாமோதரம்பிள்ளை ஏழாலை மேற்கில் நிறுவிய சைவப்பிரகாச வித்தியா சலையில், சில ஆண்டுகள், சுன்னாகம் முருகேசபண்டிதர், குமாரசுவாமிப்புலவர், தம்பையா உபாத்தியாயர் முதலியோரிடமும் மேல்நிலைத் தமிழ் இலக்கண இலக்கியங்களை கற்றார் என்பது செவிவழிச் செய்தி. அக்கால கட்டத்தில், அவருக்கு புன்னாலைக்கட்டுவன் கணேசையர், குப்பிழான் காசிவாசி செந்திநாதையர், தெல்லிப்பழை சிவானந்தையர் முதலிய அறிஞர்களுடனும் தொடர்பு இருந்திருக்கலாம்.

இந்நிலையில், அவருக்கு ஏழாலை மேற்கில் செல்லமுத்து என்னும் பெண்ணை மணமுடித்து வைத்தார்கள். திருமணத்தின் பின்னர் ஏழாலை மேற்கே அவரது வாழ்க்கைக் களமாக அமைந்து விட்டது.

இந்திய மருத்துவக் கலையின் தத்துவார்த்தங்களை உணர்ந்திருந்த அவருக்கு, இக்காலகட்டத்தில் இந்திய சமய ஞான விசாரத்தில் நாட்டம் செல்லத் தொடங்கியதில் வியப்பொன்றுமில்லை. இச்சந்தர்ப்பத்திலேதான் அவருக்கு மலடியார் என அறியப்பட்டிருந்த ஓரம்மையாரின் தொடர்பு, அருட்தொடர்பு ஏற்பட்டது. இதனால் அவர் கைவல்ய நவநீதம் ஞான வாசிஷ்டம் முதலிய நூல்களில் ஈடுபடும் பயிற்சியும் பெற்றார்.

சடைவரதர்: மங்கிய, தெளிவற்ற ஒரு ஞாபகம். சற்றே, குறுகிய, பருத்த தோற்றம்; நல்ல நிறம்; அரையில் சிறிய காவித்துண்டு; கறுத்தடர்ந்த தாடி, பரந்த வட்டமுகம், நெற்றியில் நிறையத் திருவெண்ணீறு; குறுகிய அடியெடுத்து வைத்துக் குறு குறுவென நடப்பார். யாழ்ப்பாணத்துச் சிவயோக ஞான பாரம்பரியத்தில் வந்த வண்ணாரச் சாமியார் என்று கூறுவர். ஸ்ரீ பொன்னையா அவர்கள் ஞானசம்பத்தினை நாடி இருந்து கொண்டிருந்த பொழுதுதான் ஏழாலைக்கு எங்கிருந்தோ வந்தார், சடைவரதர். ஒருவரை ஒருவர் கண்டனர், கண்டபின், உணர்வில் பிரியவில்லை. கண்டலாது அருளுமில்லை, கலந்தபின் பிரிவதில்லை.

சாமிவந்த பின்னர், பல நிகழ்வுகள்; கருணாகரப் பிள்ளையாரின் பிரதிஷ்டை, திருமட உருவாக்கம், திருமடத்தில் சாது சங்கம். மாலை நேரங்களில், செவ்வானப் பின்புலத்தில், உறுதியாய்ப் பனை மரங்கள் காவலில் நிற்கும் பூதங்கள்போல், உயர்ந்து நிற்க, ஆண்பெண் இருபாலாரும் தியானயோகங்களில் நிட்டையில் இருப்பதுபோல், வரிசையாக இருப்பார்கள் என்று முதியோர் சொல்லக் கேட்டுள்ளேன்.

இந்நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டிருந்த இவ்வேளையில் தான், ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதுகளில், திரு. பொன்னையா அவர்களின் யாழ்ப்பாணத்து வைத்திய நூல்கள் வெளியீட்டுப்பணியும், சைவசித்தாந்த, தமிழ்மறை ஆய்வும் பிரசாரப்பணியும் தொடங்கின.

வைத்திய நூல் வெளியீடு

யாழ்ப்பாணத்தில், அகண்ட பாரத வைத்தியக்கலையினை அடியொற்றி, ஒரு தமிழ் வைத்திய பாரம்பரியம் வேரூன்றியிருப்பதற்கு, ஆதாரமாக, நூல்கள், ஆவணங்கள் இருந்திருக்க வேண்டுமே என ஊகித்தார் போலும். அதனால், உ.வே.சாமிநாதையர் தமிழ் இலக்கண, இலக்கிய ஏடுகளைத் தேடியது போலே, வைத்திய ஏடுகளைத் தேடுவாராயினார், யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமன்றி வன்னிப்பிரதேசங்களிலும் தேடி, நூற்றுக்கான வைத்திய ஏடுகளைச் சேர்ந்தார். சேர்த்து, ஆராய்ந்து, யாழ்ப்பாணத்து வைத்திய நூல் வெளியீடு என்னும் தொடர்தலைப்பில் பதின்மூன்று நூல்களை, வெளியிட்டார். அவற்றுட் சில.

1. பரராசசேகரம் 7 பாகங்கள்
2. வைத்தியத் தெளிவு
3. சொக்கநாதர் தன்வந்திரியம்

ஏனையவை கிடைக்கவில்லை. தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

சித்தாந்த சாஸ்திர, வேதாகம, தமிழ் மறை ஆய்வு பிரசாரம்

சடைவரதரோடு ஆன்மீகக் கலப்பின் பின், பொன்னையா அவர்கள், சிவஞானபோதம், சித்தியார் முதலிய சாஸ்திரங்களிலும், திருமுறைகளிலும், முற்றுமுழுதாக முழுகலாயினார். அத்துடன் பல ஆண்டுகள் கீரிமலை, வண்ணார்பண்ணை, காரைநகர் ஆகிய இடங்களுக்குச் சென்று, சைவ சித்தாந்த விளக்கம் கூறுவார்.

யாழ் இந்துக்கல்லூரி இளநிலைப்பள்ளியில் நிகழ்ந்த சைவமகாநாடுகளில், பிரசங்கங்கள் செய்வதுமுண்டு. இவர் பிரசங்கங்களில் பிறமத கண்டனம் விரவிவரும், இதர பேச்சாளர்கள்

யாரேனும், சித்தாந்தக் கொள்கைகளுக்கு விபரீத விளக்கம் சொல்ல முற்பட்டால் தைக்கும் சொற்களால் பேசியே விடுவார். அதனால், அவரைச் சிலர் 'ஆணவப் பொன்னையா' என்று கூறுவதுண்டு. வைகறைப்போதில், கீரிமலைக் கேணியில், தூய ஊற்றுநீர், சலனமின்றித் தெளிந்து நிற்குமே, அது போல, அவருக்கு வாய்த்த ஒருபசாந்த நிலையிற்றான், அவருக்கு ஒரு அன்பர் வாய்த்தார். இவர் கிடைத்த அன்பர், நவீன ஐரோப்பிய கணிதவியற் கோட்பாடுகளையும் செயன்முறைகளையும், நவீன ஐரோப்பிய பரீட்சார்த்த விஞ்ஞான எடுகோள்களையும், செயன் முறைகளையும் அறிந்தவர், ஆங்கிலம் சமஸ்கிருதம் தமிழ் இலக்கண இலக்கியப் பயிற்சியும் உடையவர்.

மாலை எட்டு மணி தொடக்கம் பழைய பாரத வனாந்தர ஆச்சிரமங்களில் போல், ஒரு சிறிய வீட்டில் இருந்து ஆன்மஞான சல்லாபம் செய்வார்கள். இவ்வான்ம ஞான சல்லாபத்தில், விளைந்த அமிர்தம்போல உள்ளது, பொன்னையா பிள்ளையின், உபநிடத உரைவிளக்கக் குறிப்புகள்.

முதலில், சுவேதாசுவதரத்துக்கும் பின்னர் கைவல்யம், பஸ்மஜாலம் ஆகியவற்றுக்கும் எழுதி, வாராவாரம், இந்து சாதனத்துக்கு அனுப்பிவந்தார், அவர்களும் பிரசுரித்தனர். அவ்வாறு, இந்து சாதனத்தில் வந்த சுவேதாசுவதரக் கட்டுரைகளின் நூல் உருவாக்கமே இச்சிறு நூல்.

உரை, பதவுரை, குறிப்புகள், பொழிப்புரை என வகுக்கப்பட்டுள்ளது. அகண்ட பாரதத்திற்கு அனாதியான சுருதியாக விளங்கும் வேதத்திலிருந்தும், தமிழ் ஞான சாத்திரங்களி லிருந்தும், திருமுறைச் செழும் பாடல்களிலிருந்தும் மேற்கோள்களைக் கொண்டது.

சிவஞான சம்பத்துக்கு, முதல்நிலை நூலாகவும், பரிச்சயம் உள்ளவர்களுக்கு, மேலும் தெளிவு பயக்கவும் உதவுவது.

திருவருட் சகாயமுடையோர் படித்துப் பயன் பெறுவார்களாக

- சி. முருகவேள்

பதிப்புரை

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து மூன்றாம் ஆண்டு தொடக்கம், நாற்பத்தைந்து வரைக்கும், ஐ.பொன்னையா அவர்கள் சுவேதாசுவதரம், கைவல்யம், பஸ்மஜாலம் ஆகிய உபநிடதங்களை மொழிபெயர்த்து அவற்றுக்கு உரைவிளக்கக் குறிப்புகளும் எழுதி வாராவாரம் இந்துசாதனத்தில் வெளியிட்டு வந்தார்.

இவற்றினைப் பின்னர், திருத்தமாக தேவநாகரி அல்லது கிரந்த எழுத்துக்களோடு நூலுருவில் வெளியிட வேண்டும் என விரும்பி-யிருந்த அவர், ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தொன்பதில் என நினைக்கிறேன், சிவனடிப் பேறு பெற்று விட்டார்.

அவர் இவ்வாறு எழுதியதும் வாரந்தோறும் இந்நுசாதனத்தில் பிரசுரமானதும் எனது இளமைக் கால அனுபவங்கள்; நினைவில் நின்று விட்டன. தொழில் முறைவாழ்விலிருந்து ஓய்வுபெற்று, இரண்டாயிரம் ஆண்டளவில், கொழும்புக்கு வந்த பின்னர், இந்துசாதனப் பிரதிகள் கிடைக்குமானால், சுவேதாசுவதர உரையினைப் பரிசோதித்து புத்தக உருவில் வெளியிட்டால் நல்லதுதானே என்ற எண்ணம், திருவருட் குறிப்பினாற் போலும் ஏற்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலகத்துடன் தொடர்பு கொண்டு சுவேதாசுவரோபநிடதம் என்னும் தலைப்பில், வாரந்தோறும் வெளிவந்த கட்டுரைகளின் புகைப்படப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டேன். உரையாசிரியரின் கையெழுத்து மூலம் இல்லாத நிலையில், இவை கிடைத்தனவே என்ற மகிழ்ச்சி. பிரதிகள் சில தெளிவற்றவை; அச்சுப்பிழைகள் பல; முயன்று படித்தேன்.

உரையாசிரியரின் ஆந்தகன்ற தெளிந்த அறிவும், தர்க்கரீதியான, இறுக்கமான பொருளமைப்பும், அதற்கேற்ற, பழந்தமிழ் உரையாசிரி-யர்களை நினைவு படுத்துகின்ற உரைநடையழகும் என்னைக் கவர்ந்தன.

இதனை நூல்வடிவில் வெளியிட்டால் நல்லதுதானே என்னும் எனது தொடக்க எண்ணம் வலுப்பெற்றது. இது என்னால் முடியுமோ, முடியாதோ என்ற உறுதியற்ற நிலையில், உரிய ஒழுங்கில் ஒழுங்கு செய்து ஒரு முறையன்று பலமுறை பிரதி செய்து நூலுக்கு ஓரளவு முழுமையான வடிவம் கொடுத்துள்ளேன். அத்துடன் ஓரறிமுகவுரையும், கிடைக்காத உரைப்பகுதிகளுக்குரிய மந்திரங்களின் எனது தமிழாக்கமும், மேற்கோள் விபரக்குறிப்புகளும் நூற்பட்டியலும், தந்துள்ளேன். படிப்பவர்களுக்கு இவை உதவுமென நம்புகின்றேன்.

சுவேதாசுவதர உபநிடதத்துக்கு திரு. ஐ. பொன்னையா அவர்களின் உரை முழுமையாகக் கிடைக்கவில்லை. கைவல்யம் முதலிய வேறு சில உபநிடதங்களுக்கும் உரையெழுதி இந்துசாதனத்தில் வெளியிட்டுள்ளார். அனைத்தையும் தேடிக் கண்டுபிடித்து சங்கரபாஷ்யத்துடன் ஒப்பு நோக்கி ஆய்வு செய்தல் இன்றியமையாதது.

இவ்வாய்வினை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், மெய்யியல் துறையோ, அன்றி, சம்ஸ்கிருதத்துறையோ அன்றி இந்திய பண்பாட்டுத் துறையோ மேற்கொள்ளலாம். இவ்வாறு மேற்கொண்டால், துணை நிற்க வேண்டுமென்று எம்பெருமானைப் பிரார்த்திப்பதன்றி வேறொன்றறியேன்.

இப்பதிப்புக்கு வேண்டிய உதவிகளை அவ்வப்போது செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகர்கள் திருமதி.ஆர்.பரராஜசிங்கம், திருமதி.ஆர்.கருணானந்தராஜா, உதவியாளர்கள் எஸ். பத்மநாதன், சு. சிவபாதம், நவநீதன் ஆகியோருக்கு எனது நன்றிகள்.

இப் பதிப்பினைச் செம்மை செய்மையமாக அமைத்திருந்தது கொழும்பு தமிழ்ச் சங்க நூலகமாகும். இந்நூலகத்தில் சிறிதுகாலம் நூலகராப் பணிபுரிந்து கொண்டிருக்கும் திருமதி ஜெயசிறீ அசோக்குமார் முதலியோரை நன்றியுணர்வோடு நினைவு கூருகின்றேன்.

தட்டச்சுப் படியோலைகள் ஆக்கித்தந்த திரு. செழியன், செல்வி வளர்மதி, வெளியீடு செய்யும் குமரன் புத்தக இல்லம், திரு. க. குமரன் ஆகியோருக்கும் நன்றி.

கருத்தறிந்து முடித்துத்தந்த திருவளர் ஞா.தேவதேவனுக்கும், வைத்திய கலாநிதி (திருமதி) கணேச நந்தினி நடேசன் அவர்களுக்கும் அன்னை பராசக்தி அருள்பாலிப்பாளாக.

சி. முருகவேள்

முன்னுரை

மிகப்பழம வாய்ந்தனவாகிய முக்கிய உபநிடதங்களில் சுவேதாசுவதரமும், ஒன்று. ஏனைய உபநிடதங்களைப் போலவே, இதற்கும் ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகள் ஸ்ரீமத் விஞ்ஞான பகவான் ஸ்ரீமத் நாராயணபகவான் முதலிய அறிஞர் பலர் தங்கள் தங்கள் சமயக் கொள்கைகளைப் புகுத்திப் பாடியங்கள் எழுதியிருக்கின்றனர்.

வேதங்கள், பிராமணங்கள் ஆரணியங்கள் உட்பட, முக்கிய உபநிடதங்கள் எல்லாம் சைவ சித்தாந்தப் பொருள் நுதலுவனவே. சொற்சுருங்கியும், பொருளாழ்ந்து முள்ள சூத்திர வடிவாகிய வேதமந்திரங்களின் இருதயத்தை உபநிடதங்கள், பிராமணங்கள் கொண்டே யறிதல் கூடும். அவையெல்லாம் சைவ சித்தாந்தப் பொருள் நுதலுவனவே என்னும் உண்மையை, சொல்லொரு புறமும் பொருளொரு புறமுமாயுள்ளனவும், ஒன்றோடொன்று மாறுபட்டுக் குழப்பம் விளைப்பனவுமாயுள்ள பாடியங்களைத் தவிர்த்து, அவற்றின் மூலங்களை மட்டும் படிப்போர் தெளிவாகக் காண்பர்.

முக்கிய உபநிடதங்களாவன: ஈசாவாசியம், கேநம், கடம், பிரசினம், முண்டகம், மாண்டூக்கியம், ஐதரேயம், தைத்திரீயம், சாந்தோக்கியம், பிருகதாரண்யகம், கௌசிதகீ, சுவேதாசுவதரம், மைத்திராயணம், பிருகச்சாபலம், சாபாலம், அதர்வசிரசு அதர்வசிகை கைவல்யம், காலாக்கினியுருத்திரம் முதலியன.

உண்மையான பிரமப்பொருள் இதுவென நிச்சயித்தற்கெழுந்தது சுவேதாசுவதர சுருதி. அன்னம் பிரமம், பிராணன் பிரமம், மனம் பிரமம் விஞ்ஞானம் (புருடன்) பிரமம், ஆன்மா பிரமம், அக்கினி பிரமம், இந்திரன் பிரமம், சூரியன் பிரமம், நாராயணன் பிரமம் என்றிவ்வாறு வெவ்வேறு பொருள்களைப் பிரமம் என்று (அதிகாரி பேதம்பற்றி) சுருதிகள் கூறுகின்றன, அல்லது கூறுவது போல் தோற்றுகின்றன. இத்தோற்றத்தினால் மெய்யுணரமாட்டாத குறைந்த பக்குவமுடைய எம்போலியருக்கு பல்லாற்றானும் ஐயப்பாடு தோன்றுதல் இயல்பே.

அவ்வையமொழிந்து உண்மையான பிரமப்பொருள் உணர்த்துதல் இன்றியமையாத தொன்றே. இவ்வாற்றால், மற்றெல்லா உபநிடதங்களிலும் சுவேதாசுவதரம் மிகுசிறப்புடையதாயிற்று.

இதனைச் சைவமக்கள் எல்லாருக்கும் பயன்படும் வண்ணம் சொற்கிடந்தவாறே வடமொழிவல்லார் பலரது உதவியுடன் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல் வேண்டுமென்பது எமது வேணவா.

அம்மொழிபெயர்ப்பை முதலில் இப்பத்திரிகையில் தொடர்ந்து வெளியிடுவோம். கண்ணுறும் சைவப்பெரியோர்கள் தமக்குத் தோன்றும் திருத்தங்களைத் தயை கூர்ந்து அறிவிப்பாராயின், திருந்திய முறையில் புத்தகம் வெளிவருவதற்கு, அது பேருபகாரமாக இருக்கும்.

(வடமொழி எழுத்துக்கள் இல்லாத குறையினால் உபநிடத மந்திரங்களும் தமிழெழுத்திலேயே பதிப்பிக்கப்படுகின்றன. புத்தக ரூபத்தில் அக்குறையிருக்கமாட்டாது)

சிவபெருமான் திருவருள் முன்னிற்க

சுபானு-வைகாசி. உ.சாஉ — ஏழாலை ஐ.பொன்னையா

சாந்தி மந்திரம்[1]

ஓம் ஸஹநாவவது / ஸஹநௌபுநக்து/
ஸஹவீர் யம் கரவாவஹை/
தேஜஸ்வி நாவதீதமஸ்து/
மா வித்விஷாவஹை//

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஸஹநௌ - (குருவும் சீடனுமாகிய) எங்களிருவரையும், அவது- (பிரமமானது) காப்பாற்றுமாக,ஸஹநௌ- எங்களிருவருக்கும்,புநக்து - பேரின்பவாழ்வைத் தருமாக, ஸஹ - நாங்களிருவரும், வீர்யம் கரவாவஹை - அதற்குரிய சாமர்த்தியத்தைச் (பணியை) செய்வோமாக, நௌ - எங்களிருவரதும், அதீதம் - கல்வியானது, தேஜஸ்வீ அஸ்து -பிரகாச முடையதாக ஆகக் கடவது, மாவித்விஷாவஹை - நாங்களிருவரும் ஒருவர் மேலொருவர்பகைமை கொள்ளா திருப்போமாக.

ஓம் சாந்தி/ சாந்தி/ சாந்தி/

முதலாமத்தியாயம்

மந்:
க

ஓம் ப்ரஹ்மவாதிநோ வதந்தி
கிம் காரணம் ப்ரஹ்ம குத: ஸ்ம ஜாதா
ஜீவாம கேந க்வச ஸம்பிரதிஷ்டா:/
அதிஷ்டிதா : கேந ஸூகேதரேஷூ
வர்தாமஹே ப்ரஹ்மவிதோ வ்யவஸ்தாம்//

இ-ள்
ப்ரஹ்மவாதிநோ - வேதத்தை அறிந்த முனிவர்கள், வதந்தி - (தம்முட்கூடி) ஆராய்கின்றார்கள், கிம் காரணம் பிரஹ்ம - (காரணம் பிரஹ்ம கிம்) - (உலகிற்குக்) காரணமாகிய பிரமம் யாது?, குத: ஸ்மஜாதா - நாங்கள் எங்கிருந்து தோன்றினோம்?, ஜீவாம கேந - எதனால் சீவித்திருக்கிறோம், க்வசஸம்பிரதிஷ்டா: - (முடிவில்) எதில் ஒடுங்குகின்றோம், கேந - எதனால் (வயம் - நாங்கள்) அதிஷ்டிதா: - செலுத்தப்பட்டவர்களாய், சுகேதரேஷு - சுகதுக் கங்களில், வியவஸ்தாம் - வேறுபாடுகளை, வர்தாமஹே - அடைகின்றோம், பிரஹ்மவிதோ - வேதத்தையறிந்தவர்களே, கூறுங்கள்.

கு.பு: க
எதிலிருந்து நாங்கள் தோன்றினோம் என்பது முதலிய கீழ்வரும் வினாக்களினால், பிரமப்பொருள் இதுவென நிச்சயித்தற்குரிய குறிப்புகள் காட்டப்படுகின்றன. எதிலிருந்து நாங்கள் தோன்றினோம் என்பதனால் சிருட்டியும், எதனால் சீவித்திருக் கிறோம் என்பதனால் சங்காரம் அனுக்கிரகம் ஆகிய இரண்டும், எதனால் செலுத்தப்பட்டு சுகதுக்கங்களை

அடைகின்றோம் என்பதனால் திரோபவமும் சூசிக்கப்பட்டன. எனவே படைத்தல் காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐம்பெருந் தொழில்களைச் செய்வது எதுவோ அதுவே உலகத்துக்குக் காரணமாகிய பிரமம் என்றவாறாயிற்று.

அங்ஙனமே, தைத்திரீயோப நிடதத்துப் பிருகுவல்லி க-க, எதனிடத்தினின்றும் இந்த உலகங்கள் தோன்றுகின்றனவோ, தோன்றியவை எதனால் நிலைபெறுகின்றனவோ முடிவில் அவை எதனைப் போயடைகின்றனவோ, அதனை யறிவாயாக. அது பிரமம் என்று கூறிற்று.[2]

விண்முதல் பூதல மொன்றிய
விருசுடரும்பர்கள் பிறவும்
படைத் தளித் தழிப்ப மும்மூர்த்திகளாயினை[3]
- திருவெழுகூற்றிருக்கை

தோற்றுவித்தளித்துப் பின்னுந்துடைத்தருள்
தொழில்கள் மூன்றும் போற்றவே ....[4]
- சிவஞான சித்தியார்.

அளித்தல் என்பதனால் எடுத்துக் கொண்ட உடம்பிற்குக் காரணமாகிய பிராரத்த போகம் புசிக்குங்காறும் அவ்வுடம்பை நிலைபெறச் செய்தற்கேதுவாகிய திதித்தொழிலும், விசித்திர ரூபமாகிய சுக துக்க போகங்களில் உயிரறிவை அழுந்தி அனுபவிக்கச் செய்தற்கேதுவாகிய திரோபவத்தொழிலும், துடைத்தல் என்பதனால் வினையொழிவில் உடல் நீக்கத்திற் கேதுவாகிய சங்காரத்தொழிலும் திருவடிப் பெரும்பேறு பெறுதற்குரிய வினையொப்பு மலபரிபாகத்தில் மலநீக்கத்திற் கேதுவாகிய அனுக்கிரகத் தொழிலும் பெறப்பட்டன. முத்தொழில் என்று வருமிடந்தோறும் இவ்வாறே விரித்துரைக்க.

இம்முதல் மந்திரத்தில் வரும் "கிம் காரணம் பிரஹ்ம" என்பதற்கு "பிரமம் காரணமா" என்றும்,"பிரமம் எப்படிப்பட்ட காரணம்" என்றும் பலவாறு விகற்பித்துப் பொருள் காண்பாருமுளர். அவையெல்லாம் பின்னாற் பெறப்படும் விடைகளோடியைந்து வாராமையின் பொருந்தா வென்றொழிக.

மந்:
உ காலः ஸ்வபாவோ நியதிர்யத்ர்ச்சா
பூதாநி யோநி : புருஷ இதி சிந்த்யா/
ஸம்யோக ஏஷாம் நத்வாத்மபாவா
தாத்மாப்யநீஶ : ஸுகது:கஹேதோ://

இ-ள்
கால:- (காலேச்சுரவாதிகள்) காலம் காரண மென்பர், ஸ்வபாவ:- (உலகாயுதர்) இயல்பு காரண மென்பர், நியதி:- (கன்மவாதிகள்) கன்மம் காரணமென்பர், யதிர்ச்சா - (சூனியவாதிகள்) சூனியம் காரணமென்பர், பூதாநி:- (உலகாயுதர்முதலியோர்) பூதங்கள் காரணமென்பர், யோநி:- (சாங்கியர்) - பிரகிருதி காரணமென்பர், புருஷ:- ஏகான்ம வாதிகள், (மாயாவாதிகள்) புருஷன் காரணமென்பர், இதி சிந்த்யா - இவை காரணமாவனவா என்று ஆராயத்தக்கது, ஏஷாம் ஸம்யோக: து-சமுதாயவாதிகள் - (சவுந்திராந்திகர், வைபாடிகர்) இவை யனைத்தும் கூடிய சமுதாயம் காரணமென்பர். ஆத்மபாவாத் - (மாயாகாரிய ங்களான இவையனைத்தும் சடமாய், இவற்றிற்கு வேறாயுள்ள) சேதனனாகிய ஓர்ஆத்மாவினால் தொழிற்படுத லுண்மையின், ந:- (காரணம்) சமுதாயமும் காரணமாக மாட்டாது, ஆத்மா அபி - (சேதனனெனப்படும் அந்த) ஆத்மாவும், ஸுக து:கஹேதோ:-சுகதுக்கங்கட்குட்பட்டு பரதந்திரனாய் நிற்றலால், அநீச:- ஈசனாக மாட்டான் (காரணமாகிய பிரமமாக மாட்டான்)

மேல் மந்திரத்திலிருந்து வருவிக்கப்பட்ட 'காரணம்' என்னுஞ் சொல்லை யாண்டுங் கூட்டுக.

கு.பு:க
சமுதாயம் காரணமன்று என மறுக்கவே அவை தனித்தனியும் காரணமாக மாட்டா என மறுக்கப்பட்டவாறாயிற்று.

கு.பு:உ
அரசனாணை போல நின்று அவரவர் கன்மப் பயனை அவரவரே நுகருமாறு நியமித்து நிறுத்துவது நியதி. ஆகலின் கன்மம் நியதியென்று உபசரிக்கப் பட்டது.

கு.பு:௫
மலத்தாற் றடுக்கப்பட்ட ஆன்மாவின் வியாபக அறிவிச்சை செயல்கள், மாயாகாரியங்களான கலை, வித்தை அராகங்களால் ஏக தேசமாய் விளங்கித் தோன்ற, ஆன்மா அவற்றோடு கூடிப் புருடன் என நிற்பான். அது,

அயர்விலாக் கலை பின் தோன்றி ஒதுக்கிச் சித்தின்
செயல்புரி கிரியா சத்திதெரிவிக்குஞ் சிறிதே வித்தை
உயர்கலை யதனில் தோன்றி அறிவினை
- உதிக்கப் பண்ணும்[5] என்றும்,

விச்சையின் அராகந் தோன்றி வினைவழி போகத்தின்கண்
இச்சையைப் பண்ணிநிற்குந் தொழிலறி விச்சை மூன்றும்
வைச்சபோ திச்சா ஞானக் கிரியைமுன் மருவி யான்மா
நிச்சயம் புருடனாகிப் பொதுமையின் நிற்பன் அன்றே[6]
என்றும், கூறிப்போந்த சிவஞானசித்தித் திருவிருத்தங்களானறிக.

கலைமுதலிய இம்மூன்றோடு போகத்தை வரையறுக்கும் காலமும் நியமிக்கும் நியதியுமாகிய இரண்டையும் பொருந்தி புருடன் பஞ்சகஞ்சுகன் எனப் பெயர் பெறுவன். இது புருட தத்துவத்தின் பொது நிலை.

இனி, சிறப்பு நிலையாவது இக் கலாதிகளின் பின்னர்த்தோன்றும் மூலப்பிரகிருதி மாயைப் போகம் நுகர்தற் கேதுவாய், அப்பிரகிருதியிலுளவாகிய அஞ்ஞானம் அகங்காரம் அவா ஆசை கோபம் என்னும் பஞ்சக் கிலேசமுடையனாய்ப் போக்திருத்துவ மெய்தி நின்ற நிலை. கலாதிகள் கர்த்திருத்துவம் மட்டுமே யடைவிக்கும்.

இங்ஙனம் கர்த்திருத்துவம் போக்திருத்துவமெய்திய்ப் புருடனாய் நின்ற சேதனனைச் சட தத்துவங்களோ டொன்றாக வைத்துச் சுருதி கூறியதென்னை யெனில், "புருடனாதற் கேதுவாய் விசேடித்து நிற்கும் தத்துவங்கள் சடமாதல்பற்றி அடுத்ததன் றன்மையாய் நிற்கும் புருடதத்துவத்தையும் சடமென்று உபசரித்துக் கூறல் பொருந்துமாறறிக"[7] (இது சிவஞான பாடியத்திற் கண்டது)

புருடனைச் சடதத்துவங்க ளோடொன்றாக வைத்தொதுக்கிய சுருதி, ஆன்மாவை வேறெடுத்துக் கொண்டு சுக துக்க போகம்

நுகர்தற்கேதுவாகிய சுட்டறிவினை யுடையனாய், பரதந் திரப்பட்டு நிற்றலின், அவனும் ஈசனாக மாட்டான் என்று விதந்து கூறியமையினால், புருடன் என்றது ஆன்மாவின் உபாதி நிலையையே என்பது பெறப்பட்டவாறறிக. இவ்வத்தி-யாயத்தில் வரும் எட்டாவது மந்திரம் அநீஶஶ்ச ஆத்மா பத்யதே போக்திருபாவாத் - அதாவது அநீசனான ஆன்மா போக்திருத்துவ பாவனையால் பந்தமுறுகின்றனன் என்று கூறிற்று.

கு.பு:ச

இந்தப் புருடனையே ஏகான்ம வாதிகள் ஆன்மா என்றும் பிரமம் என்றும் கொள்வர் என்பது அவர் பிரமத்திற்குக் கூறும் இலக்கணம் கொண்டு அறியலாகும். இருபத்தைந்தாம் தத்துவமாகிய பிரகிருதிக்கு அப்பால் நிற்பவனாய் அப்பிர-கிருதியோடு முக்குணவசனாய்ச் சகசீவ பரமாய் நிற்பவன் எவனோ அவனே ஆன்மா அவனே பிரமம் என்பது அவர்கள் மதம். அன்றியும் ஞானமே ஆன்மா. ஞானத்தைக் குணமாக உடைய குறிப்பொருள் வேறில்லை யென்றும் கூறுவர். அவரையே புருடன் காரணமன்று என்பதனால் சுருதி கண்டித் தொதுக்குகின்றது.

கு.பு: ரு

இருபத்தைந்தாம் தத்துவத்தையே புருடனென்றும் அப்-புருடனே வாசுதேவன் என்றும் கூறும் பஞ்சராத்திரிகளும் ஈண்டே மறுக்கப்பட்டனர். இங்ஙனமே ஏனைச் சமயங்களை அடங்கு மாறறிந்தடக்கிக் கொள்க. விரிக்கிற் பெருகும்.

கு.பு:சு

சிவஞானசித்தியார் க.கo இல்"காலமோ அறிவின்றாகும்" எனக் காலம் காரணம் என்பதும், க.ரு இல் இயல்பினுக்குச் செயலதின்று என இயல்பு காரணம் என்பதும், க.கக. இல் "கன்மமும் அணுவுங்கூட மொழிந்திடுஞ் சடமேயாகி முடிதலான் முடியா செய்தி" எனக் கன்மம் காரணமென்பதும், க .ரு இல் "செயற்படும் அசேதனத்தால்" எனப் பூதங்கள் காரணமென்பதும், க. கஎ இல் "மாயைக் குணர்வொன்றும் இல்லை யென்றே, வைத்திடுமதனால்" எனப் பிரகிருதி காரணமென்பதும், க.கஎ இல் "புருடன் றானும், அத்தனு

கரணம் பெற்றா லறிதலால்" என ஆன்மா காரணம் என்பதும் மறுக்கப்பட்டவாறறிக[8]. மதமும் மறுப்புமாயுள்ளன வற்றின் விரிவையும், ஆன்மாவின் உண்மை நிலை உபாதிநிலை என்பவற்றினியல்பையும் சித்தியார், சிவஞானபோதம் முதலியவற் றிலும் பௌஷ்கரம் முதலிய ஆகமங்களிலும் காண்க.

கு.பு:எ:
இம்மந்திரத்தில் வரும் காலம் முதலிய ஐந்தும், ஆன்மா புருடனாதற்கு கேதுவாகி, காலம் கலை நியதி வித்தை அராகம் என்னும் பஞ் கஞ்சுகத்தைக் குறிப்பனவா மெனவும், அவற்றோடு பிரகிருதியும் புருடனுமாகிய இரண்டுஞ் சேர்ந்த ஏழும் வித்தியா தத்துவங்களாமெனவும் சைவபுராணம் கூறும். அப்புராண வசனம் பின்வருமாறு :-
புருஷஸ்யது அந்தரங்க தயா
தத்வ பஞ்சகம் பரிகீர்த்திதம்!
நியதி: காலாராகஶ்ச வித்யாச
ததநந்தரம்!
கலாச பஞ்சகமிதம் மாயோத் பந்நம்
முநீஶ்வர்:!

தஜ்ஜாந்யேதாநி தத்வாநி சுருதி
யுக்த்தாநி ந சம்சய:
"கால ஸ்வபாவோ நியதி" ரிதிச
சுருதிரப்ரவீத்!

அஜாநந் பஞ்சதத்வாநி வித்வாநபி
விமூடதி:
நியதியதஸ்தாத் ப்ரகிருதேரு
பரிஸ்த: புமாநயம்!
வித்யாதத்வ மிதம் புரோக்தம்" [9]
(சைவபுராணம்: கைலாச சங்கிதை 9, 29- 34)

மந்:
ரு **தே த்யாநயோகாநுகதா அபஶ்யந்**
தேவாத்மசக்திம் ஸ்வகுணை: நிகூடாம்/
ய: காரணாநி நீகிலாநி தாநி
காலாத்மயுக்தாந் யதிதிஷ்டத் யேக://

இ-ள்

ஸ்வகுணை: நிகூடாம் - ஆன்ம குணங்களினால் மறைக்கப்பட்ட, (பாச ஞானம் பசுஞானங்களால் அறிய முடியாத) தேவாத்மஶக்திம் - தேவாத்ம சக்தி எனப்படும் பராசக்தியை, த்யாநயோகாநுகதா - தியான யோகத்துற்றவர்களாகிய, தே - அவர்கள் (வேதவித்துக்களாகிய முனிவர்கள்), அபஶ்யந் - கண்டார்கள், (அச்சக்தியை யுடைய சத்தன் முதல்வன் யாவனெனில்) காலாத்மயுக்தாநி - (மேல்மந்திரத்தில் பெறப்பட்ட) காலம் முதல் ஆன்மா இறுதியாகிய, காரணாநி நிகிலாநிதாநி - எல்லாக் காரணங்களையும் (காரணமென்று அவ்வம் மதவாதிகளாற் கூறப்பட்ட சடமும் சிந்துமாகிய எல்லா வற்றையும், அதிதிஷ்டதி -கடந்து நின்று செலுத்துகின்ற, ஏக:- ஒருவன், ய:- எவனோ (ஸ ஏவ)- அவனே,

கு.பு:க

சுவகுணம் என்பது ஆன்ம அறிவின் மேற்று (இது நாராயண பாடியத்துட் கண்டது)"[10] முதல்வன் பாச பசு ஞானங்களால் அறியப்படாதவன் என்ற படி, பாச ஞானமானது : "வேத சாத்திரம்" முதலிய சொற்பிரபஞ்சமும் முப்பத்தாறு தத்துவங்களாகிய பொருட்பிரபஞ்சமுமாகிய இருவகைப் பிரபஞ்சங்களின் வாயிலாய்த் தன்னறிவின் கண்ணிகழும் ஏகதேச ஞானம். பசு ஞானமாவது: இருவகைப் பிரபஞ்சங்களும் தன்னின் வேறானவை யென்றும், தான் இவற்றின் மேலாய் நின்று இவற்றைத் தொழிற்படுத்து மியல்புடைய னென்றும் கண்டு நீங்கிய விடத்துத் தன்போத முனைப்பாற் சடுதியில் நிகழும் ஞானம். தன்னறிவு நிகழ்தற்கிடமாகிய கருவி கரணங்களை விட்டு நீங்கின் உயிர் கேவலத்திலழுந்தும். அற்றேல் மீண்டும் கருவி கரணங்களைச் சேருதலாகிய சகலத்தைச் சடுதியிலடை யுமன்றித் தனித்து நிற்க மாட்டாது. அவ்வியல்புணர்த்தவே "சடுதியில் நிகழும் ஞானம் பசுஞான" மெனப்பட்டது. இவ்வாற்றால் உயிர் சுதந்திர அறிவுடையதன்று என்பதும், அவ்வியல்பே சுகதுக்கங்களில் அது அகப்பட்டு அல்லற்படுவதற்கு ஏதுவாயது என்பதும் நன்கு பெறப்பட்டது. படவே, "நான் (உயிர்) பிரமம் என்னும் எண்ணம் மயக்கவுணர்வின் பயனாயொழிந்தமை காண்க. இத்திற மெல்லாம் புலப்படவே "ஆத்மபாவாத்" என்றும், "ஆத்மா அப்யநீஶ: ஸுக துஃகஹேதோ:" என்றும் மேல் மந்திரம் வரைசெய் துணர்த்திற்று.

இனி, அவ்வுயிரின் ஏக தேச ஞானமெனப்படும் சுட்டறிவு, ஒன்றில் நிலைபெறுதலின்றி ஒன்றை விட்டொன்று பற்றிச் செல்லுமியல் புடையதாதலால் தோற்ற முடையதெனக் கண்டோம். அதனால், அறியப்படுவனயாவும் தனக்கு வேறாய்ச் சடமுமாய் அழிவெய்து மியல்புடையனவாம். அதிசூக்கும சித்தெனப்படும் முதல்வனோ பெத்தம் முத்தியாகிய ஈரிடங்களிலும் உயிரைவிட்டுப் பிரிதலின்றி அந்தர்யாமியாய் நின்று அவ்வுயிர் விடயங்களை யறியும்படி காட்டிக் காணுமியல்புடையன். அது எதுபோலவெனின், தூலமாகிய கண்ணொளி விடயங்களை யறியும்படி அதனிலும் சூக்குமமாகிய ஆன்மபோதம் அதனோடு கலந்து நின்று காட்டிக் காணுமியல்புபோல வென்க. காட்டுதலே-யன்றிக் காணுதல் எற்றுக்கெனின், கண்ணுக்கு விடயங்களைக் காட்டும் விளக்கொளி கண்ணொளியினிருளை நீக்குவ-தோடமையாது பொருளிலும் பட்டு அதனை மறைத்து நிற்கும் இருளையும் நீக்கினாலேயன்றிக் கண் அப்பொருளைக் காணமாட்டாது. அது போல, உயிருணர்விற் கலந்து நின்றுணர்த்து மிறைவன் விடயங்களிலுங் கலந்து நின்றாலே-யன்றி உயிர் விடயங்களைக் காணமாட்டாதாகலின் காட்டுதலுங் காணுதலுமாகிய இரண்டு பகாரங்களும் இன்றியமையாது வேண்டப்படு மென்பதுணர்க.

இனிக் கண் தனக்குக் காட்டாக நின்ற ஆன்ம போதத்தைக் காண மாட்டமை போல உயிரும் தனக்குக் காட்டாக நிற்கும் இறைவனை எவ்விடங்களிலும் தனக்கு வேறாகச் சுட்டிக் காணுமாறில்லை.

காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணா - காட்டிய
உள்ளந் தனைக்காணா வுள்ளத்தின் கண்ணாய
கள்வன்றா னுள்ளத்திற் காண்[11]

- சிவஞானபோதம்

அத்தகைய இறைவனை அவனருளாலல்லது காணலாகா மையின், "தியான யோகத்துற்றவர்களாய்த் தேவாத்ம சத்தியைக் கண்டார்கள்" என்று கூறப்பட்டது.

"தேவாத்ம சத்தி" திருவருள் வடிவாகிய பராசத்தியை. அது சுவேதாசுவதரம் சும் அத்தியாயம் எட்டாம் மந்திரத்தின்[12]

பிற்பாதி "பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே ஸ்வபாவிகீ ஞானபலக்ரியாச" என்றுரைத்தமையால் வலியுறுத்தப்படும். ஸ்வபாவம் என்பது ஆகந்துகத்திற்கு எதிர்மறையானது. அதாவது சொரூபத்திலும் வேறுபடாது எப்போதும் உள்ளது. எனவே, தேவாத்மசத்தி என்பது அக்கினிக்குச் சூடுபோல முதல்வனுக்குக் குணமாயுள்ள ஞானசக்தியே என்பது பெறப்பட்டது. இவ்வியல்பு அம்மந்திரத்தின் பொருளுரைக் குங்கால் விளக்கப்படும். இவ்வுண்மை யுணராது தேவாத்ம-சத்தி யென்பது சடசத்தியாகிய பிரகிருதியென்றுரைத்தார் மதம் போலியென்பதுணர்க.

இனி, பாசஞான பசுஞானங்களுக்கெட்டாத இறைவனை அவனருளாலேயே காணவேண்டுமென்பதற்குச் சுருதிப் பிரமாணங்கள் காட்டுதும்:

கடவல்லி

பரமாத்மா சிரவணத்தினாலும் மநநனத்தினாலும் நிதித்தி-யாசன த்தினாலும் அடையத்தக்கவனன்று. எவனை அவன் வேண்டுகின் றானோ (எவனுக்குத் தன்னருளைப் புரிகின்-றானோ) அவனால் அடையத்தக்கவன். அவனுக்கு இந்தப் பரமாத்மா தன் சொரூபத்தைக் காட்டுகின்றான்".[13]

சிரவணம் என்பது பாசஞானத்தையும் மனனம் என்பது பசுஞானத் தையும் குறிக்கும், தெளிதலறிவு எனப்-பொருள்படும். நிதித்தியா சனத்திலும் தெளிவானும் தெளிவும் தெளியப்படும் பொருளு மாகிய பேதம் (காண்பவன் காட்சி, காட்சிப்பொருள் என்னும் திரிபுடி) காணப்படுதலால் அதுவும் ஆன்மபோத முனைப்பிற் றோன்றும் பசு ஞானத்தின் பாற்பட்டதே.

முண்டகம்

"பரமாத்மா கண்களினாலும் வாக்கினாலும் ஏனைக் கருவி கரணங்களினாலும் அடையப் படுபவனல்லன். தவத்தினாலும் கிரியைகளினாலும் அவனை அடைய முடியாது. அவனது ஞானப்பிரசாதத்தினால், விசுத்தசத்வ மடைந்து, தியான யோகமுற்று நிஷ்கள வடிவினான அவனைக் காண்கின்றான்.[14]

சிவஞானபோதம் கூம் சூத்திரம்:-
"ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி"

"பாசஞானத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே
நேசமொடு முள்ளத்தே நாடி"[15]

திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகள்:-
உயிராவணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியினுரு வெழுதி
உயிரா வண செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
யமர் நா டாளாதே யாரு ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே[16]

உன்னருணோக்கம் பெறாதார் உன்னைக் காணமாட்டார் என்றபடி.

திருவாசகம்:
"இத்தந்திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந்திரத்தின் அவ்வயி னொளித்தும்.."[17]

"அவனருளாலே யவன்றாள் வணங்கி"[18]

பெத்தம் முத்தியாகிய ஈரிடங்களிலும் உயிர் அவனைச் சுட்டிக் காணமாட்டாது என்பதை,
"அன்றும் திருவுருவங் காணாதே யாட்பட்டேன்,
இன்றும் திருவுருவங் காண்கிலேன"[19] என்னும் அம்மை திருவாக்காலுணர்க.

கு.பு:உ
"காலாத்மயுக்தாநி அதிதிஷ்டத் யேக:"
காலமுதலிய அசேதனப் பிரபஞ்சம் சேதனப்பிரபஞ்சம் என்னும் இருவகைப் பிரபஞ்சங்களையும் கடந்து நின்று செலுத்தும் ஒருவன். அசேதனப்பிரபஞ்சம் என்பதில்

சொல்லும் பொருளு மாகிய இருகூற்றுப் பிரபஞ்சங்களும் அடங்குமென்று முன்னர்க் குறிப்பித்தோம். சொற்பிரபஞ்சமாவது "வேதசாத்திரமிருதி புராண கலைஞானம் விரும்பசைபை வைகரியாதித் திறங்கள்"[20]

பொருட்பிரபஞ்சமாவது பிருத்வி முதல் நாத முடிவான முப்பத்தாறு தத்துவங்கள். அவை, மேல் இரண்டாம் மந்திரத்திற் கூறிய காலம் முதலிய ஏழும், வித்தியாதத்துவம் ஏழையும் குறிக்குமென்பது ஆண்டுக் காட்டப்பட்டது. போகதத்துவங்களுட்பட்ட புருடனைக் கூறவே, அவனுக்குப் போகம் விளைவித்தற் கேதுவாய் நின்ற போக்கிய தத்துவமெனப்படும் ஆன்மதத்துவம் இருபத்து நாலும், அத்தத்துவங்களில் உயிரறிவைச் செலுத்திப் போகம் நுகர்வித்தற் கேதுவாகிய பிரேரக தத்துவம் எனப்படும் சிவதத்துவம் ஐந்துமாகிய இவற்றினதுண்மையும் பெற்றாம். ஆன்மதத்துவம் உசம் பெறப்படுமாற்றினை கடோபநிடதம் மூன்றாவது வல்லி நாலாம் மந்திரத்துப் பிற்பாதி, "ஆத்மேந்த்ரிய மனோயுக்தம் போக்த்தேத்யாஹுர மநீஷிண: அதாவது "சரீரம் இந்திரியம் மனம் என்பவற்றோடு கூடிய புருஷனைப் "போக்தா" என்பர் என்று கூறுவதனாலறிக. இவை உபலக்கணங்கள். அவற்றின் விரிவைப் பிரசினோபநிடதம் நாலாவது பிரசினம் எட்டாவது மந்திரம் முதலிய இடங்களிற் காண்க.[21]

சிவதத்துவங்களதுண்மை பிருஹத்ஜாபாலாவும் நாலாவது பிராஹ்மணம், பத்தொன்பதாவது மந்திரத்துப் பிற்பாதி ஶஶிவம் ஶக்திம் சஸாதாக்ய மீஶம்வித்யாக்ய மேவச" என்று கூறுதலில் வைத்தறியப்படும். முதல்வனே நேரில் நின்று உயிரறிவைச் செலுத்திப் போகம் விளைவித்தலமையும், பிரேரகதத்துவமென ஒன்று கோடல் மிகையாம் போலுமெனின், நன்று சொன்னாய், அங்கனமாயின் கன்மத்தை வரையறுத்து நியமிக்கும் காலம் நியதி முதலியனவும், போக்கியமாகிய மன இந்திரியாதிகளும் மிகையெனப்பட்டு வழுவாமாகலானும், சூரியன் முன் இருள் போலவும், மின்மினி போலவும் முதல்வன் முன் ஆணவம் கன்மம் மாயைகள் முனைத்து நில்லாவாதலால் உயிர்களுக்கும் போகமெய்தாமை மாத்திரையே யன்றி வேறு காரணம் வேண்டாது அவரெல்லாம் முத்தராய் விடுவர்,

அஃதின்மையானும் முதல்வன் கருவிகளை முன்னிட்டே காரியம் நடாத்துவன் என்னு முண்மை அறியக்கிடக்கின்றது. அதனால் அவனது பிரேரகத்தொழிலு க்குரிய கருவியாகிய பிரேரகதத்துவமும் ஒருதலையான் வேண்டப்படு மென்பதுணர்ந்துகொள்க. இம்மூவகை முப்பத்தாறு தத்துவங்களின் தோற்றம் தொழில் முதலியவற்றின் விரிவை பௌட்கரம் முதலிய ஆகமங்களிலும் சிவஞானபாடியம், சித்தியார் முதலிய சைவசித்தாந்த நூல்களிலும் பரக்கக் காண்க.

கு.பு:ங

முதல்வன் சடமும் சித்துமாகிய இவற்றைக் கடந்து நின்று செலுத்துவன் என்ற அதனால் அவன் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாயும், பொருட்டன்மையால் வேறாயும் செலுத்துங்கால் உடனாயும் நிற்பன் என்பது பெறப்பட்டது, இந்நிலையினையே சுத்தாத்துவிதம் என்று சைவசித்தாந்த நூல்கள் கூறும். சுத்தாந்துவிதத்தின் இயல்பினைச் சிவஞானசுவாமிகள் பின்வருமாறு கூறுவர்: "இவ்வத்துவிதம் ஏனையோர் (ஏகான்ம வாதிகள் பஞ்சராத்திரிகள் முதலியோர்) கூறும் அத்துவிதம் போலக் கேவல மென்றாதல் விசிட்டமென்றாதல், மறுதலை யென்றாதல் யாதானுமொன்றான் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது, சுத்தமாய் நின்றே பொருளுணர்த் துதலின் சுத்தாத்துவிதம் என வழங்கப்படும்"[22] (சிவஞானபோத மாபாடியம்.

இனி முதல்வன் அவ்வாறு மூவகையாய் நிற்குமுண்மைக்கு எடுத்துக் காட்டும் பிரமாணங்கள்.

சாந்தோக்கிய சுருதி முதலியவற்றில் பாவனைப் பொருட்டுக் கூறியிருக்கும் "தத்துவமசி" முதலிய மகாவாக்கியங்கள் இக்கருத்தே பற்றியன. பிருகதாரண்யகம் ௩-௪-௧0, "பிரமத்தை யறிந்த வாமதேவ முனிவர் நான் மநுவாயினேன் நான் சூரியனாயினேன் என்று அறிந்தார். ஆதலால் எவன் நான் பிரமமாக ஆகிறேன் என்று பிரமத்தை அறிகிறானோ அவன் எல்லாப் பொருள்களுமாகிறான்.[23]

இங்ஙனமே சர்வஞானோத்தர ஆகமத்துச் சிவாநந்ய சாக்ஷாத்காரப் பிரகரணம் "யானே எல்லாமாய் நின்றேனும் எல்லாவற்றினையும் படைத்தளித்தழிப்போனும்"[24] என்று உயிர்கள் மேல் வைத்துக் கூறிற்று.

சிவஞானபோதம் உ.க:க
கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ளம்
இட்டதொரு பேரழைக்க வென்னென்றாங் கொட்டி

ஷை.க:௦.க.க
"நானவனென் றெண்ணிநர்க்கு நாடுமுள முண்டாதல்
தானெனவொன் றின்றியே தானதுவாய் - நானெனவொன்
றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத்
தில்லென்று தானா மிறை"

"எல்லா உலகமுமானாய் நீயே"[25]
என்பது முதலிய தேவாரங்கள் காண்க.
• "அறிவானுந் தானே யறிவிப்பான்றானே" [26]
- அம்மை திருவந்தாதி.

பொருட்டன்மையால் வேறாதல்:-

இருக். க.கசுசஉ௦
"பிரியாத நண்பினையுடைய இருபட்சிகள் ஒரே மரத்தில் (சரீரத்தில்) இருக்கின்றன. ஒன்று இனிய பழத்தை உண்கின்றது. மற்றது உண்ணாது பார்த்துக் கொண்டிருக் கின்றது".[27] இந்த வேத மந்திரம் மூன்றாவது முண்டகம் க இலும், சுவேதம். ச-சா இலும் வருகிறது. கண்டு கொள்க.

யஜுர்வேதம் ரு.க.ச:ரு
யேஷாமீஶே பஶூபதி பஶூ நாம "இந்தப் பசுக்களைப் பசுக்களுக்குப் பதியானவர் ஆளுகின்றார்"[28]

சுவே. க:கூ
"பிறவாதவனாகிய அறிஞனும் அஞ்ஞானனாகிய இருவரும் முறையே ஈசனும் அநீசனுமாம்"

கடம், இரண்டாவது வல்லி, கஅ, ககூ மந்திரங்கள் (ஜீவ) ஆன்ம இலக்கணம் பின்வருமாறு கூறுகின்றது.

கஅ. "ஞாதாவான ஆன்மா பிறப்பதில்லை இறப்பதில்லை. ஏனெனில், அவன் (ஆன்மா) பிறப்பிலாதவன், நித்தியன் புராணன் (பழையவன்), சரீரம் கொல்லப்பட்டாலும் ஆன்மா கொல்லப்படுவதில்லை.[29]

க:கூ
அடிப்பவன் ஆன்மாவை அடிப்பதற்கு நினைப்பானேயானால் அவனும் ஆன்ம ரூபத்தை அறியாதவனே. ஏனெனில் ஆன்மா அடிபடுவதில்லை.[30]

இனி, அடுத்துவரும் 20 வது மந்திரம் முதலியவற்றில் பரமான்மாவினிலக்கணம் பின்வருமாறு கூறப்படுகின்றது. "அணுவுக்கணுவாயும் மஹத்துக்கு மஹத்தாயுமுள்ள (பரம) ஆன்மாவானது இந்த (மேலே கூறிய) ஆன்மாவின் இருதயக் குகையில் வைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய அருளினால் சோகமற்றவனாய் அதனைக் காண்கின்றான்.[31]

கடம், உ, ச, ரு:
ய இதம் மத்வதம் வேத ஆத்மாநம் ஜீவமந்திகாத் ஈஸாநம் பூதபவ்யஸ்ய ந ததோ விஜுகுப்ஸதே!

இ-ள்:
ய- எவன், மத்வதம் - கன்ம போகம் புசிக்கின்ற, இதம் ஜீவம் ஆத்மாநம் - இந்தச் சீவான்மாவையும் - அந்திகாத்- அவனுக்குச் சமீபத்திலிருக்கிற - பூதபவ்யஸ்ய- (சராசரங்களாகிய) எல்லாப் பொருள்களுக்கும், ஈஸாநம் - தலைவருகிய பரமான்-மாவையும், வேத- வேறாக அறிகிறானோ, தத:- அப்பொழுது (அவன்) ந விஜுகுப்ஸதே - நிந்திக்கப்படத் தக்கவனல்லன். எனவே, ஆன்மாவைப் பிரமம் என்று எண்ணுபவன் நிந்திக்கப்படத் தக்கவன் என்பது கருத்து.

"மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை"[32] என்றற் றொடக்கத்த தேவாரங்கள் காண்க.

ஒன்றென மறைக ளெல்லா முரைத்திட உயிர்கள் ஒன்றி
நின்றனன் என்று பன்மை நிகழ்த்துவ தென்னை யென்னின்
அன்றவை பதிதான் ஒன்றென் றறையும் அக்கரங்கள் தோறுந்
சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே.[33]
ள- சித்தி.

உள்நின்று செலுத்துதலால் உடனாதல்
சு.வே:க,கூ "ஆன்மாவினையும், செலுத்துபவரையும் வேறு என அறிந்து"

பிருஹதார - ஏ௩:

"எவன் பிருதிவியிலும், பிருதிவிக்குள்ளும் மிருக்கிறானோ அவனைப் பிருதிவி அறியாது. அவனுக்குப் பிருதிவி சரீரம். அதனுள்ளிருந்து செலுத்துகிறான். அவன் உனக்கு அந்தர்யாமி.[34]

ஆட்டுவித்தா லாரொருவராடா தாரே .... காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே"[35]

- திருத்தாண்டகம்

ஈறாய் முதலொன்றாயிரு பெண்ணாண் குணமூன்றாய்... வேறாயுடனானாமிடம் வீழிமிழலையே[36] - திருஞானசம்

ஈறாயங்கே .... வேறாயுடனாயிருக்கும்.[37] திருக்களிற்றுப்படியார் அசு.

சிவமஹாபுராணம், வாயு சங்கிதை, உத்தரபாகத்து எட்டாம் அத்தியாயத்தில் கக முதல் உ௦ முடியவுள்ள பத்து சுலோகங்கள் "கிம் காரணம் பிரஹ்ம" என்பது முதலிய மூன்று மந்திரங்களும் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுள் இம்மூன்றாவது மந்திரத்தின் வியாக்கியானமா யமைந்துள்ள கசு, கஎ கஅ ம்சுலோகங்களை அவற்றின் மொழிபெயர்ப்போடு கீழே தருகின்றோம்.

"தே த்யாந யோகாநுகதா: ப்ரா
பஶ்யந் சக்தி மைஶவரீம்!
பாஶவிச் சேதிகாம் ஸாஷாந்நி
கூடாம் ஸ்வகுணைர் ப்ருஶம்!(கசு)
தயாவிச் சிந்த பாஶாஸ்தே ஸர்வ
காரண காரணம்!
ஶக்திமந்தம் மஹாதேவ மபஶ்யந் திவ்ய
சக்ஷுஷா// (கஎ)
ய காரணா ... ஶேஷாணிகா
லாத்ம ஸஹிதாநி ச/
அப்ரமே யோநயா ஶக்த்யா ஸாகமே
கோதிதிஷ்டதி// (கஅ)[38]

இ-ள்
அவர்கள் (பிரமவாதிகள்) தியான யோகம் உடையராய், பாசத்தையறுப்பவராய் குணங்களால் மிகுதியும் ஆவரிக்கப் பட்டவராயுள்ள சிவசக்தியைத் -தரிசித்து, அவராற் பாசமனைத்தும் ... நீங்கப்பெற்று சர்வகாரண காரணரும், உமையோடு கூடியவருமாயுள்ள மகாதேவரை ஞான திருஷ்டிட்டி யினாற் கண்டனர். அவர் (மகாதேவர்) எத்தகையரெனில் அப்பிரமேயராய் (பிரமாணங்களால் அளந்தறிய முடியாதவராய்) ஆணையில் நீக்கமற நின்று காலமும் ஆன்மா வுமாகிய இவற்றுடன் கூடிய எல்லாக் காரணங்களையும் கடந்து ஊடுருவி நிற்கின்ற ஒருவர்”

சுவகுணம் என்பதற்கு ஆன்மகுணம் என்றும் யோகம் என்பதற்கு சித்த விருத்தி நிரோதம் என்றும் குறிப்புரையாசிரியர் உரைத்தனர்.

மந்:
ச

தமேகநேமிம் த்ரிவ்ருதம்
ஸோடஸாந்தம்
ஸதார்தாரம் விம்ஸதிப்ரத்யராபி:/
அப்ஜகை: ஷட்பிர்விஸ்வரூபைக பாஸம்
த்ரிமார்க்க பேதம் த்விநிமித்தைக மோஹம்//

இ-ள்
ஏக நேமிம் - (சக்ராந்தம் என்னும்) ஒரு நேமியும், த்ரிவ்ருதம் - மூன்று வளையங்களும், ஸோடஸாந்தம் - பதினாறு அந்தங் களும், ஷ்ட்பி: அப்ஜகை:- ஆறு (ஆதாரத், தாமரை கருக்குரிய, விம்ஸதிப்ரத்யராபி:- இருபது பிரதியிதழ்களோடு கூடிய, ஸதார்த அரம் - ஐம்பது இதழ்களும், விஸவரூப ஏகபாஸம் - விசுவ ரூபமாகிய ஒரு கயிறும், த்ரிமார்க்க பேதம் - மூன்று வழிகளின் பேதமும், த்விநிமித்த ஏக மோஹம் - இரண்டற்கும் நிமித்தமாகிய ஒரு இச்சையும், ஆகிய இவற்றையுடைய (ஒரு சக்கரமாக), தம் - அவனைக் (கண்டார்கள் - எ.று)

எழுவாய் பயனிலைகள் மேல் மந்திரத்திலிருந்து வருவிக்கப் பட்டன. ஆறு தாமரைகளுக்குரிய ஐம்பது இதழ்கள் என இயையும்.

கு.பு:க
முநிவர்கள் தியானயோகத்திலிருந்து கண்ட பராசக்தியை ஒரு சக்கர வடிவமாக இம்மந்திரம் உருவகம் பண்ணிக் காட்டுகின்றது. ஏகநேமிம் - நேமி, - சக்கராந்தம். அது சக்கரத்தின் இலைகளைத்தாங்கிநிற்கும் அரநாடி என்னும் குடத்திற்காயிற்று. "தத்யதாரேஷீ நேமிரார்பிதா[39] பாவரார்பிதா" என்பது சுருதி, அருட் பராசக்தியின் பேதமாகிய ஆதிசக்தி என்னும் திரோதான சக்தியே ஈண்டு ஏகநேமி எனப்பட்டது, எல்லாவற்றையும் பரித்து நிற்பது அதுவேயாகவின்.

உண்மையால் நோக்குமிடத்துச் சக்தியின் சொரூபத்திற் பேதமில்லை. தொழில் வேறுபாடு பற்றியும், இடவேறுபாடு பற்றியும் சக்திபேதம் கற்பித்துக் கூறப்படுகின்றது. சிவசக்திகளின் பேதம் கூறுமிடங்களிலெல்லாம் இவ்வாறே கொள்க. புறப்பொருளை நோக்கிநிற்கும் நிலையிற் சக்தியெனவும் தன்னிலையிற் சிவமெனவும் கூறப்படுவதன்றிச் சிவசக்திகட்கும் தம்முட் பேதமில்லை.

கு.பு:உ
த்ரிவிருதம் - மூன்று வளையங்கள். அவையாவன:- ஐந்தொழில் செய்தல் முதல்வனுக் கிலக்கணம் என்பது, இவ்வத்தியாயத்து முதலாம் மந்திரத்தாற் பெறப்பட்டது. படவே முதல்வன் தனது சக்தி வியாபாரங்களை யெல்லா மொடுக்கிப் பகுப்பின்றி நிற்கும் இலயாவத்தையும், ஒடுங்கிய உலகினை மீனத் தோற்றுவித்தற் பொருட்டுத் தனது ஞானசக்தி கிரியாசக்திகளில் நிற்கும் போகாவத்தையும், காரியங்களைச் சூக்குமமாயும் தூலமாயும் தோற்றுவிக்கும் அதிகார அவத்தையும் ஆகிய மூன்று அவத்தையும் அம்முதல்வனிடத்துண்டென்பதும் பெற்றாம் இம்மூன்றற்கு மிடமாய்ச் சுத்தமாயையும் பராசக்தியாற் கலக்குண்டு தோற்றிய இலயதத்துவம், போகதத்துவம் அதிகார தத்துவம் என்னும் மூன்று தத்துவங்களும் மூன்று வளை யங்க ளெனப்பட்டன. அவை ஒடுங்கு முறைபற்றி, சுத்தவித்யா, ஈசுரம் சாதாக்கியம், சக்தி, சிவம் என ஐந்து தத்துவங்களாய ஐந்தும். அவற்றினியல்பெல்லாம் சைவசித்தாந்த நூல்களிலும் ஆகமங்களிலும் காண்க.

கு.பு:௩
ஷோடஷாந்தம் - சத்தியின் பதினாறு பேதங்கள் பதினாறு அந்தங்களாகக் கூறப்பட்டன. அவையாவன:

1. ஜருநீ	2. ரோதயித்திரீ	3. கோப்த்ரீ
4. நேத்ரீ	5. யோக்த்ரீ	6. திராணா
7. வாமா	8. நியமிகா	9. ரௌத்ரீ
10. பிலாவிகா	11. சிரத்தா	12. பாவிநீ

என்னும் இப்பன்னிரண்டோடு,

1. பிரஹலாதிநீ	2. ஸ்தம்பிநீ
3. விகாரா	4. அபரா

என்னும் நான்கும் கூட்டிச் சத்திபேதம் பதினாறும் கண்டு கொள்க. இவ்வாறு மதங்கத்துட் கூறப்பட்டது.[40] இவற்றினியல்புகளை யெல்லாம் அவ்வாகமத்தில் பதிபதார்த்த சத்தி படலத்துட் காண்க.

ஷோடஷந்தம் என்பதற்கு இவ்வாறன்றி உன்மனை முதலிய பதினாறு கலைகளென்று கூறினுமாம். அக்கலைகளாவன: உள்மனை, சமனை, வியாபிநீ, சத்தி, நாதாந்தம், நாதம் நிரோதி, அர்த்தசந்திரம், விந்து, அகாரம், உகாரம், மகாரம் வியோம ரூபை, அருந்தை, அநாதை, அநாசிருதை என்பனவாம். இவை சோடச கலாப் பிராசாதம் என வழங்கப்படும்.

கு.பு:௪
விம்ஶதிப்ரத்யராபி:- இருபது பிரதி அரங்கள் என்னென்ன என்பது புலப்படவில்லை. பிரதி என்ற சொல்லிற்கு, பதிலான, வேறான சமீபமான எனப் பலபொருள்களுமுண்டு. சக்கரத்தின் உறுப்புக ளெல்லாம் அரம் என்று வழங்கப்படுவதுண்டாயின் மேலே கூறிய ஏகநேமி என்றது முதலிய இருபதையும் கொளல்பொருந்தும். அல்லது சமீபம் என்னும் பொருளில், ௨௦ என்னும் எண்ணை நோக்கி வரும். ஆறாதாரத் தாமரைக்கருக்குரிய ஐம்பது அரங்கள் என்று கொள்ளலாம். இதனை அறிஞர்களது ஆராய்ச்சிக்கு விட்டுவிடுகின்றோம். இங்குக் கூறிய ஏனையவும் ஆராய்ச்சிக் குரியனவே,

குு.பு:ரு
அப்ஜகை: ஷட்பி : ஶதார்தா அரம் - ஆறாதாரத் தாமரை-களுக்குரிய ஐம்பது இதழ்கள். அவை:- மூலாதாரம் - நாலிதழ்த் தாமரை, சுவாதிட்டானம் - ஆறிதழ்த் தாமரை, மணிபூரகம் - பத்திதழ்த் தாமரை, அநாகதம் - பன்னிரண்டிதழ்த் தாமரை, விசுத்தி - பதினாறிதழ்த்தாமரை, ஆக்கினை இரண்டி-தழ்த்தாமரை ஆக ஐம்பது இதழ்களும் கண்டு கொள்க. அப்ஜகை: என்னும் பாடம் நாராயண பாடியத்துட் கண்டது.[41] அவர் நாராயணர், "அக்ஷரை" என்றொரு பாடமிருப்பதாகக் கொண்டு, அங்கனமமாயின், அகரம் முதல் ஷகாரமிறுதியாகிய ஐம்பது வர்ணங்கள் (எழுத்துகள்) ஐம்பது இதழ்களைக் குறிக்குமென்றனர். சங்கரர், சங்கராநந்தர் முதலிய ஏனைய பாடியகாரர் அஷ்டகை: ஷட்பி என்றே பாடம் கொண்டனர்.

கு.பு:சு
விஶ்வரூப ஏகபாஶம் - விசுவரூபமாகிய ஒரு கயிறு. சரமும் அசரமுமாகிய எல்லாப் பொருள்களிலும் அந்தரியாமியாய் நின்று அவற்றை யாட்டி வைக்கின்ற (செலுத்துகின்ற) சர்வதோ முகம் என்ற நிலை ஒரு கயிறு எனப்பட்டது. சூத்திரதாரி என்னும் வழக்குண்மை காண்க.

கு.பு:எ
திரி மார்க்க பேதம் -மூன்று வழிகளின் பேதம். மூன்று வழிகளாவன: கர்மம், பக்தி, ஞானம் என்பன. அல்லது சிவாகமங்கள் கூறக்கிடந்த சிவஞானப் பேற்றிற்கு வழியாய்ப் பொருந்திய கர்மம், பக்தி, யோகம் எனினுமமையும்: சரியை கிரியை யோக மெனினுமிழுக்காது.

கு.பு:அ
துவிநிமித்த ஏக மோஹம் - இரண்டற்கு நிமித்தமாகிய ஒரு இச்சை.

முதல்வனது ஞானசத்தி கிரியாசத்தி என்னும் இரு சத்திகளின் தொழிற்பாட்டுக்கு நிமித்தமாய், உயிர்களை மல இருளினின்றெடுத்துத் தன்திருவடிக் கீழிருத்துவதாகிய, பேரின்பவாழ்வினை அவற்றிற்குத் தரும் பெருங்கருணை வடிவாகிய, இச்சாசத்தி, "இச்சை" (மோஹம்) எனப்பட்டது.

மந்:
ரு

பஞ்சஸ்ரோதாம்பும் பஞ்சயோந்யுக்ர -வக்ராம்
பஞ்சப்ராணோர்மி பஞ்சபுத்யாதி மூலாம்/
பஞ்சாவர்தாம் பஞ்சதுக்கௌக வேகாம்
பஞ்சாஶத் பேதாம் பஞ்சபர்வாமதீம://

இ-ள் -

பஞ்சஸரோதாம்பும் - ஐந்து வழிகளாற் பாயும் தண்ணீரை யுடையதாயும், பஞ்சயோந்யுக்ரவக்ராம் - ஐந்து காரணங்களால் உக்கிரமும் வக்கிரமுமுடையதாயும், பஞ்சப்ராணோர்மிம் - பிராணன் முதலிய ஐந்து வாயுக்களால் உண்டாகும் அலைகளையுடையதாயும், பஞ்சபுத்யாதி மூலாம் - புத்தி-முதலிய ஐந்து மூலங்களை யுடையதாயும், பஞ்சாவர்தாம் - ஐந்து நீர்ச்சுழல்களை யுடையதாயும், பஞ்ச து:கௌகவேகாம் - ஐந்து துக்கங்களாகிய பிரவாகத்தின் வேகத்தையுடையதாயும், பஞ்சாஶத்பேதாம் - ஐம்பது பேதங்களை யுடையதாயும், பஞ்சபர்வாம் - ஐந்து சந்துகளை (படிகளை) யுடையதாயும், (உள்ள ஒரு நதியாகச் சீவான்மாவை) அதீம: நாங்கள் கண்டோம்.

கு.பு:க

பஞ்சஸ்ரோத: அம்பு - ஐந்து வழிகளாற் பாயும் தண்ணீர் வழிகளாவன, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஞானேந்திரியம் ஐந்து. ஆன்மாவின் ஞானசத்தி புறத்திலுள்ள விடயங்களை அறிதற்கு வாயில்கள் ஆதல்பற்றி இவை நீர்பாயும் கால்வாய்களாக உருவகப்படுத்தப்பட்டன.

கு.பு:உ

பஞ்ச யோநி:- ஐந்து காரணங்கள். அவை:- சத்தம், பரிசம் உருவம், ரசம், கந்தம் என்னும் தன்மாத்திரைகள் ஐந்து, இவை சூக்கும பூத மென்றும், மகாபூதம் என்றும் கூறப்படும். ஆன்மாவின் ஞானசத்தி கிரியாசத்திகளின் தொழிற்பாட்டிற்கு வலிசெய்து உடனிற்றல் பற்றியும், விடய வடிவாகிய தூல பூதங்களின் தோற்றரவுக்குக் காரணமாதல் பற்றியும் இவை சீவநதியின் உக்கிர வக்கிரங்கட்கு காரணம் எனப்பட்டன. உக்ரவக்த்ராம் என்றும் பாடம். வக்த்ரம் - முகம் அல்லது வாய்.

கு.பு:ந
பஞ்சப்ராணா:- பிராணன் முதலிய ஐந்து வாயுக்கள். வாயுக்கள் ஐந்தாவன: பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன் என்பன. சலித்துத் திரட்டும் குணமுடைய வாயு ஒன்றே உடம்பினுள் பிராணன் முதலிய ஐவகைப்பட்டு நின்று நடத்தல், ஓடல், எழுதல் இருத்தல் முதலிய தொழிற்பாடுகளுக் கேதுவாதல் பற்றி அவற்றை ஐந்து அலைகளாக, அல்லது அலைகளுக்குக் காரணமாகக் கூறிற்று.

கு.பு:ச
பஞ்சபுத்யாதி மூலாம். புத்யாதி பஞ்சமூலாம் என மாறுக.

புத்தி முதலிய ஐந்தாவன: புத்தியும், அதனின்று தோன்றிய அகங்காரமும், அதன் சத்வகுண மிகுதியிற் றோன்றிய மனமும், மனத்தின் விருத்தியாகிய சித்தமும், இவையெல்லாம் தோன்றுவதற்குக் காரணமாயுள்ள குணதத்துவமென்னுமிவை. பஞ்சதன்மாத்திரையும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும் தோன்றுதற்கிடமாயிருத்தல் பற்றியும், இந்திரியங்களால் நிர்விகற்பமாயறிந்த விடயங்களை இது இன்னது என்று நிச்சயித்தலாகிய சவிகற்ப உணர்வு பிறத்தற்கிடமாய்ப் பின்னர் அவ்வவ் விடய வடிவாய் நின்று ஆன்மாவிற்குப் போக்கியமாதற் சிறப்புப் பற்றியும், புத்தி முதலிய அவ்வைந்தும் நதி மூலங்களாக உருவகஞ் செய்யப்பட்டன.

கு.பு:ரு
பஞ்ச ஆவர்தாம்:- ஐந்து நீர்ச்சுழல்கள்.

அவை: சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம் என்பன. முன்னர்க் கூறிய சத்தம் முதலிய தன்மாத்திரையைந்தும் ஆகாயம் முதலிய தூல பூதங்களைந்தும் தோன்றுதற்கிடமாயுற்ற அவற்றின் (தூலபூதங்களின்) சூக்கும நிலையாகலின் பெயரொற்றுமை பற்றி இரண்டையும் ஒன்றாகக் கொண்டு மயங்கற்க. ஆன்மாவினறிவு அவ்விடயங்களிலகப்பட்டு ஒன்றை விட்டொன்றுபற்றிச் சுழலுதலின் அவை நீர்ச்சுழல்களாக உருவகஞ் செய்யப்பட்டன.

கு.பு:சு
பஞ்சது:க ஒகவேகாம் - ஐந்து துக்கங்களாகிய பிரவாகத்தின் வேகம்.

ஐந்து துக்கங்களாவன. கர்ப்பம், ஜன்மம், வியாதி, மூப்பு, மரணம் ஆகிய இவையைந்தினாலும் ஏற்படும் துக்கங்கள். முன்னர்க் கூறிய அஞ்ஞானம் முதலிய பஞ்சக் கிலேசங்களைக் கொள்ளினுமமையும்.[42]

கு.பு:எ
பஞ்சஶத்பேதாம்:- ஐம்பது பேதங்கள்.

புத்தியின் குணங்களாகிய தன்மம் முதலிய பாவக மெட்டி னாலுளவாகிய சித்தி துட்டி முதலிய பிரத்தியயங்கள் ஐம்பதும், ஐம்பது பேதங்களாம்.

கு.பு:அ
பஞ்சபர்வாம் - ஐந்து படிகள்.

அன்னமயம், பிராணமயம், விஞ்ஞானமயம், மனோமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து கோசங்களும் ஐந்து படிகளாவன. ஆன்மா சுகதுக்கங்களின் வசப்பட்டிருத்தலால் ஈசனாக மாட்டான் என்று மேல் இரண்டாம் மந்திரத்திற் கூறியதை மேலுங் காரணங்காட்டி வலியுறுத்தியவாறு. "உலகத்திற்குக் காரணமாகிய பிரமம் யாது" என்பது முதலியனவாக முதல் மந்திரத்தினெழுந்த வினாக்களுக்கு விடை கூற வேண்டி, முதலில் காலேச்சுரவாதி முதல் மாயாவாதி யிறுதியாயுள்ள சமய வாதிகள் தனித்தனி காரணமென்று கூறும் காலம் முதல் ஆன்மா இறுதியாகிய பொருட்கள் பிரமமாக மாட்டாவென இரண்டாம் மந்திரத்திற் காரணங்காட்டி மறுத்தொதுக்கிற்று. பின், பிரமம் உலகப்பொருட்கள் போல ஆராய்ச்சி யறிவினால் அளந்தறிதற் கெட்டாதவர் என்பதனை யுட்கொண்டு, அவரைக் காண்டற்கு வழிகூறுதல் வாயிலாகத் திருவருட் சத்தியினுண்மை மூன்றாம் மந்திரத்திற் காட்டப்பட்டது. முதல்வன் செய்யும் ஐந்தொழிற்குத் திருவருள் வடிவாகிய அப்பராசத்தி துணைக்காரணம் என்பதை, அடுத்துவரும் நாலாம் மந்திரம் சத்தியை ஓர் சக்கரமாக உருவகித்துக் காட்டுதல் வாயிலாக நன்கெடுத்து விளக்கிற்று. ஐந்தாவதாகிய மேல்மந்திரம் அச்சத்தியினால்

நிகழும் ஐந்தொழிற்கட்படு முயிரை ஒரு நதி ரூபமாக வர்ணித்து, அதனால் அது (உயிர்) தூல சித்தாய்ப் பரதந்திரப்படுமியல்புடைய தென்றும் அங்ஙனமாதலால் உலகிற்குக் காரணமாதல் பொருந்தாது என்றும் வலியுறுத்தி யுணர்த்தி, இனி உலகிற்குக் காரணமாகிய பிரமம், கூறிப்போந்த சித்தும் சடமுமாகிய இருவகைப் பிரபஞ்சத்திற்கும் வேறானது என்பதும், அங்ஙனமறிதலால் விளையும் பயன் இது என்பதும் முதலியன வரும் மந்திரங்களில் உணர்த்தப்படுகின்றன.

மந்:
சு

ஸர்வாஜீவே ஸர்வஸம்ஸ்தே
ப்ருஹந்தே
அஸ்மிந் ஹம்ஸோ ப்ராம்யதே
ப்ரஹ்ம சக்ரே/
ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா
ஜுஷ்டஸ் ததஸ்தேநாம்ருதத்வமேதி//

இ-ள் - ஸர்வாஜீவே - சித்தும் சடமுமாகிய இருவகைப் பிரபஞ்சத்திற்கும் நிலைக்களமாய் (ஆதாரமாய்) உள்ளதும், ஸர்வஸம்ஸ்தே - எல்லாம் ஒடுங்குவதற்கு இடமாயுள்ளதும், ப்ருஹந்தே- எல்லாவற்றிலும் மேலானது மாகிய, அஸ்மிந்ப்ரஹ்மசக்ரே - இந்தப் பிரமசக்கரத்தில் - அம்ஸ:- அமிசனான சீவான்மா, ப்ராம்யதே - சுழலுகின்றான், ஆத்மாநம் - அங்ஙனம் சுழலுகின்ற (ஐந்தொழிற்படும்) ஆன்மாவையும், ப்ரேரிதாரம் - செலுத்துபவரையும் (ஐந்தொழில் செய்யும் நிமித்த காரணராகிய சிவபெருமானையும்), ப்ருதக் - வேறு என, மத்வா - அறிந்து, ததஸ் - பின், தேந - (செலுத்துகின்ற) அவரால், ஜுஷ்ட:- அருளப் பட்டவனாய், அமிர்தத்வம் - மோட்சத்தை (சிவமாந் தன்மைப் பெருவாழ்வை) ஏதி - அடைகின்றான்.

கு.பு:க
எல்லாம் (தோன்றி) நிலைபெறுதற்கும் முடிவில் ஒடுங்குதற்கும் இடமாயுள்ளது என்ற அதனால், உலகம் (தோன்றி நின்றழிதலாகிய) முத்தொழிலுடைய தென்பதும், அதனை

முத்தொழிற் படுத்தும். இறைவன் அதனிலும் வேறாயுளன் என்பதும் கருதலள வையின் வைத்துச் சாதித்தவாறு. இங்குக்கூறிய ஒடுக்கம் மகாசங்கார காலத்தில் நிகழும் ஒடுக்கமாம். அச்சங்கார காலத்தில் சங்காரத்தைச் செய்யும் முதல்வன் சித்தும் சடமுமாகிய எவற்றையும் தன்னிடத்து ஒடுக்கிக் கொண்டு தானோருவனே தனித்து நிற்பனாதலால், அவ்வொடுங்கிய உலகத்தை மீளத்தோற்றுவிப்பவனும் அவனே யாதல் பெற்றாம். ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தி இல்லை என்றது சிவஞானபோதம்[43]

எனவே சங்கார கருத்தாவாகிய சிவபெருமானே காணப்பட்ட உலகத்திற்கு நிமித்த காரணமாகிய பிரமம் (முதற்கடவுள்) என்று முதன் மந்திரத்திலெழுந்த வினாவிற்கு விடையிறுத்தது சுருதி.

"எப்போது இருள் உளதாய், பகலும் இரவுமிலதாய், சத்தும் அசத்துமிலதாய் இருந்ததோ (மகாசங்காரத்தின் பின்) அப்போது கேவலம் சிவபெருமான் ஒருவரே இருந்தார்" (சுவே ச- கஅ)

சௌமிய சத்தாகிய இதுவே முதற்கண் புறருற்பவத்தின் முன் இருந்தது.[44]

சாந்தோக்கியம் சு-உ-க

இருநில னதுபுன லிடை மடி தரவெரி புகவெரி யதுமிக,
பெருவளி யினிலவி தரவளி கெடவிய னிடைமுழு வதுகெட
இருவர்க ளுடல்பொறை யொடுதிரி யெழிலுரு
- வுடையவ னினமலர்,

மருவிய வறுபத மிசைமுரல் மறைவன மமர்தரு பரமனே.[45]
- ஞானசம்பந்தர் தேவாரம்.

பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும் போய்,
இருங்கடல் மூடி யிறக்கும் இறந்தான் களேபரமும்,
கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு கங்காளராய்,
வருங்கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே.[46]
- நாவுக்கரசு - தேவாரம்

எம்மிறை நல்வீணை வாசிக்குமே என்றது புனருற்பவம் வருதலைக் குறிக்கும்.

நுரையுந் திரையும் கொட்புறு
கொட்பும்,
வரைவில் சீகர வளியுங் குரைகடற்
பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
யெண்ணிலவாகி யிருங்கடலடங்குந்
தன்மை போலச்
சராசரமனைத்து
நின்னிடைத் தோன்றி நின்னிடை
யொடுங்கும்[47]

- பட்டணத்துப்பிள்ளை

நிமித்த காரணனாகிய இறைவன் முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய், மாயை ஆதேயமாய் நிற்றலின் மாயையிற்றோன்றி யொடுங்கு முலகினை இறைவனிற் றோன்றி யொடுங்குமென்று வேதம் முதலிய கலைகளனைத்தும் விளம்பும்.

இடத்தினிகழ் பொருளின்கட்படுவதனை இடத்தின் மேலேற்றிக் கூறுதல் அமையுமென்பது கிழங்கினின்றுந் தோன்றிய தாமரை யைப் பங்கயம் என்பதனானுமறிக. இவ்வியைபுடைமை நோக்கி யன்றே "உயிரவை யொடுங்கிப் பின்னு - முதிப்பதெனா ரன்பால்"[48] எனவும் "உலகவனுருவிற் றோன்றி யொடுங்கிடும்"[49] எனவும் வழிநூலாசிரியர் (சிவஞான சித்தியார்) ஓதியது. "உலகவனுருவிற் றோன்றி யொடுங்குமாறு வாதுளாகமத்தின் வகுத்தெடுத் தோதியதூ மெனக"[50] (சிவஞானபாடியம் க-உ) என்று சிவஞான சுவாமிகள் கூறியருளினார். இறைவன் உலகினுக்கு நிமித்த காரணன், மாயை முதற்காரணம் என்பதற்குச் சுருதிப்பிரமாணம் சில காட்டுதும்:

சுவே:ச.கo
"மாயாம் து
ப்ரக்ருதிம் வித்யாந் மாயிநம் து
மகேஶ்வரம்" மாயையைப் பிரகிருதி (முதற்காரணம்) என்றறிக, மாயையுடையவரை மகேஶ்வரனென்றறிக. பிரகிருதி, முதற் காரணம், உபாதானம் என்பன ஒரு பொருட் கிளவி. ஈஶ்வரன் - ஆளுபவன் அல்லது நடத்துபவன்ளூ அது ஈண்டு நிமித்த காரணன் என்னுந்துணையாய் நின்றது.

கட‌ம்.ருːகஉ

"ஏகோ வஸீ
ஸர்வபூதாந்தராத்மா ஏகம் பீஜம்
பஹுதா ய: கரோதி" எவற்றையுமடக்கி யாளுபவராயும், எல்லாவற்றுக்கும் அந்தராத்மாவாயும், ஒருவராயுமுள்ள எவர், ஒன்றாயும் முதற்காரணமாயுமுள்ள மாயையைப் பலவாகச் செய்கின்றாரோ"

முண்டகம், க.சு ல், பிரமத்தைப் பூத யோநி (எல்லாவற்றுக்கும் காரணம்) என்றுரைத்துப்பின், ஏழாவது மந்திரத்தில் காரணமா யிருக்குமியல்பினைப் பல உதாரணங்களால் நன்கெடுத்து விளக்கிற்று. அம்மந்திரப் பொருள் பின்வருமாறு: சிலந்திப் பூச்சியின் உடம்பிலிருந்து நூல் வருவது போலவும், பூமியிலிருந்து மரம் செடி முதலியன தோன்றுதல் போலவும், உயிருள்ள மனித உடம்பிலிருந்து உரோமம் தோன்றுவது போலவும், பிரமத்தி லிருந்து எல்லாம் தோன்றுகின்றன[51] என்பது.

சிலந்தி நூலுக்கு சிலந்திப் பூச்சியினுடம்பே முதற்காரணம். அங்ஙனமே ரோமத்திற்கு மனித உடம்பு முதற்காரணம், அங்ஙனமாயினும் உயிரற்ற உடம்பிலிருந்து அவைதோன்றுவதில்லை. அது போல, உலகத்திற்கு மாயை முதற்காரணமாயினும், இறைவனது ஆதாரமில்வழி மாயையிலிருந்து உலகம் தோன்றாது என்னும் உண்மையை உணர்த்துதல் வாயிலாக இறைவன் உலகிற்கு நிமித்தகாரணனே என்பதை இவ்விரு உதாரணங்களாலும் சுருதி வலியுறுத்திற்று.

இனி, நிலத்திலிருந்து மரஞ்செடி முதலாயின தோன்றுதல் போல என்னுமுதாரணம்: மரஞ்செடி முதலாயின தோன்றுவதற்கு நிலம் ஆதாரமாயிருப்பினும், வித்தில்வழி அவை தோன்றுவதில்லை. அங்ஙனமே, உலகந் தோன்று வதற்கு நிமித்த காரணனாகிய இறைவன் ஆதாரமாயி ருப்பினும், அவ்விறைவனிலிருந்து உலகந்தோன்றாது என்னும் உண்மையை உணர்த்துதல் வாயிலாக உலகிற்கு முதற் காரணம் மாயையே என்பதை வலியுறுத்திற்று.

இவ்வாற்றால், வேதங்களெல்லாம் உலகிற்கு முதற்காரணம் மாயை என்றும், நிமித்த காரணம் இறைவன் என்றும் கொண்டமை தெளிக. துணைக் காரணம் பராசத்தி என்பது

மேலே காட்டப்பட்டது. பின்னும் வருமிடங்களிற் கண்டு கொள்க.

கு.பு:உ
அமிசனான ஆன்மா:
அவயவப் பகுப்பற்ற பிரமத்தினிடத்து, அமிசம் கூறுதல் பொருந்தாதாயினும், பிரமத்தோடு கலப்பினால் ஒற்றித்து நின்று ஏகதேசமாய் விளங்கித் தோற்றுதலுமுடைமையால் ஆன்மா பிரமத்தின் அமிசம் எனப்பட்டது.

வேதாந்த சூத்திரம், உ-ங-ச ற்கு நீலகண்டர் பாடியம் வரையுமிடத்தில் விசேடங்கள் விசேடியத்தின் ஏகதேசமாயி ருத்தல் பற்றி அமிசம் என்று கூறப்படினும் "ஆன்மாவில் இருக்கிறாரோ என்றற்றொடக்கத்த சுருதி (யசுர்வேதம்) கூறியவாறு, சொரூப பேதத்திற்கு விரோதம் எய்தாது என்றனர்.[53] அதே சூத்திரத்தில் ராமானுஜர் சரீரியாகிய ஆன்மாவிற்கு சரீரம் அமிசம்" என்று உதாரணம் கூறினர்.[53] சங்கரரும் உசு- இல் பிரமம் நிரவயவமாகையால் அதற்கு அமிசம் என்பது பொருந்தாது. அவயவமுடையதற்கே அமிசமுண்டு ஆதலால் சீவன் அமிசம் என்றது அமிசம் போல என்றாய்"[54] என்றனர். இதனால் ஆன்மா முதல்வனோடு கலப்பினால் ஒன்றாய் நிற்றல் காட்டப்பட்டது.

கு.பு:ரு
"ஆன்மாவையும் (தன்னையும்), (தனக்கு, உள்நின்று) செலுத்து பவரையும் வேறு என அறிந்து"

இதனால் பொருட்டன்மையால் வேறாதலும், உள்நின்று செலுத்துதால் உடனாதலும் காட்டப்பட்டன. எனவே, சைவசித்தாந்தத்திற் கூறிய "உலகெலாமாகி வேறாயுடனுமாய்" நிற்கும் சுத்தாத்துவித உண்மையே வேதங்களுக்கெல்லாம் துணிந்த பொருளாதலறிக.

மந்:
எ

உத்கீதமேதத் பரமம் து ப்ரஹ்ம
தஸ்மிம் ஸ்த்ரயம் ஸுப்ரதிஷ்டா
அக்ஷரம் ச/

அத்ராந்தரம் ப்ரஹ்மவிதோ
விதித்வா
லீநா ப்ரஹ்மணி தத்பரா
யோநிமுக்தா://

இ-ள் -

ஏதத் ப்ரஹ்மம்து - உள்நின்று செலுத்துகின்ற இந்தப் பிரமமே, பரமம் - மேலானதாக, உத்கீதம் - சுருதிகளால் பாடப்பட்டது. தஸ்மிந் - அதில், த்ரயம் - (பதி, பசு, பாசம் என்னும்) மூன்றும், ஸுப்ரதிஷ்டா - நன்கு நிலைபெற்றிருக்கின்றன. அக்ஷரம் ச- அழிவற்றனவுமாம், அத்ர - அந்த மூன்றிற்கும், அந்தரம் - வேறாய், அல்லது உள்ளீடாயி ருக்கிற பொருளை (பிரம்மதை), ப்ரஹ்மவித: - வேதத்தை யறிந்த முனிவர்கள், ப்ரஹமணிலீலா தத்பரா - அந்தப் பிரமத்தில் லயித்து அதுவாய் (பிரமநிட்டை-யுடை யோராய்), யோநி முத்தா:- பிறப்பிலிருந்து விடுபட்டவர்-களாய் (ஆகின்றார்கள்).

கு.பு:க

"ஏதத்" என்ற சுட்டு மேல் மந்திரத்திற் கூறிய சீவான்மாவுக்கு வேறாய் உள்நின்று செலுத்துகின்ற என்பதைக் குறிக்கும்.

கு.பு:உ

"பதி பசு பாசம் என்னும் மூன்றும் அதில் நன்கு நிலை பெற்றிருக்கின்றன"

பதி என்றது ஐந்தொழில் செய்தற் பொருட்டுத் தன் திருவருள் வாடிவாகிய பராசத்தியோடு கூடி, இலய சிவன் போக சிவன் அதிகாரசிவன் என்னும் பெயர்களைப் பெற்று, அரு, அருவுருவம், உருவம் என்னும் மூவகைத் திருமேனி கொண்டு விளங்கும் இறைவனது தடத்த (பொது) வியல்பினை. இறைவன் தடத்த நிலைக்கும் சொரூபநிலைக்கும் உண்மை-யிற் பேதமில்லை யாயினும், சத்திகாரியத்தின் பொருட்டுப் பேதமானது உளதாகின்து. சத்திக்கும் சிவத்துக்கும் பேதமில்லை என்பதும் முன்னர்க் காட்டப்பட்டது.

சிவன் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தருள் உருத்திரன்தான் மாலயன் ஒன்றின் ஒன்றாய்

பவந்தரும் அருவம் நாலிங் குருவநால் உபயம் ஒன்று
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர், என்றது[55]
- சிவஞான சித்தி,

இன்னும் இறைவனது இம்மூவகைத் திருமேனிகளினியல்புகள் எல்லாம் பவுட்கரத்துப் பதிபடலத்திலும், சிவஞானசித்தியார் முதலாஞ் சூத்திரத்து இரண்டா மதிகரணம் முதலிய விடங்களிலும் விரித்துரைக்கப் பட்டிருக்கின்றன. அவ்விடங்களிற் கண்டு கொள்க.

கு.பு:ங
பதி பசு பாசம் என்னும் மூன்றும் அழிவற்றவை. அதாவது பதியைப் போலவே பசுவும், பாசமும் தோற்றமும் இறுதியுமற்ற நித்தியப் பொருட்கள். அது இவ்வத்தியாயத்தில் வரும் ஒன்பதாவது மந்திரத்தில் விளக்கிக் கூறப்படும்.

கு.பு:ச
"பிரமத்தை யறிந்து அதில் லயித்து நிட்டையுடையோராய் முத்தர்களாகின்றார்கள்".

ஆன்மாவாகிய தன்னைப் பிரமத்தின் வேறாயறிந்து என்பது மேல் ஆறாவது மந்திரத்திற் பெறப்பட்டது. இந்திரியங்களின் வேறாகிய சேதனப் பொருளாகுந் தன்னை, அங்ஙனம் அவற்றின் வேறாகக் கண்டாலன்றி (தான் சுதந்திரவீனன் என்றும், தனக்குள் நின்று தன்னைச் சுகதுக்கங்களிற் செலுத்தி நடாத்தும் தலைவன் ஒருவன் தனக்கு வேறாயுள னென்றும்) தலைவனை யறிதல் கூடாது. (சீவ) ஆன்மாவில் (பரம) ஆன்மாவைக் காணவேண்டும்.[56] பிருஹதா.

கன்ம போகங்களை அனுபவிக்கின்ற சீவான்மாவையும், அவனுக்கருகிலிருப்பவனாய் எல்லாவற்றுக்கும் தலைவறா யுள்ள பரமான்வையும் எவன் அறிகின்றானோ[57] -கடம்

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராதுனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதி.........
- சிவஞான போதம் சூ.சு

"சிந்தை" என்றது தன்னறிவின்கண் என்றவாறு.

"கள்ளத்தைக் கழிய மனமொன்றி நின்
றுள்ளத் திலொளி யைக்கண்ட துள்ளமே"[58]

- நாவுக்கரசர். தேவாரம்.

இனி, அங்ஙனம் தலைவனைக் கண்டாலன்றி அவனிடத்து லியித்திருத்தல் கூடாது. லயித்தல் தன்போதம் முனைத்துத் தோன்றாதொழிதல். லயித்தன்றி நிட்டை கூடுதல் அமையாது. எனவே, தன்னைக் காண்டல் முதலிய இவை யொன்றற்கொன்று ஏதுவும் பயனுமாய்ச் சிறந்தமை காண்க.

மந்:

அ

ஸம்யுக்த மேதத் ஷரமஷரம் ச
வ்யக்தாவ்யக்தம் பரதே விஶ்வமீஶ:/
அநீஶஶ் சாத்மா பத்யதே போக்திரு
பாவாத் ஜ்ஞாத்வா தேவம் முச்யதே
ஸர்வபாஶை://

இ-ள்:-

ஷரம் அஷரம் ச - அழிவுடையதும் அழிவற்றதும் என்றும், வ்யக்தம் - வெளிப்பட்டுத் தோன்றுவதும் (காரியமும் - மாயேயமும்), அவ்யக்தம் - காரணமும் (மாயையும்) என்றும் (கூறப்படும்) ஸம்யுக்தம் - இரண்டு வகையும் கூடிய, ஏதத் விஶ்வம் - இந்த உலகத்தை, ஈஶ : பரதே - சிவபெருமான் தாங்குகிறார் (ஆளுகின்றார்), அநீஶஶ் சாத்மா - அனீசனாகிய ஆன்மாவோ, போக்திருபாவத் - தான் போக்தா என்னும் பாவனையினால் பத்யதே - பந்திக்கப்படுகின்றான், தேவம் ஜ்ஞாத்வா - சிவபெருமானையறிந்து, ஸர்வபாஶை:- எல்லாப் பாசங்களி லுமிருந்து, முச்யதே - விடுவிக்கப்படுகின்றான்.

கு.பு:க

"இரண்டு வகையும் கூடிய இந்த உலகத்தைச் சிவபெருமான் ஆளுகின்றார்"

சிவபெருமானுக்கு உயிர்கள் அடிமையும், மாயை உடைமையுமாம். சிற்றறிவும் சிறு சிறுதொழிலுமுடைய உயிர்களுக்கு அவர்களின் வினைக்கேற்றவண்ணம் மாயையி லிருந்து

தனுகரண முதலியவற்றைத் தோற்றுவித்துத் தந்து, அவற்றாலு-ளவாகும், சுக துக்க போகங்களை அறிவுக்கறிவாய் நின்றுணர்த்தி யூட்டுவிப்பது அம்முதல்வனே.

"எவரால் எல்லாவற்றையும் அறிகின்றானோ[59]" - பிரஹ்தா-ச-ச-த-சசிவபெருமான். சர்வசங்கார காலத்திலும், அறிவிக்கத் தக்கவர்களை அறிவித்து, மறைக்கத் தக்கவர்களை மறைத்து உயிர்களின் கன்மங்களைப் பக்குவப்படுத்தி மாயாசக்திகளை வெளிப்படத் தகுந்தவைகளாகச் செய்து, தோன்றுதற்குரிய எல்லாப் பொருட்களையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்[60] - மிருகேந் -ச-ச-கச

மன்னுசிவன் சன்னிதியின் மன்னுலகஞ் சேட்டித்த
தென்ற மறையி னியன்மறந்தாய் - சொன்ன சிவன்
கண்ணா வுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங் காண்
எண்ணான் சிவனசத்தையின்று.[61]

- சிவஞானபோதம்

"................... அருவனா யுலக மெல்லா மறிந்தவை ஆக்கி வேறா
யொருவனே யுயிர்கட் கெல்லா முயிருமாய் யுணர்த்தி நிற்பன்[62]

- சித்தி

"................. இறைவறன் சந்நி திக்க ணுலகின்றன்
சேட்டையென்னு
மறைகளு மறந்தாய் ...."[63]

கு.பு:உ
"ஆன்மா தான் போக்தா என்னும் பாவனையினால் பந்தப்படுகின்றது"
ஆன்மா பெத்த நிலையில் சுக துக்க போகங்களை நுகருங்கால், இறைவன் தனக்குயிர்க்குயிராய் உண்ணின்-றுணர்த்தி யூட்டு கின்றான் என்னு முண்மையை யறியாது, ஆணவமலத் தொடர்பினால் மயங்கி, நானே யறிந்து அனுபவிக்கின்றேன் என்றும், இப்போக்கியங்கள் என்னுடை-யன என்றும் நினைக்கும். இந்நினைவினால் (அகங்கார மமகாரங்களினால்) போகத்தில் விருப்பும், அது காரணமாய் வெறுப்பும் நிகழ்ந்து பிறவிக் கேதுவாய் ஆகாமியம் விளைய, அதனால் மேன்மேலும் பந்தம் வலுக்கொண்டு வளரும்.

"..
ஆன்மா வின்றன் னறிவொடு தொழிலை யார்த்து
நின்று போத் திருத்து வத்தை நிகழ்த்திச்
செம்பினிற் களிம்பேய்ந்
தென்று மஞ்ஞானங் காட்டு மாணவ மிசைந்து நின்றே"
என்றது சிவஞான சித்தி. [64]

"எப்பொருளு மாக்குவா னீசனேயெனு முணர்வும்
அப்பொருள்தா னாளுடையார டியார்களெனுமறிவு
மிப்படியா லிதுவன்றித் தம்மிசைவு கொண்டியலுந்
துப்புரவில்லார் துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார்"
- பெரியபுராணம் - சம்பந்தர் புராணம் எக

கு.பு:ரு
"சிவபெருமானை அறிந்து எல்லாப் பாசங்களிலிருந்தும் விடுபடுகின்றான்"

சிவபெருமானை அறிதலாவது அவர் தனக்குயிர்க்குயிராய் யுணர்த்தி நின்றுபகரிக்கும் முறைமையைத் தன்னறிவிலே விளங்கக் காண்டல். அங்ஙனம் காணவே சிற்றறிவையுடைய தான் யாதானுமொன்றைச் சார்ந்து நின்றறியும் பரதந்திரனா வதல்லது, தனித்து நின்றறியும் சுதந்திரனல்லன் என்ற தன்னுண்மையுந் தனக்கு விளங்கும். போகசாதனமாகிய கருவி கரணங்களையும், ஏனைப்போக்கியப் பொருட்களையும் நிறுத்தி, அவற்றில் தன்னை நியமிக்கின்ற அவரது பெருங் கருணைத் திறத்தையும் காணும்:

இவ்வாற்றால் "சடமும் சித்துமாகிய இருவகையும் கூடிய இந்த உலகத்தைச் சிவவெருமான் தாங்குகின்றார்" என்று சுருதி கூறிய உண்மை சுபானுபவமாம். இந்நிலையில் சடமும் சித்துமாகிய எப்பொருளும் அவரது வியாபகத்துளடங்கி வியாப்பியமாய் நிற்றலின், தான் தன்னறிவினாற் சென்று பற்றுதற்கும் விடுதற்கும் அவரையன்றியொன்றுமில்லை யென்றும், எல்லாம் அவர் செயலே என்றும் காணுகின்ற "இறைபணி நிற்க, மலமாயையொடு வல்வினையின்றே"

"......................
ஆரியனா மாசான் வந்தருளாற் றோன்ற
வடி ஞானம் ஆன்மாவிற் தோன்றுந்

துரியனாஞ் சிவன்றோன்றுந் தானுந் தோன்றுந்
தொல்லுலகமெல்லாந் தன்னுள்ளே தோன்றும்
நேரியனாப் பரியனுமா யுயிர்குயிரா
யெங்கு நின்றநிலை யெல்லா முனிகழ்ந்து தோன்றும்.[65]
- சித்தி

"..
மங்கைபங்க... கங்காநா யகநின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப்படலம் கீறித் தூய
ஞானநாட்டம். பெற்ற பின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையுங் கண்டே
னென்னே நின்னைக் காணா மாந்தர்
தன்னையுங் காணாத் தகைமை யோரே[66]-(பட்டணத்துப்பிள்ளை: திருவிடை- மருதூர் மும்மணிக்கோவை கரு)

இன்றெனக் கருளி யிருள் கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின்றன்மை நினைப்பற நினைந்தேன்
நீ யலாற் பிறிது மற்றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீயல்லையன்றி யொன்றில்லை
யாருன்னை யறிய கிற்பாரே[67]
-திருவாசகம்

தன்னறிவிலே சிவம் விளங்கக் காண்டல் சிவரூபம் என்றும், அருட்தரிசனம் என்றும் கூறப்படும். அவ்வருட்டரிசனத்தில் ஆன்மா மேற்கூறியவாறு தன்னுண்மையையுமறிதலால் சிவரூபத்தோடுட னிகழ்வது ஆன்மதரிசனம் என்பர். அதில் கண்ட இவையல்லேன் நான் என்று சடதத்துவங்கள் தனக்கு வேறாக நீங்கப் பெறுதலால் தத்துவ சுத்தியும் ஆண்டே நிகழும். ஆன்ம அறிவு ஏகதேசப்பட்டு சுட்டறிவிற்றாய் நிகழும் பெத்த நிலையில் உடல் பொறிகளில் அழுந்தச் சுகதுக்கபோகம் நுகர்ந்த முறைமை போல, அப்போகானுபவம் சிறிதும் தோன்றப் பெறாது, அருளில் அழுந்திச்

சிவானந்த போகத்தை யெங்கும் கண்டனுபவிப்பது சிவதரிசனமாம். அது இதுவிது எனக்காணும் சுட்டுப்போதம் பற்றறக் கழிந்து விடுதலால் சிவதரிசனத்துடன் நிகழ்வது ஆன்மசுத்தி என்பர். இன்னுமிவற்றின் விரிவை யெல்லாம் சைவசித்தாந்த நூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க.

ஒன்றை நினைந் தொன்றை மறந்தோடு மனமெல்லாநீ
யென்றறிந்தா லெங்கே யியங்கும் பராபரமே.[68]

ஆணவத் தோடத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ[69]

- தாயுமானவர்

இப்பேருண்மைகளை யெல்லாம் தன்னிடத்தடக்கிய, அடியில் வரும் மணிவாசகத்தைப் பன்முறை படித்து மகிழ்க.

அன்றே என்றன் னாவியுமுடலு முடைமை
யெல்லாமும்
குன்றே யனையா யென்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோரிடையூ றெனக்குண்டோ
வெண்டோண்முக்க ணெம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ விதற்கு நாயகமே.[70]

9-16 மந்திரங்களுக்குரிய உரைப்பிரதிகள் கிடைத்தில. மந்திரங்களைத் தமிழ் எழுத்துப் பெயர்ப்பில் கீழே தருகின்றோம். (பதி.ஆ)

மந் :

ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶாநீஶாவஜா
ஹ்யேகா போக்திரு போக்யார்த்த யுக்தா/
அநந்தஶ்சாத்மா விஶ்வரூபோ ஹ்யகர்த்தா
த்ரயம் யதா விந்ததே ப்ரஹ்மமேதத்//

மந் :

க௦ **க்ஷரம் ப்ரதானமமிர்தாக்ஷ ரம் ஹர:**
க்ஷராத்மா நாவீஶதே தேவ ஏக:/
தஸ்யாபித்யாநாத் யோஜநாத்தத்வ
பாவாத் பூயஶ்சாந்தே விஶ்வமாயாநிவிருத்தி://

மந்:
கக ஜ்ஞாத்வா தேவம் ஸர்வபாஶாபஹாநி:
க்ஷீணை: க்லேஶைர் ஜந்மம்ருத்யு ப்ரஹாணி:/
தஸ்யாபித்யா நாத்திருதீயம் தேஹபேதே
விஶ்வைஶ்வர்யம் கேவல ஆப்த காம://

மந்:
கஉ ஏதஜ்ஜேஞயம் நித்யமேவாத்மஸம்ஸ்தம்
நாத: பரம் வேதிதவ்யம் ஹி கிஞ்சித்/
போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா
ஸர்வம் ப்ரோக்தம் த்ரிவிதம் ப்ரஹமமேதத்//

மந்:
கந வஹ்நேர்யதா யோநிகதஸ்ய மூர்த்திர்ந
திருஶ்யதே நைவச லிங்கநாஶ:/
ஸ பூய ஏவேந்தநயோநிக்ருஹ்ய
ஸ்தத்வோபயம் வை ப்ரணவேந தேஹே//

மந்:
கச ஸ்வதேஹமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம்/
த்யாநநிர்மதநாப் யாஸாத்தேவம் பஶ்யேந்நிகூடவத்//

மந்:
கரு திலேஷீ தைலம் ததிநீவ ஸர்பி
ராப: ஸ்ரோதஸ்வரணீஷீ சாக்நி:/
ஏவமாத்மா ஆத்மநி க்ருஹ்யதே அஸௌ
ஸத்யேநைநம் தபஸா யோ அநு பஶ்யதி//

மந்:
கசு ஸர்வவ்யாபிநமாத்மாநம் க்ஷீரே ஸர்பிரிவார்பிதம்/
ஆத்மவித்யா தபோமூலம் தத்ப்ரஹ் மோபநிஷத் பரம்//
தத் ப்ரஹ்மோபநிஷத் பரம்//

இரண்டாமத்தியாயம்

முதல் மூன்று மந்திரங்களுக்குரிய உரைப்பிரதிகள் கிடைத்தில. மந்திரங்களைத் தமிழ் எழுத்துப் பெயர்ப்பில் கீழே தருகின்றோம் (பதி.ஆ)

மந்:
க யுஞ்ஜாநः ப்ரதமம் மநஸ் தத்வாய ஸவிதா தியः/
அக்நேர்ஜோதிர் நிசாய்ய ப்ருதிவ்யா அத்யாபரத்//

மந்:
உ யுக்தேந மநஸா வயம் தேவஸ்ய ஸவிதுः ஸவே/
ஸுவர்க்கேயாய ஶக்த்யா//

மந்:
ந யுக்த்வாய மநஸா தேவாந் ஸுவர்யதோதியா திவம்/
ப்ருஹஜ்ஜ்யோதிः கரிஷ்யதः ஸவிதா ப்ரஸுவாதி தாந்//

கு.பு: உ
"ஒளியையும் பேரொளியையும் எனக்கு உண்டாக்கி வைக்கத்தகுந்த"

ஒளியென்பது மனமும் புத்தியும் அடங்கிய விடத்துத் தன்னியல்பினை அறிவதாகிய ஆன்ம அறிவினையும் (பசுஞானத்தையும்), பேரொளி யென்பது, ஆன்மவினியல்பினை அறிந்த வழி அறியப்படுவதாய், ஆன்மாவினுள்ளீடாய் நின்று, அதன் அறிவைப் பிரேரிப்பதாயுள்ள திருவருட் சத்தியையும் (சிவஞானத்தையும்) குறிப்பனவாம்.

அறிதற்கரியராய், எல்லாவற்றிலும் அந்தரியாமியாய், மறைக்கப்பட்டுள்ளவராய், இருதயக் குகையில் இருப்பவரா

யுள்ள அந்தத் தேவனைத் தீரனானவன் அத்யாத்ம யோகத்தி னாலறிந்து சுக துக்கங்கங்களை விடுகின்றான்.[1]

"அறிஞனானவன் வாக்கை (இந்திரியங்களை) மனத்திலும், மனத்தை ஆத்மஞானத்திலும் (புத்தியிலும்) புத்தியை ஆன்மாவிடத்திலும் அந்த ஆன்மாவைப் பரமான்-மாவிடத்திலும் சேர்க்கக் கடவன்" [2]

கருவியாம் மனமும் புத்தி யகங்காரஞ் சித்த நான்கும்
மருவியான்மாவே யென்ன வருந் தீபமெனத் தெரிந்தங்
கொருவியான்மாவி னுண்மை யுணர்ந்தவர்தமை யுணர்ந்தோர்
தருமிது பசுஞானம் பின் சிவஞானம் தனக்கு மேலாம்[3]
- சிவஞான சித்தி

இச்செய்யுளின் பொருளைச் சிறிது விளக்குவோம்:

ஆன்மா ஒரு விடயத்தை அறியுங்கால் மனம் புத்தி முதலிய கரணங்கள் ஆன்மாவோடு பிரிப்பின்றி யொன்றுபட்டு நிற்கும். நிற்குங்கால், அவைதாமே கர்த்தா (ஆன்மா) வெனும்படி விளங்கும். ஆயினும் அவை (அறிதல்) கர்தாவன்று. கண் ஒரு பொருளைக் காணுங்கால் விளக்கு அதற்குக் (கண்ணுக்கு) கருவியாயிருத்தல் போல், ஆன்மாவுக்கு அவை கருவியாய் வேறு நிற்பனவென்றறிந்து அவற்றைவிட்டு நீங்கி நின்று, இக்கருவியைக் கொண்டறியுங் கருத்தா (ஆன்மா) எது என்று ஆராய்வோர்க்கு ஆன்மாவினுண்மை இனிது விளங்கும். இவ்வாறு விளங்கும் வன்மையுடைத்தாதலையே பரிபாகம் (பக்குவம்) என்பர். இங்ஙனம் அறியுமறிவு பசு ஞானமெனப்-படும். இதனையே "ஒளி" (திவம்) என்று இம்மந்திரம் கூறிற்று.

இவ்வாறு பசுஞானம் வந்த பின்னர், இவ்வறிவு நம்மிடத்தில் முன்னிகழக் காணாமையாலும், அறியுமிடத்தும் மறந்து மறந்தறியுமியல்பினாலும் நாமே சுதந்தரமாக அறிந்தோ மென்றால் பொருந்தாது. ஆதலால் நமது இப்பக்குவம் நோக்கித் தோன்றாத் துணையாயிருந்து நமக்கு அறிவிக்கும் பெரும்பொருள் வேறொன்றிருத்தல் வேண்டுமென்று கண்டு அதுயாதெனத் தேறுவோர், தம் உயிர்க்குயிராயிருந்து தம்மை நியமஞ் செய்யும் திருவருளொளியைக் (சிவஞானத்தை) காண்பர். (உலகப்பொருள்போல விடயரூபமாயன்று, அத்து விதமாய்) இது பேரொளி (ப்ருஹஜ்ஜோதி) எனப்பட்டது. மனம் புத்தி முதலியன கருவி மாத்திரமே யென்றறிந்து அவற்றி

னீங்குதல் தன்னை யறிதற்கும் (பசுஞானப்பேற்றிற்கும்), தான் ஒரு சுதந்திரமுமில்லாதவன் என்றறிதல் தலைவனை அறிதற்கும் (சிவஞானப் பேற்றிற்கும்) வாயில்களாயின. "பரமான்மாவை அத்யாத்ம யோதத்தினாலறிந்து" என்று மேல் எடுத்துக்காட்டிய கடவல்லியின் பொருளுமிதுவென்பதுணர்க. இவ்வாற்றால் மேற்கண்ட சுருதிகளின் வியாக்கியானமாய் இச்சிவஞானசித்திச் செய்யுள் அமைந்திருக்குமியல்பு கண்டு கொள்க.

"இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே
னீயலாற் பிறிதுமற் றின்மை
சென்று சென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற்பாரே" [4]

- திருவாசகம்.

உயிருக்குணர்த்தி நிற்கும் அப்பேரொளியைத் தெய்வச் சேக்கிழார் பெருமான்

"சோதியாயுணர்வு மாகித்
.... போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம்" [5]
என்றும்,
"............
இந்துவாழ் சடையானாடு மானந்த
எல்லையில்தனிப் பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளம்" [6]

என்றும் கூறினர். அப்பேரொளியே பராசத்தி (தேவான்மசத்தி) என்னு முண்மையுணரமாட்டாது. "தேவான்மசத்தி" (சுவேதாசு வதரம் க-ங) என்பதற்குப் "பிரகிருதி" என்று பொருளுரைத்தோர் சுருதியைக் கொலை செய்வோரேயாவர்.

ஆன்மா கருவிகரணங்களோடு கூடிப்போகம் நுகருமிடந்து அதனறிவை விடயங்களிற் செலுத்தி நுகர்வித்தலும் அத்திருவருட் சத்தியே. அந்நிலையில் அது திரோதான சத்தியெனப்படும். (திரோதானம் - மறைப்பு) திரோதான சத்தி

உயிர்களுக்குப் பக்குவம் வருவித்தற் பொருட்டு அவற்றோடுடனாய் நின்று, தன்னைக் காட்டாமலும், அவை யனுபவிக்க வேண்டிய வினைப்பயன்களைக் கூட்டுவித்து, அவற்றிலுள்ள குணதோஷங்களை அவ்வுயிர்கள் அறிய வொட்டாது மறைத்தும், மறைத்தற்றொழிலைச் செய்யும் ஆணவ மலத்திற்கு, வலிசெய்து நிற்கும். அங்ஙனம், மலத்தோடுடனாய் அதன் காரியப்பாட்டிற்கேதுவாய் நிற்றலால் திரோதனமலம் என்று உபசரித்துக் கூறப்படும். ஆனால் அது மலமன்று. உயிர்கள் இறைவன் திருவடியை யடைதற்கு வேண்டிய உபாயங்களை யெல்லாஞ் செய்து பெருங்கருணை வடிவாயிருக்கும்.

அவ்வுபாயங்களாவன:
மலசத்தி தேயும் வண்ணம் மாயையிலிருந்து காரியங்களைத் தோற்றுவித்து, ஆன்ம அறிவையெழுப்பி அவற்றோடு கூட்டி வினைப்பயன்களை யூட்டிக் கழிப்பித்தல் முதலியன. ஆதலின், உயிர்களைச் சினந்து செய்யும் மறைப்புத் தண்டங்களும் கருணைச் செயல்களேயாமாறு கண்டு கொள்க.

"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கடந் சொல்லாற்றின்
வந்திடாவிடி னுறுக்கி வளாரினா லடித்துத் தீய
பந்தமு மிடு வரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகு
மிந்த நீர் முறைமை யன்றோ வீசனார் முனிவும்.[7]
- சிவஞானசித்தி

ஓதுவித்தாய் முன்னறவுரை காட்டி யமணரோடே
காதுவித்தாய் கட்ட நோய்பிணி தீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித்தாய் நின்பணி பிழைக்கிற் புளியம் வளாரால்
மோதுவிப்பாய் முனிவாய் கச்சியேகம்பனே.[8]
- நா. தேவா ரம்.

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நானென தெனுமாயக்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து நின்றப் பெருமறை தேடிய
வரும்பொருள் அடியேனை
யடித்தடித்து வக்காரமுன் தீற்றிய
வற்புத மறியேனே [9] - (திருவாசகம்)

உயிரின் பந்ததிசையில் திரோதான சத்தியாய் நின்ற அவ்வருள் இருவினையொப்பு மலபரிபாகம் நோக்கி அவ்வுயிரினறிவிற் பேரொளி வடிவாய் விளங்கும் அருட்சத்தியாய் (பராசத்தியாய்) நின்று உயிரை இறைவன் திருவடிக் கீழ் வைக்கும். சிவத்திற்கும் சத்திக்கும் பேதமில்லை என்பது முன்னர்க் காட்டப்பட்டது. இருவினையொப்பு பலபரிபாகங்களினியல்பு வருமிடங்களிற் கண்டு கொள்க.

வானைக் கடந்தண்டத் தப்பால் மதிப்பன மந்திரிப்பார்
ஊனைக் கழிந்துய்யக் கொண்டருள் செய்வன வுத்தமர்க்கு
ஞானச் சுடராய் நடுவே யுதிப்பன நங்கையஞ்ச
ஆனையுரித்தன காண்க ஐயாற னடித்தவமே[10]

- நாவுக்கரசர் தேவாரம்

நீதி மாதவர் நெஞ்சிற் பொலிந்தன
வேதியாதவர் தம்மை வேதிப்பன
சோதியா யெழும் சோதியுட் சோதிய
ஆதிமா லயன் காணா அளவின.[11]

- பெரியபுராணம்

"சோதியுட் சோதியாய்த் தோன்றிடுவர்.[12]

- சித்தியார்

கு.பு:(ந)

"வீட்டுநெறிக்குரிய சாதனங்களை என்னிடத்திற் சேர்த்து அவற்றை அந்நெறியில் நியமிப்பாராக"

அவனருளாலே யவன்றாள் வணங்க"வேண்டுமென்பது கருத்து.

இறைவன் காட்டினாலன்றி உயிர்கள் காணமாட்டா.
காட்டுவித்தா லாரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே" [13]

- நாவுக்கரசர் தேவாரம்

பொ-ரை:

விடய போகங்களில் அலைந்து உழன்ற எனது மனமும் புத்தியும் பரமேஸ்வரனது திருவருட் பிரசாதத்தினால் அவ்வலைச்ச லொழிந்து அடங்கி விட்டன. வீட்டின்-

பத்தைத்தரும் சிவஞானப் பேற்றிற்குரிய [illegible]
[illegible] வண்ணம் அப்பர-
சாதனங்கள் எனக்கு நன்கு கைகூடும்
மேஸ்வரர் தம் அருளைப் புரிவாராக.

மந்:
ச

யுஞ்ஜதே மன உத யுஞ்ஜதே தியோ
விப்ரா விப்ரஸ்ய ப்ருஹ தோ விபஸ்சித:/
விஹோத்ரா ததே வயுநா விதேக
இந்மஹீ தேவஸ்ய ஸவிது: பரிஷ்டுதி://
(இருக்கு வேதம் ரு-அக-க, யஜுர்வேதம் ௪-க-க.')[14]

இ-ள்

(யே) விப்ர:- எந்தப் பெரியோர்கள், மன- மனத்தை, யுஞ்ஜதே - (புத்தியில்) சேர்க்கிறார்களோ, உத-பின்பு, திய:- புத்தியை (ஆன்மாவாகிய தன்னிடத்தில்) சேர்க்கின்றார்களோ, (தை:- அவர்களால்) விப்ரஸ்ய விப்பிரனும்[15], ப்ருஹத:- பெரியோனும், விபஸ்சித:- சருவக்ஞனும், தேவஸ்ய - தேவனுமாகிய, ஸவிது:- பரமேஸ்வரனுடைய, மஹிப-ரிஷ்டதி - மகத்தான எல்லாப் புகழ்களும் (பாடப்படுவதாக), ஸ இத்- அவனே, ஏக:- ஒருவனும், வயுநாவித்- எண்ணங்கள் செயல்கள் எல்லாவற்றிற்கும் சாட்சியாயுள்ளவனும், ஹோத்ரா விததே - யாகம் முதலிய நற்கருமங்களை விதித்தவனுமாவான்.

கு.பு:(க)
"எந்தப் பெரியோர்கள் மனதைப் புத்தியிலும் புத்தியை ஆன்மாவிலும் சேர்க்கின்றார்களோ, அவர்களால் பரமேசுவர னுடைய எல்லாப்புகழ்களும் பாடப்படுவதாக"

அந்தக் கரணங்களை யொருநெறிப்படுத்திய உத்தமரே இறைவனைச் சேர்ந்து பாடி வணங்கும் ஆற்றல் பெற்றோரா- வர். அவர் அவ்விறைவனை எஞ்ஞான்றும் மறப்பதில்லை. அத்தகை யோரை இறைவன் ஈற்றிலே தானாகச் செய்திடுவன்.

பத்திப்பேர் வித்திட்டே பரந்தஐம் புவன்கள் வாய்ப்பாலே
போகா மேகாவாப் பகையறும் கைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக்குணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமு மொரு நெறியாய்ச்

சிந்தித்தே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செய்யும வனுறையுமிடம்
கத்திட்டோர் சட்டங்கள் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவா தார்மேவுங் கழுமலவளநகரே[16]

ஞா-தேவாரம்

நாலந்தக் கரணமு மொரு நெறியாய்.....
..... செயுமவன்" என்னும் பகுதியை ஊன்றிச் சிந்திக்க மேற்கண்ட வேதமந்திரங்களின் பொருள் இனிது விளங்கும்.

ஒரு நெறிப் பட்ட உள்ளத்தோடு இறைவனைச் சேர்ந்து வழிபடுவோரை, இருவினைகளும், உயிர்க்குற்றம் முதலியனவும் அவ்வழிபாட்டு நெறியில் தடைப்படுத்திப் பிறநெறியிற் செலுத்த மாட்டுவன அல்ல. இவ்வுண்மையைப் பெரிதும் வலியுறுத்திக் கூறும்.

"பொய்மாயப் பெருங் கடவிற் புலம்பா நின்ற புண்ணியங்களாள் தீவினைகாள்" என்னும் முதலையுடைய தேவாரத்திருப்பதிகம் நாள்தோறும் படித்தின்புறப்பாலது. அத்திருப்பதிகத்திலுள்ள ஒரு திருப்பாட்டை இங்குத் தருகின்றோம்.

"சில்லுருவிற் குறியிருத்தி நித்தல் பற்றிச்
செழுங்கணால் நோக்குமிது வூக்க மன்று
பல்லுருவிற் றொழில்பூண்ட
பளகீரும் வசமன்றோ பாரோ ரெல்லாம்
சொல்லுருவிற் சுடர் மூன்றாய் உருவம் மூன்றாய்
தூநயன மூன்றாகி யாண்ட ஆரூர்
நல்லுருவிற் சிவனடியே யடைவேன் நும்மா
னைமைப்புண்ணேன் கமைத்து நீர்
நடமின்களே" [17]

"ஒடுங்கு நிலைபெற்ற வுத்தம ருள்ளம்
நடுங்குவதில்லை நமனுமங்கில்லை" [18]

- திருமந்திரம்.

கு.பு: (உ)
"அவனே எண்ணங்கள் செயல்கள் எல்லாவற்றுக்கும் சாட்சியா யுள்ளவன்"

பத்தைத்தரும் சிவஞானப் பேற்றிற்குரிய தியானயோக சாதனங்கள் எனக்கு நன்கு கைகூடும் வண்ணம் அப்பர-மேஸ்வரர் தம் அருளைப் புரிவாராக.

மந்:
சு

யுஞ்ஜதே மன உத யுஞ்ஜதே தியோ
விப்ரா விப்ரஸ்ய ப்ருஹ தோ விபஶ்சித:/
விஹோத்ரா ததே வயுநா விதேக
இந்மஹீ தேவஸ்ய ஸவிது: பரிஷ்டுதி://
(இருக்கு வேதம் ரு-அக-க, யஜுர்வேதம் ச-க-க.')[14]

இ-ள்

(யே) விப்ர:- எந்தப் பெரியோர்கள், மன- மனத்தை, யுஞ்ஜதே - (புத்தியில்) சேர்க்கிறார்களோ, உத-பின்பு, திய:- புத்தியை (ஆன்மாவாகிய தன்னிடத்தில்) சேர்க்கின்றார்களோ, (தை:- அவர்களால்) விப்ரஸ்ய விப்பிரனும்[15], ப்ருஹத:- பெரியோனும், விபஶ்சித:- சருவக்ஞனும், தேவஸ்ய - தேவனுமாகிய, ஸவிது:- பரமேஸ்வரனுடைய, மஹிப-ரிஷ்டதி - மகத்தான எல்லாப் புகழ்களும் (பாடப்படுவதாக), ஸ இத்-அவனே, ஏக:- ஒருவனும், வயுநாவித்- எண்ணங்கள் செயல்கள் எல்லாவற்றிற்கும் சாட்சியாயுள்ளவனும், ஹோத்ரா விததே - யாகம் முதலிய நற்கருமங்களை விதித்தவனுமாவான்.

கு.பு:(க)

"எந்தப் பெரியோர்கள் மனதைப் புத்தியிலும் புத்தியை ஆன்மாவிலும் சேர்க்கின்றார்களோ, அவர்களால் பரமேசுவரனுடைய எல்லாப்புகழ்களும் பாடப்படுவதாக"

அந்தக் கரணங்களை யொருநெறிப்படுத்திய உத்தமரே இறைவனைச் சேர்ந்து பாடி வணங்கும் ஆற்றல் பெற்றோரா-வர். அவர் அவ்விறைவனை எஞ்ஞான்றும் மறப்பதில்லை. அத்தகை யோரை இறைவன் ஈற்றிலே தானாகச் செய்திடுவன்.

பத்திப்பேர் வித்திட்டே பரந்தஐம் புவன்கள் வாய்ப்பாலே
போகா மேகாவாப் பகையறும் கைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக்குணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமு மொரு நெறியாய்ச்

சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செய்யும வனுறையுமிடம்
கத்திட்டோர் சட்டங்கள் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவா தார்மேவுங் கழுமலவளநகரே[16]

ஞா-தேவாரம்

நாலந்தக் கரணமு மொரு நெறியாய்.....
..... செயுமவன்" என்னும் பகுதியை ஊன்றிச் சிந்திக்க மேற்கண்ட வேதமந்திரங்களின் பொருள் இனிது விளங்கும்.

ஒரு நெறிப் பட்ட உள்ளத்தோடு இறைவனைச் சேர்ந்து வழிபடுவோரை, இருவினைகளும், உயிர்க்குற்றம் முதலியனவும் அவ்வழிபாட்டு நெறியில் தடைப்படுத்திப் பிறநெறியிற் செலுத்த மாட்டுவன அல்ல. இவ்வுண்மையைப் பெரிதும் வலியுறுத்திக் கூறும்.

"பொய்மாயப் பெருங் கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்களாள் தீவினைகாள்" என்னும் முதலையுடைய தேவாரத்திருப்பதிகம் நாள்தோறும் படித்தின்புறப்பாலது. அத்திருப்பதிகத்திலுள்ள ஒரு திருப்பாட்டை இங்குத் தருகின்றோம்.

"சில்லுருவிற் குறியிருத்தி நித்தல் பற்றிச்
செழுங்கணால் நோக்குமிது வூக்க மன்று
பல்லுருவிற் றொழில்பூண்ட
பளகீரும் வசமன்றோ பாரோ ரெல்லாம்
சொல்லுருவிற் சுடர் மூன்றாய் உருவம் மூன்றாய்
தூநயன மூன்றாகி யாண்ட ஆரூர்
நல்லுருவிற் சிவனடியே யடைவேன் நும்மா
னைமைப்புண்ணேன் கமைத்து நீர்
நடமின்களே" [17]

"ஒடுங்கு நிலைபெற்ற வுத்தம ருள்ளம்
நடுங்குவதில்லை நமனுமங்கில்லை" [18]

- திருமந்திரம்.

குு.பு: (உ)
"அவனே எண்ணங்கள் செயல்கள் எல்லாவற்றுக்கும் சாட்சியா யுள்ளவன்"

எம் உயிர்க்குயிரா யெவற்றையும் பார்த்துக் கொண்டிருக் கின்றார் என்றபடி.

கூடியிருக்கின்ற நண்பினை யுடைய இருபறவைகள் ஒரே மரத்தைப் பற்றிக் கொண்டிருக்கின்றன. அவற்றுளொன்று இனிய பழத்தை யுண்ணுகின்றது. மற்றது உண்ணாது பார்த்துக் கொண்டிருக்கின்றது.[19]
(இருக்குவேதம். க-கசுசு-உ௦:சுவேதம் ச-சு : முண்டகம் ங-க-க)

கள்ளனேன் கள்ளத்தொண்டாய்க் காலத்தைக் கழித்துப்
- போக்கித்
தெள்ளியே னாகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவா ருள்கிற் றெல்லா முடனிருந்தறிதி யென்று
வெள்கிறேன வெள்கி நானும் விலாவறச் சிரித்திட் டேன் [20]
- நாவுக்கரசர் தேவாரம்

"................ நாடா
வென்னுட் கரந் தென்பின்
வந்தருளி .... எனைப்பிரியாதே
யோடி மீள் கென வாடல் பார்த்திட்
டென்வழி நின்றனனெந்தை ...." [21]
- இருபாவிருபது கஅ

பொ-ரை
மனத்தைப் புத்தியிலும், புத்தியை ஆன்மாவிலும் சேர்க்க-வல்ல பெரியோர்களால், விப்ரனும் பெரியோனும் சர்வக்ஞ-னும், தேவனுமாகிய சருவேசுவரனுடைய எல்லாப் புகழ்களும் பாடப்படுவதாக. ஏனெனில் ஒருவனும், வேள்வி முதலிய நற்கருமங்களை விதித்தவனுமாகிய அப்பரமேசுவரனே நமது எண்ணங்கள் செயல்கள் எல்லாவற்றையு மறிந்து எமக்கு அருள் செய்யுந் தலைவனாவன்.

மந்:
ரு.

யுஜே வாம் ப்ரஹ்ம பூர்வ்யம் நமோபிர்
விஸ்லோக ஏது பத்யேவ ஸூரே:/
ஶ்ருண்வந்து விஶ்வே அம்ருதஸ்ய புத்ரா
ஆ யே தாமாநி திவ்யாநி தஸ்து://

இருக்கு வேதம் கo- கங - க
யசுர் வேதம் ச- க - க- ரு
அதர்வவேதம் கஅ- ங- சு-சு[22]

மேற்கண்ட வேதமந்திரங்கள் ஐந்தும் சதபதப்பிராஹ் மணத்தில் மேற்கோளாகப் படிக்கப்பட்டிருக்கின்றன. சதபதப்பராஹ்மணம் ரு - ங- 1, 12,-17.[23]

இ-ள்

வாம்- உங்களுக்கு, பூர்வ்யம் -முன்னுள்ள (காரணபூதமான), ப்ரஹ்ம - பிரமத்தை, நமோபி:- நமஸ்காரங்களினால் யுஜே- அடைகின்றேன், (மம) ஸ்லோக- எனது புகழ்ச்சிக்குரிய (என்னால் பாடப்படுகின்ற) அந்தப் பிரமத்தின் அருளானது, ஸுரே: சாதுக்களது, பதிஏவ வி ஏது - வழியினால் பல்வேறு வகையால் (என்னிடத்திற்கு) வருவதாக, யே தாமாநி திவ்யாநி - எவர்கள் ஒளிவடிவான திவ்விய உலகங்களில், ஆதஸ்து: இருக்கின் றீர்களோ, அம்ருதஸ்ய புத்ரா விஶ்வே - அந்த சிவபுத்திரர் களாகிய நீவிர் எல்லீரும், இதம் ஶ்ருண்வந்து- இதனைக் கேளுங்கள்.

கு-பு:க

"உங்களுக்கு முன்னுள்ள பிரமத்தை"
சித்தும் சடமுமாகிய எவற்றினுக்கும் காரணமாயுள்ள பிரமத்தை என்றபடி

சௌமிய சத்தாகிய பிரமமே முதற்கண் இருந்தது.[24]
- சாந். சு-உ-க

மூவாய் பிறவாயிறவாய் போற்றி,
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி.[25]
- நாவுக்கரசர் தேவாரம்.

கு.பு: உ

"சாதுக்களது வழியினால், பலவேறு வகையால் வருவதாக" சாதுக்கள் எந்த எந்த வழியினால் இறைவன் திருவருளைப் பெறுகின்றார்களோ அந்த அந்த வழியினால் எனக்கும் அத்திருவருள் உண்டாவதாக. அது கிடைக்கும் வண்ணம் அவனை வழிபடுகின்றேன் என்பது கருத்து.

பத்தர்கட்கருளும் வைத்தார் பாய்விடை யேறவைத்தார்
சித்தத்தை யொன்ற வைத்தார் சிவமதே நினைய வைத்தார்
முத்தியை முற்ற வைத்தார் முறைமுறை நெறிகள் வைத்தார்
அத்தியினுரிவை வைத்தா ரையனையாறனாரே [26]

- நாவுக்கரசர் தேவாரம்.

பொ-ரை

எல்லாம் தோன்றுவதற்கு முன்னுள்ளவராகிய பரப்பிரம ருப சிவபெருமானாரை நமஸ்காரங்களினால் சரணடைகின்றேன். அவரது திருவருள் சாதுக்களுக்கு எந்த எந்த வழியினாற் கிடைக்கின்றதோ அந்த அந்த வழியினால் எனக்கும் கிட்டுவதாக. ஒளிமயமான அருள்நெறிபற்றி வாழும் சிவபுத்திரர் களே இதனைக் கேளுங்கள்.

மந்:
சு

அக்நிர் யத்ராபி மத்யதே வாயுர் யத்ராதிருத்யதே/
ஸோமோ யத்ராதிரிச்யதே தத்ர ஸம்ஜாயதே மந://

இ-ள்

யத்ர - எவ்விடத்தில், அக்நி - அக்கினியானது, அபிமத்யதே- சுவாலிக்கப்படுகின்றதோ, யத்ர - எவ்விடத்தில், வாயு:- வாயுவானது, அதிருத்யதே - தடுக்கப்படுகிறதோ, யத்ர - எவ்விடத்தில், ஸோம:- சந்திரன் (அமிர்த தாரை), அதிரிச்யதே- அதிகமாகப் பெருக்கப்படுகின்றதோ, தத்ர - அவ்விடத்தில் மந:- மனமானது, ஸம்ஜாயதே- பெறுவிக்கப்படுகின்றது.

கு-பு.

அக்கினி என்றது தியானயோகம் செய்யுங்காலத்து உடம்பகத்தே சுவாலித்தெழும் மூலாக்கினியை. வாயு - பிராணவாயு. சந்திரன் அக்காலத்திலே பெருக்கெடுத்துப் பாயும் அமிர்த தாரையைக் குறிக்கும். ஸோமரஸம் என்று வேதங்களில் குறிப்பிடப்படுவது இவ்வமிர்த தாரையையே.

பொ-ரை

மூலாக்கினி எங்கு சுவாலிக்கப்படுகின்றதோ, பிராண வாயு எங்கு அடக்கப்படுகின்றதோ, எவ்விடத்தில் அமிர்ததாரை

பெருக்கப் படுகின்றதோ அங்கு மனதின் நாட்டம் செலுத்தப்படுகின்றது.

மந்:
எ

ஸவித்ரா ப்ரஸவேந யுஷேத ப்ரஹ்ம பூர்வ்யம்/
தத்ர யோநிம் க்ருணவஸே ந ஹி தே பூர்வ [37] மக்ஷிபத்//
(இம் மந்திரம் அற்ப மாறுபாட்டோடு இருக்கு வேதம் கூ- கசு- கஅ இல் காணப்படுவது)[38]

இ-ள்.
ஸவித்ரா ப்ரஸவேந- பரமேதவரனது திருவருளினால், பூர்வ்யம் ப்ரஹ்ம - (எல்லாம் தோன்றுவதற்கு) முன்னுள்ள (எவற்றினுக்கும் காரணமான) பிரமத்தை, யுஷேத - சேவிப்பானாக. தத்ர - அங்கு (அப்பிரமத்தினிடத்தில்) யோநிம் க்ருணவஸே- புகலிடத்தைத் தேடுவாயாக, (தேடுவாயாயின்) பூர்வம் - முன் செய்த வினை, நஹி அஷிபத் - பந்த காரணமாகாதன்றோ.

கு-பு:க
"பரமேசுவரனது திருவருளினால் பிரமத்தைச் சேவிப்பானாக"

பரமேசுவரனென்றது இறைவனது தடத்த நிலையாகிய பதியினைக் குறிக்கும்.

சிவம் (பிரமம்) பதி என்றிரண்டாகக் கூறப்படினும் உண்மையில் இரண்டற்கும் பேதமில்லை என்பது சர்வ-ஞானோத்தரம், பவுட்கரம் முதலிய ஆகமங்கள் வாயிலாக உணரப்படும். ஈண்டு விரிப்பிற் பெருகும். அவ்விறைவனை நாம் வழிபடுதற்குரிய அறிவாற்றல்களை அவனே தந்தருளுதல் வேண்டும். அவ்வருள் முன்னை நல்வினைப் பயனால் விளைவது. ஆதலால் இயன்ற வாறு நல்வினை செய்தல் நம் கடனன்

ஆசைவன் பாச மெய்தி அங்குற்றே னிங்குற்றேனாய்
ஊசலாட் டுண்டு வாளா உழந்து நானுழி தராமே
தேசனே தேச மூர்த்தீ திருமறைக் காடு மேய
ஈசனே யுன்றன் பாதம் ஏத்துமா றருளெம் மானே[39]

- நாவுக்கரசர் தேவாரம்

அவனருளாலே யவன்றாள் வணங்கி[30]

- திருவாசகம்

கு-பு:(உ)

"பிரமத்தினிடத்தில் புகலிடத்தைத் தேடுவாயாயின் முன்செய்த வினை பந்த காரணமாகாதன்றோ"

பந்த காரணமாகாதென்று நூல்கள் கூறிய உண்மையை எடுத்துக் காட்டி இறைவனைச் சரணடையுமாறு சுருதி வற்புறுத்தியது. சரணடைதலாவது
"நாமல்ல விந்திரிய நம்வழியின் அல்லவழி
நாமல்ல நாமு மரனுடைமை" [31] சிவஞானபோதம்.
என்றவாறு. பதி பசு பாச இயல்புகளை நல்லாசிரியன் வாயிலாக ஆராய்ந்தறிந்து தன்செய லொழிந்து இறைவனடிக் கீழடங்கி யிருத்தல். அங்ஙனமிருக்கவே ஆகாமிய வினை-யேறாது, பிராரத்தம் தாக்குதலின்றி உடலனுபவ மாத்திரை-யாய்க் கழியும், சஞ்சிதம் முன்னரே ஆசாரியன் முன்னிலை-யிலொழிந்து விடும். மந்திரத்தில் முன்வினையென்றது ஆகாமியத்தையுடன் கொண்டுவரும் பிராரப்தத்தை யென்க. இன்னும் இவற்றில் விரிந்து கிடக்கு முண்மைகளைச் சிவஞானபோதம், சித்தியார் என்பவற்றின் பத்தாஞ் சூத்திரப் பொருளைத் தக்கார் வாய்க் கேட்டறிக.

சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாம வேதி
அந்தரத் தமரர் பெம்மான் ஆன்நல்வெள்ளூர்தி யான்றன்
மந்திரம் நமச்சிவாய ஆகநீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே[32]

- நாவுக்கரசர் தேவாரம்.

திருவைந்தெழுத் தெழுத்தும் திருவெண்ணீறும் உருத்திராக்க முமாகிய சிவசின்னங்கள் மலமாயை கன்மங்களை யொழித்து வீட்டுநெறியில் உயிர்களைச் செலுத்துவனவாம், என்னும் உண்மை இனிவெளிவரும் பங்மஜாபாலம் பஞ்சருத்திரம் என்றுமுபநிடதங்களில் நன்கு விளங்கும்.[33]

பொ-ரை

எல்லாந் தோன்றுதற்குக் காரணமாயுள்ள பிரமத்தைத் தியானயோகஞ் செய்தலில் விருப்புடையோன் சேவிப்பானாக.

நீ அப்பிரமத்தினிடத்தில் சரணடைவாயாயின் முன்வினைகள் இனியுமுன்னைப் பாதிக்கமாட்டா.

வினையின் முனைப்பொழியவே தியான யோகத்திற்கு எவ்வித இ டையூறுகளும் நிகழமாட்டா என்பது கருத்து.

மந்:
அ

த்ரிருந்நதம் ஸ்தாப்ய ஸமம் ஶரீரம்
ஹ்ருதீந்த்ரியாணி மநஸா ஸந்நிவேஶ்ய/
ப்ரஹ்மோடுபேந ப்ரதரேதவித்வாந்
ஸ்ரோதாம்ஸி ஸர்வாணி பயாவஹாநி//

இ-ள்
வித்வாந் - அறிஞனானவன், த்ரி, உந்நதம் ஸ்தாப்ய - மேற்பாகத்திலுள்ள மார்பு, கழுத்து தலை ஆகிய மூன்று பகுதிகளையும் நேராக நிறுத்தி, ஶரீரம் ஸமம் ஸ்தாப்ய - சரீரத்தைச் சமன் செய்து, மநஸா இந்த்ரியாணி - மனத்தையும் இந்திரியங்களையும், ஹ்ருதி ஸ்ந்நிவேஶ்ய - இருதயத்திலே பிரவேசிக்கும்படி செய்து (ஒடுக்கி), ப்ரஹ்ம உடுபேந - பிரணவமாகிய தெப்பத்தைக் கொண்டு, ஸர்வாணி பயாவஹாநி ஸ்ரோதாம்ஸி - எல்லாப் பயங்கரமான ஆறுகளையும், ப்ரதரேத - கடத்தல் வேண்டும்.

"தனியிடத்தில் சுகாசனத் திருந்து, சுத்தனாய்க் கழுத்து தலை சரீரம் இவற்றைச் சமமாக நிறுத்தி எல்லா இந்திரியங்களையு மடக்கி...." [34]

- கைவல்யோபநிடதம்

கு.பு:க
"பிரணவமாகிய தெப்பத்தைக் கொண்டு பயங்கரமான எல்லா ஆறுகளையுங் கடத்தல் வேண்டும்"

உலகப் பொருட்களின் மேற்கொண்ட பற்றுகளை, அவற்றால் விளையுந் துன்பங்களை, ஆறுகள் என உருவகித்தார். பிரணவத்தினால் இவற்றை எளிதில் கடந்துவிடுதல் கூடும் என்பது கருத்து.

ஓங்காரம், பிரணவம் என்பன சிவநாமங்களாவன என்று அதர்வசிரசு முதலிய உபநிடதங்கள் கூறும். பிரணவசப்தம் எழுத்துநிலை மந்திரமாதலினால் உமையம்மையாரின் திருநாமமுமாயிற்று என்றும், அதன் வரிவடிவம் சிவலிங்க ரூபமாமென்றும் சிவமகாபுராணம் முதலியன கூறும்.[35]

"இனி, சிவபெருமான் எதனால் ஓங்காரம் என்று சொல்லப்படு கின்றார்? எதனால் உச்சரிக்கப்படுபவர் பிராணன்களை மேலே எழும்பச் செய்கின்றாரோ, அதனால் அவர் ஓங்காரம் என்று சொல்லப்படுகின்றார்"

எதனால் பிரணவம் என்று சொல்லப் படுகின்றார்? எதனால் உச்சரிக்கப்படுபவர் (உச்சரிக்கும்) பிராமணர்களை இருக்கு, யசூர், சாமம், அதர்வம் ஆங்கிரஸம் பிரமா இவர்கள் வணங்கும் படியும் புகழும்படியும் செய்கின்றாரோ, அதனால் பிரணவம் என்று சொல்லப்படுகின்றார்.[36]

- அதர்வசிரம்.

இம்மந்திரத்தில் வரும் "ப்ரணாமயதி நாமயதி தஸ்மாத் உச்யதே ப்ரணவ:" என்பதில் வரும் "ப்ரணாமயதி" என்னும் சொல்லிற்கு "வணங்கச் செய்வது" என்னும் பொருளேயன்றி, ஒலிக்கச் செய்வது என்றுமொரு பொருளிருத்தலால், நாத (ஒலி, வடிவமாகிய வேதாகமங்கள் முதலிய கலைகளாகிய சொற்பிரபஞ்சமும் ஏனைப் பொருட்பிரபஞ்சமுமாகிய இருவகைப் பிரபஞ்சமும் தோன்றுவதற்கு இடமாயிருத்தலால், சிவபெருமான் பிரணவமென்று சொல்லப்படு கின்றார் என்ற பொருளும் சிறக்கும். அன்றியும் ஒலிவடிவாகிய வேதமந்தி-ரங்களைத்தும் சிவபெருமானாகிய ஒருவரையே தோத்திரஞ் செய்வதின் தாற்பரிய முடைமையால் அவர் பிரணவமென்று சொல்லப் படுகின்றார். என்னும் பொருளும் போதரும்.

"அன்புடனே ருத்திரனை (சிவபெருமானை) ஆராதனை செய்வதில் ஈடுபட்டிருப்பவன் பிரணவமாகிய தேரின்மேலேறி விட்டுணுவைச் சாரதியாகக் கொண்டு சிவலோகத்திற்குச் செல்லுவான்" என்று அமிர்நாதோபநிடதம் இரண்டாம் மந்திரம் செப்புகின்றது.[37]

பிரணவப் பொருளை விளக்குதற்கெழுந்த மாண்டுக்யோப-நிடதம் பிரணவத்தின் நான்காம் பாதமாகிய அர்த்த

மாத்திரையின் பொருள் துரிய மூர்த்தியாயுள்ள சங்கார கர்த்தாவாகிய சிவபெருமானேயாம் என்று ஐய விபரீதங் களுக்குச் சிறிது மிடமின்றித் தெளிவுபடுத்திக் கூறுகின்றது. அம் மந்திரத்தையும் அதன் பொருளையும் இங்கெடுத் தெழுதுவோம்.

நாந்த:ப்ரஞ்ஞம் ந பஹிப்ரஞ்ஞம்
நோபயத: ப்ரஞ்ஞம் ப்ரஞ்ஞாநகநம் ந ப்ரஞ்ஞம்
நாப்ரஞ்ஞம்
அத்ருஷ்டம் அவ்யவஹார்யம் அக்ராஹ்யம்,
அலக்ஷணம் அசிந்த்யம், அவ்யவதேஶ்யம்,
ஏகாத்மப்ரத்யயஸாரம், ப்ரபஞ்சோபஸமம்
ஶாந்தம் ஶிவம் அத்வைதம் சதுர்ததம்
மந்யந்தே ஸ ஆத்மா ஸவிஞ்ஞேய:[38]

- மாண்டூக்யம் உ-ரு

இ-ள்

சாக்கிரம் சொப்பனம் சுழுத்தியவத்தைகள் கடந்தவரும், அறிவு அறியாமை இரண்டும் இல்லாதவரும், ஞானேந்திரியன்கள் மேந்திரியங்களுக்கன்கெட்டாதவரும், அளவைகளாலறியப் படாதவரும், சிந்தனைக் கெட்டாதவரும். இப்படிப்பட்டவரென்று நிச்சயித்தறிய முடியாதவரும், "அவனே தானேயாகிய வந்நெறியேகனாய்" என்றபடி ஒற்றித்து நின்றுணர வல்லார்க்கு வெளிப்பட்டுத் தோன்றுபவரும், (ஏகாத்மப்ரத்யயஸாரம்) உலகமெல்லாம் ஒடுங்குவதற்கிடமாயுள்ளவரும் (சங்காரகர்த்தாவும்), (ப்ரபஞ்சோபஸமம்) சாந்தரூபரும், இரண்டற்ற வருமாகிய சிவபெருமானை (ஶவம்) ப்ரணவத்தின் நான்காவது மாத்திரைப் பொருளாக எண்ணுகின்றார்கள். அவர் எல்லாவற் றிற்கும் அந்தரியாமியாயுள்ளவர். அவரையறிதல் வேண்டும்.

இன்னும் இவ்வுபநிடதத்தின் இறுதி மந்திரம் இப்பொருளை அநுவதித்தெடுத்துக் கொண்டு, சிவபெருமான் பிரணவ வடிவினரென்றும், இவ்வாறு அறிபவன் அவரது அருளால் அவரையறிந்து அடைகின்றான் என்றும் கூறிமுடிக்கின்றது. அம்மந்திரம் பின்வருமாறு:

அமாத்ர: சதுர்த்த: அவ்யவஹார்ய:
ப்ரபந்சோபஸம: ஶிவ: அத்வைத:

ஏவம் ஓங்கார ஆத்மா ஏவ
ஸம்விஸதி ஆத்மநா ஆத்மாநம் ய
ஏவம் வேத ய ஏவம் வேத [39] - மாண்டுக்கியம்

மேற்கண்டவாற்றால் இதன் பொருள் உரைத்துக்கொள்க.

இனி, சிவமஹாபுராணத்துக் கைலாச சங்கிதை சம் அத்தியாயத்திலே பிரணவத்தின் யந்திரரூபம் சிவலிங்க வடிவாகுமென்று கூறுகின்றது. அச்செய்யுட் பொருள் பின்வருமாறு: பிரணவத்தின் முதலாம் பாதமாகிய அகாரம் அடியிலும், (பீடத்தின்மேல்) உகாரமும் அதன்மேல் மகாரமும் அதன்மேல் விந்துவும் அதன்மேல் நாதமும், இங்ஙனமாக வரைந்த பின்னர் பிரணவத்தினால் அதனை வளைந்துவிடுக"[40]

இப்பொருளையே "ஓங்காரமே நற்றிருவாசி மற்றதனில் நீங்கா வெழுத்தே நிறைசுடராம்"[41] என்று உண்மை விளக்கம் கூறிற்று. சுடர் என்றது புறத்தே சிவலிங்கத்தைக் கருதும்.

அகத்திலும் அதனைத் தரிசிக்குமாற்றினை "தம்மிற் சிவலிங்கங்கண்டு" [42] என்னும் முதலையுடைய திருக்-களிற்றுபடிச் செய்யுளின் பொருளை வல்லார் வாய்க் கேட்டுணர்க.

இனி, பிரணவம் எழுத்து நிலை மாறுதலினால் உமையம்மையாரின் திருநாமமாகின்றது என்று லிங்க புராணம் கூறுமாறு காட்டுதும். "ஒரு பிரணவம் உமாதேவியாருக்குரியது, மற்றொன்று சிவபெருமானுக்குரியது. சிவபெருமானது பிரணவத்திலுள்ள அ,உ,ம் என்பன உ,ம், அ என மாறிநின்று (உமா) தேவியாரது பிரணவமாயிற்று" [43] (இலிங்கபுராணம். அரு ம் அத்தியாயம் "-சசு)

தாமென்று மனந்தளராத் தகுதியரா யுலகத்துக்
காமென்று சரண்புகுந்தார் தமைக்காக்குங் கருணையினான்
ஓமென்று மறைபயில்வார் பிரமபுரத் துறைகின்ற
காமன்ற னுடலெரியக் கனல்சேர்ந்த கண்ணானே.[44]
- சம்பந்தர்.

ஒன்றவே யுணர்தி ராகில் ஓங்காரத் தொருவ னாகும்
வென்றவைம் புலன்கள் தம்மை விலக்குதற்குரியீ ரெல்லாம்

நற்றவ நாரணனு நான்முகன் நாடிக் காண்குற்
றன்றவர்க கரியர் போலு மதிகை வீரட்டனாரே.[45]
- நாவுக்கரசர் தேவாரம்.

உய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய் நின்ற
மெய்யா விமலா [46] - திருவாசகம்.

ஓமெனு மோங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனு மோங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனு மோங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனு மோங்கார மொண்முத்தி சித்தியே

ஓங்காரத் துள்ளே யுதித்த வைம்பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர் மூன்று முற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே [47]
- திருமந்திரம்.

யோகத்திற்குரிய அங்கங்கள் எட்டு. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன.

"மார்பு கழுத்து தலை ஆகிய அவயவங்களை நேராக நிறுத்திச் சரீரத்தைச் சமன்செய்து" என்றது, எட்டங்கங்களில் ஆசனத்தைக் கருதும். இங்குக் கூறியது சுகாசனமாம். அஃதாவது எவ்வாறிருப்பின் தியானம் செய்வதற்குச் சுகமாயிருக்குமோ அவ்வாறிருத்தல்.

"மனதையும் இந்திரியங்களையும் (அடக்கி) இருதயத்திலே பிரவேசிக்கும்படி செய்து" என்பது பிரத்தியாகாரம் தாரணை என்பவற்றைக் குறிக்கும். தாரனையென்பது ஒரு குறியிலே மனதை நிறுத்துதல்.

"பிரணவமாகிய .... கடத்தல் வேண்டும்" என்பதால் தியானம் கூறப்பட்டது. பிராணாயாமம் முதலியன பின்னர்க் கூறப்படும்.

பொ-ரை

மார்பு, கழுத்து, தலை ஆகிய அவயவங்களை நேராக நிறுத்திச் சரீரத்தைச் சமன் செய்து (சுகாசனத்திருந்து) மனதையும்

இந்திரியங்களையும் அடக்கி (பிரத்தியாகாரம்) இதயத்தில் நிறுத்தி (தாரணை) பிரணவமாகிய தெப்பத்தைக் கொண்டு (தியானம்) பயங்கரமான எல்லாச் சம்சார நதிகளையும் அறிஞன் கடத்தல் வேண்டும்.

அமிர்தநாதோபநிடதம் பின்வருமாறு கூறுகின்றது: பிரணவ மென்பது ஏகாட்சரப் பிரமம். (தியானயோகம் செய்பவன்) அதனை என்றும் மறத்தலாகாது. மலம் நீங்கும் வரையும் பிரணவ மந்திரத்தைப் பலமுறை செபித்து யோகம் செய்தல் வேண்டும்.[48] அமிர்த நா- 21.

மந்:
கூ

ப்ராணாந் ப்ரபீட்யேஹ ஸம்யுக்த சேஷ்ட:
ஷீணே ப்ராணே நாஸிகயோச் வாஸீத/
துஷ்டா ஶம்யுக்தமிவ வாஹமேனம்
வித்வாந் மநோதாரயே தாப்ரமத்த://

இ-ள்
ஸம்யுக்த சேஷ்ட:- அங்க சேட்டைகளை அடக்கியவனாய், வித்வாந் - அறிஞன், இஹ- இப்பொழுது, ப்ராணாந் ப்ரபீட்ய - பிராணனை ஒடுக்கி, ஷீணேப்ராணே - பிராணன் குறைவடை கையில், நாஸிகையா உச்ஸ்வாஸீத - நாசியினால் உச்ஸ்வா சித்தல் வேண்டும். அப் ப்ரமத்த: வித்வாந் - மயக்கமொழிந்த அறிஞன், துஷ்டாஶவயுக்தம் - துட்டக் குதிரையோடு கூடிய, வாஹம் இவ - வண்டி போன்றதாகிய, ஏனம் மந:- இந்த மனதை, தாரயேத் - அடக்கி வைத்திருப்பானாக.

கு-பு:(க)
அங்கசேட்டைகளை யடக்கியவனாகிய "அறிஞன்"

அங்க சேட்டைகளை யடக்குதல் - இயமநியமங்களின் பாற்படும். இயமநியமங்களுடைய உத்தமர்க்கே தியானயோகம் கைகூடும். இயமமாவது: கொல்லாமை, களவு செய்யாமை, பொய்யாமை (உண்மை கூறுதல்) பிறர்பொருள் விரும்பாமை இந்திரியங்களை விடயங்களிற் செல்லவொட்டா தடக்குதல் முதலாயின.

நியமமாவது தவமுடைமை, சுத்தமுடைமை, பெற்றது-கொண்டு மகிழுதல், ஞானநூலாராய்ச்சி, கடவுளை வழிபடுதல் முதலாயின.

கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்
நல்லா னடக்க முடையா நடுச் செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லா னியமத் திடையின்னின் றானே [49]

- திருமந்திரம்.

தவஞ்செபஞ் சந்தோட மாத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீ ரைந்தும்
நிவம்பல செய்யின் நியமத்த னாமே.[50]

- திருமந்திரம்

சந்தோடம் - கிடைத்தது கொண்டு மகிழுதல், ஆத்திகம் - கடவுள் நம்பிக்கை, தானம் - இரப்பவர்க்கில்லையென்னாது கொடுத்தல், சிவன்றன் விரதம் - சிவாக்கினிவடிவமாகிய திருவெண்ணீற்றினை உத்தூளனமாயாவது, திரிபுண்டர மாயாவது உடம்பிற் றரித்தலாகிய பாசுபத விரதம். இது சிவபெருமானாகிய பசுபதியைக் குறிக்கோளாக வுடைமை-யின் "பாசுபத விரதம்" எனப்பட்டது.

சித்தாந்தக் கேள்வி - ஞான நூல்களைக் குருமுன்னிலையிற் கேட்டல். குருமுன்னிலையிற் கேளாது, தாமே புத்தகங்களைத் தேடிப் படிப்போர், அவற்றின் மெய்ப்பொருள் கொள்ள மாட்டாராய் விபரீதப்பொருள் கொண்டு இடர்ப்படுவராகலின் சித்தாந்தக் கேள்வி என்றார்.

கு.பு:(உ)

"பிராணனை யொடுக்கி ....
உச்சுவாசித்தல் வேண்டும்"

இதனால் பிராணாயாமம் கூறப்பட்டது. பிராண வாயு வெளியே வருவதும் உள்ளே செல்லுவதுமாக இருக்கும். வெளியே வருவது நிச்சுவாசம் என்றும் அல்லது இரேசகம் என்றும், உள்ளே செல்லுவது உச்சுவாசம் அல்லது பூரகம் என்றும் கூறப்படும்.

வெளியே வருதலையும் உள்ளே செல்லுவதையும் ஒழித்து உள்ளேயுள்ள வாயுவை அசைவறத் தடுத்து நிறுத்துதல் கும்பகம் எனப்படும். இம்முறையில் பிராண வாயுவை வாங்கி விடுத்து நிறுத்துதல் பிராணாயாமமாம்.

"சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்து வளியிரண்டும்" [51] என்றது சிவஞான சித்தி.

வளியிரண்டும் என்றது உச்சுவாச நிச்சுவாசஸ்களை. சக-மார்க்கம் யோகநெறி. இப்பயிற்சியினால் மனம் சலிப்பற்று நிற்கும்.

மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாலா மிரேசகத் தாலுட் பதிவித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலால முண்டா னருள்பெற லாமே.[52]

- திருமந்திரம்

பொ-ரை

இயம நியமங்களுடைய அறிஞன் பிராணாயாமப் பயிற்சி-யினால், துட்டக் குதிரையோடு கூடிய வண்டிபோல் அலையுமிந்த மனத்தை அலையவிடாது ஒரு நிலையில் நிறுத்தக் கடவன்.

கடோபநிடதம் பின்வருமாறு கூறுகின்றனது:

எவனொருவன் அடக்கப்படாத மனதினாலே புத்தியற்றவனாக ஆகிறானோ அவனுக்கு சாரதிக்கு அடங்காத துட்டக் குதிரைகள் போல், இந்திரியங்கள் வசப்படாது போகின்றன.[53]
கடம் க-ரு-ச

மந்:
க௦

ஸமே ஶுசௌ ஶர்க்கராவஹ்நிவாலுகா
விவர்ஜிதே சப்தஜலாஶ்ரயாதிபி:/
மநோநுகூலே ந து சக்ஷுபீடநே
குஹாநி வாதாஶ்ரயணே ப்ரயோஜயேத்//

இ-ள்

ஸமே - சமமானதும், ஶுசௌ- சுத்தமானதும், ஶர்க்கரா - கோராங் கல்லு, வஹ்நி - அக்கினி, (வாலுகா) மணல், ஶப்தஜல ஆஶ்ரயா திபி:- சப்தம், தண்ணீரின் சார்பு முதலிய-வற்றிலிருந்து, விவர்ஜிதே - விடுபட்டதும், மந: அநுகூலே-மனச்சாந்திக்கு அநுகூலமானதும், நசக்ஷுபீடநே- கண்ணுக்குத் துன்பமில்லா ததுமாகிய, குஹாநிவா தாஶ்ரயணே - காற்றில்லாத மறைவிட த்திலே, ப்ரயோஜயேத் - ஒருவன் தியான யோகம் செய்யக் கடவன்.

பொ-ரை

சமமானதும், சுத்தமானதும், கல்லு, அக்கினி, மணல், சத்தம், ஈரம் முதலியவையில்லாததும், மனம் சாந்தியடைவதற்கு அனுகூல மாயுள்ளதும் கண்ணுக்குத் துன்பமில்லாததுமாகிய காற்றில்லாத மறைவிடத்திலிருந்து ஒருவன் யோகம் பயிலவேண்டும்.

மந்:
கக

நீஹாரதூமார்க்கா நிலானலா நாம்
கத்யோதவித்யுத்ஸ்படிக ஶஶீநாம்/
ஏதாநி ரூபாணி புர: ஸராணி
ப்ரஹ்மண்ய பிவ்யக்திகராணி யோகே//

இ-ள்

ப்ரஹ்மணி யோகே - பிரமவிஷயமான யோகத்தில், நீஹாரதூம அர்க்க அநில அநல ஸ்படிக நாம்ஶஶீநாம் - பனி, புகை, சூரியன், காற்று, நெருப்பு, மின்மினி, மின்னல், பளிங்கு சந்திரன் ஆகிய, ஏதாநி ரூபாணி - இவற்றின் ரூபங்கள் போல, அபிவ்யக்தி கராணி - தோன்றச் செய்வனவாகிய, புர: ஸராணி - முதல் ரூபங்களாம்.

கு-பு

"பிரமவிஷயமான யோகத்தில்"

புருடதத்துவத்திற்கு மேற்செல்வறியாத ஏகான்மவாதிகள், பாதஞ்சலர் முதலியோர் கூறும் நிர்க்குண சாங்கிய யோகம்,

பாதஞ்சல யோகம் முதலியவற்றினீக்குதற்குப் "பிரமவிஷயமான யோகம" என்று கூறப்பட்டது. இங்குக் கூறிய யோகம், சரியையிற் சரியை முதலிய பதினாறு பாதங்களுள் ஞான யோகத்தின் பாற்படும். மேற்கூறிய சாங்கிய யோகம் முதலியவற்றைக் குறித்தே "எண்ணாயிரத்தாண்டு யோக மிருக்கினும் கண்ணாரமுதனைக் கண்டறிவா ரில்லை"[54] என்று கூறியருளினார் திருமூலநாயனாரும்.

"உண்ணாடி யுள்ளே யொளிபெற நோக்கிடிற், கண்ணாடி போலே கலந்திருந்தானே" என்பது அச்செய்யுளின் பிற்பகுதி. இது ஞானயோகத்தின் சிறப்புக்கூறிற்று.

கைவல்யோபநிடதம். பின்வருமாறு கூறும்.

"எவ்வித இடையூறுமற்ற தனியிடத்திற் சகாசனத்திருந்து சுத்தனாகி நேரிய தலை கழுத்துச் சரீரமுடையவனாய் அத்தியாச்சிரம் (பாசுபத) விரத முடையனாய் இந்திரியங்களை யடக்கி அன்பினோடு தன் குருவை வணங்கி இருதய கமலத்தை துகளற்றதாய்ச் சுத்தமாய்க் கருதி அதனடுவே .... பிரசாந்தராய், சங்காரகாரணராய் உள்ளவரும், உமாசகாயரும் பரமேசுவரரும், பிரபுவம், முக்கண்ணரும், நீலகண்டரும், பிரசன்னருமாயுள்ள சிவபெருமானைத் தியானித்து முனி-யானவன் பூதகாரணரும் சமஸ்த சாட்சியுமாயுள்ள அவரை இருளுக்கு மேலே போயடைகின்றான்" [55] (கைவல்லியம்-௬.எ).

பொ-ரை

முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து உயிர்க்குயிராய் விளங்கும் பரப்பிரம சிவபெருமானை அகத்திருத்திச் செய்யுந் தியான யோகத்தில், பனி, புகை, சூரியன், காற்று, நெருப்பு, மின்மினி, மின்னல், பளிங்கு, சந்திரன் ஆகிய இவற்றின் ரூபங்கள் போல முதலிற் புலப்படும். யோகம் சித்தித்தலின் அறிகுறி கூறியது.

மந்:
க௨

ப்ருதிவ்யப் தேஜோ அநிலகே ஸமுத்திதே
பஞ்சாத்மகே யோககுணே ப்ரவ்ருத்தே/
தஸ்ய ரோகோ ந ஜரா ந ம்ருத்யு:
ப்ராப்தஸ்ய யோகாக்நிமயம் ஶரீரம்//

இ-ள்

ப்ருதவ்யப் தேஜோ அநில கேஸமுத்திதே- பிருதிவி தேயு வாயு அப்பு ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களில் விளைவதாகிய, பஞ்சாத்மகே யோககுணே ப்ரவருத்தே- ஐந்து வகையாக நிலைபெறும் யோகத்தில் தொடர்ந்து விருத்தியடைய, யோகாக்நி மயம் ஶரீரம் ப்ராப்தஸ்ய தஸ்ய - யோகாக்கினி மயமாகிய சரீரத்தைப் பெற்ற அவனுக்கு, ந ரோக:- வியாதியில்லை, ந ஜரா - மூப்பில்லை, ந ம்ருத்யு:- மரணமில்லை, "ந ம்ருத்யு:" என்பதற்குப் பதில் நது: கம் என்னும் பாடமுண்டு, அங்ஙனமாயின் துக்கமில்லை என்று பொருள் கொள்க.

கு-பு.

"ஐம்பூதங்களின் விளைவதாகிய ஐந்து வகையாய் நிலைபெறும் யோகம்"

பிருதிவி நிவிருத்தி கலையிலும், அப்பு பிரதிட்டாகலையிலும், தேயு வித்தியா கலையிலும், வாயு சாந்தி கலையிலும், ஆகாயம் சாந்தியதீதகலையிலும் அமைவனவாம்.

க்ரியா சத்தியின் பேதமாகிய நிவிர்த்தி முதலிய ஐவகைச் சத்திகளால் அவை முறையே அதிட்டிக்கப்படுதலின், அச்சத்திகளின் பெயர்கள் கலைகளுக்காயின. உயிர்களைப் பந்தத்தினின்றும் நிவிர்த்தி செய்யும் சிவசத்தி நிவிர்த்தி யென்றும், நிவிர்த்தி பெற்ற உயிர்களை மீள நோக்காவண்ணம் நிலைபெறச் செய்வது பிரதிஷ்டை யென்றும், அனுபவ ஞானத்தைப் பயப்பிப்பது வித்தை யென்றும், விருப்பு வெறுப்பு முதலியவற்றாலேற்படும். துன்பங்களை யெல்லாம் சாந்தமாகச் செய்வது சாந்தியென்றும், அச்சாந்தி நிலையும் ஒழியச் செய்வது சாந்தியதீதம் என்றும் கூறப்படும்.

நிவிர்த்திகலையில், நிவிர்த்தி என்னும் சிவசத்தியும், அதற்கிடமாகிய நிவிர்த்திகலையும் அக்கலையிலமைந்த பிருதிவிபூதமும் ஆகிய மூன்றையும் ஒன்றாக வைத்துத் தியான பாவனை செய்து முதிர்ந்த பின்னர் அந்நிவிர்த்திகலை வியாப்பியமாயடங்க, அதனை மேலிட்டு வியாபித்திருக்கும் பிரதிட்டா கலையிலும், அங்ஙனமே ஒன்றற்கொன்று

ஏற்றமாய் வியாபித்திருக்கும் வித்தை, சாந்தி சாந்தியதீத கலைகளிலும் முற்கூறியவாறே தியான பாவனை செய்யின் யோகம் சித்தியாம்.

இவ்வாறு ஐந்து கலைகளிலும் செய்யும் தியான யோகத்தையே "ஐந்து வகையாய் நிலைபெறும் யோகம்" என்றார்.

தத்துவங்கள் புவனங்கள் முதலிய ஏனைய தத்துவங்கள் அனைத்தையும் நிவிர்த்திகலை வியாபித்து நிற்ப, அதனுள் அவை வியர்பியமாயடங்கலால் நிவிர்த்தி கலையிற் செய்யும் தியான யோக சித்தியில் தத்துவங்கள் முதலிய அவை, நிவிர்த்திகலையிலொடுங்கும்.

அங்ஙனமே நிவிர்த்தி பிரதிட்டையிலும், பிரதிட்டை வித்தையிலும், வித்தை சாந்தியிலும் சாந்தி சாந்தியதீதத்திலும் முறையே ஒடுங்கும். சாந்தியதீதகலையிற் செய்யும் தியான யோக முதிர்ச்சியில் அக்கலையின் அதிதெய்வமாய் விளங்கும் சதாசிவ மூர்த்தியோடு ஏகனாய் நிற்றலாகிய சிவயோக சமாதியுங் கைகூடும். பெறுதற்கரிய இப்பெரும் பேற்றினைக் குறித்தே திருவருட் செல்வராகும். திருமூலநாயனாரும்

நம்பனை யாதியை வான்மறை ஓதியை
செம்பொனி னுள்ளே திகழ்கின்ற சோதியை
அன்பினை யாக்கி யருத்தி ஒடுக்கிப்போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட்டாரே[56]
என்றும்,
கற்பனை, யற்றுக் கனல்வழியே சென்று
சிற்பனை யெல்லாஞ் சிருட்டித்த போரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதியோடுற்றுத்
தற்பரமாகத் தகுந்தண் சமாதியே [57]
என்றும் கூறியருளினார்.

இனி, நிர்வாணதீட்சையில் கலா சோதனை செய்யுங்கால் ஆசாரியர் நிவிர்த்தி கலைகள் ஐந்தினையும் சீடனது சரீரத்தில் ஐவகைப்படுத்திக் கலாசோதனை செய்வார். அம்முறையினால் அவ்வக் கலைகட்குரிய தானங்களில் அவற்றினமையும் பூதங்களை அவ்வப்பூதங்கட்குரிய பீசங்களோடும் அதிதெய்வங் களோடும் அபேதமாக வைத்துத் தியானித்தலுமமையும். விபரம் பின்வருமாறு.

முளந்தாள் முதற் பாதம் வரையும்
நிவிர்த்தி கலையின் எல்லை
பிருதிவி மண்டலம்
பீசம் - வம்.
அதிதெய்வம் - பிரமா.

நாபி முதல் முளந்தாள் வரை பிரதிட்டா கலையின் எல்லை.
அப்பு மண்டலம்
பீசம் - வம்
அதிதெய்வம் - விட்டுணு.

இருதயம் முதல் நாபி வரை வித்தியா கலையின் எல்லை.
அக்கினி மண்டலம்
பீசம் - ரம்
அதிதெய்வம் - ருத்திரன்

புருவமத்தி முதல் இருதயம் வரை சாந்தி கலையின் எல்லை
வாயு மண்டலம்
பீசம் - யம்
அதிதெய்வம் - மகேசுவரன்.

உச்சிமுதல் புருவம் வரை சாந்தியதீத கலையின் எல்லை.
ஆகாசமண்டலம்
பீசம் - ஹம்
அதிதெய்வம் - சதாசிவன்

முன்னர்க் கூறியவாறு இங்கும் படிமுறையாக வைத்துத் தியானித்து வர சதாசிவமூர்த்தியின் ஐக்கியம் கைகூடும். யோகாங்களெட்டனுள் எஞ்சி நின்ற சமாதி கூறிவாறுமாயிற்று.

பொ-ரை
பிருதிவி முதலிய பூதங்களில் விளையும் ஐந்து வகையாய் நிலைபெறும் தியான யோக சித்தியினால் யோகாக்கினி மயமான சரீரத்தைப் பெற்ற அவனுக்கு நோய் மூப்பு மரணம் முதலிய துன்பங்களில்லை.
திருமூலநாயனார் பின்வருமாறு கூறுவர்.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோம் கறுக்கும்
புறப்பட்டுப்போகான் புரிசடையோனே [58]

மேலையண் ணாவில் விரைந்திரு காலிடிற்
காலனு மில்லை கதவுந் திறந்திடும்
ஞால மறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவான் பராநந்தி யாணையே. [59]

மந்:
கரு

லகுத்வமாரோக்ய மலோலுபத்வம்
வர்ணப்ரஸாதம் ஸ்வரஸௌஷ்டவம்/
கந்த: ஶுபோ மூத்ரபுரீஷமல்பம்
யோகப்ரவ்ருத்திம் பிரதமாம் வதந்தி//

இ-ள்
லகுத்வம் - லேசுத்தன்மை (பாரமின்மை), ஆரோக்யம் - நோயின்மை, 'அலோபத்வம் - இச்சையின்மை, வர்ணப்ரஸாதம் - பொன்வர்ணமுடைமை, ஶுப: கந்த:- நன்மணமுடைமை, மூத்ர புரீஷமல்பம்- சலமலங்கள் குறைவுடைமை, (ஆகிய இவைகள்) ப்ரதமாம் யோக ப்ரவ்ருத்திம் - யோகப் பயிற்சியில் முதலிற் காணும் குறிகளாகும், இதி வதந்தி - என்று சொல்லுகின்றார்கள்.

பொ-ரை
யோகப் பயிற்சியிற் சித்தி பெற்றவர்களுக்கு முதலிலே உடம்பிற் பாரமின்மை முதலிய நற்குறிகளுண்டாகுமென்று பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

மந்:
கச

யதைவ பிம்பம் ம்ருதயோபலிப்தம்
தேஜோமயம் ப்ராஜதே தத்ஸுதாந்தம்/
தத்வா ஆத்மதத்வம் ப்ரஸமீக்ஷ்ய தேஹீ
ஏக: க்ருதார்த்தோ பவதே வீதஶோக: //

இ-ள்
யதைவ - எவ்வாறு, ம்ருதயா உபலிப்தம் - மண்ணினால் அழுக்கடைந்த கண்ணாடியானது, ஸுதாந்தம் - கழுவப்பட்ட பொழுது, தேஜோமயம் ப்ராஜதே- ஒளிமயமாய்ப் பிரகாசிக்கிறதோ, தத்வா - அவ்வாறு, தேஹீ - ஆன்மாவானவன்

ஆத்மதத்வம் ப்ரஸமீக்ஷ்ய - பரமான்மாவைத் தன்னிலே கண்டு, அப்பரமவான்மாவோ டொன்றாய், க்ருதார்த:- கிருத கிருத்தியனாய், செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவனாய் பவதே - ஆகிறான்.

பொ-ரை

மண்ணினால் அழுக்கடைந்த கண்ணாடி கழுவப்பட்ட பொழுது, எவ்வாறு அழுக்கு நீங்கி ஒளிமயமாய்ப் பிரகாசிக்கிறதோ, அவ்வாறு மேலே கூறிய தியான யோகங்களினால் மன அழுக்கு நீங்கிய தன்னிலே, பரம்பொருளாகிய சிவபெருமானைக் கண்டு அவனிடத்தேகனாய் கிருதகிருத்தியனாய்ப் பிறப்பிறப்புத் துன்பங்களிலிருந்து வீடு பெறுகின்றான்.

வண்டோங்கு செங்கமலக் கழுநீர் மல்கும்
மதமத்தஞ் சேர்சடைமேல் மதியஞ் சூடித்
திண்டோள்க ளாயிரமும் வீசி நின்று
திசைசேர நடமாடிச் சிவலோ கனார்
உண்டார்நஞ் சுலகுக்கோ ருறுதி வேண்டி
ஒற்றியூர் மேய வொளிவண் ணனார்
கண்டேனான் கனவகந்திற் கண்டேற் கென்றன்
கடும்பிணியுஞ் சுடுந்தொழிலுங் கைவிட்டவே [60]

- நாவுக்கரசர் தேவாரம்.

கனவகம் - புறக்கரணங்கள் தொழிலற்று நிற்கும் நிலை.

மந்:
கரு

யதா ஆத்மதத்வேந துப்ரஹ்ம தத்வம்
தீபோபமேநேஹ யுக்த: ப்ரபஶ்யேத்/
அஜம் த்ருவம் ஸர்வதத்வைர் விஶுத்தம்
ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாஶை:://

இ-ள்

யதா து யுக்த:- எப்பொழு யோக செய்பவன், ஆத்மதத்வேந - ஆன்மாவாகிய தன் உண்மையை அறிகின்றானோ, அப்பொழுது, ப்ரஹ்மதத்வம் - பரமான்மாவின் உண்மையை, தீப உபமேந - விளக்கொளியினால் கண்ணொளி பொருளைக் காண்பது போல, ப்ரபஶ்யேத் - பார்க்கின்றான். (தத ஸ:-

அப்பொழுது அவன்) ஸர்வதத்வை: விமூத்தம் - எல்லாத் தத்துவங்களாலும் தொடக்குண்ணாதவரும், அஜம் - பிறப்பில்லாதவரும், த்ருவம் - நித்தியருமாகிய, தேவம் - சிவபெருமானை, ஜ்ஞாத்வா - அறிந்து, ஸர்வ பாசை: முச்யதே - எல்லாப் பாசங்களிலிருந்தும் விடுபடுகின்றான். "அப்பொழுது" தியான யோகம் கைகூடிய இந்நிலையிலென்க.

கு-பு.

"ஆன்மாவானது தன்னுண்மையை யறிதலால்"

தன்னுண்மையை யறிதலாவது, தியானயோக சித்தியினால் திருவருள் தோன்றியவிடத்து, தான் புறவிடயங்களை அறிந்தனுபவித்தற்குத் துணைசெய்து நிற்கும் கருவிகளனைத்தும் சடமென்றும், அவற்றோடு தன்னைக் கூட்டுவித்து நிற்பது திருவருளே யென்றும், அங்ஙனமறியுந்தான் அக்கருவிகளைப் போலச் சடமுமாகாது தனக்கு அறிவித்து நிற்கும் திருவருள்போலப் பேரறிவுமாகாது அறிவித்தாலறியும் பரதந்திரனாமென்றும் அவ்வருளால் அறிவில் விளங்கக் கண்டு தன்போத முனைப்பற்று அருள் தாரகமாய் நிற்றல். இது தசகாரியத்தில் தத்துவ சுத்தி ஆன்மருபம் ஆன்ம தரிசனம் என்பனவற்றுளடங்கும்.

கு-பு:(உ)

"விளக்கொளியினால் கண்ணொளி பொருளைக் காண்பதுபோல எப்பொழுது பார்க்கின்றானோ அப்பொழுது அவன் சிவபெருமானை யறிந்து வீடு பெறுகின்றான்"

விளக்கொளி யென்பது இங்கு அருள் ஞானத்தைக் குறிக்கும். கண்ணொளி, தான் வேறு முனைத்துத் தோன்றாது விளக்கொளி யோடியைந்து நின்று பொருளைக் காணுமாறுபோல, ஆன்ம தரிசனம் செய்தவன் தத்துவ தாத்துவிகங்களோடு கூடுதலாகிய சகலமும், அது நீங்கிய விடத்து அறிவை யழித்துவருவதாகிய கேவலமும் என்னும் இரண்டையும் பொருந்தாமலும், அது நீங்கிய விடத்துத் தோன்றும் நான் பிரமம் என்னும் பசுஞானமென்னும் மயக்க வுணர்வைப் பொருந்தாமலும், அருள் தாரகமாய்த் தன்செயல் யாண்டும் தோன்றாவண்ணம் அவ்வருளில் அடங்கிநின்று இறைவனைக் காண வேண்டுமென்பது கருத்து.

"அவன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலால், ஈண்டு அம்முதலை ஞானக் கண்ணினாலே காண்க" [61] என்று சிவஞான போதம் கூறிற்று. அங்ஙனம் காணவே சிவதரிசனப் பேறு கைகூடி அதனால் ஆன்ம சுத்தியுண்டாய் உயிர் வீடுபெறும்.

சிவதரிசனத்தினியல்பினை,

பரையுயிரில் யானெனதொன் றறநின்ற தடியாம்
பார்ப்பிடமெங் குஞ்சிவமாய்த் தோன்றுவது முகமாம்
உரையிறந்த சுகமதுவே முடியாகு மென்றங்
குண்மையினை மிகத்தெளிந்து பொருள் வேறொன்றித்
தரைமுதலிற் போகாது நிலையினில்நில் லாது
தற்பரையினின்றழுந்தா தற்புதத்தி னாகுந்
தெரிவரிய பரமானந்தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தெரிசனமாய்ச் செப்பும்
நூலே[62] என்னும் உண்மைநெறி விளக்கச் செய்யுளானறிக.

என்னை யேது மறிந்தில னெம்பிரான்
தன்னை நானுமுன்னே துமறிந்திலே
னென்னைத் தன்னடி யானென் றறிதலும்
தன்னை நானும் பிரானென் றறிந்தேனே[63]

என்னும்
அருட்டிரு மொழியைப் பன்முறை யூன்றிச் சிந்திக்க மேற்கூறிய உண்மைகளெல்லாம் நன்கு புலப்படும்.

நிட்களமாய் சுத்தமாய் சோதிக்குட் சோதியாய் ஆன்மரூபத்தை யறிந்தவர்களால் லறியப்படுவாய்....[64]

முண்டகம்

பொ-ரை

யோகியானவன், ஆன்மாவாகிய தன்னுண்மையை யறிந்து, அறிந்தவிடத்துத் தோன்றும் திருவருளோடு, விளக்கொளியோடு கண்ணொளி வேறறக் கலந்து நின்று பொருளைக் காணுமாறு போலக் கலந்து நின்று காணுமாற்றலை எப்பொழுது பெறுகின் றானோ அப்பொழுது தத்துவங்களனைத்திலும் தொடக்குண்ணா தவரும், பிறப்பில்லாதவரும் நித்தியருமாகிய சிவபெருமானை அறிந்து வீடுபெறுகின்றான்.

மந்:
கசு

ஏஷ ஹ தேவ: ப்ரதிஶோ அநு ஸர்வா:
பூர்வோ ஹ ஜாத: ஸ உ கர்பே அந்த:/
ஸ ஏவ ஜாத: ஸ ஜநிஷ்ய மாண:
ப்ரத்யங் ஜநாம்ஸ்திஷ்டதி ஸர்வதோமுக://

இ-ள்

ஏஷ ஹ தேவ:- இந்தத் தேவனே, ப்ரதிஶ:அநுஸர்வா:- கிழக்கு முதலிய நான்கு திக்குகளும் அக்கினி மூலை முதலிய நான்கு உபதிக்குகளும், ஸ உ பூர்வ ஜாத:- அவனே முன்னுக்குப் பிறந்தவனும். ஸ கர்பே அந்த ஜாத: ஸ ஏவ - கற்பத்திலுள்ளவனும் பிறந்தவனும் அவனே, ஜநிஷ்யமாண: ஸ- இனிப் பிறக்கப் போகின்ற வனும் அவனே, ஸர்வதோமுக:- சித்தும் சடமுமாகிய இருவகைப் பிரபஞ்சத்தையும் இயக்குகின்ற அவன், (ஹே) ஜநா:- ஏ சீவர்களே, ப்ரத்யங் திஷ்டதி - (உங்களுக்கு) வேறாக இருக்கின்றான்.

கு.பு.

ப்ரத்யங் என்ற சொல்லிற்கு வேறாக என்னும் பொருளேயன்றி பின்னால் என்றும் பொருளுமிருத்தலால், அதனை இரட்டுற மொழிந்து கொண்டு செலுத்துதலால் உடனாயும் என்றும் உரைக்க. எனவே, ஸர்வதோமுக: என்பதனால் கலப்பினால் ஒன்றாயும், ப்ரத்யங் என்பதனால் பொருடன்மையினால் வேறாயும், மீண்டும் ப்ரத்யங் என்பதனால் உள்நின்று செலுத்துதலினால் உடனாயும், திஷ்டதி இருக்கின்றான் என்றும் இயைத்துக்கொள்க. இறைவன் இவ்வாறு மூன்று வகையுமாய் நிற்கும் நிலை அத்துவித நிலையாகும். இங்குக் கூறிய அத்துவிதம் சுத்தாத்துவிதமாம். அதனியல்பு சிவஞானபோதம், சித்தியார் முதலிய சைவசித்தாந்த நூல்களிற் காண்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

சுருதியானது இம்மூவகை நிலையினையும் விதந்தெடுத்துக் கூறுவதனால். மாயாவாதிகள் கூறும் கேவலாத்துவிதம் முதலியனவற்றின் பொருந்தாமை காட்டியவாறுமாயிற்று. மூவகை நிலையின் உண்மையைக் கூறும் வேறு சுருதி வசனங்கள் பல முன் (முதலாம் அத்தியாயத்தில்) காட்டப்பட்டிருக்கின்றன. கண்டு கொள்க

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதமவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானிடம் வீழிம்மிழ லையே[65]

ஞா - தேவாரம்

பொ-ரை

அட்டதிக்குகளும், முன்னுக்குப் பிறந்தவனும், கர்பத்திலிருப்பவனும், இனிப்பிறக்கப் போகின்றவனும் இந்தத் தேவனே, ஏ மனிதர்களே் அவன் எல்லா உயிர்களிலும், உயிரல்லாத பொருள்களிலும் வேறறக் கலந்து ஒன்றுபோல நின்றானாயினும். உங்களுக்கு வேறாயும், உங்களோடுடனாயும் நிற்கின்றான்.

அவனை வழிபட்டு உய்யுங்கள் என்பது குறிப்பு.

"எல்லாம் இந்தத் தேவனே" என்று கூறும் சுருதி வசனங்களின் உண்மையறிய மாட்டாது மயங்கி. "நான் பிரமம்" என்று பொய்ப் பிரமம் பேசித்திரிவோரை முன்னிலைப்படுத்தி, மனிதர்களே, சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய நீங்கள் பிரமமாக மாட்டீர்கள், பேரறிவும் பெருந்தொழிலுமுடைய உண்மைப் பிரமம் உங்களுக்கு வேறாயிருக்கிறது, அதனை யறிந்து உய்யும் நெறி தேடுங்கள் என்று இரங்கிக் கூறிய ஒரு குறிப்பும், சுகதுக்க போகாதிகளிலே தம்மை முதன்மைப் படுத்திக் கொண்டு கடவுளை மறந்து பேதுறுகின்ற பேதை நீரரை முன்னிலைப்படுத்தி, ஏ மனிதர்களே் இறத்தல் பிறத்தல்களும், மற்றும் சுக துக்க நுகர்ச்சிகளும் உம்முடைய தன்மையினால், நிகழ்வனவன்று, உமக்கு வினைப் பயன்களை யூட்டி யொழித்து உம்மை தம் திருவடிப் பேரின்ப வீட்டிலிருந்தும் பொருட்டுப் பேரருளாளனாகிய இறைவன் உம்மோடு ஒன்றாயும் உடனாயும் நின்று யாதும் கைம்மாறு கருதானாய் உம்மை நடத்துகின்றான், அவனை யறிந்து வழிபட்டு உய்யுங்கள் என்று இரங்கிக் கூறிய ஒரு குறிப்பும் இம்மந்திரத்திற் பெறப்படு மாற்றினை, நுண்ணுனர்வாற் கண்டு கொள்க.

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈச னெனுங்கனி
இனிது சாலவு மேசற் றவர்கட்கே.[66]

(நா. தேவாரம்).

ஒன்றி யிருந்து நினைமின்களுந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு மான்றன் திருக் குறிப்பே

நா- தேவாரம்.

மந்:
கஎ

யோ தேவோ அக்நௌ யோ அப்ஸு
யோ விஶ்வம் புவனமாவிவேஶ/
ய ஓஷதிஷு யோ வனஸ்பதிஷு
தஸ்மை தேவாய நாமோ நம://

இ-ள்

ய: தேவ அக்நௌ - எந்தத் தேவன் அக்கினியில் (விளங்கு கின்றானோ), ய: அப்ஸு - யாரொருவன் தண்ணீரில் (விளங்கு கின்றானோ), ய: விஶ்வம் புவனம் ஆவிவேஶ - எவன் எல்லாப் புவனங்களையும் ஊடுருவி நிற்கிறானோ, ய ஒஷ்தீஷு - எவன் ஓடதிகளில் (புல் பூண்டுகளில்) (விளங்குகின்றானோ), ய வநஸ்பதிஷு - எவன் விருட்சங்களில் (விளங்குகின்றானோ) தஸ்மை நமோநம:- அந்தத் தேவனுக்கு வணக்கும் வணக்கம்.

கு.பு.

அக்கினியிலும் தண்ணீரிலும் என்ற உபலக்கணத்தினால் ஐம்பூதங்களும் சூரிய சந்திரர்களும் ஆன்மாவுமாகிய அட்ட மூர்த்தமாகிய இறைவனை ஏத்துமியல்பு குறிக்கப்பட்டது.

பொ-ரை

எந்தத் தேவன் அக்கினியிலும் தண்ணீரிலும், எல்லாப் புவனத்திலும் ஓடதிகளிலும் விருட்சங்களிலும் விளங்கு கின்றானோ அந்தத்தேவனை வணங்குகின்றேன், வணங்குகின்றேன். இருமுறை வணக்கம் கூறியது, அத்தியாயம் முடிந்ததென்பதைக் காட்டு வதற்கும், வழிபடுதலொன்றே பிறவி ப்பயனைத் தருவது என்பத னைக் காட்டும் பொருட்டுமாம்.

பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அறிபவ ருள்ளத் தமுதே போற்றி[68] - திருவாசகம்.

7

மூன்றாமத்தியாயம்

மந்:
க

ய ஏகோ ஜாலவாநீஶத ஈஶநீபி:
ஸர்வாந்லோகாநீஶத ஈஶநீபி:/
ய ஏவைக உத்பவே ஸம்பவே ச
ய ஏதத் விதுரமிருதாஸ்தே பவந்தி//

இ-ள்

ய ஏக: ஜாலவாந் - எவரொருவர் ஜாலவானாயிருந்து, ஈஶநீபி:- ஈசானி முதலிய சத்திகளினால், ஈஶதே - ஆளுகின்றாரோ, ய ஏவ ஏக- எவரொருவர், ஸர்வாந் லோகாந் - எல்லா உலகங்களையும், உத்பவே ஸம்பவே ச- படைத்தலிலும் காத்தல் முதலியவற்றிலும், ஈஶநீபி: ஈஶதே - ஈசானி முதலிய சத்திகளினால் ஆளுகின்றாரோ, ஏதத் - அவரை, யே விது:- எவர்கள் அறிகின்றார்களோ, தே- அவர்கள், அமிர்தா: பவந்தி - அமிர்தர்கள் ஆகிறார்கள்.

கு-பு:க

"எவரொருவர் ஜாலவானாயிருந்து படைத்தல் காத்தல் முதலியவற்றில் ஈசானி முதலிய சக்திகளினால் எல்லா உலகல்களையும் ஆளுகின்றாரோ"

ஜாலம் என்பது வலை "சிலந்தியானது எவ்வாறு தனது உடம்பின் வாயிலாக நூல்வலை பின்னுகின்றதோ" (முண்டகம் க-சா-அ) என்ற சுருதிப் பொருள் ஜாலவான் என்றதனால் தழுவப்பட்டது. சுவேதாசுவதரத்திலும் சிலந்தியுவமை கூறப்பட்டிருக்கின்றது. சிலந்தி நூலுக்கு முதற்காரணம்.

சிலந்தியினுடம்பேயன்றி உயிரன்று. எனவே உலகத் தோற்றத்திற்கு முதற்காரணம் மாயை, நிமித்த காரணன் இறைவன், துணைக் காரணம் சத்தி என்பது இம்மந்திரத்தின் பொருளாதல் கண்டு கொள்க.

"எல்லா உலகங்களையும்" என்றது சுத்தம், மிஸ்ரம், அசுத்தமாகிய மும்மையுலகங்களை

அவளை யறியா அமரரு மில்லை
அவளன்றிச் செய்யு மருந்தவ மில்லை
அவளன்றி யைவரா லாவதொன் றில்லை[1]

- திருமந்திரம்.

காரிய காரணங்கள் முதல்துணை நிமித்தம் கண்டாம்
பாரின்மண் திரிகை பண்ணு மவன் முதல் துணைநிமித்தம்
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தியாக
ஆரியன் குவால னாய்நின்று ஆக்குவன் அகில மெல்லாம்.[2]

சிவஞான சித்தியார்.

குபு:உ

அவரை யறிபவர்கள் அமிர்தர்களாகின்றார்கள்.

அவரை யறிதல் சிவதரிசனம்; அது ஆன்மதரிசனத்தினால் நிகழ்வது. சிவதரிசனம் செய்தோரிடந்து சிவயோக சிவபோகங்-களும் இடையீடின்றி நிகழ்வனவாதலால் சாதனம் சாத்தியமாக உபசரிக் கப்பட்டது. அவர்கள் மரணம் பிறப்பென்றி-வையிரண்டின் மயக்கறுத்த கருணைக்கடலின் கீழமர்ந்திருப்பர்.

கண்டலாதருளுமில்லை கலந்தபின் பிரிவதில்லை [3]

நா - தேவாரம்.

பொ-ரை

தமது அருட் சத்தியினாலே ஐந்தொழிற் படுத்தும் இறைவனை அறிந்து வழிபடுவோர் வீட்டினைத் தலைப்படுவர். அல்லாதோர் பிறப்பிறப்புச் சூழலிடைப்பட்டுத் துன்புறுவர் என்பது கருத்து.

மந்:

உ

ஏகோ ஹி ருத்ரோ நத்வீதீயாய தஸ்து:
ய இமாந்லோகாநீஶத ஈஶநீபி:/

ப்ரத்யங் ஜநாம்ஸ் திஷ்டதி ஸம்ஸ ுகோ[4] சாந்தகாலே ஸம்ஸ்ருஜ்ய விஶ்வா புவநாநி கோபா://

இ-ள்

ய - எவர், இமாந்லோகாந் - இந்த உலகங்களை, ஈஶநீபி: ஈஶதே - (மேற்கூறியவாற்றால்) ஈசானி முதலிய தமது சத்திகளினால் ஆளுகின்றாரோ, ஸ - அவர், ஏக: ஹி ருத்ர - ஒருவராகிய உருத்திரரே, நத்விதீயாய - தனது இரண்டாவது பாவனைக்கு உலகில் வேறு பொருட்களில்லை, (ஹே) ஜநா:- மனிதர்களே, ப்ரத்யங் திஷ்டதி - (அவர் உங்களுக்கு) பொருட்டன்மையினால் வேறாயும், உள்நின்று செலுத்துதலால் உடனாயும் நிற்கிறார், விஶ்வா புவநாநி - சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தமாகிய மூவகைக் காரியப் பிபஞ்சங்களையும், ஸம்ஸருஜ்ய - சிருட்டித்து, கோபா- பாதுகாத்து, அந்தகாலே - மகாசங்கார காலத்திலே, ஸம் சுகோ - தம்மிடத்தில் ஒடுக்கிக் கொள்கிறார்.

கு.பு.

"ஒருவராகிய உருத்திரா"

என்ற விடத்து இடத்து உயிர்களோடு கலப்பினால் ஒன்றாய் நிற்கும் உருத்திரர் என்று உரைத்துக்கொள்க. ஒடுக்கிக் கொள்ளுகின்றார் என்ற அதனால் சங்காரத் தொழிலேயன்றி, மும்மலநீக்கத்தில் உயிர்களைத் தம்திருவடிக் கீழ் சேர்த்துக் கொள்ளும் அருட்டொழிலும் குறிக்கப்பட்டது.

அதர்வசிரோப நிடதமானது, "எதனால் சிவபெருமான் ஏகராகிய உருத்திரர் எனக் கூறப்படுகிறார் என வினாவிக் கொண்டு அவர் உயிர்களோடு அத்துவிதமாய் நின்று, ஈசானி, ஜநநி முதலிய தமது சத்திகளினால் எல்லா உலகங்களையும் படைத்துக் காத்து முடிவில் தம்மிடத்தொடுக்கிக் கொள்ளுகிறாரோ அதனால் ஏகராகிய உருத்திரரெனப்படுகின்றார் என்று விடையிறுத்தது.[5] அதனை இங்கு ஒட்டியுணர்ந்து கொள்க.

பொ-ரை

ஏ மனிதர்களே! சங்கார காரணராகிய சிவபெருமானே உயிர்களோடத்துவிதமாயியைந்து ஈசானி ஜநநி முதலிய தனது சத்திகளினால் எல்லா உலகங்களையும் ஐந்தொழிற் படுத்துகின்றார். அவரை யறிந்து வழிபட்டு உய்யுங்கள் என்பது குறிப்பெச்சம்.

மந்:
௩

விஶ்வதஶ் சக்ஷுருத விஶ்வதோமுகோ
விஶ்வதோபாஹுருத விஶ்வதஸ்பாத்/
ஸபாஹுப்யாம் தமதி ஸம்பதத்ரை
த்யாவாபூமீ ஜநயந் தேவ ஏக://

இ-ள்
ஏக: தேவ:- ஒருவராகிய அந்தக் கடவுள், விஶ்வத: சக்ஷு:- எங்கும் கண்களையுடையவர், விஶ்வத: முகம்:- எங்கும் முகங்களை யுடையவர், விஶ்வத: பாஹு:- எங்கும் புயங்களையுடையவர், விஶ்வத: பாத் - எங்கும் பாதங்களையுடையவர், (இவ்வாறாகிய அவர்), த்யாவா பூமீ ஜனயந்- சுவர்க்கம் பூமியாகிய உலகங்களைத் தோற்றுவித்து, பாஹுப்யாம் - புயங்களுடனும், பதத்ரை:- சிறகுகளுடனும், ஸம் தமதி - சீவர்களைச் சேர்த்து வைக்கிறார்.

சுகபோகங்களை நுகர்தற்கு வேண்டிய தனுகரணாதிகளுடனும் அவற்றால் நுகரப்படும் பொருட்களுடனும் சீவர்களைச் சேர்த்து வைக்கிறார் என்றபடி.

பொ-ரை
எங்கும் நிறைந்துள்ள ஒருவராகிய கடவுள் (உயிர்களுக்கு வீட்டின்பம் நல்கும் பொருட்டு) அவற்றைத் தனு கரண புவனங்களுடன் சேர்த்து வினைப்பயன்களை நுகரச் செய்கின்றார்.

மந்: ௦
௪

யோ தேவாநாம் ப்ரபவஶ்சோத்பவஶ்ச
விஶ்வாதிபோ ருத்ரோ மகர்ஷி:/
ஹிரண்யகர்பம் ஜநயாமாஸ பூர்வம்
ஸநோ புத்யா ஶுபயா ஸம்யுநக்து//

இ-ள்
ய:- எவரொருவர், தேவாநாம் - இந்திரியங்களது, ப்ரபவ:ச உத்பவ: ச- ஒடுக்கத்திற்கும் தோற்றத்துக்கும் இடமாயுள்ளாரோ, விஶ்வாதிப:- உலகத்திற்குத் தலைவரோ, பூர்வம் ஹிரண்-

யகர்ப்பம் ஜநயாமாஸ - முதலில் பிரமாவைத் தோற்றுவித்-தாரோ, ஸ மஹர்ஷி ருத்ரோ- அந்த சர்வஞ்ஞராகிய சிவபெருமான், புத்யா, ஶுபயா - நல்ல புத்தியோடு, ஸம்யுநக்து - சேர்ப்பாராக.

கு-பு:க

எவர் பிரமாவை முதலில் தோற்றுவித்தாரோ என்று பின்வருதலின், "தேவாநாம்" என்றது இந்திரியங்களையே குறித்தது. இந்திரியங்கள் என்றது உபலக்கணம். தனு கரண புவன போகங்களனைத்தும் கொள்ளப்படும்.

ஒடுக்கம், மலம் நீங்காத பெத்தான்மாக்களைத் தனு கரண புவன போகங்களினீக்கி இளைப்பாறச் செய்தலாகிய சங்காரத் தொழிலையும், மலம் நீங்கிய முத்தான்மாக்களைத் திருவடிப்-பேரின்ப வீட்டிலிருத்துவதாகிய அனுக்கிரகத் தொழிலையும் குறிக்கும். எனவே சிருட்டியும் இடைநின்ற ஏனைக் கிருத்தியங்களும் அவர் வயத்தனவே என்பது பெறப்படும்.

அந்தமு மாதியு மாகிநின் றீரண்ட மெண்டி சைக்கும்.
பந்தமும் வீடும் பரப்புகின் றீர்பசு வேற்றுகந்தீர்
வெந்தழ லோம்பு மிழலையுள் ளீரென்னைத் தென்திசைக்கே
உந்திடும் போது மறக்கினு மென்னைக் குறிக் கொண்மினே[6]

நா- தேவாரம்.

வான்கெட்டு மாருதமா ய்ந்தழல்நீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டெ னுள்ளமும் போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டா மோ[7]

- திருவாசகம்.

கு-பு:உ

"எவர் முதலில் பிரமாவைத் தோற்றுவித்தாரோ"

பிரமாவைத் தோற்றுவித்துச் சிருட்டித் தொழிலில் அவரை நியமித்தவர் எவரோ என்பது கருத்து.

இவ்வுபலக்கணத்தால் விட்டுணு உருத்திரன், மஹேசுவரன் சதாசிவன் என்னும் ஏனைக் காரணமூர்த்திகளையுந் தோற்று வித்து முறையே காத்தல் அழித்தல், மறைத்தல் அருளல்

என்னும் தொழில்களில் நியமித்தவர் என்பது பெறப்படும். எனவே, சிருட்டி முதலிய அத்தொழில்களுக்கு பிரமா முதலிய பஞ்சமூர்த்திகளும் சுதந்திரராய்க் காரணர் அல்லரென்பதும், இறைவனது ஆணையினால் தமக்கு ஏற்பட்ட தொழில்களில் உன்முகராய் நின்று தத்தம் கால எல்லையில் ஒடுங்கித் தோற்றும் இயல்புடையார் என்பதும், அங்ஙனமாதலால் எவற்றுக்கும் பரம காரணர் மஹா சங்காரத்தைச் செய்பவரும், உமாதேவிபாக ருமாகிய அம்புலி சூடிய எம்பெருமானே என்பதும் தெளிந்த உண்மையாதல் கண்டுகொள்க. மேலே குறிப்பு ஒன்றன் கீழ்க் காட்டிய வான்கெட்டு என்னும் முதலையுடைய திருவாசகச் செந்தமிழ் மறையிற் கூறிய வான் முதலிய ஐம்பூதங்களையும், அவற்றின் காரியமும் அவற்றுக்குக் காரணமாகிய தத்துவ தாத்துவிகமாகிய புவனங்களையும் கருதுவதோடு. அவ்வைம் பூதங்களுக்கும் முறையே அதிட்டான கர்த்தாக்களாகிய சதாசிவன் முதலிய காரணமூர்த்திகள் ஐவரையும் கருதும். எனவே அம்மறைமொழியின் முதலிரண்டடிகளுக்கும் உலகமும் அவ்வுலகினை ஐந்தொழிற்படுத்தும் பிரமா முதலியோருமாகிய அனைத்தும் தம்மிலொடுங்கத் தாம் ஒன்றினும் ஒடுங்காது தனித்துநின்று அவ்வொடுங்கிய உலகினை முன்போல் மீளவுந் தோற்றுவித்தருளுந் தன்மையனுக்கு என்று பொருள் விரித்துக் கொள்க.

"எப்போது இருள் உளதாய்ப் பகலுமிரவுமின்றி யிருந்ததோ, அப்போது சிவன் ஒருவரே யிருந்தார் என்று சுவேதாசுவதரம் ச- கச கூறிற்று, இங்கு இருள் என்றது மகாசங்கார காலத்தை.

"மகாவிட்டுணு உருத்திர இந்திரராகிய இவரெல்லாம் பிறக்கின்றனர், எல்லா இந்திரியங்களும் பூதங்களுடன் கூடப்பிறக்கின்றன. காரணமும் காரணங்களைப் படைத்தோரும் கருதினோருமாகியவர் பிறந்த தின்று" [8] (அதர்வசிகை ரு)

இந்திரன் என்றது மகேசுவரரை - உருத்திரருக்கு முன் வைத்து எண்ணப்படவேண்டியவர் அவரேயாகலின்.

இவ்வதர்வசிகைப் பொருளை விரித்துச் சிவபுராணத்து வாயு சம்மிதை பின்வருமாறு கூறுகின்றது.

"எவரிடத்தினின்று பிரமவிட்டுணு உருத்திர இந்திரர், பூர்வமான இஃதனைத்தும் சகல பூதேந்திரியங்களுடனே கூட ஆதியிற்

பிறந்தனவோ, காரணங்களைப் படைத்தோரும், கருதினோரும் பரம காரணருமாகிய எவர் (சிவபெருமான்) யாண்டாயினும் எப்போ தாயினும் பிறிதொன்றினின்றும் பிறக்கின்றிலரோ, கருதினோர் (த்யாதா) பிரமா முதலியோர்க்கு படைப்பாதித் தொழிலில் சித்தி பெறற் பொருட்டுச் சங்கற்பித்தாரோ.[9]

நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாராயண ரங்கனே
ஏறுகங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறிலாதவன் ஈச னொருவனே[10]

நா- தேவாரம்

"ஆட்டுவித்தாலாரொருவர் ராடாதாரே
.... காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே"[11]

நா-தேவாரம்

கு-பு:(ந)
"எங்களை நல்ல புத்தியோடு சேர்ப்பாராக"

உலகப் பற்றொழித்து இறைவன் திருவடிகளை மெய்யன்பினோடு தியானித்து வழிபடுதலாகிய நன்னெறியிற் செல்லும் புத்தியையே "நல்ல புத்தி" என்றார். இதனால் தவநெறி வேண்டியவாறாயிற்று

மத்தம் மதயா னையின்வெண் மருப்புந்தி
முத்தங் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்
அத்தா வுனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே[12]

- சுந்-தேவாரம்

உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேன்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.[13]

- திருவாசகம்.

பொ-ரை
பிரமா முதலியோரைத் தோற்றுவித்து அவர்கள் வாயிலாக நின்று ஐந்தொழில் நடந்தும் பரமகாருண்யராகும் சிவபெருமான் எங்களுக்குத் தவநெறி தந்தருளுவாராக. ஐந்தொழிற்குக்

கருத்தா அவரே யாதலால் அவ்வைந்தொழிலிற்பட்டு "வருமுறைப் பிறவிவெள்ளம் வரம்பு காணாதழுந்தி, உருவெனுந் துயரக் கூட்டி லுணர்வின்றி மயங்கும்" எம்மை அன்புநெறியிற் செலுத்தி அப்பிறவிவெள்ளத்தின் வரம்பு காணச்செய்தலும் அவரது கருணைச் செயலென்பதும், அதன் பொருட்டு நிகழ்வதே ஐந்தொழில் என்பதும், மயங்கும் நாம் அவரருளினாலன்றி அவரை யறிந்து அன்புசெய்து வழிபடும் ஆற்றலுடையோமல்லோம் என்பதும் குறிப்பித்தவாறு.

மந்:
ரு

யா தேருத்ர சிவா தநூரகோரா அபாபகா ஶிநீ/
தயா நஸ்தநுவா ஶந்தமயா கிரிஶந்தாபிசாக ஶீஹி//

இ-ள் (ஹே) ருத்ர- ஓ ருத்ர மூர்த்தியே, (ஹே) கிரிஶந்த - கைலாசமலையிலிருந்து உயிர்களுக்கு இன்பஞ்செய்பவரே, தே யா- உம்முடைய எந்த வடிவமானது, சிவா- மங்களகரமானதும், அகோரா - இறப்புப் பிறப்புக்களின் கோரத்தை (துன்பத்தை) ஒழிக்கு தன்மைகளுடையதும், அபாபகாஶிநீ - உயிர்களுக்குப் புண்ணிய வடிவத்தைக் கொடுக்கும் இயல்புகளையுடையது-மாய், விளங்குகின்றதோ, தயா ஶந்தமயா தநுவா:- அந்த இன்பகரமான வடிவங்கொண்டு, ந:- எங்களை, அபிசாகஶீஹி - பார்த்தரு ளுவீராக.

பொ-ரை

கைலாசமலையிலிருந்து ஐம்பெருந்தொழில் செய்தல் வாயிலாக உயிர்களுக்கு வீட்டினைத் தந்தருளும் இறைவ் நாங்களும் இவ்வின்ப வாழ்வினைப் பெறும் பொருட்டு எங்களைத் திருக்கணோக்கஞ் செய்தருளும்.

கு.பு.

ருத்ரன் - ருத் - துன்பத்தை, த்ராயத் - நீக்குபவன், எனவே, இறப்புப் பிறப்புத்துன்பங்களை நீக்குபவன் என்பது ருத்ரன் என்றும் சொற்குப் பொருளாகும். துன்பங்களைப் போக்கியன்றி இன்பஞ் செய்தல் கூடாமையின், ருத்ர நாமந்தினால் இம்மந்திரம் இறைவனை வழிபாடு செய்து இன்பந்தரும்படி வேண்டுகின்றது. இன்பம் - வீட்டின்பம்.

மந்:
சா

யாமிஷும் கிரிஶந்த ஹஸ்தே பிபர்ஷ்யஸ்தவே/
ஶிவாம் கிரித்ர தாம் குரு மா ஹிம்ஸீ: புருஷம் ஜகத்//

இ-ள்
கிரிஶந்த - மலையிலிருந்து இன்பம் செய்பவரே, கிரித்ர - மலைக்காவலரே, யாம் இஷும் - எந்தப் பாணத்தினை, அஸ்தவே - எய்யும் பொருட்டு, பிபர்ஷி :- கையிற் பிடித்திருக்கிறீரோ, தாம் - அந்தப் பாணத்தினை, சிவாம் குரு - மங்கலம் உடையதாகச் செய்யும், புருஷம், ஜகந் - மனிதனை-யேனும் உலகத்தையேனும், மாஹிம்ஸீ:- துன்புறுத்த வேண்டாம். (இவையிரண்டு மந்திரங்களும் யசுர் வேதத்தி-லுள்ளன) [14]

மந்:
எ

தத:- பரம் ப்ரஹ்ம பரம் ப்ருஹந்தம்
யதாநிகாயம் ஸர்வபூதேஷு கூடம்/
விஶ்வஸ்யைகம் பரிவேஷ்டிதார
மீஶம் தம் ஜ்ஞாத்வா அம்ருதா பவந்தி//

இ-ள்
தத:- பின்னர், பரம் - உயிர்களுக்கு வேறானவரும், ப்ரஹ்ம பரம் ப்ருஹந்தம் - பிரமா முதலிய காரணே காரணேசுவரர்களுக்கு வேறாகப் பெரும்பொருளாயுள்ளவரும், யதாநிகாயம் - சரீரந்தோறும் விளங்குபவரும், ஸர்வபூதேஷு கூடம் - எல்லா ஆன்மாக்களிலும் மறைந்திருப்பவரும், விஶ்வஸ்ய ஏகம் பரிவேஷ்டிதாரம் - சரம் அசரம் ஆகிய எல்லாப் பொருட்-களிலும் ஒருவராய் வியாபித்திருப்பவருமாகிய, தம் ஈஶம் - அந்தச் சிவபெருமானை, ஜ்நாத்வா - அறிந்து, அம்ருதா பவந்தி - சிவானந்தத்தினை யடைகின்றார்கள்.

பொ-ரை
உலகுயிர்களுக்கு வேறானவரும், அவற்றை ஐந்தொழிற்படுத்தும் பிரமா விட்டுணு ருத்திரன் முதலிய காரணேசுவர்களுக்கும் வேறான பரம்பொருளாயுள்ளவரும், உள்ளும் புறமும் நிறைந்

திருப்பவராயினும் எவர்களாலு மறிதற்கரிய ஒருவருமாகிய சிவபெருமானை யறிந்து சிவமாந்தன்மையைப் பெறும் வாழ்வையடைகின்றார்கள்.

மந்:
அ

வேதாஹ மேதம் புருஷம் மஹாந்த
மாதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்/
தமேவ விதித்வா அதி ம்ருத்யு மேதி
நாந்ய: பந்தா வித்யதே அயநாய//

இ-ள்

ஏதம்புருஷம் - இந்தப்புருடனை, மஹாந்தம் - பெரியோராகவும், ஆதித்ய வர்ணம் - சூரியன் போல் (அருள்) ஒளியுடையவரும், தமஸ: பரஸ்தாத் - இருளுக்கு அப்பாலுள்ளவராகவும், அஹம் வேத - நான் அறிகின்றேன். ஏவம் விதித்வா - அவரை இவ்வாறு அறிந்து, ம்ருத்யும் அத்யேதி -ஒருவன் மரணத்தைக் கடக்கிறான், அயநாய - வீட்டினை அடைதற்கு, ந அந்ய பந்தா - வேறு வழி அறியப்படவில்லை.

பொ-ரை

சிவபெருமானைப் பெரியோராகவும் அருளொளியோடு கூடியவராகவும், இருளுக்கு அப்பாலுள்ளவராகவும் அறிகிறேன். இவ்வாறு அறிதலைவிட மோட்சத்திற்கு வேறுவழியில்லை.

மந்:
கூ

யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிம்சித்ய
ஸ்மாந்நாணீயோ நஜ்யாயோஅஸ்தி கஶ்சித்/
வ்ருக்ஷ இவ ஸ்தப்தோதிவி திஷ்டத்யேக
ஸ்தேநேதம் பூர்ணம் புருஷேணஸர்வம்//

இ-ள்

யஸ்மாத் - எவரிலும் பார்க்க, பரம் அபரம் கிஞ்சித் ந அஸ்தி - மேலானதும் கீழானதும் ஒன்றுமில்லையோ, யஸ்மாத் - எவரிலும் பார்க்க, அணீய : ந அஸ்தி - நுண்ணியதில்லையோ, கஶ்சித் ஜ்யாய: ந அஸ்தி - பெரியதொன்றில்லையோ, ய:- எவர்,

வ்ருக்ஷ இவ - விருக்ஷம் போல, திவி - சுவர்க்கலோகத்தில், ஸ்தப்தோ திஷ்டதி - நிலையாய் நிற்கிறாரோ, (ஸ:) ஏக:- அவர் ஒருவர், தேந புருஷேண - அந்தப் புருடனால், இதம் ஸர்வம் பூர்ணம் - இது எல்லாம் நிரம்பியிருக்கிறது.

பொ-ரை

மேல் கீழற்றவரும், சிறியதிற் சிறியரும், பெரியதிற் பெரியரும், சுவலோகத்தில் நிலைபெற்றிருப்பவருமாகிய விவபெருமான் இவ்வுலகம் முழுவதும் நீக்கமற நிறைந்திருக்கிறார்.

மந்:
கo

ததோ யத்துத்தரதரம் ததரூபமநாமயம்/
யஏதத்விது ரமிருதாஸ் தேபவந்தி அதேதரே து: கமேவாபியந்தி//

இ-ள்

தத:- உலகத்திலிருந்து, யத் உத்தரதரம் - எது மிகவும் அப்பாற்பட்டதோ, தத்- அது, அரூபம் - உருவமற்றதும், அநாமயம் மலசம்பந்தம் அற்றதுமாம், யே- எவர்கள், ஏதத் விது:- இதனை அறிகின்றார்களோ, தே - அவர்கள், அம்ருதா: பவந்தி - இறப்பு பிறப்பு அற்றவர்களாக ஆகின்றார்கள், இதரே - பிறர், து:கமேவ அபியந்தி, அவ்விறப்பு பிறப்புக்களில் விழுந்து துயருறுவர்.

கு.பு.

உருவமற்றது என்ற அதனால் நாமமற்றது என்றுமாம்

மலசம்பந்தமற்றது. மலசம்பந்தமுள்ள ஆன்மாவின் இருதயக் குகையில் எஞ்ஞான்றுமிருப்பவராயினும் அவ்வான்மாவைப் பந்தித்த மலநோயினால் சிறிதும் பற்றப்படாதவர். அவரையறிந் தவர்கள் அமிர்தர்களாக ஆகிறார்கள், என்று மந்திரத்தின் பிற்பாதியிற் கூறியதற்கு ஏதுக் காட்டியவாறு.

பின்னுவார் சடையான் றன்னைப் பிதற்றிலாப் பேதைமார்கள்
துன்னுவார் நரகந் தன்னுள் தொல்வினை தீர வேண்டின்
மன்னுவான் மறைகளோதி மனத்தினுள் விளக்கொன்றேற்றி
உன்னுவா ருள்ளத் துள்ளா ரொற்றியூ ருடைய கோவே[15]

நா- தேவாரம்

ஒருநாம மோருருவ மொன்று மிலார்க் காயிரம்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ[16]
- திருவாசகம்.

பொ·ரை

உலகங்கடந்து நின்ற கறைமிடற்றண்ணல் உருவநாமங் களற்றவரும் மலசம்பந்த மற்றவருமாம். அவரையறியும் சிவஞானிகள் வீட்டிற்பத்தைப் பெறுகிறார்கள். ஏனையோர் பிறவிப்பெருங் கடலுள் விழுந்து துயருறுவர்.

மந்:
கக

ஸர்வாநந ஶிரோக்ரீவ: ஸர்வபூதகுஹாஶய:/
ஸர்வவ்யாபீ ஸ பகவாம்ஸ் தஸ்மாத் ஸர்வகத: ஶிவ://

இ·ள்

ஸர்வாநந ஶிர: க்ரீவ:- எல்லா முகங்களும் தலைகளும் கழுத்து களும் தமதாக உடையவரும், ஸர்வபூத குஹாஶய:- எல்லா ஆன்மாக்களது இருதயக்குகைக்கண் அமர்ந்திருப்பவரும், ஸர்வ வ்யாபீ - எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவருமாயுள்ளார், ஸ பகவான் ஶிவ:- அந்தப் பகவானாகிய சிவபெருமான், தஸ்மாத் - அதனால், ஸர்வகத:- அவர் அந்தரியாமியாயுள்ளார்.

கு.பு.

"எல்லா முகங்களும், தலைகளும் கழுத்துகளும் தமதாக உடையவர்"

என்பதனால், வினைகளைச் செய்தற்கும் அவற்றின் பயன்களை நுகர்தற்கும் கருவியாயமைந்து தநுகரணங்களிற் கலந்து அவையெல்லாம் தாமாய் நிற்குமியல்பும்,

"எல்லா ஆன்மாக்களின் இருதயக்குகைக் கண் அமர்ந்திருப்பவர்" என்பதனால்

ஆன்மாக்களிற் கலந்து அவை தாமாய் நிற்குமியல்பும், "ஸர்வ வ்யாபி"என்பதனால்

ஏனைய போக்கியப் பொருட்களிற் கலந்து நின்று அவை தாமாய் நிற்குமியல்பும் தெரித்தவாறாயிற்று,

"அவர் அந்தர்யாமி (ஸர்கத:)" என வேறு பிரித்து முடித்துக் கூறிய வாற்றால், அங்ஙனம் காண்பவன், காட்சி, காட்சிப் பொருள்களாய் நின்றாராயினும், உண்ணின்று காட்டுபவரும் அவரே என்று அறியப்படுதலின், பொருட்டன்மையால் வேறாயுள்ளார் என்பது பெறப்பட்டது.

வாயானை மனத்துளானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் றன்னை
சுடர்த் திங்கட் சடையானை தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்கட் கென்றும்
சேயானைத் தென்கூடற் றிருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.[17]

நா-தேவாரம்.

கூறு நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ ......
தேற்றவேண்டாவோ[18]

- திருவாசகம்.

காண்பவன் முதலிய திறமும் காட்டுவான்
மாண்புடையோனுமாய் வலிகொள் வான்றொடர்
பூண்பதின்றாய் நயம் புணர்க்கும் புங்கவன்
சேண்பொலி திருநடச் செயலை யேத்துவாம் [19]

- கந்தபுராணம்.

செய்யு மவனும் புலனுஞ் செய்வித்து நிற்போனும்
எய்தவரும் பொருளும் யாவையும் நீயேயென்கை
ஐயவடியேங்க ளறிந்தனமான் மற்றிதனால்
வெய்ய பவமகன்று வீடுமினிக் கூடுதுமே[20]

- கந்தபுராணம்.

பொ-ரை

காண்பவனும் காட்சியும் காட்சிப் பொருளுமாய் நீக்கமற நிறைந்து நிற்கும் சிவபெருமான் காட்டுவாராயுமிருக்கிறார்.

மந்:
கஉ

மஹாந் ப்ரபுர் வை புருஷ: ஸத்வஸ்ய ப்ரவர்த்தக:/
ஸுநிர்மலாமிமாம் ப்ராப்தி மீஶாநோ ஜ்யோதிரவ்யய://

இ-ள்

மஹாந் ப்ரபு: வை புருஷ:- மகானும் பிரபுவுமான சிவபெருமான், ஸத்வஸ்ய - அந்தக்கரணத்தினது, ஏஷப்ரவர்தக:- இந்தப் ப்ரேரக ராவர். ஸுநிர்மலாம் - மேலான நிர்மலானவர், இமாம் ப்ராப்திம் - வீட்டின்பமாகிய இந்தப் பேற்றினை, ஈஶாந:- தருபவரும் அவரே, ஜ்யோதி: அவ்யய:- அவர் ஒளிவடிவினரும் அழிவற்றவருமாவர்.

கு.பு.

மஹாந் - எல்லோருக்கும் மேலானவர். பிரபு:- சிருட்டி முதலிய ஐம்பெருந்தொழில் செய்யும் ஆற்றலுள்ளவர்.

அவ்யய:- அழிவற்றவர், ஆதியுமந்தமுமில்லாதவர், நித்தியர்.

அந்தக்கரணம் ப்ரவர்த்தக:- கன்ம ஒழிவின் பொருட்டு உயிர்களைப் போகத்தில் வீழ்த்துபவர்.

எழுவாய் யிறுவா யிலாதன வெங்கட் பிணிதவிர்த்து
வழுவா மருத்துவ மாவன மாநரகக்குழிவாய்
விழுவா ரவர்தம்மை வீழ்ப்பன மீட்பன மிக வன்போ
டழுவார்க் கமுதங்கள் காண்க வையாற னடித்தலமே. [31]
- தேவாரம்.

மாநரகக் குழிவாய் விழுவார்தம்மை வீழ்ப்பன மீட்பன - இருவினையொப்பிலாதவரை, அது நிகழும்காறும். சுக துக்க போகங்களிலமிழ்த்தி, இரு வினையொப்பு வந்து மலபரிபாகமும் சத்திநிபாதமுமுண்டாய விடத்துச் சிவஞானமுதிக்க, "மிக்க அன்போடழுவார்க் கமுதங்கள் காண்க, அந்த ஞானத்தின் பயனாய் முறுகி வளரும் மெய்யன்பினால் அகங்குழைந்துருகி வழிபடுவார்க்குப் பேரானந்த சொரூபமாயிருப்பன வீட்டினபத்தை த்தருவன அவரது திருவடிகள் என்க.

பொ·ரை.
மகானும் பிரபுவுமான சிவபெருமானே போக மோட்சங்·களாகிய இரண்டையும் தருபவர். அவர் ஒளிவடிவினரும் நித்தியருமாவர்.

மந்:
கரு

அங்குஷ்ட மாத்ர: புருஷோ அந்தராத்மா
ஸதா ஜநாநாம் ஹ்ருதயே ஸம்நிவிஷ்ட:/
ஹ்ருதா மநீஷா மநஸா அபிக்லுப்தோ
ய ஏதத் விதுரம்ருதாஸ்தே பவந்தி//

இ·ள்
புருஷ:- சிவபெருமான், ஜநாநாம் ஹ்ருதயே- சீவர்களுடைய இருதயத்தில், அந்தராத்மா - உயிர்க் குயிராய், அங்குஷ்ட மாத்ர: பெருவிரலளவுள்ளவராக, ஸதா ஸம்நிவிஷ்ட:- எப்பொழுதும் இருக்கிறார், ஹ்ருதா மநீஷா மநஸா- அன்பினோடும் கூடிய மனதினால், அபிக்ல்ப்த:- (அவர்) அறியப்படுகிறார்.

கு.பு.
அங்குஷ்ட அளவினதாகிய இருதய கமலத்தில் இருத்தல் பற்றிச் சிவபெருமான் அங்குஷ்ட அளவினர் என்று கூறப்பட்டனர். மநீஷா என்னுஞ் சொல்லிற்கு அருட்சத்தி என்னும் பொருள், பராசர புராணம் முதலியவற்றிற் கண்டது.[22]

பொ·ரை
ஆன்மாக்களது இருதய கமலத்தில் எக்காலமும் நீங்காதுறைகின்ற சிவபெருமானைத் திருவருளால் அறிபவர்கள் சிவமாந் தன்மைப் பெருவாழ்வைப் பெறுகிறார்கள்.

மந்:
கச

ஸஹஸ்ர ஶீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்/
ஸபூமிம் விஶ்வதோ வ்ருத்வா அத்யதிஷ்டத்
தஶாங்குலம்//

இ-ள்

புருஷ:- சிவபெருமான், ஸஹஸ்ர !ர்ஷா- ஆயிரம் தலைகளு டையவரும், ஸஹஸ்ராக்ஷ: - ஆயிரம் கண்களுடையவரும், ஸஹஸ்ரபாத் - ஆயிரம், பாதங்களுடையவருமாவ்ர். ஸ:- அவர், பூமிம் - பூமியை, ஸர்வத: வ்ருத்வா - எங்கும் சூழ்ந்து கொண்டு, தஶாங்குலம் அதிதிஷ்டதி - பத்து அங்குலம் கடந்து நிலைத்- திருக்கிறார்.

கு.பு.

ஆயிரம் என்பது உபலக்கணமாதலின் அளவிலாத் தலைகளும், கண்களும் பாதங்களுமுடையவர் என்றபடி, ஆன்மாக்களது இருதயத்தில் என்று மேலே கூறப்பட்டமையின் எல்லா ஆன்மாக்களது உடல்களும் அவருடையனவே என்பது கருத்து. பத்தங்குலம் என்பது உபலக்கணம், ஆதலால் உலகமனைத்தும் (உள்ளும் வெளியும்) நிறைந்திருப்பவர் என்பது பொருள்.

ஆயிரம் தாமரை போலும் ஆயிரம் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரந் தோளுடையானும்
ஆயிரம் ஞாயிறு போலும் ஆயிர நீண்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானு மாரூரமர்ந்தவம் மானே. [23]

நா- தேவாரம்.

பொ-ரை

எண்ணில்லாத தலைகளும் கண்களும் பாதங்களுமுடைய சிவபெருமான் எல்லா உலகங்களிலும் நிறைந்திருப்பவராவர், (இம்மந்திரமும் அடுத்த மந்திரமும் யசுர்சாம வேதங்களிற் காணப்படுவன. இம்மந்திரத்துள் வரும் விஶ்வதோ வ்ருத்வா என்பது இருக்கு வேதத்தில் "விஶ்தாத்ருத்வா" என்றும். யசுர் வேத்தில் "ஸர்வத: ஸ்ப்ருத்வா" என்றும் உள்ளன).[24]

மந்:
கரு

புருஷ ஏவேதம் ஸர்வம் யத் பூதம் யச்ச பவ்யம்/
உதாம்ருதத்வஸ்யேஶானோ யதந்நேநாதிரோஹதி//

இ-ள்

யத்பூதம் - எதுமுன் தோற்றியதோ, யத்சபவ்யம் - எது இனித் தோற்ற இருக்கிறதோ, இதம் ஸர்வம் - இந்த எல்லாம், புருஷ:

ஏவ - சிவபெருமானே, உத - பின்னும், யத் அந்நேந அதிரோஹதி - எவர் மனம் வாக்குகளைக் கடந்து அப்பாற்செல்லுகிறாரோ, (ஸ:- அவர்) அம்ருதத்வஸ்ய ஈஶாந:- மோட்சத்திற்குத் தலைவர்.

கு.பு.

நிகழ்காலத்திலுள்ள இவையனைத்தும் புருடனுடை வடிவங்களாயிருத்தல் போன்று செல்கால வருங்காலங்களில் உள்ளனவும் அறியற்பாலன என்றுரைப்பர் சாயனர்.[25]

மனம் பசு ஞானத்தையும், வாக்கு, பாச ஞானத்தையும் கருதும்.

பொ-ரை

எல்லா உலகமுமாயிருக்கின்ற சிவபெருமான் பசு பாச ஞானங்களுக் கெட்டாதவர் பதி ஞானத்தால் நேசமொடு உள்ளத்தே நாடிப் பாதநிழற் கீழ் தூங்காதே தூங்கும் நிலையுடையோர்க்கு வீட்டின்பமருளுபவர்.

(இம்மந்திரம் இருக்கு கo - கo இலும், யசுர் ௩௧-௧ இலும், அதர்வம், ௧௯- ௧ இலும் காணப்படுவது)[26]

மந்:
கசு

ஸர்வத: பாணிபாதம் ஸர்வதோஅக்ஷிஶிரோ முகம்/
ஸர்வத: ஶ்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி//

இ-ள்

ஸர்வத: பாணி பாதம் - எங்கும் கை எங்கும் கால், ஸர்வதோ அக்ஷிரோமுகம் - எங்கும் கண் எங்கும் தலை, எங்கும் முகம், ஸ்ருதிமத் - எங்கும் காது, லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி - இவ்வாற்றால் உலகமெங்கும் வியாபித்திருக்கிறார்.

மந்:
கஎ

ஸர்வேந்திரியகுணாபாஸம் ஸர்வேந்திரிய விவர்ஜிதம்/
ஸர்வஸ்ய ப்ரபுமீஶாநம் ஸர்வஸ்ய ஶரணம் ப்ருஹத்//

இ-ள்

ஸர்வேந்திரியகுணாபாஸம் - எல்லா இந்திரியங்களுடைய குணமாய் விளங்குபவரும், ஸர்வேந்திரிய விவர்ஜிதம் - எல்லா

இந்திரியங்களையும் கடந்து நிற்பவரும், ஸர்வஸ்ய ப்ரபும் - எல்லாவற்றுக்கும் பிரபுவும், ஈஶாநம் - எல்லாவற்றுக்கும் தலைவருமாகிய, சிவபெருமான், ஸர்வஸ்ய ஶரணம் ப்ருஹத் - எல்லாவற்றுக்கும் பெரிய புகலிடமாயுள்ளார்.

கு.பு.

உற்றிருந்த உணர்வெலாமானாய் நீயே[37]

நா- தேவாரம்.

கரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தானெக்கு
மரணம் பிறப்பெண் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ [38]

(திருவாசகம்)

பொ-ரை

எல்லா இந்திரியங்களோடுங் கலந்து அவற்றின் குணமயமாயிருப் பவராயினும், அவ்விந்திரியங்களையெல்லாங் கடந்து நிற்பவராய் அவற்றையுந் தொழிற்படுத்தலில் ஆற்றல் வாய்ந்தவரும், எவற்றையும் ஆளுபவராகிய சிவபெருமானே எல்லாவற்றுக்கும் பெரிய புகலிடமாயுள்ளார்.

மந்:
கஅ

நவத்வாரே புரே தேஹீ ஹம்ஸோ லேலாயதே பஹி:/
வஶீஸர்வஸ்ய லோகஸ்ய ஸ்தாவரஸ்ய சரஸ்ய ச//

இ-ள்

ஸ்தாவரஸ்ய சரஸ்ய ச- நிலையியற் பொருளும் இயங்கியற் பொருளுமாகிய, ஸர்வஸ்ய லோகஸ்ய - எல்லா உலகங்களு டையவும், வஶீ- ஆளுபவராகிய சிவபெருமானே, நவத்வாரே புரே - ஒன்பது வாயில்களாகிய துவாரங்களையுடைய இந்த உடம்பில், தேஹீ பஹி: லேலாயதே - ஆன்மாக விருந்து, (சீவான்மாக்களின் பொருட்டு) வெளிவிடயங்களை அறிகிறார்.

கு.பு.

"இந்த உடம்பில் ஆன்மாவாக இருந்து, சீவான்மாவின் பொருட்டு வெளிவிடயங்களை அறிகிறார்"

முதல்வன் ஆன்மாக்களோடு கலந்து நின்று அவற்றிற்கு விடயங்களைக் காட்டுதலேயன்றி ஆன்ம அறிவு செல்லுமிடந் தோறும் உடன்சென்று அவற்றது விடயங்களிலுங் கலந்து அவற்றின் பொருட்டுக் காணுமுபகாரமும் செய்வன். அங்ஙனம் ஆன்ம அறிவிலும் விடயங்களிலும் கலந்துநில்லா தொழி-வனேல், ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் விளங்குதலும், பின் ஒன்றைச் சென்று பற்றியறிதலும் பொருந்தாவாம்.

எதுபோலுமெனில், இருளோடு கூடிய கண்ணுக்குப் பொருளைக் காட்டும் விளக்கொளியானது, கண்ணொளியிலும் பொருளிலும் ஒக்கக் கலந்து நின்றாலேயன்றிக் கண் பொருளைக் காணமாட்டாமை போலுமென்க. ஆயின், இருளோடு கூடிய கண், விளக்கொளியோடு கூடிய பொருளைப் பார்க்கின்றதே யெனின், அங்ஙனமன்று, இருளோடு கூடிய கண்ணினொளி பொருளிற் கலந்திருக்கும் விளக்கொளியோடு சென்று கலந்து பொருளைப் பார்க்கின்றதெனவறிக.

(முதல்வன் ஆன்மாவிலும், அதனறிவு தொழிற்படுவதற் கிடமாயுள்ள கருவி கரணங்களிலும், அதனாலறியப்படும் பொருள்களிலும் ஒக்கக் கலந்து நிற்கின்றான் என்னும் உண்மை இவ்வத்தியாயத்துப் பதினோராம் மந்திரத்திற் பெறப்பட்டது. கண்டு கொள்க) காட்டுமுபகாரமும், காணுமுபகாரமுமாகிய இரண்டும் பெத்தம் முத்தி இரண்டிற்கு மொக்கும். அதனால், முத்தியில் பரமார்த்தத்தில், பிரமமொன்றுமே யுள்ளதெனும் மாயாவாதி மதமும், உயிர்சிவனோடொத்துச் சுதந்தர-மாயிருக்கும் என்னும் சிவசமவாத சைவ மதமும் போலியா-யொழிந்தமை காண்க.

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம் போற்காணவுள் ளத்தைக்
கண்டு காட்டலின் அயரா வன்பி னரன் கழல் செலுமே[29]

- சிவஞானபோதம்

அறிவானுந் தானே அறிவிப்பான் றானே
அறிவாய் அறிகின்றான் றானே - அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர் பா ராகாயம்
அப்பொருளுந் தானே[30]

அம்மை திருவந்தாதி.

"அறிவானுந்தானே, அறிவிப்பான்றானே" என்றது ஆன்மாவோ டொற்றித்து (ஆன்மாவாகவே) நின்று காட்டு முபகாரஞ் செய்தலைக் கருதிற்று. அது மந்திரத்தில் "ஆன்மாவாக இருந்து" (தேஹி) என்பதிற் கண்டோம். "அறிவாயறிகின்றான்றானே" என்றது ஆன்ம அறிவு செல்லுமிடந்தோறு முடன்சென்று விடயங்களிற் கலந்து நிற்றலாகிய காணுமுபகாரஞ் செய்தலைக் கருதிற்று.

நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும்
நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி
அற்பமொடு பெருமையுமாய் அருமை யாகி
அன்புடையார்க் கெளிமையதாய் அளக்க லாகாத்
தற்பரமாய் சதாசிவமாய்த் தானும் யானும்
ஆகின்ற தன்மையனை நன்மை யோடும்
பொற்புடைய பேசக்கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற் றோமே[31]

நா- தேவாரம்.

சென்ற விடமெல்லாந் திருவருளே தாரகமாய்
நின்றவர்க்கே யானந்த நிட்டை பராபரமே[32]

- தாயுமானவர்.

பொ-ரை

எல்லா உலகங்களையுமாளுந் தலைவராகிய சிவபெருமான் ஆன்மாவோடத்துவிதமாயியைந்து நின்று காட்டுதலே யன்றிக் காணுமுபகாரத்தையுஞ் செய்கிறார். இவ்வாறத்துவிதமாய் நின்று யாதுங்கைமாறு கருதாது உபகரித்து வரும் பெருங் கருணையை மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அயரா அன்பினால் அம்முதல்வன் திருவடியாகிய சிவானந்தானுபூதியைப் பெறமு யலுக என்பது குறிப்பெச்சம்.

மந்:
கசு

அபாணிபாதோ ஜவநோ க்ரஹீதா
பஶ்யத்யசக்ஷுː ஸஃஶ்ருணோத்யகர்ணː/
ஸவேத்தி வேத்யம் ந ச தஸ்யாஸ்தி வேத்தா
தமாஹுரக்ர்யம் புருஷம் மஹாந்தம்//

இ-ள்
ஸ - அவர், அபாணிபாத:- கைகாலின்றியும், ஜவந:க்ரஹீதா - நடத்தலும் கிரகித்தலும் உடையவர், அசக்ஷு: பஶ்யதி - கண்களின்றியும் காணுகின்றார், அகர்ண: ஶ்ருணோதி- காதின்றியும் கேட்கிறார், ஸ வேத்தி வேத்யம் - அறிய வேண்டியதை அறிகிறார், தஸ்ய வேத்தா ந அஸ்தி - அவரை யறிபவர் ஒருவரும் இல்லை, தம் - அவரை, அக்ரயம் மஹாந்தம் புருஷம் - முதலாவது மகாபுருஷனென்று, ஆஹு:- வேதங்களை அறிந்தோர் சொல்லு-கின்றார்கள்.

கு.பு:(க)
"கைகாலின்றியும் நடத்தலும் கிரகித்தலும் உடையர்"

எதிர்நிரனிரையாகக் கொள்க. மாயா காரியங்களாகிய கருவி கரணங்களைச் சார்ந்து நின்று தொழிற்படுதல் தூலசித்தாய் ஏகதேசப்பட்டியங்கும். உயிரினியல்பாகும். இறைவனோ அதிசூக்கும சித்தாய் எங்கும் நீக்கமற நிறைந்து "கரணங்க ளெல்லாம் கடந்து நின்ற கறை மிடற்றன்". அவன் மாயாகாரி யங்களைப் பொருந்தான். ஆயினும் எல்லா அறிவும் எல்லா வல்லமையும் எல்லா முதன்மையுமுடையன்.

கு.பு: (உ)
"அறிய வேண்டியதை அறிகிறார்"

இதனால் உயிர்களை ஐம்பெருந்தொழிலுட்படுத்தி, ஈற்றில் திருவடிப் பேரின்ப வீட்டிலிருத்தும் அவனது கருணைச்செயல் குறிக்கப்பட்டது.

ஆடுமெனவு மருங்கூற்ற முதைத்து வேதம்
பாடுமெனவும் புகழல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பு மறுக்கு மெனக்கேட்டீராகில்
நாடுந்திறந்தார்க் கருளல்லது நாட்டலாமே[33]

ஞா-தேவாரம்

இத்திருப்பாட்டின் திருவுள்ளக் கருத்தை தெய்வச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு விரிப்பர்!

ஆடுமெனவாந் திருப்பாட்டி னமைந்த மூன்றும்
நீடும் புகழோ பிறர்துன்பம் நீத்தற்கோ வென்று

தேடுமுணர்வீர் உலகுக்கிவை செய்ததீசர்
கூடுங்கருணைத் திறமென்றனர் கொள்கை மேலோர்[34]
- பெரியபுராணம்.

கு.பு:(ரு)
"அவரை யறிபவ ரொருவருமில்லை"

அறியும் பொருள், அறியப்படு பொருளின் வேறு நின்று அதனைச் சுட்டிக் காணுதல் வேண்டும். உயிர் இறைவனை விட்டுத் தனித்து நிற்றல் எக்காலத்துமில்லை. அது இறைவனை யாதாரமாகக் கொண்டு அவ்விறைவன் காட்டக் காணுமியல்புடையது. அதனால் அவ்வுயிர் தன் முதல்வனைப் பிரிந்து நின்று சுட்டிக் காணல் அமையாது. இது பற்றியே

அறிய விரண்டல்ல னாங்கறிவு தன்னால்
அறியப் படானறிவி னுள்ளா - னறிவுக்குக்
காட்டாகி நின்றானைக் கண்ணறியா மெய்யென்னக்
காட்டா தறிவறிந்து கண்டு[35]
என்றது சிவஞான போதம்

இவ்வியல்பு பெத்த நிலைக்கு மட்டுமன்று முத்திக்கு மொவ்வும், முத்தியிலும் உயிர் வேறு நின்று முதல்வனைச் சுட்டியறிய மாட்டாது என்பதை, அன்றும் திருவுருவம் காணாதே யாட்பட்டேன், இன்றுந் திருவுருவங் காண்கிலேன்[36] என்று பரபோகம் கைவரப்பெற்ற அம்மையார் திருவாய் மலர்ந்தருளியவாற்றாலறிக. அன்று என்றது பெத்தநிலையையும், இன்று என்றது முத்தி நிலையையும் குறிப்பனவாம்.

ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி
மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே[37]
ஞா-தேவாரம்- திருப்பாசுரம்

இப்பாசுரத்திலுள்ள "ஏதுக்களாலும் சோதிக்க வேண்டா" என்னும் பகுதிக்கு

"மன்னு மேதுக்களா லெனும் வாய்மைதான்
தன்ன தொப்பு வேறின்மையிற் சங்கர
னின்ன தன்மையை யேது எடுத்துக்காட்டு

அன்னவற்றா லளப்பில னென்றதாம்[38]
என்றும்

"சுடர் விட்டுள னெங்கள் சோதி"

என்பதற்கு,

தோன்றுகாட்சி சுடர்விட்டுள னென்ப
தான்ற வங்கிப் புறத் தொளியா லன்பி
னூன்ற வுள்ளெழுஞ் சோதியாய் நின்றனன்
ஏன்று காண்பவர்க் கிது பொரு ளென்றதாம்[39]

என்றும் பொருள் விரித்தருளிச் செய்தனர் தேவாரம் முதலிய திருமுறைகளின் மெய்பொருளுணர்ந்த தெய்வச் சேக்கிழார் சுவாமிகள்.

மேலெடுத்துக்காட்டிய சிவஞானபோத வெண்பாவின் பொருளையு மீண்டொப்பு நோக்கி மகிழுக.

"அவரது திருவருட் பிரசாதத்தினால் அவரைக் காணுகின்றான்" என்று அடுத்த மந்திரத்தில் ஓதுதலின், அவரை யறிபவர் ஒருவருமில்லை என்பதற்கு பசு பாச ஞானங்களினால் அவரை யறிபவரில்லை என்று பொருள் விரிக்க.

பொ-ரை

சர்வகர்த்திருத்துவமும், சர்வஞ்ஞத்துவமுமுடைய முதல்வனுக்கு ஒன்றைச் செய்தலும் ஒன்றையறிதலும் போலொத்த தொழிற்பாடுகளில் கருவி கரணங்களின் சார்பு வேண்டப்படுவதில்லை. அவர் உயிர்களுக்கு வீட்டின்பத்தைத் தருதற்கேதுவாகிய ஐம்பெருந்தொழிலை அறிந்தியற்றும் சத்தி காரியங்களை யுடையவர். அறிவுனுள்ளறிவாய் நிற்றலால், உயிரறிவு வேறு நின்று அவரை யறிய மாட்டாது. அவரையே முதற்கடவுள் என்று பிரம வாதிகள் கூறுகின்றார்கள்.

மந்:
உ०

அணோரணீயாந் மஹதோ மஹீயா
நாத்மா குஹாயாம் நிஹிதோ அஸ்ய ஜந்தோ:/
தமக்ரதும் பஸ்யதி வீதஸோகோ
தாதுః ப்ரஸாதாந் மஹிமானமீஸம்//

இ-ள்

அணோரணீயாந் - அணுவிலும் அணுவாயும், மஹத: மஹீயாந் - பெரிதிலும் பெரிதாயும், (விளங்குகின்ற) ஆத்மா - பரமாத்மாவானவர், அஸ்ய ஐந்தோ:- இந்தச் சீவான்மாவுடைய, குஹாயாம் நிஹித:- இருதயக்குகையில் வைக்கப்பட்டிருக்கிறார், தாது: ப்ரஸாதாத் - ஆதாரமான அவரது திருவருட் ப்ரசாதத்தினால், அக்ரதும் மஹிமாநம் ஈஶம் - கிரியை கடந்தவரும் மகிமையுடையவருமாகிய அந்தப் பரமான்மாவை, வீதஶோக: பஶ்யதி- துக்கம் நீங்கினவனாய்க் காண்கின்றான்.

கு.பு:(க)

"அணுவிலு மணுவாயும், பெரிதிலும் பெரிதாயும் விளங்குகின்ற பரமான்மா"

மலசம்பந்தத்தினால் அணுத்தன்மைபெற்ற சீவான்மாவிலுள்ளாயிருந்து நியமிப்பவராதலால் "அணுவினுள்ளணு என்றும், அறிவுள்ளனவும் இல்லனவுமாய எல்லாம் வியாப்பியமாயடங்க, அவற்றைக் கடந்து வியாபகமாய் விளங்குபவராதலால் "பெரிதிலும் பெரிது" என்றும் வேதாகம மந்திரங்கள் அவரைப் புகழ்ந்து துதிக்கும்,

பரியர் நுண்ணியர் பார்த்தற் கரியவர்
அரிய பாடல ராடல ரன்றியும்
கரிய கண்டத்தர் காட்சி பிறர்க்கெலாம்
அரியர் தொண்டர்க் கெளியரை யாறரே[40] - நா- தேவாரம்.

அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டணுவோ
ரண்டமாம் சிறுமைகொண் டடியேன்
உண்டவூண் உறக்காம் வகைஎன துள்ள
முடன்கலந் தெழுபரஞ் சோதி
கொண்ட நாண் பாம்பாம் பெருவரை வில்லில்
குறுகலர் புரங்கள் மூன் றெரித்த
கண்டனே நீலகண்டனே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே[41]

- திருவிசைப்பா.

கு.பு:உ

"கிரியை கடந்தவரும் மகிமையுடையவருமாகிய பரமான்மாவை அவரது திருவருட் பிரசாதத்தாற் காண்கின்றான்"

மேல் மந்திரத்தில் அவரை அறிபவர் ஒருவருமில்லை என்று கூறியதில், எவராலும் அறியப்படாத பொருள் ஒன்றுண்டு என்பதற்குப் பிரமாணம் என்னை என்றும், உண்டாயினும் அறியாவிடத்து அதனால் எய்தும் பயனென்னை என்றும் ஆசங்கை நிகழ, அவர் அறிவினுள்ளறிவாய் இந்த (ஆன்மா வினுடைய இருதயக் குகையில்) இருந்து அறிவைப் பிரேரிப்பவர் (ஆதலால் ஆன்ம அறிவினால் சுட்டி யறியப்படாதவர்) என்று பசு பாச ஞானங்களினால் அறியலாகாமைக்குக் காரணங்காட்டி அங்ஙனமாயினு மவரது திருவருட் பிரசாதத்தினால் அவரை யறிதல் கூடும் என்று அவ்வாசங்கை நீக்கியவாறாயிற்கு.

அருளினா லாகமத்தே யறியலா மளவி னாலும்
தெருளலாந் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே
மருளெலா நீங்கக் கண்டு வாழலாம் பிறவி மாயா
இருளெலா மிரிக்க லாகும் அடியரோ டிருக்கலாமே[42]
-சிவஞான சித்தியார் பாயிரம்

மைப்படிந்த கண்ணாளுந்..................... அவனருளே
கண்ணாகக் காணி னல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்தன் னிவனிறைவ
னென்றெழுதிக் காட்டொ ணாதே[43] - நா - தேவாரம்.

மந் :
உக

வேதாஹமேத மஜரம் புராணம் ஸர்வா
த்மாநம் ஸர்வகதம் விபுத்வாத்/
ஜந்மநிரோதம் ப்ரவதந்தி யஸ்ய
ப்ரஹ்மவாதிநோ ஹி ப்ரவதந்தி நித்யம்//

இ-ள்
வேதவாதிந :- வேதப் பொருளுணர்ந்த பெரியோர்கள், யஸ்ய - எவருடைய, ஜந்ம நிரோதம் ப்ரவதந்தி - பிறப்பொழிக்கும் இயல்பினை எடுத்துக் கூறுகின்றார்களோ, நித்யம் ஹி ப்ரவதந்தி - இறப்புப் பிறப்பற்ற தன்மையை எடுத்துக் கூறுகின்றார்களோ, அஜரம் - மூப்பற்றவரும், புராணம் - பழமையானவரும், ஸர்வாத் மாநம் - எல்லா ஆன்மாக்களும் தானாயுள்ளவரும், விபுத்வாத் ஸர்வகதம் - எவற்றையும் கடந்து செல்லுமி-

யல்பினால், எல்லாப் பொருட்களிலும் நீக்கமற நிறைந்துள்ளவருமாகிய, இவரை, அஹம் வேத- நான் அறிகிறேன்.

கு.பு.
தான் பிறவாத ஒருவரே ஏனையோரது பிறவித் துன்பத்தை நீக்க வல்லவராவர் என்பதை உணர்த்தும் பொருட்டு பிறப்பொழிக் குமியல்பு கூறி, அதையடுத்து நித்யத்தன்மை கூறப்பட்டது.

"பிறப்பொழிக்குமியல்பு" அவரது அளவிலாற்றனையும், உயிர்களிடத்து வைத்த கைமாறு கருதாத பெருங்கருணைத் திறத்தையும் குறிக்கும். "நான் அறிகிறேன்" என்பது அறிந்து பத்தி செய்தவிடத்து விளையும் சிவானந்தத்தோடு கூடிய மனவெழுச்சியில் எழுந்த சுவானுபவத்திருமொழி.

எத்திக்கு மாய்நின்ற இறைவன் தன்னை
யேகம்ப மேயானை யில்லாத் தெய்வம்
பொத்தித்தம் மயிர் பறிக்குஞ் சமணர் பொய்யிற்
புக்கழுந்தி வீழாமே போத வாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவந் தீர்த்துப்
பண்டை வினைப் பயமான எல்லாம் போக்கித்
தித்தித்தென் மனத்துள்ளே ஊறுந் தேனைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டே னானே[44]

நா- தேவாரம்

இறைவனை அவனது அருட்கண்ணாற் காண்டலாகிய உண்மை ஞானத்தின் பயன் அவ்விறைவனிடத்துப் பத்தி செய்தலேயாகும். பத்தியில்லாத ஞானத்தினால் ஆனந்தம் உண்டாகமாட்டாது. ஞானமும் பத்தியின் வாயிலாகவே முத்தியைப் பயப்பிக்கும். அதனால் ஞானம் முத்திக்குப் பரம்பரைச் சாதனமே யன்றி நேர் சாதனமாகாது. அவ்வுண்மை, ஓதாதெல்லாமுணர்ந்த பேரறிஞ ராகும் மெய்கண்ட பரமாசாரிய சுவாமிகள், சிவஞான போதத்தில் ஞானசாதன மெல்லாங் கூறி முடிந்தபின், பதினோராஞ் சூத்திரத்து இரண்டாவது அதிகாரத்தில் "அவன் அந்நியமின்றிச் செய்வோர் செய்திப் பயன் விளைத்து நிற்றலான். இனிப்பத்தியினாள் மறவாதேத்த அவனது சீபாதத்தை யணையு மென்றது"[45] என்று ஏதுவும் மேற்கோளும் செய்தமையால் நன்கு வலியுறுத்தப்படும்.

ஆயின் உண்மை ஞானம் மெய்ப்பத்தியை விளைத்தல் பற்றியே மேலெடுத்துக் காட்டிய தேவாரச் சுருதியில் பத்திக்கே வழிகாட்டிப் .... தித்தித் தென் மனத்துள்ளே யூறுந்தேனே என்று அப்பர் சுவாமிகள் கூறியருளினார்கள். அல்லாத ஞான மொன்றுளதேல் அது விவேக ஞானம் என்னும் பசு ஞானத்தின் பாலதாயொழியும்.. ஆதலால் வாயினால் வெறும் வரட்டு ஞானம் பேசித் திரிந்து வீண்பொழுது போக்காது இறைவனை மெய்யன்பினால் வழிபட்டு உய்யுநெறி தேடுதல் மாந்தர் கடன்.

பொ-ரை

வேதங்களை யுணர்ந்த பெரியோர்கள், பிறவியொழித்து வீட்டின்பத்தினை நல்கும் நித்தியராகிய எவரைக் கூறி வழிபடுகிறார்களோ அவர் மூப்பற்றவர், பழையவர், எல்லா ஆன்மாக்களும் தாமேயா யுள்ளவர், எங்கும் நிறைந்தவர். அவரை இவ்வண்ணம் நான் காண்கிறேன்.

நான்காமத்தியாயம்

மந்:
க

ய ஏகோ அவர்ணோ பஹுதா ஶக்தியோகாத்
வர்ணாநேகாந் நிஹிதார்த்தோ ததாதி/
விசைதி சாந்தே விஶ்வமாதௌ ஸ தேவ:
ஸநோ புத்யா ஶுபயா ஸம்யுநக்து//

இ-ள்

ய:- எவரொருவர், ஏக:- ஒருவராயுள்ளாரோ, அவர்ண:- வடிவ-முதலியன அற்றவரோ, நிஹிதார்த்த:- ஆன்மாக்களின் பொருட்டு, பஹுஶுதா சக்தியோகாத் - அனேக வகையான சத்தியின் சம்பந்தத்தினால், அநேகாந்வர்ணாந் - அனேக வடிவங்களை, ததாதி - தரித்துக் கொள்ளுகின்றாரோ. (யஸ்மின் - எவரிடத்தில்) விஶ்வம் - உலகமானது, ஆதௌ ஏதி - முதலில் தோற்றுகின்றதோ, ச அந்தே வி ஏதி - ஒடுங்குகின்றதோ, ஸ தேவ:- அவரே உலகிற்கு முதற்கடவுள், ஸ-அவர், ந:- எங்களை, புத்யா ஶுபயா ஸம்யுநக்து- நல்ல புத்தியோடு சேர்த்து வைப்பாராக.

கு.பு:(க)

"எவர் ஒருவரும், வடிவம் முதலியன அற்றவருமாயுள்ளரோ"

ஏக: என்னும் சொல் மேலும் பல இடங்களிலும் வந்துளது. இவ்வத்தி யாயத்தின் தொடக்கத்தில் அதன் பொருளைச் சிறிது விரித்துரை த்தல் பொருத்தமுடையதாகும். அதர்வசிர உபநிடதமானது பின்வருமாறு கூறுகின்றது: "இனி, சிவபெரு-மான் எதனால் ஒருவர் என்று சொல்லப்படுகின்றார், எதனால் எல்லா உலகங்களையும் படைத்துக் காத்து முடிவில் தம்மிடத்

தொடுக்கிக் கொள்ளு கின்றாரோ, அதனால் அவர் ஒருவர் என்று சொல்லப்படுகின்றார்.[1]

சங்காரத்தைச் செய்பவர் சிலவற்றை விடுத்துச் சங்கரிப்பரல்லர். அதுபற்றியே "சர்வசங்காரகாலத்தில் உருத்திரர் ஒருவர் தவிர இரண்டாவது பொருளுக்கு இருப்புக் கிடையாது. பிரமா, விட்டுணு சூரியன் சந்திரன் முதலிய பொருட்களும் சங்கரிக்கப்பட்டுப் போகின்றன"[2] என்று ஜபாலோபநிடதம் உரைத்தது. அதனால், ஒருவர் என்னும் சொல் சங்கார கர்த்தாவாகிய சிவபெருமான் ஒருவருக்கேயன்றிச் சங்கரிக்கப்பட்டொழியும் ஏனைக் கடவுளரு க்குச் செல்லாது.

"ஒருவனா யுலகேத்த நின்ற நாளோ"[3]
என்றும்

"ஒருகாலத் தொன்றாகி நின்றவடி"[4]
என்றும்,

"ஈறிலாதவ னீச னொருவனே"[5]
என்றும் அப்பர் சுவாமிகள் கூறியருளினார்.

"ஒருவனெனுமொருவன் காண்க"[6]
திருவாசகம் - திருவண்டப்பகுதி.

"வடிவம் முதலியன அற்றவன்"

அதனால் சிவபெருமானது சொரூப இயல்பு கூறப்பட்டது. சொரூப இயல்பாவது சத்தி காரியங்களைக் கடந்து நிற்கும் நிலை. அப்பர் சுவாமிகள் பின்வருமாறு கூறுவர்:

மண்ணல்லை விண்ணல்லை வலய மல்லை
மலையல்லை கடலல்லை வாயு வல்லை
எண்ணல்லை யெழுத்தல்லை யெரியு மல்லை
யிரவல்லை பகலல்லை யாவு மல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடு மல்லை.
பிறிதல்லை யானாயும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை
உணர்வரிய வொற்றியூருடைய கோவே[7]

நா- தேவாரம்.

ஆனாலும் பெரியோய் நீயே என்றது, அங்ஙனம் எவற்றையும் கடந்து நின்றாயாயினும், சத்தும் சடமுமாகிய உலகமெல்லாம் நீயாய் நின்றாய் என்றபடி.

"உண்ணல்லை", உயிரினுள்ளால் நின்று அவ்வுயிர்க்கு நலம் செய்வாய்.

சம்பந்த சுவாமிகளருளிய திருப்பாசுரத்தின் இரண்டாம் திருப்பாட்டில் வரும் பெரியர் என்னும் சொல்லிற்குச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு பொருள் கூறுவர்.

ஆயினும் பெரியரா வரென்பது
மேயயிவ் வியல்பே யன்றி விண்முதல்
பாயபூதங்கள் பல்லுயி ரண்டங்கள்
ஏயும் யாவு மிவர் வடி வென்றதாம்[8]

-பெரியபுராணம்.

கு.பு:(உ)
"ஆன்மாக்களின் பொருட்டு, அனேக வகையான சத்தியின் சம்பந்தத்தினால், வடிவங்களை தரித்துக் கொள்ளுகிறாரோ"

முன்னர்க் கூறியவாறு சத்தி காரியங்களைக் கடந்து நின்ற அவர் (அவர்ணம்) அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிளம்பாகிய பரமசிவம், ஆன்மாக்களின் பொருட்டு மாயையினின்றும் உலகினைத்தோற்றுவிப்பான், தமது அருட் சத்தியை முதலிற் தோற்றுவித்தருளுவர். அருட் சத்தியாவது அம்முதல்வன் உயிர்கள் மேற்கொண்ட கருணையேயாகும்.

அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
அருளு மவனன்றி யில்லை - யருளின்
றவனன்றே யில்லை யருட் கண்ணார் கண்ணுக்
கிரவிபோ னிற்குமர னேய்ந்து[9]

என்றது சிவஞானபோதம்.

கண்ணொளியுடையோர் சூரியனது ஒளியையும் அதன் முதலாகிய சூரியனையும் அவ்வொளியின் துணைக்கொண்டு காண்பது போல, அருட்கண்ணுடையோர் அருளையும், அதற்கு முதலாகிய சிவத்தையும் அவ்வருளொளிகொண்டே காண்பர்.

"இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்"[10]

என்னும் மணிவாசகத்தைச் சிந்தித்து உண்மை கண்டு தெளிக. எனவே அருட்கண்ணில்லாதார் (சைவ சித்தாந்தச் செந்நெறியுணராத பிறர்) சத்தியினுண்மை காணமாட்டார் தெருட்டியுங் கொள்ளவறியார். அது பற்றியே அவர் சத்தியென்பதற்கு (சடசத்தி யாகிய) பிரகிருதியென்று பொருளுரைத்துத் தடுமாறினர்.

சத்தியோடு கூடிய சிவத்தையே சுருதிகள் உமாஸஹாயர், உமாபதி அம்பிகாபதி என்றிங்ஙனம் பலவாறு புகழ்ந்து துதித்தன. தாயுமானப் பெருந்தகையாரும்,

"இடமொரு மடவா ளுல கன்னைக் கீந்திட்
டெவ்வுலகத்தையு மீன்றும்
தடமுறு மகில மடங்கு நா ளம்மை
தன்னையு மொழித்துவிண் ணெனவே
படருறு சோதிக் கருணையங் கடலே
பாயிருட் படுகரிற் கிடக்கக்
கடவனோ நினைப்பு மறப்பெனுந்திரையைக்
களைந்தெனை வளர்ப்பதுன் கடனே"[11]

என்றனர்.

சிவத்தற்கும் சத்திக்குமுளதாகிய சம்பந்தம் தாதான்மியமாகும். அஃதாவது ஒரு பொருளின் இருதன்மை. முதலிற்றோன்றிய அத்திருவருட்சத்தி "தடையிலா ஞானம்" எனப்படும் பராசத்தியேயாம். அதனொரு கூற்றானே, தடை செய்யும் ஞானமாகிய திரோதான சத்திதோன்ற அதனோடு கூடிய முதல்வனும் திரோதான சத்திவடிவமாயிருப்பன், இச்சா ஞானக் கிரியா சொருபமாய்ச் சத்தி வியாபரிக்குமிடத்து முதல்வனும் இச்சா ஞானக் கிரியா சொருபராயிருப்பன். இவ்வாறே மேலுங் கண்டு கொள்க.

இது பற்றியே,

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்

தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது பார்முதற் பூதம்[12]

என்னும் திருவாக்கு எழுந்தது.

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதல
மொன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை[13]
....

ஞா- தேவாரம்.

ஞானமே யான போது சிவன்றொழில் ஞானமொக்கின்
ஈனமில் சதாசி வன்பே ரீசனாந் தொழில் தேறின்
ஊனமேற் கிரியை வித்தை யுருத்திர னிலய போக
மானபேரதிகா ரத்தோ டதிகர ணத்த னாமே[14]

- சிவஞான சித்தியார்.

பொ-ரை

எவர் சத்திகாரியங்களைக் கடந்த சுத்தசைதன்ய நிலையாய சொருப வியல்புடையவரும், ஆன்மாக்களின் பொருட்டு ஐந்தொழில் புரியும் வண்ணம் அருட்சத்தி சம்பந்தத்தினால் அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூவகைத் திருமேனியாக வரும் பொதுவியல்புடைவராயுமுள்ளனரோ, அந்த ஒருவராகிய சங்கார காரணரே உலகிற்கு முதற்கடவுள்: அவர் எம்மை நன்னெறியில் வைப்பாராக.

ஒல்லையாறி யுள்ளமொன்றிக் கள்ளமொழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றனாம நாவின்நவின் றேத்த
வல்லவாறே வந்து நல்காய் வலிவல மேயவனே.[15]

ஞா - தேவாரம்.

மந்:
உ

ததேவாக்நிஸ் ததாதித்யஸ்தத்வாயுஸ்தத் சந்த்ரமா/
ததேவ ஶுக்ரம் தத்ப்ரஹ்ம ததாபஸ்தத் ப்ரஜாபதி://

இ-ள்

தத் ஏவ அக்நி:- அக்கினியு மவரே, தத் ஆதித்ய:- சூரியனுமவரே, தத்வாயு:- காற்றுமவரே, தத் உ சந்த்ரமா:- சந்திரனுமவரே, தத் ஆப:- தண்ணீருமவரே, தத் ப்ரஹ்ம - (இங்ஙனம் எவற்றினும் நிறைந்து எல்லாமாய் நின்றாராயினும் அனைத்திற்குமேலான) பிரமமுமவரே, தத் ப்ரஜாபதி:- அவரே ஆன்மாக்களுக்குப் தலைவராயுள்ளார்.

இருக்குவேதம் பின்வருமாறு கூறும்:

"உள்ள ஒன்றை அறிஞர்கள் இந்திரன் என்றும், மித்திரனென்றும், வருணனென்றும், அக்கினியென்றும், கருடனென்றும் யமனென்றும், வாயு வென்றும் பல நாமங்களினாற் கூறுவர்"[16] இருக்குவேதம்.

தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி அத்திசைக் கோர் தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகி
தாரகையும் ஞாயிறுந்தண் மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மையாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்றவாறே[17]

நா- தேவாரம்.

பொ-ரை

அக்கினி முதலிய பூதங்களும், சூரிய சந்திராதிகளுமவரே. அவற்றிற்கெல்லாம் மேலாய் நின்று உயிர்களை ஐந்தொழிற் படுத்துந் தலைவருமவரே.

மந்:

௩

த்வம் ஸ்த்ரீ தவம் புமாநஸி த்வம்
குமார உத வா குமாரீ/
த்வம் ஜீர்ணோ தண்டேந வஞ்சஸி
த்வம் ஜாதோ பவஸி விஶ்வதோமுக://

இ-ள்

த்வம் ஸ்திரீ- பெண்ணும் நீ, த்வம் புமாந் அஸி - ஆணும் நீ, த்வம் குமார:- குமாரனும் நீ, உத வா குமாரீ - அன்றியும்

குமாரியும் நீ, த்வம் ஜீர்ண தண்டேந வஞ்சஸி - தண்டோடு-திரியும் வயோதிபனும் நீ, த்வம் ஸர்வதோமுக: ஜாத: பவஸி - எங்கும் முகங்களை யுடைய சர்வியாபியாய்)த் தோற்றியவனும் நியாகவே ஆகிறாய்.

அப்பனீ யம்மைநீ யையனுநீ
யன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதரு மொண்பொருளுநீ
யொரு குலமுந் சுற்றமு மோரூரும்நீ
துய்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையாயெந் நெஞ்சந் துறப்பிப்பாய் நீ
யிப்பொனீ யிம்மணிநீ யிம்முத்துநீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வ நீயே[18]

நா- தேவாரம்.

பொ-ரை

பெண்ணுமாணும் முதலிய பேதத் தோற்றங்களனைத்தும் நீயே யாயினும், அத்தனைக்கும் வேறாய் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருள் நீயாகவே யிருக்கிறாய்.

மந்:
௪

நீல: பதங்கோ ஹரிதோ லோஹிதாக்ஷஸ்
தடித்கர்ப ருதவ: ஸமுத்ரா:/
அநாதிமத்த்வம் விபுத்வேந வர்த்தஸே
யதோ ஜாதாநி புவநாநி விஶ்வா//

இ-ள்

(த்வம்) நீல: ஹரித: லோஹிதாக்ஷ: பதங்க:- நீலப்பறவையும், பச்சைப் பறவையும் சிவந்த கண்ணுள்ள பறவையும் நீ, த்வம் தடித் கர்ப: ருதவ: ஸமுத்ர:- மேகமும் இருதுக்களும் சமுத்திரங்களும் நீ, விபுத்வேந வர்த்தஸே- வியாபகத் தன்மையினால் (இவ்வாறு) இருக்கிறாய், யத:- எதனால், விஶ்வா புவநாநி ஜாதாநி - எல்லாப் புவனங்களும் (உன்னிட-மிருந்து) தோற்றுகின்றனவோ, (தேந் - அதனால்) த்வம் அநாதிமத் - நீ தோற்றமும் இறுதியுமற்றவன்.

பொ-ரை
எப்பொருட்களும் தாமாயுள்ளவரும், எல்லாப் புவனங்களுந் தோன்றி யொடுங்குவதற்கு ஆதாரமாயுள்ளவருமாகிய சிவபெருமான் தோற்றமு மிறுதியுமில்லாதவர்.

மந்:
ரு

அஜாமேகாம் லோஹித ஶுக்லக்ருஷ்ணாம்
பஹ்வீ: ப்ரஜா: ஸ்ருஜமாநாம் ஸரூபா:/
அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோ அநுஸேதே
ஜஹாத்யேநாம் புக்தபோகாமஜோஅந்ய://

இ-ள்
லோஹித ஶுக்லக்ருஷ்ணாம் - செம்மை, வெண்மை, கருமை (ராஜதம், சாத்வகம், தாமஸமாகிய முக்குணங்களை) உடையவளும், ஸரூபா பஹ்வீ ப்ரஜா ஸ்ருஜமாநாம் - தன்னோடொத்த தோற்றமுள்ள பல பிரஜைகளைத் தோற்றுவிப்பவளும், அஜாம் ஏகாம் - பிறப்பற்றவளுமாகிய ஒருத்தியை, அஜ:ஹி ஏக:- பிறப்பற்றவனாகிய சீவான்மாவானவன், ஜுஷமாண: அநுஸேதே - விரும்பி யனுபவித்துக்கொண்டு பக்கத்தில் கிடக்கிறான், அஜ: அந்ய:- பிறப்பற்ற, (அனாதியாயுள்ள) மற்றொருவன் (பரமான்மா), புத்த போகம் சீவான்மாவினால் அனுபவிக்கப்பட்ட போகங்களை யுடைய, ஏகாம் - இந்தப் பிரகிருதியை, ஜஹாதி - உயிர்கள் பொருட்டு விட்டுவிடுகிறான்.

கு.பு:(க)
"செம்மை வெண்மை கருமை உடையவள்"

செம்மை இராசத குணத்தையும், வெண்மை சாத்விக குணத்தையும், கருமை தாமஸகுணத்தையும் குறிப்பன. முக்குணங்களும் சிறிதும் விளங்காது (அவ்வியக்கமாய்) சமப்பட்டு நிற்கும் நிலை பிரகிருதி. வியக்தம் - வெளிப்பட்டது. அவ்வியக்தம் - வெளிப்படாதது. பௌஷ்கர ஆகமம் பின்வருமாறு கூறும்: அவ்வியக்தாமாயுள்ள குணங்களின் காமியம் பிரகிருதி. வியக்தமாயுள்ள குணங்களின் காமியம் குணதத்துவம். [19]

கு.பு:(உ)
"தன்னோடொத்த தோற்றமுள்ள பல பிரசைகளைத் தோற்று விப்பவள்"

பிரகிருதி தன்னிடத்துத் தோன்றிய போக போக்கியப் பொருட்களிலும், அவற்றில் வீழ்ந்து போகம் நுகரும் உயிர்களிலும் குணவடிவமாய் இயைந்து நிற்கும்.

சிவஞானசித்தியார் பின்வருமாறு கூறும்
வருங்குண வடிவாய் மூலப் பிரகிருதி கலையிற் றோன்றித்
தருங்குண மூன்றாய் ஒன்றிற் றாமூன்றாய் மும்மூன்றாகும்
இருங்குண ரூப மாகி யியைந்திடு மெங்குமான்மாப்
பெருங்குண வடிவாயப் போக சாதனம் பெத்த மாமே[20]

கு.பு:(ங)
"பரமான்மா .... பிரகிருதியை
உயிர்களின் பொருட்டு விட்டுவிடுகிறான்"

இருவினையொப்பு மலபரிபாகம் வருவித்தற் பொருட்டு, இறைவன் உயிர்களைப் பிரகிருதி காரியங்களோடு சேர்த்து வினைப்பயன்களை ஊட்டிக் கழிப்பிப்பன் என்பது கருத்து.

கால்கொடுத்திருகை யேற்றிக் கழிநிறைத் திறைச்சிமேய்ந்து
தோல்படுத் துதிர நீராற் சுவரெடுத் திரண்டு வாசல்
ஏல்வுடைத் தாவ மைத்தற் கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார் மாமறைக் காடனாரே[21]
நா· தேவாரம்.

காரிட்ட வாணவக் கருவறையி லறிவற்ற
கண்ணில்லாக் குழவியைப் போற்
கட்டுண் டிருந்தஎமை வெளியில் விட்டல்லலாங்
காப்பிட்ட தற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்க வினை யமுதமூட்டிப்
பெரிய புவனத்திடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்
டேரிட்ட தன் சுருதி மொழிதப்பில் நமனைவிட்
டிடருற உறுக்கி இடர்தந்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில்

இசைந்து துயில் கொண்மினென்று
சீரிட்ட வன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே[33]

தாயுமானார்.

பொ·ரை

முக்குணவடிவாகிய பிரகிருதி (மாயை) அனாதி, நித்தமா யுள்ளது, உலகிற்கு முதற் காரணமதுவே. முதல்வன் அனாதியா யுள்ள ஆன்மாக்களை அதற்குரிய காரியங்களோடு சேர்த்து வினைப் பயன்களை ஊட்டுகின்றான்.

இம்மந்திரத்தில் பதி பசு பாசங்களின் அனாதி நித்தியத் தன்மையும், பதி பொருட்டன்மையினால் பசுக்களின் வேறானவன் என்பதும், முதலியன நன்கு தெளித்துரைக் கப்பட்டன. கீழ்வரும் மந்திரங்களும் இன்னோரன்ன கீழ்வரும் மந்திரங்களும் இன்னோ ரன்னவற்றை நன்கு வற்யுறுத்தும்.

இதனால், பிரமமே ஒரு காலத்தில் மாயையினால் மயங்கித் தன்னை மறந்து சீவனாயிற்று, சீவனென்றொரு பொருள் பிரமத்துக்கு வேறாயில்லை என்று கூறு மாயாவாத வேதாந்தம் கண்டித் தொதுக்கப்பட்டமை கண்டு கொள்க.

6, 7 மந்திரங்களுக்குரிய உரைப்பிரதிகள் கிடைத்தில.
மந்திரங்களைத் தமிழ் எழுத்துப் பெயர்ப்பில்
தருகின்றோம். (பதி.ஆ)

மந்:

சு **த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா**
ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ் வஜாதே/
தயோரந்ய: பிப்பலம் ஸவாத்வத்த்ய
நஸ்நந்யோ அபிசாகஸீதி//

மந்:

எ **ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோ (அ)**
நீஸயா ஷோசதி முஹ்யமாந:/
ஜுஷ்டம் யதா பஸ்யத்யந்யமீஸ
மஸ்ய மஹிமாநமிதி வீதஸோக://

மந்:
அ

ருசோ அக்ஷரே பரமே வ்யோமந்
யஸ்மிந் தேவா அதிவிஸ்வே நிஷேது:/
யஸ்தம் ந வேத கிம்ருசா கரிஷ்யதி
ய இத்தத் விதுஸ்த இமே ஸமாஸதே//

இ-ள்
ருச:- இருக்கு முதலிய வேதங்களின் (உண்மைப் பொருளாய), விஸ்வே தேவா அதி நிஷேது:- எல்லாத் தேவர்களும் பற்றியிருக்கின்ற, பரமே வ்யோமந் - பரமாகாயத்திலுள்ள, யஸ்மின் அக்ஷரே தத் - யாதொரு அழியாப் பொருளுண்டோ, அதனை, ய:ந, வேத - எவன் அறியவில்லையோ, (ஸ:- அவன்) ருசா - அந்த இருக்கினால், கிம் கரிஷ்யதி - என்ன செய்யப் போகிறான், யே- எவர்கள், தத் விது:- அதனை அறிகிறார்களோ, தே இத் - அவர்களே, இமே ஸமாஸதே - அறிந்த படி அதுவே யாகிறார்கள்.

கு.பு.
இருக்கு என்பது உபலக்கணம், எல்லா வேதங்களையும் கருதும்:

வேத மோதிலென் சாத்திரங்கேட்கிலென்[23]
நீதி நூல்பல நித்தம் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்
ஈசனை யுணர் வார்க்கன்றி யில்லையே [24] - நா- தேவாரம்.

வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தின்
ஓதத் தகுமற மெல்லா முளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதியே வீடுபெற்றார்களே[25]

- திருமந்திரம்.

"ஆகம உணர்ச்சி யில்லாதார் வேதத்தின் இருதயத்தை அறிய மாட்டார் என்பது குறிப்பு. இவ்வுண்மை தெரித்தற் பொருட்டே யசுர் வேதத்தைச் சார்ந்த அமிர்த நாதோப நிடதமும் ஆகமங்களுக்கு விரோதமின்றி ஊகிப்பதே தர்மமாம்" என்னும் பொருள் தோன்ற, ஆகமஸ்ய அவிரோதே தர்க்க உச்யதே என்று ஆகமங்களை எடுத்துப் புகழ்ந்து துதித்தது.[26]

திருவருட் செல்வராகிய தாயமானப் பெருந்தகையாரும்,

"..............................

.... வேதாக மத்துணி

பிரண்டில்லை யொன்றென்னவே"[27]

என்று கூறியருளினார்.

இவ்வாறாகவும் "ஆகமம்" என்னும் சொல்லிற்கு வேதம் என்று பொருந்தாப் பொருள் கூறி இடர்ப்பட்டார் பிறர்.

பொ-ரை

அருமறைச் சிரத்தின் மேலாம் சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத:துணின்று பொற்புடனடஞ் செய்கின்ற இறைவனை யறிந்து அவனிடத்தன்பு செய்யாதார். வேதங்களைப் படிப்பதனால் ஒரு பயனையுமடைய மாட்டார். அவனை யறிந்தன்பு செய்வோர் வேதங்களின் மெய்பொருளுணர்ந்தாராய் அவன் திருவடிப் பெரும்பேறு பெறுவர்.

மந்:

கூ சந்தாம்ஸி யஜ்ஞா: க்ரதவோ வ்ரதாநி
பூதம் பவ்யம் யச்ச வேதா வதந்தி/
அஸ்மாந் மாயீ ஸ்ருஜதே விஸ்வமேத
த்தஸ்மிம்சாந்யோ மாயயா ஸந்நிருத்த://

இ-ள்

சந்தாம்ஸி- சந்தங்கள், யஜ்நா:- யாகங்கள், க்ரதவ:- கிருதுக்கள் (சோம-யாகங்கள்), வ்ரதாநி - விரதங்கள், பூதம் - தோற்றியன, பவ்யம் - தோற்ற இருப்பன, யத் வேதா வதந்தி - இன்னும் வேதங்கள் எவற்றைச் சொல்லுகின்றனவோ, அவை, ஏதத் - விஸ்வம் - ஆகிய இவையனைத்தையும், மாயீ - மாயையை-யுடைய பரமேசுவர னானவர், அஸ்மாத் - உடைப்பொருளாகிய அந்த மாயையி லிருந்து, ஸ்ருஜதே - தோற்றுவிக்கிறார், தஸ்மிந் - அதிலே, அந்ய:- மற்றது (ஆன்மா), மாயையா ஸம்நிருத்த:- மாயையினாற் கட்டுண்டது.

பொ-ரை

சிவபெருமான் மாயையிலிருந்து எல்லா உலகங்களையும் தோற்றுவிக்கிறார். சீவான்மா அந்த மாயையினாற் கட்டுண்டு அல்லற்படுகின்றான்.

மந்:
கo

மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாந் மாயிநம் ச மஹேஶ்வரம் /
தஸ்யாவயவபூதைஸ்து வ்யாப்தம் ஸர்வமிதம் ஜகத் //

இ - ள்

மயாம் து ப்ரக்ருதிம் - மாயையைப் பிரகிருதி (உபாதான காரணம்) என்றும், மாயிநம் து மஹேஶ்வரம் - மயையை உடையவரை மகோசுவார் (நிமித்த காரணர்) என்றும், வித்யாத் - அறிதல் வேண்டும். தஸ்ய அவயவ பூதை: து - அவருடைய அவயவங்களி னாலேயே, இதம் ஸர்வம் ஜகத் வ்யாப்தம்- இந்த எல்லா உலகங்களும் வியாபிக்கப்பட்டது.

கு.பு.

மேற்கூறிப்போந்த மந்திரங்களினால் இறைவன் நிமித்த காரணன் என்பதும். உடைப்பொருளாகிய (அசேதன) மாயை முதற் காரணம் என்பதும், சேதனப் பிரபஞ்சமாகிய உயிர் அவ்விறைவனிலும் வேறாம் என்பதும், பதி, பாசம் பசு வாகிய இப்முப்பொருட்களும் தோற்றக் கேடுகளற்ற அனாதி நித்தப் பொருட்களே என்பதும், வியாப்பிய சம்பந்தம் பற்றிச் சிதசித்துப் பிரபஞ்சமும் இறைவனு மாகிய இரண்டிற்கும் வேதங்கள் அனந்நியத்துவம் ஒன்றாந் தன்மை) கூறின என்பதும் பிறவுமாகிய உண்மைகள் அரிதினுணர வேண்டாது தெரித்துரைக்கப்பட்டிருத்தலால் குறிப்பு ஒன்றும் எழுத-வேண்டா. இவ்வுண்மைகளோடு மாறுபட்ட கருத்துடையோர் வேதபாகியர் என்பது தெளிவு.

பொ - ரை

மாயை முதற் காரணம். அவர் சிதசித்துப் பிரபஞ்ச-மனைத்திலும் நீக்கமற நிறைந்து வேறின்றி யிருக்கிறார். இவ்வாறு அவரை அறிதல் வேண்டும்.

11 மந்திரத்துக்குரிய உரைப்பகுதிப் பிரதி கிடைக்கவில்லை. மந்திரத்தைத் தமிழ் எழுத்துப் பெயர்ப்பில் தருகின்றோம். (பதி.ஆ)

மந்:
கக

யோ யோநிம் யோநிமதி திஷ்டத்யேகோ
யஸ்மிந்நிதம் ஸர்வம் ச விசைதி ஸர்வம்/
தமீஶாநம் வரதம் தேவமீட்யம்
நிசாய்யேமாம் ஶாந்திமத்யந்தமேதி//

மந்:
கஉ

யோ தேவாநாம் ப்ரபவஶ்சோத்பவஶ்ச
விஶ்வாதிபோ ருத்ரோ மஹர்ஷி:/
ஹிரண்ய கர்பம் பஶ்யத ஜாயமாநம்
ஸநோ புத்யா ஶுபயா ஸம்யுநக்து //

இ - ள்
ய:- எவர், தேவாநாம் ப்ரவஸ்ச உத்பவ: ச - இந்திரியங்களின் ஒடுக்கத்திற்கும் தோற்றத்திற்கும் இடமாயுள்ளாரோ, விஶ்வாதிபோ - எல்லா உலகத்திற்கும் தலைவரும், மஹர்ஷி:- சர்வஞ்நருமாகிய மஹா ருத்திரோ, ஹிரண்யகர்பம் ஜாயமாநம் பஶ்யத-(எவர்) பிரமாவை முதலில் பிறக்கக் கண்டாரோ, ஸ - அவர், ந:- எங்களை, புத்யா ஶுபயா ஸம்யுநக்து - நல்ல புத்தியோடு சேர்ப்பாராக. இம்மந்திரம் முன்னும் வந்துள்ளது. குறிப்புரை பொழிப்புரைகளை ஆண்டுக் காண்க.[28]

மந்:
கங

யோ தேவாநா மதிபோ
யஸ்மிம்ஸ்ல்லோகா அதிஶ்ரிதா:/
ய ஈஶே அஸ்ய த்விபதஶ் சதுஷ்பத:
கஸ்மை தேவாய ஹவிஷா விதேம//

இ-ள்
ய: தேவாநாம் அதிப:- எவர் தேவர்களுக்குத் தலைவரோ, யஸ்மிந் லோகா அதிஶ்ரிதா: - எவரிடத்தில் (அறிவுள்ளவும் இல்லாதனவும் ஆகிய) உலகங்களனைத்தும் நிலை பெற்றிருக்கிறனவோ, ய: அஸ்ய த்விபத்: சதுஷ்பத: ஈஶே- எவர் இருகால் நாற்கால் பசுக்களை ஆளுகின்றாரோ, கஸ்மை தேவாய:- அவர்

பொருட்டன்றி வேறு எந்தத் தேவர் பொருட்டு, ஹவிஷா விதேம- அவி கொண்டு வழிபடுவோம்.

கு.பு.

வேதம் முதலிய கலைகளனைத்தும் சிவபெருமான் ஒருவரையே பசுபதி என்றும், ஏனைத் தேவர்களைப் பசுக்களென்றும் இவர்களுக் கதிபதி சிவபெருமானே என்றும் கூறுகின்றன. உதாரணங்கள் சில காட்டுவோம்.

இருக்கு வேதம்: எவர் விழிப்பனவும் தூங்குவளவுமாகிய உலகினுக்கு தமது தகைமையினாலே. ஒரு இராசாவாய் இருந்தாரோ, எவர் இருகாலும் நாற் காலுமுடைய (பசுக்களை) ஆளுகின்றோ, அவரையன்றி வேறு எந்தத் தேவர் பொருட்டு அவிசு கொண்டு வழிபடுவோம்[29]

நாற் காலு மிருகாலுமுடைய பசுக்களைப்
பசுபதியானவர் (சிவபெருமான்) ஆளுகின்றார்.[30]
யசுர்- ச-சா

யஞ்ஞத்துக்கு இராசாவாக, உங்களைக்
காக்கும் பொருட்டு உருத்திரரை நாடுக. [31]
இருக்கு.

பொ- ரை

தேவாதிதேவரும், உலகத்திற்கு ஆதாராமாயுள்ளவரும், அதி பதியுமாகிய சிவபெருமானை அவிசு கொண்டு வழிபடுவோம்.

மந்:

கச

ஸூக்ஷ்மாதிஸூக்ஷ்மம் கலிலஸ்ய மத்யே
விஶ்வஸ்ய ஸ்ரஷ்டாரமநேக ரூபம்/
விஶ்ஸ்யைகம் பரிவேஷ்டிதாரம்
ஜ்நாத்வா சிவம் ஶாந்திமத்யந்தமேதி//

இ- ள்

ஸூக்ஷ்மாதி ஸூக்ஷ்மம்-சூக்குமத்திலும் அதிசூக்குமா மாயுள்ள வரும், கலிலஸ்ய மத்யே - சிதாகாயத்தின் நடுவில், விஶ்வஸ்ய ஸ்ரஷ்டாரம் - உலகத்தின் சிருட்டிகர்தாவும், அநேக ரூபம் - அதற்பொருட்டு அனேக வடிவம் கொள்பவரும், விஶ்வஸ்ய

பரிவேஷ்டிதாரம்- உலகமெங்கணும் நிறைந்திருப்பவருமாகிய, ஶிவம்- சிவபெருமானை, ஜ்நாத்வா - அறிந்து, அத்யந்தம் ஶாந்திமேதி - பரிபூரணமான சாந்தியைப் பெறுகின்றான்.

கு.பு:(க)
"சூக்குமத்திலும் அதிசூக்குமாயுள்ளார்"
(நூறுகோடிப் பிரமாணமுள்ள) பிருதிவி முதல் குணதத்துவம் வரை ஒன்றினொன்று பத்துமடங்கு சூக்குமமும் வியாபக-மாயுள்ளன என்றும், குணதத்துவ முதல் அசுத்த மாயைவரை ஒன்றினொன்று நூறு மடங்கு வியாபகமாயுள்ளன என்றும், அசுத்த மாயை முதல் சாதாக்கியம் வரை ஒன்றினொன்து ஆயிரம் மடங்கு வியாபகமா யுள்ளன என்றும், சத்திதத்துவம் சாதாக்கிய தத்துவத்திலும் இலட்சமடங்கு வியாபகம் என்றும், இதற்கு மேல் சிவதத்துவத் தினராகும் நடராச மூர்த்தியின் வியாபகம் அளப்பரிது (மனோலய மாயுள்ளது) என்றும் மதங்கம் என்னும் ஆகமம் கூறுகின்றது.[32] (பிரமாண படலம் நாற்பதாவது செய்யுள் முதல் பார்க்க)

ஆனந்த நடராச மூர்த்தியானவர் துவாதசாந்தத்திற்கு மேலுளராகலின் அவர் அதிசூக்கும் வடிவவினர் என அறிகின்றார்கள் என்றது காரணாகமம்.[33]

நூலுணர்வறியா நுண்ணியோன் காண்க[34]
- திருவாசகம்

கு.பு:உ
"சிதாகாயத்தின் மத்தியில்" ஈண்டுச் சிதாகாயம் என்றது சிவசத்தியை. பின்வரும் கூர்மபுராண வசனத்தை நோக்குக. "யதொருவருடைய பரமதேவியாகிய சத்தியானவர் ஆகாச மெனப் பெயர் படைத்தார்" கூர்ம. உத்தர. கூஉம் அத்தி.

யாதோர் வடிவமுமற்ற சிவபெருமான் சத்தி சமபந்தத்தினால் அனேக வடிவங் கொள்வா ரென்பதை அவ்வத்தியாயத்தின் முதலாம் மந்திரத்திலும், நிமித்த காரணராகிய சிவபெருமான் செய்யும் கிருத்தியங்கட்குத் துணைக்காரனமாயுள்ளது சிவசத்தியேயாம் என்பதனை மூன்றாம் அத்தியாயத்து க, உ ம் மந்திரங்களிலும் காண்க.[35]

அதர்வசிரவுபநிடதம் பின்வருமாறு கூறுகின்றது:
"இனி சிவபெருமான் எதனால் ஈசானர்" எனப்படுகின்றார். ஆளுவனவும் தோற்றுவிப்பனவுமாகிய பலசத்திகளினால் இவ்வுலகமனைத்தையும் மாளுகின்றாரோ அதனால் அவர் ஈசானர் எனப்படுகின்றார்.[36]
இக்கருத்துப்படவே,
"உடையா ளுன்றனடுவிருக்கு முடையாணடுவு ணீயிருத்தி"[37]
என்று திருவாசகத் திருமறை செப்பியது.

கு.பு:(உ)
"உலக சிருஷ்டியின் பொருட்டு அநேக வடிவங் கொள்பவர்"
இவ்வியல்பு முன்னர் விளக்கிக் கூறப்பட்டது.

கைவல்ய உபநிடதம் பின்வருமாறு கூறும்.
"சிந்தனைக் கெட்டாதவனும், அதிசூக்குமனும் [38]
அநேக வடிவினனும் சிவனும் ஏகனும்"

- (கை. - சு)

"ஏக னனேக னிறைவ னடி வாழ்க" [39]

திருவாசகம் - சிவபுராணம்

சிவஞசத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழும் மீசன்
உவந்தருளுருத்திரன்றான் மாலயனொன்றி னொன்றாயப்
பவந்தரு மருவம் நாலிங் குருவநாலுபய மொன்று
நவந்தரு பேதமேக நாதனே நடிப்பனென்பர் [40]

சிவஞானசித்தி.

" ஸ்திரமாகிய அங்கங்களோடு பல முடையர்" [41]

இருக்கு 2, 93, 9

இவற்றால் "ஒருவர்" என்று கூறப் படும் சிவபெருமான் ஐம்பெருந் தொழில் செய்யும் பொருட்டும், அன்பர்கள் தம்மை வழிபடும் பொருட்டும் பல அருட்கோலங்கள் கொள்ளுவார் என்பது வேதசி- வாகமவாதி சகல கலைகளுக்கும் மொத்தத் துணிபாமென் றேற்பட்டது.

பொ - ரை
சூக்குமத்திலும் அதிசூக்குமமாயுள்ளவரும், சத்தி சம்பந்தத் தினால் அனேக வடிவங் கொண்டு உலகினை ஐந்தொழிற் படுத்துபவரும் எங்கும் நிறைந்திருப்பவருமாகிய சிவபொருமா

னைச் சுவானுபவமாக அறிந்து என்றும் விட்டு நீங்காத சிவானந்தப் பெருவாழ்வைப் பெறுகின்றான்.

மந்:
கரு

ஸ ஏவ காலே புவநஸ்ய கோப்தா
விம்வாதிப: ஸர்வபூதேஷு கூட:/
யஸ்மிந் யுக்தா ப்ரஹ்மர்ஷயோ தேவாதாஸ்ச
தமேவம் ஜ்நாத்வா ம்ருத்யு பாஸாம்ஸ் சிநத்தி//

இ - ள்

ஸ ஏவ- அவரே, காலே புவநஸ்ய கோப்தா - (எக்) காலத்திலும் உலகத்தைக் பாதுகாக்கின்றார், விம்வாதிப:- உலகத்திற்குத் தலைவராயுள்ளார், ஸர்வ பூதேஷஷு கூட :- சித்தும் சடமுமாகிய எப்பொருட்களுள்ளும் மறைந்திருக்கின்றார், யஸ்மிந் - அத்தகையவரிடத்தில், ப்ரஹ்மர்க்ஷய: தேவதா: யுக்தா- பிரமரிஷிகளும் தேவர்களும் இயைந்திருத்தார்கள், தமேவ ஜ்நாத்வா - அவரையே அறிந்து, மருத்யுபாஸாந் சிநத்தி- ஆணவம் முதலிய பாசங்களைச் சேதிக்கின்றான்.

விம்வாதிக என்றும் பாடம்.

அஸ்ஙனமாயின் உலகத்திற்கு அதீதமாயுள்ளார் என்க.

கு.பு:க

மருத்யு என்னும் சொல் ஆணவமலத்தையே குறிக்கு மென்பதனை மிருதேந்திராகமம் லட்சணப் பிரகரணத்தில், பமூத்வ நீஹாரம் ம்ருத்யுமுச்யதே என்னும் ஆணவமலத்தின் பெயர்கள் கூறப்பட்டி ருக்கும். ஏழாம் சுலோகத்திற் காண்க. [12]

கு.பு:உ

(எக்) காலத்திலும் உலகத்தைக் காப்பவர்
சங்காரகாலம் வரைக்கும் உலகங்களை நிலைபெறச் செய்பவர் என்பது கருத்து

கு.பு:ங

உலகத்திற்கு அதீதமாயும், அதாவது உலகினைக் கடந்தும், உலகத்திற்கு உள்ளாய் மறைந்தும் இருப்பவர். இக் கருத்து பற்றியே சிவபெருமானைக் கடவுள் (கட -உள்) என்பர்.

கடவுளுக்கு இவ்வியப்பு கூற அறியாது "அத்தேவர் தேவர் அவர் தேவரென் றிங்கன் பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற புறமத்தார் சிலர் சைவர்களைப் பார்த்து தாமும் தம்தெய்வத்தைக் கடவுள் என்பர். அங்ஙனமாயினும் உயிர்களுக்கு இன்பம் செய்பவர் - மங்களகர மாயுள்ளவர் என்னும் பொருளில் வரும் "சிவ" நாமம் கூற மறுப்பர். அஃது அவர் தீய வினைப் பயன் போலும். அவர் தமது சமயத் தெய்வத்தை சிவத்திற்கு வேறானது அசிவம் - துன்பம் செய்வது அமங்கலமாயுள்ளது என்று கருதுகின்றார் கொல்

கு.பு:ச
"உலகத்தினுள்ளாய் மறைந்திருப்பவர்" என்பதனால், உயிர்களின் உள்ளிருந்து பிரேரிப்பவராயினும் பாசஞான, பசு ஞானங்களினால் சுட்டியறிய முயல்வார்க்கு அகப்பட்டாதவர் என்று குறிப்பித்த படியாம்

பொ - ரை
உலகினை எக்காலமும் காப்பவரும் உலகிற்கு அதிபதியும், அதாவது உலகிற்கு அப்பாற்பட்ட வரும். உலகினுள் மறைந்திரு ப்பவரும், பரம இருடிகளும் தேவர்களும் இயைந்திருப்பதற்கு இடமாயுள்ளவரும் ஆகிய சிவபெருமானை யறிபவன், ஆணவம் முதலிய பாச பந்தங்களி னின்று விடுபடுகின்றான். விடுபட்டு (மேல் மந்திரத்திலுள்ள) என்றும் விட்டு நீங்காத சிவானந்தப் பெரு வாழ்வைப் பெறுகின்றான் என்று கூட்டி முடிக்க.

மந்:
கரு

க்ருதாத் பரம் மண்டமிவாதிஸூக்ஷ்மம்
ஜ்ஞாத்வா ஶிவம் ஸர்வபூதேஷுகூடம்/
விஶ்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம்
ஜ்ஞாத்வா தேவம் முச்யதேஸர்வபாஶை://

இ - ள்
க்ருதாத் பரம் மண்டம் இவ - நெய்யின் தெளிவு போல, அதிஸூக்ஷ்மம் - அதிசூக்குமமாய், ஸர்வபூதேஷு கூடம் - (சித்தும் சடமுமாகிய) எல்லாப் பொருட்களிலும் மறைந்திருக்-

கின்ற, ஶிவம் ஜ்ஞாத்வா - சிவபெருமானை யறிந்து (சிவதரிசனம்), விஶ்வம் ஏகம் பரிவேஷ்டிதாரம்- எல்லாப் பொருட்களிலும் ஒருவராய்ச் சூழ்ந்திருக்கின்ற, தேவம் ஜ்ஞாத்வா - தேவனை யறிந்து, ஸர்வ பாஶை: முச்யதே - எல்லாம் பாசங்களிலிருந்தும் விடுபடுகிறான்.

கு.பு:(க)
இம்மந்திரத்தில் சிவபெருமானை யறிந்துதேவனை யறிந்து என்றிரண்டு வினையெச்சங்கள் விடுபடுகின்றான் என்ற ஒரு வினை கொண்டு முடிந்தன. அவற்றுள் முன்னையது தசகாரியத்துள் சிவதரிசனத்தையும், பின்னையது அதற்கு ஏதுவாய் முன்னிகழும் சிவரூபத்தையும் குறித்தன.

கு.பு:(உ)
"சித்தும் சடமாகிய எப்பொருட்களிலும் மறைந்திருக்கின்ற சிவபெருமானை யறிந்து"

மறைந்திருத்தல் - பாசஞான பசுஞானங்களினாலறிய முடியாதது. (இது முன்னும் காட்டப்பட்டது) பாச ஞானமாவது சொல்லும் பொருளுமாகிய இருவகைப் பிரபஞ்சங்களின் வாயிலாய் நிகழும் ஞானம். பசுஞானமாவது பாசக் கூட்டங்களி னின்றும் நீங்கித் தாம் பிரமங்கண்டவர் போற்றமைக் கண்டாங்கதுவே நான் பிரமம் என்று செருக்கிற்றெழும் ஞானம். இது சுட்டறிவு எனவும் படும்.

சுட்டறிவினாலறியப்படுவது அவ்வறிவிற்கு வேறாயுள்ள ஏகதேசப் பொருளேயாதலின், அவ்வியல்பு கடந்தவன் சுட்டறிவிற்கு விடயமாதலில்லை. இவ்வுண்மை தோன்றவே அசிந்த்யன் என்று உபநிடதங்கள் கூறின.

பாச ஞானத்திற்கு எட்டாதவன் என்பதை அகிருஹ்யன் என்னும் சொல்லால் விளக்கின. அக்ருஹ்யன் சொற்பொருளுக்கு எட்டாதவன்.

அங்ஙனம், இவ்விருவகை ஞானங்களினாலும் அறிய முடியாத முதல்வனை அருள்ஞான மொன்றானே அவனோடொற்றித்து நின்றுணர வேண்டுமென்பாராய், மறைந்து நின்ற சிவபெரு-மானை யறிந்து என்று விதந்தெடுத்துக கூறினார்.

ஒற்றித்து நின்றறிதலாவது முதல் பெத்தத்தில் உயிருக்கு அந்தர்யாமியாய் நின்று கண்டு காட்டி யுபகரிப்பவனாயினும், முதல்வனென்றொரு பொருளில்லை யெனும்படி, உயிரினுள் மறைந்திருந்தாற் போல், கருவி காரணங்கணீங்கிய உயிர், தன் செயல் யாண்டும் தோன்றாத வண்ணம் அருளிலழுந்தி வேறற நின்றுணர்தல்.

அவனே தானே யாகிய வந்நெறி
ஏகனாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே [43]
என்றது சிவஞானபோதம்.

அகனமர்ந்த வன்பினராயறுபகை செற்
றைம்புலனு மடக்கி ஞானப்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர் கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணஞ் செய்யும் மிழலையாமே[44]

ஞா-தேவாரம்

புள்ளுவரைவர் கள்வர் புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறி விளைய வொட்டார்
முள்ளுடையவர்கள் தம்மை முக்கணான் பாத நீழ
லுள்ளிடை மறைந்து நின்றங் குணர்வினா லெய்யலாமே[45]

நா - தேவாரம்

உயிர் சுட்டறிவு நிகழ்தற் பொருட்டுத் தன்னாற்சாரப்பட்ட கருவி கரணங்களை உண்மையில் விட்டு நீங்குமாயின், அருளிலமிழ்ந்து மேயன்றித் தனித்து நிற்றல் எந்ஞான்றுமில்லை. நிற்குமாயின் கேவலத்தில் அல்லது மீண்டும் சகலத்தில் வீழும், கருவிகளைப் பொருந்திக் கொண்டு, நீங்கி விட்டதாக என்னுதல் பெருமயக்கின் பயனே யன்றிப் பிறிதில்லை. இவ்வுண்மை விளங்கவே ஞானப்புக லுடையோர் என்றும், முக்கணான்பாத நீழலுள்ளிடை மறைந்து நின்று என்றும் திருவாக்குகள் எழுந்தன. இவ்வாற்றால், இஃது சிவதரிசனத்தைக் குறிக்குமென்று முன்பு கூறினோம். [46]

பரையுயிரில் யானெனதொன் றநின்ற தடியாம்
பார்ப்பிடமெங் குஞ்சிவமாய்த் தோன்றவது முகமாம்
உரையிறந்த சுகமதுவே முடியாகுமென்றங்
குண்மையினை மிகத்தெளிந்து பொருள் வேறொன்றித்
தரைமுதலிற் போகாது நிலையினில் நில் லாது
தற்பரையினின்றமுந்தா தற்புதத்தினாகும்.
தெரிவரிய பரமானந் தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தரிசனமாய்ச்
செப்புங்காலே [47]

-உண்மைநெறி விளக்கம்

சிவதரிசனத் தோடுடனிகழ்வது ஆன்மசுத்தி. ஆன்ம சுத்தியாவது, பாசக் கூட்டங்களை விட்டு நீங்கிய ஆன்மா, தன்செயலிழந்து போக, அருளிலழுந்தி வேறற நின்று அதுவே தானாய் நிற்றல்.

கு.பு:(ந)

"எப்பொருட்களிலும் ஒருவராய்ச் சூழ்ந்து நிற்கின்ற தேவனை யறிந்து"

கருவி கரணங்களைச் சார்ந்து அவற்றினியல்பே தன்னியல் பாய்க் கொண்டு நின்ற உயிர், அது கருவிகளினியல்பே யன்றித் தன்னியல்பன்றென்றும் தன்னியல்பு அதனினும் வேறென்றும் அருளாலறிந்து, அக்கருவிகளை விட்டு நீங்கித் தன் உண்மையி யல்பினை உள்ளவாறுனர்ந்தால், தன்னிடத்தில் முதல்வன் விளங்கித் தோன்றக் காணலாகும். அவ்வாறு விளங்கித் தோன்றும் முதல்வனே தன்னாற் சாரப்பட்ட கருவிகளிலும், அவற்றாலறி யப்படும் புறப்பொருட்களிலும் நிறைந்து நின்று, தனக்கு வினைப் பயன்களை யூட்டி யொழித்து உபகரிப்பவன் என்றறிதல் வேண்டும் என்றுணர்த்தவே, எப்பொருட் களிலும் ஒருவராய்ச் சூழ்ந்து நிற்கின்ற தேவனை யறிந்து என்று விதந்து கூறினார். இஃது சிவரூபத்தைக் குறிக்குமென்று முன் கூறினோம். சிவரூபத்தி னியல்பு:

எவ்வடி வுகளுந்தானா மெழிற்பரை வடிவதாகிக்
கவ்விய மலத்தான் மாவைக்கருதியே ஒடுக்கி ஆக்கிப்
பவ்வமீண்டகலப் பண்ணிப் பாரிப்பானொருவ னென்றே
செவ்வையே உயிருட்காண்டல் சிவரூபமாகுமன்றே [48]

- உண்மை நெறிவிளக்கம்

சிவரூபத்தினிகழ்வது ஆன்ம தரிசனமாம். ஆன்ம தரிசனமாவது தான் சார்ந்து நின்ற கருவி காரணங்கள் தானல்ல வென்றும், தன்னுடையனவல்ல வென்றும் அருளாலறிந்து, ஆன்மா தான் சுதந்திரனல்லவென்றும், தனக்கறிவித்து நிற்பது திருவருளே யென்றுமுணர்ந்து அவனருளோடு கூடி நிற்றல். இதனுள் தத்துவசுத்தியும் நிகழுமாறு கண்டு கொள்க.

பொ - ரை

நெய்யின் மேலுள்ள தெளிவு போல் அதிசூக்குமமாய், சித்தும் சடமுமாகிய எப்பொருட்களிலும் மறைந்திருப்பவரும் உலகினை யொருவராய்ச் சூழ்ந்திருப்பவருமாகிய சிவபெருமானை யறிந்து எல்லாப் பாசங்களிலுமிருந்து விடுபடுகிறான்.

மந்:
கஎ

ஏஷதேவோ விஶ்வகர்மா மஹாத்மா
ஸதா ஜநாநாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட:/
ஹ்ருதா மநீஷா மநஸா அபிக்ல்ப்தோ
ய எதத் விதுரம்ருதாஸ்தே பவந்தி//

இ - ள்

ஏஷ தேவ: - இந்தத் தேவர், விஶ்வகர்மா- உலகமனைத்தையும் ஆக்கியவர், மஹாத்மா - பரமான்மாவாயுள்ளவர், ஸதா ஜநாநாம் ஹ்ருதயே ஸம்நிவிஷ்ட:- எப்போதும் சீவர்களுடைய இருதயத்தில் இருப்பவர், ஹ்ருதா- அவரிடத்துச் செய்யும் மெய்யன்பினாலும், மநீஷா மநஸா- (அம்மெய்யன் பினாலுளதாகும்.) அவரது திருவருட் பிரசாதத்தோடு கூடிய தியானத்தினாலும், அபிக்ல்ப்தோ - (ஆன்மாவாகிய தன்னிடத்தில்) அறியப்படுகிறார், யஏதத் விது:- எவர்கள் இவ்வாறு அறிகிறார்களோ, தே அம்ருதா: பவந்தி- அவர்கள் சிவமாக ஆகிறார்கள்

கு.பு:(க)

மேல் மந்திரத்திற் கூறிய வண்ணம் அதிசூக்குமமாய் எப்பொருட்களிலும் மறைந்திருப்பவரும் எங்கும் நிறைந்திருப்பவருமாகிய சிவபெருமானை யறிவதெவ்வண்ணம் என்றெழுந்த ஆசங்கைக்கு, அவர் ஆன்மாவை எக்காலமும் விட்டு நிங்காது உண்ணின்று செலுத்துபவர் ஆதலால், அவரது திருவருள்

ஞானத்தினால் அவ்விடத்தில் அவரை வேறற நின்றறியலாம் என்று இம்மந்திரத்தினால் ஆசங்கை நீக்கியவாறாயிற்று,

குு.பு:(உ)

"அவரை இவ்வாறு அறிபவர்கள் சிவமாக ஆகிறார்கள்"

அங்ஙமைறிபவர்க்கு மலபந்தம் நீங்கியவதனால் வியாபக அறிவு தலைப்பட்டுச் சிவமாந் தன்மையைப் பெறுவர். இது ஆன்ம சுத்திப் பயன் கூறிற்று. ஆன்ம சுத்தியினியல்பு மேலுரைத்தாம். அதன் பயன் பசுத்துவ நீக்கமும் வியாபக அறிவு தலைப்படுத்தலுமாம். இவற்றின் காரண காரியத்தன்மையும் பிறவும் விளக்கப்புகின் மிக விரிந்து விடுமென்றஞ்சி விடுகின்றோம். சைவசித்தாநத நூல் வல்லார் வாய்க் கேட்டுணர்க.

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற்றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நியல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே [49]

- திருவாசகம்

இந்நிலை தன்னில் மன்னி எய்திடுங் கலாதி போதம்
தன்னளவறிந்து நிற்குந் தகவிலா மலங்கள் நீத்த
அந்நிலை கரணமாகா வகையதிலறிவடங்கி
மன்னிட வியாபியாய வான்பயன் தோற்று மன்றே[50]

- சிவப்பிரகாசம்

பொ-ரை.

உலகமனைத்தையும் ஆக்கியவரும், ஆன்மாக்களிடத்து அந்தர்யாமியாயிருந்து நியமிக்கும் பரமான்மாவாகியவருமாகிய சிவபெருமானை அவரது அருள்ஞானத்தினாலே தம்மிடத்தில் காண்பவர்களே சிவமாக ஆகின்றார்கள்.

மந்:
கஅ

யதாஅதமஸ் தந்ந திவா நராத்திரி:
நஸந்ந சாஸச்சிவ ஏவ கேவல:/

ததக்ஷரம் தத் ஸவிதுர்வரேண்யம்
ப்ரஜ்ஞா ச தஸ்மாத் ப்ரஸ்ருதா புராணீ//

இ - ள்
யதா அதமஸ் ந- எப்பொழுது இருள் உள்ளதோ, தந் நதிவா நராத்ரி:- பகலுமில்லை இரவுமில்லை, நஸத் ந அஸத் - சத்து மில்லை அசத்துமில்லை, ஶிவ ஏவ கேவல:- சிவபெருமான் ஒருவரே உளர், தத் அக்ஷ ரம்- அவர் ஆதியுமந்தமுமற்றவர், தத் ஸவிது: வரேண்யம் - அவர் சூரிய மண்டலத்தின் மத்தியிலுள்ள முக்கிய பொருளாவர், தஸ்மாத் - அவரிடமிருந்து, புராணீ - பழமையான, ப்ரஜ்ஜா - பிரஞ்ஞை எனப்படும் பராசத்தியானவர், ப்ரஸ்ருதா- தோற்றினார்

கு.பு:(க)
"எப்பொழுது இருள் உள்ளதோ............ அப்பொழுது சிவபெருமான் ஒருவரே இருந்தார்"

இருள் என்றது மகாசங்காரகாலத்தை. சத்து அசத்து என்பன பசு பாசங்கள். உலகமனைத்தும் சங்கரிக்கப்பட்ட டொழிந்தபின் சூரியன் முதலியன இன்மையால் பகலிரவு என்ற காலவேறுபாடும் பசுபாசங்களின் வியத்திநிலையுமற்று இருண்மயமாயிருந்த அந்தக் காலத்தில் ஆதியுமந்தமுமில்லாத சிவபெருமான் அருட்சத்தியையும் தம்மிடத் தொடுக்கிக்கொண்டு ஒருவராகவே இருந்தார். அஃதாவது சேதனாசேதனப் பிரபஞ்ச மனைத்தும் (பிரமா, விட்டுனு முதலிய காரணமூர்த்திகளுட்பட) அவரிடத்திலே யொடுங்கி யிருந்தது என்பது கருத்து.

இருக்குவேதம் க0வது மண்டலம், கஉக- உ, சு வது மந்திரங்கள் "அப்பொழுது (மகாகார காலத்தில்) அசத்துமில்லை சத்துமில்லை மிருத்யுவுமில்லை, அமிருத்யுவுமில்லை, இராப்பகலின் ஞானமுமில்லை, இருளிருந்தது என்று கூறின. [51]

முண்டகம் உ -உ-ரு:-
எவரிடத்தில் சுவர்க்கம், பூமி, அந்தரிட்சம் ஆகிய உலகங்களும், எல்லாப் பிராணன்களும் மனமும் கோர்க்கப்பட்டிருந்ததோ, (ஒடுங்கி) அவர் ஒருவரையே பரமான்மாவாக அறியுங்கள். இதற்கு மாறுபட்ட வார்த்தைகளை விடுங்கள். அவர் ஒருவரே மோட்சத் திற்கு வழியாகின்றார் என்றது[52]. தமிழ்வேதப் பிரமாணங்கள் முன்னரே காட்டப்பட்டன.

கு.பு:(உ)

"அவரிடமிருந்து ப்ரக்ஞ்ஞை எனப்படும் பழைய பராசத்தி தோன்றினார்".

ப்ரக்ஞ்ஞை என்பது பராசத்தியின் பெயராதல் வாயுசம்மிதை முதலியவற்றுட் காண்க. இது முற்கூறியவாறு சிவபெரமானிடம் ஒடுங்கியிருந்த உலகம் அவரிடமிருந்து மீளத்தோன்று முறையினை யுணர்த்திற்று. பராசத்தியென வாளா கூறாது பழைய பராசத்தி" என அடைகொடுத்தோதியவதனால் முன்னர் ஒடுக்கிய அடைவே மீளவுந் தோற்றுவித்தருளுவர் என்று குறிப்பித்தவாறு, இவ்வத்தியாயத்தின் முதலாவது மந்திரத்தில் "ஒரு வடிவமு மில்லாத ஒருவராகிய தேவர் உலக சிருட்டியின் பொருட்டுப் பலவகையாய் விரியும் சத்தியின் சம்பந்தத்தினால் பல வடிங்களைக் கொள்ளுகின்றார்" என்றுரைத்திருப்பதை இங்கு இயைத்துக் காண்க.

பொ - ரை

எப்போது இருள் உள்ளதாய்ப் பகலுமிரவுமின்றி சத்துமசத்துமின்றி யிருந்ததோ அப்போது சிவபெருமான் ஒருவரே யிருந்தார், அவர் ஆதியந்த மற்றவர். சூரிய மண்டலத்தின் மத்தியிலுள்ள முக்கியப் பொருளாவர், அவர் உலகினை முன்போலத் தோற்றுவிக்கக் கருதித் தம்மிடந்தொடுக்கி வைத்திருந்த கருணை வடிவாகிய பாாசத்தியை முதலில் தோற்றுவித்தருளினர். இவ்வுபநிடதத்தின் முதலாமத்தியாயத்து முதலாம் மந்திரத்திலெழுந்த உலகத் திற்குக் காரணமாகிய பிரமம் யாது" என்பது முதலிய விருக்களு க்குரிய விடைகள் இம்மந்திரத்தில் நன்கு தெளித்துரைக் கப்பட்டன.

மந்:
கக

நைநமூர்த்வம் ந த்ரியஞ்சம் ந
மத்யே பரிஜக்ரபத்/
ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி யஸ்ய
நாம மஹத் யஶ://

இ -ள்

எநம் - இவரை, ஊர்த்வம்- மேலாயினும், த்ரியந்சம் - கீழாயினும், மத்யே - நடுவிலாயினும், ந பரியக்ரபத் - எவராலும் அளந்தறிய

முடியாது, யஸ்ய நாம மஹத் யஶ:- - எவருடைய திருநாமம் மகத்தானதாயுள்ளதோ, தஸ்ய ப்ரதிமா ந அஸ்தி - அவருக்கொப்பானவர் ஒருவருமில்லை.

பொ - ரை

சிவபெருமானை அறிபவரில்லை, அவருக்கொப்பானவருமில்லை.

மந்:
உ0

ந ஸம்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய
ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம் /
ஹ்ருதா ஹ்ருதிஸ்தம் மநஸா யஏன
மேவம் விதுரம்ருதாஸ்தே பவந்தி//

இ - ள்

அஸ்ய ரூபம் - இவருடைய வடிவமானது, ஸம்த்ருஶே ந திஷ்டதி - கண்ணிருல் காணக்கூடிய இயல்புடைத்தன்று, (ஆதாலால்) ஏனம் - இவரை, கஶ்சன - ஒருவனும், சக்ஷுஷா நபஶ்யதி - கண்ணாற் காணமாட்டான், யே - எவர்கள், ஏனம் - இவரை, ஹ்ருதாமநஸா- பத்தியோடு கூடிய மனதினால், ஹ்ருதஸ்தம்ஏநம் விது:- இருதய குகையிலுள்ளவராக அறிகிறார்களோ, தே- அவர்கள், அம்ருதா பவந்தி - சிவமாக ஆகிறார்கள்.

சில பதிப்புகளில் "ஹ்ருதா மநீஷா மநஸா" என்ற பாடம் காணப்படுகின்றது அதன் பொருள் முன்னரே (இவ்வத்தியா யத்துப் பதினேழாம். மந்திரம் முதலிய இடங்களில், உரைக்கப்பட்டது. கண் என்ற உபலக்கணத்தால் வாக்கு முதலிய ஏனைக் கருவி கரணங்களும் தழுவப்பட்டன.

கேநோபநிடதம் பின்வருமாறு கூறும்:

அவரிடத்துக் கண் செல்லாது, வாக்கு செல்லாது. ஆதலால் அவரை நாம். அறிகிலோம்: அவரை சீடனுக்கு எவ்வாறு உபதேசிக்கலாம் என்பதை அறியோம். [53]

பொ -ரை

சிவபெருமானுடைய வடிவம் கண் முதலிய இந்திரியங்களால் சுட்டியறியக் கூடாததாகலின், அவரை அவ்விந்திரியங்களால்

அறிபவர் ஒருவருமில்லை, மெய்யன்பினால் தம்மிடத்தே காண்பார், சிவமாகிறார்கள்.

"அன்போடுருகி யகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை யெய்தவொண்ணாதே[54]
- திருமந்திரம்

மந்:
(உக)

அஜாத இத்யேவம் கஶ்சித் பீரு: ப்ரபத்யதே/
ருத்ர யத்தே தக்ஷிணம் முகம் தேந மாம்
பாஹி நித்யம்//

இ-ள்

அஜாத இதி ஏவம் - நிர் பிறப்பில்லாதவர் என்று, கஶ்சித் பீரு:- (பிறப்பிறப்புக்களுக்குப் பயந்த) ஒருவன், ப்ரபத்யதே- உம்மையே சரணமென்றடைகின்றான். ருத்ர - ஓஉருத்ரமூர்த்தியே, யத்தே தக்ஷிண முகம் - யாதொன்று உமது தெற்கு நோக்கிய முகமோ, தேந - அம்முகத்தினால், மாம் நித்யம் பாஹி- எந்நாளும் என்னைப் பாதுகாத்தருளக் கடவீர்.

கு-பு

தாம் பிறவாத ஒருவரே உயிர்களின் "பிறவித்துன்பத்தையும் போக்கவல்லாராகவின், "பயந்த ஒருவன்" சிவபெருமானது பிறப்பற்ற தன்மையைச் சிறப்பாக எடுத்துக் கூறியும், துன்பத்தை நீக்குபவர் என்னும் பொருள் தரும் உருத்திர நாமத்தினால் விதந்து இறைவனை வழிபடுவானாயினான். ருத்திர சப்தார்த்தம் முன்னர்க் காட்டப்பட்டது.

இன்னலங் கடலுட்பட்டோர் யாரையுமெடுக்கு நீரா லுன்னரும் பரம உருத்திரனெனும் பேர்பெற்றான். [55]
- என்றது கந்தபுராணம்

இன்னலங்கடல் - பிறப்பிறப்புக்களாகிய துன்பக் கடல்,

மேல் மந்திரத்தில் "கண் முதலிய இந்திரியங்களால் அவரை யறிய முடியாது" என்று வரையறுத்தோதியவதனால் கல்லாலின் கீழ் தக்ஷிணா மூர்த்தியாயெழுந்தருளியிருந்து நால்வர் முனிவர்க்கு உண்மை ஞானத்தை கைகாட்டினாலுணர்த்திய பரமாசாரிய வடிவத்தினை உள்ளத்துட்கொண்டு தெற்கு நோக்கிய

முகத்தினால் என்னை எந்நாளும் பாதுகாத்தருளக் கடவீர் என்று வழிபாடு செய்தது சுருதி, (பாதுகாத்தல் - பிறப்பிறப்புக் களாகிய கடலிடை வீழாது துயருறாவண்ணம் பாதுகாத்தல்)

கல்லாவின் நீழல் தனியொரு நால்வவர்க்குங்
கடவுள் நீ யுணர்த்துவதுங் கைகாட் டென்றால்
சொல்லாலே சொல்லப்படுமோ சொல்லுந் தன்மை
துரும்புபற்றிக் கடல்கடக்குந் தன்மை யன்றோ [56]
என்றார் தாயுமானப் பெருந்தகையார்

தன்னைச் சரணென்று தாளடைந்தேன் தன்னடியடையப்
புன்னைப்பொழிற் புகலூரண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பதுத் தென்வினைக் கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்கவொ டான்சிவ லோகத் திருத்திடுமே[57]
நா- தேவாரம்

பொ - ரை
பிறவித்துன்பத்திற்குப் பயந்த ஒருவன் பிறப்பற்ற தேவரீரைச் சரணமென்றடைகின்றான் (நான் உம்மைச் சரணமடை-கின்றேன் என்பது கருத்து) உமது தென்முகத்தினால் என்னை எஞ்ஞான்றும் பாதுகாத்தருளல் வேண்டும்.

மந்:
உஉ

மா நஸ்தோகே தனயே மா ந ஆயுஷி
மா நோ கோஷு மாந அஶ்வேஷு ரீரிஷ:/
வீராந் மா நோ ருத்ர பாமிதோ
வதீர்ஹவிஷ்மந்த: ஸதமித்த்வாஹவாமஹே //

இ - ள்
ருத்ர - ஓ ருத்திர மூத்தியே, ந: - எங்களுடைய, தோகே - புத்தரர்களையும் தனயே - சந்ததியையும், ஆயுஷி - ஆயுளையும், ந:- கோஷு - எங்கள் பசுக்களையும், ந: அஶ்வேஷு- எங்கள் குதிரைகளையும், மா ரீரிஷ - துன்பப் படுத்த வேண்டாம், பாமித: - கோபம் கொண்டவராய், ந: வீராந் - எங்கள் வீர்களை மாவதீ:- கொல்ல வேண்டாம், ஸதம் இத் - எஞ்ஞான்றும், ஹவிஷ்மந்த:- அவியை எந்தியவர்களாய், த்வாம் - உம்மை, ஹவாமஹே - அழைக்கின்றோம்

பொ - ரை

ஓ ருத்திர மூர்த்தியே, எங்கள் புத்திரர், பௌத்திரர், பசுக்கள், குதிரைகள் வீரம் செறிந்த வேலைக் காரர்கள். இவர்களைத் துன்புறுத்த வேண்டாம்: கோபங் கொண்டு அழிவு செய்ய வேண்டாம். அவியுடன் கூட உம்மை எப்பொழுதும் வழிபடுகின்றோம். (இம் மந்திரம் சொற்ப சொல் வேறுபாட்டுடன், இருக்கு வேதம் க- கக' லிலும், கிருஷ்ண யசுர் வேதம் ச-ரு - ௦ரு இலும், சுக்ல யசுர். கசு -கூஇலும் வந்துளது)

ஐந்தாமத்தியாயம்

மந்:
க

த்வே அக்ஷரே ப்ரஹ்மபரே த்வநந்தே
வித்யாவித்யே நிஹிதே யத்ர கூடே /
ஷரம் த்வவித்யா ஹ்யம்ருதம் து வித்யா
வித்யாவித்யா ஈஶதே யஸ்து ஸோஅந்ய: //

இ -ள்
அக்ஷரே - அழிவற்றவராயும், அநந்தே- எல்லையற்றவராயும், ப்ரஹம பரே- பரப்பிரமமாயுமுள்ளவராகிய, யத்ர - எவரிடத்தில், கூடே நிஹிதே - மறைத்து வைக்கப்பட்டிருக்கிற, வித்யா அவித்யாத்வே- பசுவும் பாசமுமாகிய இரண்டனுள்ளும், அவித்யாக்ஷ ரம் து- பாசம் அழிவுள்ளதாகும். வித்யா து அம்ருதம் ஹி- பசு அழிவற்றதாகும், ய:- எவர், வித்யா அவித்யே - பசு பாசங்களிரண்டையும், ஈஶதே ஆளுகின்றாரோ, ஸ:- அவர், அந்ய:- அவ்விரண்டற்கும் வேறாக உள்ளார்.

சேதனமாகிய பசுவை வித்தை எனவும் கூறுவர்[1] - வாயு புராணம் க- எ

கு.பு.
பசு பாசம் பதி என்பன பிரமவாதிகளால் வர்ணிக்கப்படுகின்றன. சேதனமாகிய பசு அழிவற்றது என்றும், அசேதனமாகிய பாசம் அழிவுள்ளது என்றும் கூறப்படும். இவையிரண்டற்கும் மேலாயுள்ளவர் பதியாகிய சிவபெருமான், இம்மூன்றும் அநாதியே உள்ளன[2] (ஸகாந்த புராணம் - உபதேச காண்டம் அஅ- ரு) இம்மந்திரத்தாலறிய வேண்டியன முன்பே காட்டப்பட்டன.

பொ-ரை

அழிவற்றவரும், எல்லையற்றவருமாகிய சிவபெருமானிடத்தில் பசுவும் பாசமும் மறைவாக வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பாசம் அழிவுள்ளது. (பரிபாக காலத்தில் பசுவை விட்டு நீங்குமியல் புடையது) சேதனமாகிய பசு அழிவற்றது. இவையிரண்டையும் ஆளும் சிவபெருமான் இவற்றிற்கு வேறாயுள்ளார்.

மந்:
உ

யோ யோநிம் யோநிமதிதிஷ்டத்யேகோ
விஶ்வாநி ரூபாணி யோநீஶ்ச ஸர்வா:/
ரிஷிம் ப்ரஸூதம் கபிலம் யஸ்தமக்ரே
ஜ்ஞாநைர் விபர்த்தி ஜாயமாநம் ச பஶ்யேத்//

இ-ள்

ய - எவர், யோநிம் யோநிம் - (உலகினுக்கு) உபாதான காரணமாகிய சுத்தாசுத்த மாயைகளையும். விஶ்வாநி ரூபாணி- (அவற்றின் காரியமாய்த் தோற்றிய) எல்லா உருவப் பொருட்களையும், ஸர்வா: யோநிம்- (அவற்றில் வீழ்ந்து கர்மபலன் நுகரும்) எல்லா யோநி பேதங்களையும், அதிதிஷ்டதி- அதிட்டிக்கின்றாரோ, ஸ: ஏக:- அவர் ஒருவர், ய:- எவர், அக்ரே ப்ரஸூதம் - முதலில் தோன்றிய, ரிஷிம் கபிலம் - இருஷியாகிய பிரமாவை, ஜ்ஞாநை: பிபர்த்தி- ஞானங்களினால் போஷிக்கின்றாரோ, ஸ:- அவர், தம் - அந்தப் பிரமாவை, ஜாயமாநம் பஶ்யேத்- பிறக்கக் கண்டார் (தோற்றுவித்தருளினார்)

"எவர் உலகினுக்கு உபாதான காரணமாகிய சுத்த, அசுத்த மாயைகளையும் .... அதிட்டிக்கின்றாரோ"

யோநிம் யோநிம் என்று இருமுறை கூறியவதனால், உலகிற்கு உபாதான காரணமாகிய மாயை இருவகைப்படும் என்பது குறிப்பித்தவாறு, உலகமும் சுத்தமும் அசுத்தமும் என்று இருவகைப்படும். உலகிற்கு உபாதானம் மிவையே என்பது முன்னும் கூறியுள்ளோம். அங்குக் கூறிய அதிட்டான சம்பந்தம் நோக்கியே, மாயையிலிருந்து தோற்றிய உலகினைப் பிரமத்திலிருந்து தோற்றியது என்று சிற்சில விடயங்களில் சுருதி செப்பிற்று.

தைத்திரீயோபநிடதம் இரண்டாவது பிரஹ்மானந்த வல்லி, முதலநுவாகம் 2வது மந்திரம், பிரமத்திலிருந்து ஆகாயமும், ஆகாயத்திலிருந்து வாயுவும் .... தோன்றின[3] என்று கூறுகின்றது. இம்மந்திரத்திற்குச் சாயனர் பாடியம் வரையு-மிடத்தில் சுவேதாசுவதரம் சம் அத்தியாயம் க௦ மந்திரத்தில் மாயையைப் பிரகிருதி (உபாதானம்) என்றும், மாயை-யுடையவரை மகேசுரர் (நிமித்தகாரணர்) என்றும் அறிக என்றும் உரைத்திருக்க, இங்கு பிரமத்திலிருந்து ஆகாயம் பிறந்தது என்று பிரமத்தைப் பிரகிருதி (உபாதானமாகக்) கூறியது எவ்வாறு பொருந்துமெனில் என்று ஒரு வினாவை எழுப்பிக் கொண்டு, மாயை பிரமத்தின் சத்தியாயிரு த்தலின் சத்தி சத்தனை விட்டுத் தனித்திருப்பதில்லையாதலால் மாயையின் உபாதானத்துவத்தை இச் சுருதி பிரமத்திற்குச் சொன்னதாகவே கொள்ள வேண்டும் என்று விடையிறுத்தனர் எனவே, மாயையே உபாதானம் என்பதும், அதற்கு ஆதாரமா யிருத்தல் பற்றியே பிரமம் உபாதானம் என்று சிற்சில சுருதி கூறுகின்றது என்பதும் சாயனர்க்குக் கருத்தாதல் தெற்றென வுணர்க. பிரமத்திலிருந்து உலகம் தோன்றிற்று என்பதற்கு சீவித்திருக்கின்ற மனிதனது உடம்பிலிருந்து மயிர் தோன்றுவது போல[4] என்று முண்டகச் சுருதி உதாரணம் எழுத்துக் காட்டிற்று (க - ௩ - அ?)

உயிரிலே யிருந்து மயிர் முளைப்பது ஒருக்காலுமில்லை. உயிர் நீங்கிய பிணத்திலிருந்தும் அது முளையாது. ஆகவே உடம்பிலே மயிர் தோன்றுவதற்கு உயிர் ஆதாரமாயிருக்கு மவ்வள-வேயன்றிப் பிறிதொன்றில்லை, இங்கு உயிர் நிமித்த காரணம். மயிர் அதன் காரியம். அங்ஙனமே, சித்தாகிய பிரமத்திலிருந்து சடமாகிய உலகம் முளைப்பது ஒருக்காலு மில்லை பிரமத்தின் ஆதாரமின்றி சடமாகிய மாயையிலிருந்து அது தோன்றாது. எனவே உலகத் தோற்றத்திற்குப் பிரம்மம் நிமித்த மாத்திரமே என்பதும், மாயையே உபாதானம் என்பதும் அச்சுருதியிற் கண்ட உண்மையாதல் உணர்ந்து தெரிக.

இனி, மேற்கூறிய தைத்திரீய மந்திரபாடியத்தில் சாயனர் "சைவாகமங்களில் ஈசுவரனைத் தத்துவங்களினின்றும் பிரித்துண ர்த்தும் பொருட்டுச் சாங்கியர் கூறிய இருப்பத்தைந்து தத்துவங் களிலும் மேலுள்ளனவாகிய பதினொரு தத்துவங்கள் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. உபநிடதங்களோ வெனில், உதாரணத்திற்காக ஆகாசம் முதலிய சில தத்துவங்களின்

தோற்றத்தை மட்டும் கூறி யொழிந்தன. எது வரையிற் கூறுவதனால் ஒருவனுக்குப் பிரம சாக்ஷ ாத்காரம் உண்டாகு-மோ அது வரையிற்றான் சுருதி கூறுகின்றது. இதனால் உத்தமாதி காரிக்குப் பிரமஞானம் உண்டாகக் கூடும் என்பது சுருதியின் கருத்தாகக் கொள்க"[6] என்றுரைத்தார்

இதனால், (அசுத்த) மாயா காரியங்களுக்கு மேலுள்ளனவாகிய சுத்த (பிரோக) தத்துவங்களையும் அவற்றின் உபாதானமாகிய சுத்தமாயையினுண்மையையும் அவர் ஏற்றுக்கொண்டாரான தோடு ஆகமத்(சைவத்) துறைக்கு வேதம் நெறியாயுள்ளது என்பதையும் வெளிப் படுத்தினராகின்றார்.

பிரமா என்னுமுபலக்கணத்தால் ஏனைக்காரண மூர்த்திகளும் தழுவப்பட்டனர்.

பொ - ரை

உலகினுக்கு உபாதானமாகிய சுத்தாசுத்த மாயைகளையும் அவற்றின் காரிய சமூகங்களையும், அவற்றிடை வீழ்ந்து கன்மபலம் நுகரும் உயிர் வர்க்கங்களையும் உள்ளும் புறம்பு மொக்க நின்றியக்கும் சிவபொருமானே பிரமா முதலிய காரணமூர்த்திகள் ஐவரையும் தோற்றுவித்து ஐம்பெருந் தொழில்களில் அவர்களைச் செலுத்திநிற்குந் தலைவருமாவர்.

மேலிரண்டு மந்திரங்களாலும் சிவபெருமான் உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கும் சுத்தாத்துவித வியல்பு வலியுறுத்துரைத்தவாறுமாயிற்று.

மந்:
ந

ஏகைகம் ஜாலம் பஹுதா விகுர்
வந்நஸ்மிந் க்ஷேத்ரே ஸம்ஹரத்யேஷதேவ:/
பூய: ஸ்ருஷ்ட்வா பதயஸ்ததேஶ:
ஸர்வாதிபத்யம் குருதே மஹாத்மா//

இ -ள்

அஸ்மிந் க்ஷேத்ரே - இந்த உலகத்தில், ஏஷதேவ:- (மேற்கூறிய ஒருவராகிய) இந்தத் தேவர், ஏக ஏகம் ஜாலம்- சுத்தமும் அசுத்தமும் என்னும் இரு வகை மாயைகளாகிய வலைகளை,

பஹுதா விகுர்வன்- பலவாறாக விரித்து, ஸம்ஹரதி - (பின்தம்மிடத்து) ஒடுக்கிக் கொள்ளுகின்றார், மஹாத்மா ஈஶ:- பரமான்மாவாகிய ஈசர், பதய ஸ்ருஷ்ட்வா -(பிரமா விட்டுனு முதலிய) தலைவர்களை முன்போலத் தோற்றுவித்து, ஸர்வாதிபத்யம் குருதே - சேதனாசேதனப் பிரபஞ்சங் களனைத்துக்கும் அதிபதியா கின்றார் (சேதனப் பிரபஞ்சத்தை உடைமையாகவும் உடையராகின்றார் என்றபடி). இந்த உலகத்தில் பிரமா விட்டுணு முதலிய காரணமூர்த்திகளுட்பட இவ்வுலகத் தோற்ற ஒடுக்கங்களைப் பற்றிக் கூறுகின்றது என்றவாறு.

பொ - ரை

ஒருவராகிய சிவபெருமான் சுத்தாசுத்த மாயைகளிலிருந்து உலகினைத் தோற்றுவித்துச் மகாசங்கார காலத்தில் மாயையுட்பட எவற்றையுந் தம்மிடத்திலொடுக்கி, மறுபடியும் முன்போலத் தோற்றுவிக்கின்றார். இதனால் அவரே சர்வாதிகாரி யாகின்றார்.

மந்:

ச ஸர்வா திஶஊர்த்வ மதஶ்ச திர்யக்
ப்ரகாஶயந் ப்ராஜதே யத்வநட்வாந்/
ஏவம் ஸ தேவோ பகவாந் வரேண்யோ
யோநிஸ்வபாவாநதிதிஷ்டத்யேக://

இ - ள்

அநட்வாந் - சூரியன், ய து - எவ்வாறு, ஸர்வா திஶ ஊர்த்வ அத:ச த்ரியக- எல்லாத்திக்குகளையும், மேலும் கீழும் குறுக்குமாக, ப்ரகாஶயந் ப்ராஜாதே- விளக்கிக் கொண்டு தானும் விளங்கு கின்றதோ, ஏவம்- அவ்வாறு, பகவாந் வரேண்ய: ஏக:- பகவானும் மேலானவரும் ஒருவருமாகிய, ஸ தேவ:- அந்தத் தேவர், யோநி ஸ்வபாவாந் - காரணத்தையும் அதன் இயல்புகளையும், அதிதிஷ்டதி - அதிட்டிக்கிறார்.

கு - பு

" எல்லாத்திக்குகளையும், மேலும் கீழும் குறுககுமாக"

என்ற அதனால் எங்குமுள்ள எல்லாப் பொருட்களும் குறிக்கப்பட்டன.

" காரணத்தையும் அதன் இயல்புகளையும்"

ஆகாயத்தையும் அதனியல்பாகிய சத்த குணத்தையும். என்றிங்ஙன் சிவ முதல் மண்ணந்தாமாயுள்ள எல்லாப் பொருட் பிரபஞ்சங்களிலும் கண்டு கொள்க. சூரியன் தனது ஒளியினால், கண்ணொளியிலும் ஏனைப் பொருட்களிலும் கலந்து நின்று அப்பொருட்களைக் கண்ணுக்குக் காட்டி, தானும் காணப்படுமாறு போல, முதல்வனும் தனது அருளொளியினால் ஆன்ம சிற்சத்தி யிலும் ஏனைப் போக போக்கியங்களிலும் கலந்து (அந்தரிமியாய்) நின்று அவற்றை ஆன்மாவுக்குணர்த்தித் தானுமுணரப்படுவன்.

இவ்வுண்மையினை விளக்கிய சேக்கிழார் பெருமான்

"ஆதியாய் நடுவுமாகி யாளவிலாவளவுமாகி
சோதியா யுணர்வுமாகித் தோற்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம்" [6]
என்று திருவாய் மலர்ந்தருளினர்

- பெரிய புராணம்

"சோதியாய்" என்றது புறம்பொருட்களிற் கலந்து நின்று காட்டுமுப காரத்தையும், "உணர்வுமாகி" என்றது ஆன்ம அறிவிற் கலந்து நின்று காணுமுபகாரத்தையும் கருதிற்று. காட்டிலும் காணுதல் என்பது பற்றி முன்பு ஓரிடத்தில் விரித்து விளக்கினோம். ஆண்டுக் காண்க. "பேதியா ஏகமாய்" சேதனாசேதனப் பொருட்களில் வேறின்றிக் கலப்பினால் ஒன்றாய் நிற்கும் இயல்பினைக் கருதிற்று. "போதியா நிற்கும தில்லைப் பொதுநடம்"- இங்ஙனம் அத்துவிதமா யியைந்து நின்று உயிர்கட்கு எஞ்ஞான்றும் உணர்த்தி உய்விக்கும் நடனம் என்க.

மண்ணதனி லைந்தை மாநீரில் நான்கை
வயங் கெரியி லூன்றை மாருதத் திரண்டை
விண்ணதனி திலொன்றை விரிகதிரைத் தண்மதியைத்
தாரகைகள் தம்மின் மிக்க
எண்ணதனி லெழுத்தை ஏழிசையைக் காம
னெழிலழிய எரியுமிழ்ந்த இமையா நெற்றிக்

கண்ணவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே[7]

நா - தேவாரம்.

பாரிடை யைந்தாய்ப் பரந்தரய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
....
அளிபவருள்ளத் தமுதே போற்றி[8]

- திருவாசகம்

இம்மந்திரத்தில் வரும் "யோநிஸ்வபாவாந் அதிதிஷ்டதி" என்பதற்கு முதற்காரண மாகிய மாயையையும், அதன் காரிய சழகங்களையும் அதிட்டிக்கின்றார் என்றுரைப்பினுமமையும்.

பொ - ரை

எங்ஙனம் சூரியன் தனது ஒளியினால் எப்பொருட்களையும் விளக்கித் தானும் விளங்குகின்றானோ அங்ஙனம் சிவபெருமான் தமது அருளொளியினால் சித்தும் சடமுமாகிய எப்பொருட் களிலும் அந்தரியாமியாய் நின்று ஆட்டுவித்துத் தாமும் அவ்வருளி னாலேயே ஆன்மாவில் விளங்குகின்றார், அறியப்படுகின்றார் .

மந்:
ரு

யச்ச ஸ்வபாவம் பசதி விஶ்வயோநி:
பாச்யாம்ஶ்ச ஸர்வாந் பரிணாமயேத் ய:/
ஸர்வமேதத் விஶ்வமதிதிஷ்டத்யேகோ
குணாம்ஶ்ச ஸர்வாந் விநியோஜயேத்//

இ -ள்

ய: ஸ்வபாவம் பசதி -(மேல் மந்திரத்திற் கூறிய ஒவ்வொரு காரணத்தின்) இயல்பினையும் எவர் பக்குவப்படுத்துகின்றாரோ, ய: ஸர்வாந் பாச்யாந் பரிணாமயேதி- எவர் பழைய வினைகளனைத்தையும் பரிணமிக்கச் செய்கின்றாரோ, ய: ஏக: ஏதத் ஸர்வம் விஶ்வம் அதிதிஷ்டதி- எவர் ஒருவராய் இந்த எல்லா உலகத்தையும் அதிட்டிக்கின்றாரோ, ய: ஸர்வாந் குணாந் விநியோஜயேத் - எவர் எல்லாக் குணங்களையும் விநியோகிக் கின்றாரோ, ஸ: விஶ்வயோநி: - அவர் உலகினுக்கு நிமித்த காரணராவர்.

கு.பு.
" பழைய வினைகள்"

என்றது ஏற்புழிக்கோடலால், புத்திதத்துவம் பற்றுக் கோடாக மாயையிற் கட்டுப்பட்டுக் கிடக்கும் சஞ்சித வினைகளின் மேற்று. அவற்றைப் பரிணமிக்கச் செய்தலாவது அவற்றிலிருந்து தேவ உடல், மனித உடல் விலங்குடல் முதலிய உடல்களை உயிர் களுக்குக் கொடுப்பதும், இவ்வுடல்கள் வாயிலாக நுகரப்படும் சுகதுக்க வடிவாகிய பிராரத்துவமாக வரச் செய்தலுமாம். அந்நுகர்ச்சிக்கேற்ப தனுகரணபுவன போகங் களைத் தகுதியுடை யனவாகச் செய்தலை, ஸ்வபாவத்தைப் பக்குவப்படு த்துதல் என்றார்.

"எல்லாக் குணங்களையும் விநியோஜித்தல்" சுக துக்க மோகங்களுக் கேதுவாகிய சாத்துவிக ராசத தாமத குணங்களை நுகற்சிக்கேற்பக், கூட்டி மலபரிபாகத்தின் பொருட்டுக் கன்மங்களை நுகரப் பண்ணுதல்.

சந்சிதவினை மாயையிற்கட்டுப் பட்டுக் கிடக்குமென்ற தென்னை யெனின், மாயை முதல்வனது திருவருட் சத்தியை யாதாரமாகக் கொண்டு, அச்சத்தி சங்கற்பித்த வழி வினைநுகற்சியைத் தனுகரண புவன போகங்களைப் பிறப்பித்துத் தருவதாகலின், சஞ்சிதம் (புத்தி தத்துவம் பற்றுக்கோடாக) மாயையிற்கட்டுப் பட்டுக் கிடக்கு மென்பது பொருந்து மாறறிக. சஞ்சிதமாவது, செய்யுங்கால் ஆகாமிய மாய்ப் பின் பக்குவப்பட்டுப் பிராரப்தமாய்ப் பயன் தருங்காலும், சூக்குமாமாய்ப் புத்திதத்துவம் பற்றுக் கோடாக, மாயையில் ஒடுங்கியிருக்கும் வினை. சந்சிதமின்றேற் பிராரப்தமுமில்லை: அது இல்லையாகவெ, மாயை மயேயங் களும் வேண்டப்படா. ஆகாமியமும் விளைவதில்லை, ஆயின், தன்செய லொழிந்து திருவருள் வழிப்பட்டுத் நிற்றல் சித்திக்குங்காலும் சஞ்சிதம்: இல்லாமற் போவதுமில்லை.

மேற்கூறிய வாற்றால், உயிர்களுக்கு முதல்வன் விளைப் பயனையூட்டுதல், அத்திருவருட் பேறுபெற்று உயிர்கள் உய்தற் பொருட்டேயாம்.

அவ்வினையைச் செய்வதனிலவ்வினைஞர் தாஞ்சென்றங்
கவ்வினையை காந்த பசாசபோ - லவ்வினையைப்

பேராம லூட்டும் பிரானி னுகராரேல்
ஆர்தா மறிந்தணைப்பா ராங்கு[9]

-சிவாஞானபோதம்.

ஓதுவித் தாய்முன்னறவுரை காட்டி யமணரொடே
காதுவித் தாய் கட்ட நோய்பிணி தீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித் தாய்நின் பணி பிழைக்கிற்புளி யம்வளாரால்
மோதுவிப் பாயுகப் பாய்முனி வாய்கச்சி யேகம்பனே[10]

-நா - தேவாரம்

பொ - ரை
உயிர்களுக்கு வினைப்பயனை யறிந்தூட்டுகின்ற சிவபெருமான் உலகினுக்கு நிமித்த காரணராவர்.

மந்:
சு

தத் வேதகுஹ்யோபநிஷத்ஸு கூடம்
தத் ப்ரஹ்மா வேததேப்ரஹ்மயோநிம்/
யே பூர்வதேவா ருஷயஸ்ச தத் விது
ஸ்தே தந்மயா அம்ருதா பபூவு://

இ - ள்
தத் - அது, வேத குஹ்யா - வேதத்தின் இரகசியமும், உபநிஷத்ஸு கூடம் - உபநிடதங்களில் மறைந்திருப்பதுமாம், தத் ப்ரஹ்ம யோநிம் - வேத காரணமாகிய அதனை, ப்ரஹ்மா வேததே- பிரமதேவர் அறிகிறார்கள், பூர்வம் முற்காலத்தில், தேவா ருஷய: ச யே தத் விது: - தேவர்களும் முனிவர்களுமாகிய எவரகள் அதனை அறிந்தார்களோ, தே- அவர்கள், தந்மயா அம்ருதா பளபூ:- தன்மயராய் முத்தர்களாகிறார்கள்.

கு.பு:(க)
"அது வேதத்தின் இரகசியமும் உபநிடதங்களில் மறைந்திருப் பதுமாம்"

வேதங்கள் உபநிடதங்கள் முதலிய கலைகள் எல்லாம் சிவபெருமான் ஒருவரையே பரம் பொருளாகக் கொண்டு வழிபடுகின்றன. சில உதாரணங்கள் காட்டுவோம்:

எவர் சுவாசம் விடுதலினாலும், கண் இமைத்தலினாலும் உலகமெல்லாம் சிருட்டிக்கப்பட்டதோ, எவர் ஒருவராகவே இராசாவாக இருக்கின்றாரோ, எவர் இருகாலும் நாற்காலு முடைய பசுக்களுக்குப் பதியாக இருக்கின்றாரோ, அவர் பொருட்டன்றி வேறு எந்தத் தேவர் பொருட்டு நாம் அவிசு கொண்டு வழிபடுவோம்.[11] (இருக்கு - 10-121-3)

நாற்காலும் இருகாலுமுடைய பசுக்களப் பசுபதியானவர் ஆளுகின்றார்.[12]

(யதர் வேதம 3-1-43)

பசுபதி ஈச சப்தங்கள் சிவபெருமான் ஒருவருக்கன்றி வேறு, எந்தக் கடவுளுக்கும் எந்த நூலிலும் வழங்கப்படவில்லை. நிற்க, இருக்கு 10-129-1, 2வது மந்திரங்கள் "மகாபிரளய காலத்தில் சத்துமில்லை, அசத்துமில்லை, அந்த ஒன்று இருந்து"[13] என்று கூற அப்பொருளை விரித்துச் சுவேதாசுவதரம் "மகா பிரளய காலத்தில் சத்துமில்லை அசத்துமில்லை கேவலம் சிவபெரு மான் ஒருவரே இருந்தார்[14] என்றுரைத்தது. இதனால் மகா சஸ்காரத்தைச் செய்யும் பசுபதியெனப் பெயரிய சிவபெரு மானே உலகினை மீளத்தக்க சுவாசத்தினாலும் கண்ணிமைப் பினாலும் சிருட்டித்தார் என்னும் பொருள் மேற்காட்டிய இருக்கு மந்திரத் தினால் தெளிவுபடுத்தப் பட்டமை கண்டு கொள்க.

இனி உயிர்களின் துன்ப நீக்கத்தினையே குறிக்கோளாகக் கொண்டு, முதலாவதாகிய இருக்குவேதம் துன்பத்தை நீக்குபவர் என்னும் பொருளுடைய உருத்திரன் என்னும் நாமத்தினாலும், துன்பத்தின் நீங்கிய பின் இன்பத்தினை நாடுதல் உயிர்களினிய ல்பாதலால், இரண்டாவதாகிய யதர்வேதம் இன்பம் செய்பவர் என்னும் பொருளுடைய சிவநாமத்தினாலும் அம் முதல்வனை வழிபடுவனவாயின.

ஆயின், இருக்குவேதமானது, இந்திரன் அக்கினி முதலிய ஏனைத் தேவர்களையும் வழிபாடு செய்தன என்னையெனின் அறியாது வினாயினாய், அவ்வினாவுக்கு வேதமே மற்றோரிடத் தில், உள்ள ஒன்றை இந்திரன் என்றும், மித்திரன் என்றும், வருணன் என்றும் அக்கினியென்றும் ------------- பல பெயர்களினால் அறிந்தோர் கூறுவர்[15] (1-164-46) என்றுரைத்தது. இதனால் வேதம் முதலிய எல்லாக் கலைகளும் எல்லா

நாமங்களினாலும் வழிபடுவது சிவபெருமான் ஒருவரையே என்பது தெளிந்த உண்மையாகும்.

ஏலுந்தண் டாமரை யானு மியல்புடை
மாலுந்தம் மாண்பறிகின்றிலர் மாமறை
நாலுந்தம் பாட்டென்பர் நல்லூர்ப் பெருமணம்
போலுந்தங் கோயில் புரிசடை யார்க்கே[16]

ஞா - தேவாரம்

மன்னுமலைமகள் கையால் வருடின மாமறைகள்
சொன்ன துறைதொறுந் தூப்பொருளாயின தூக்கமலத்
தன்ன வடிவின அன்புடைத் தொண்டர்க் கமுதரும்பி
இன்னல் களைவன இன்னம் பரான்றனிணையடியே [17]

நா- தேவாரம்

கு.பு:(உ)

"எவர்கள் அதனை யறிந்தார்களோ அவர்கள் தன்மயராய், முத்தர்களாயினார்கள்".

இது முத்தி பெற்றோரது இலக்கணம் கூறிற்று. தன்மயராய் சிவமயம் பொருந்தப்பெற்றவராய் என்க, எதனை எதனைப் பற்றினும் அதுவதுவாய் வசிப்புண்டு நின்றறியு மியல்பினை யுடைய உயிர், சிவனை யறிந்து பற்றியவிடத்து அவனுக்குரிய எண்குணங்களும் பதியப்பெற்று அவன் வண்ணமாய் நிற்கும். இதனால் "மாயையோடு கூடித் தான் பிரமமென்பதை மறந்து, உயிராயிழிந்த பிரமம் தான் பிரமம் என்றறியும் ஞானத்தினால், மாயை நீங்கப் பெற்று முன்போலப் பிரமமாம்" என்னும். மாயாவாதம் போலியா யொழிந்தமை கண்டு கொள்க. முத்தியில் உயிர் கெடுதலின்றிச் சிவனுக்கு அடிமையாகவே இருக்கும் என்னும் உண்மையை,

தன்னை யறிவித்துத் தான்றானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது - முன்னவனே
தானேதானாச் செய்துந் தைவமென்றுந்தைவமே
மானே தொழுகை வலி[18]
என்னும் சிவஞானபோத வெண்பாவாலறிக

"தைவம்" என்பது தேவனது உடைமை என்னும் பொருளில் உயிர் எஞ்ஞான்றும் சிவனுக்கு அடிமை என்பதை உணாத்

திற்று. தனக்கென்றொரு செயல் எவ்விடத்து (பெத்தம் முதலாகிய ஈரிடங்களிலும்)மின்றிச் சிவநிறைவினுளடங்கி அருள் தாரகமாய் நிற்றலே அடிமை என்றும் சொற்குப் பொருளாம். மகான் என்னும் வடசொற்றின்றிந்து மான் என நின்றது. மகான் சிவபெருமான். மானை என இரண்டனுருபு விரித்துரைகக்

உள்ளுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகுமைவீர் நுங்கள்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீரக் கையோ
வையகமே போதாதே யானேல் வானோர்
பொன்னுருவைத் தென்னாரூர் மன்னு குன்றைப்
புவிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைப் புகுந்தென் சிந்தை
தன்னுருவைத் தந்தவனை யெந்தை தன்னைத்
தலைப்படுவேன் துலைப்படுப்பான் தருக்கேன் மின்னே.[19]

நா - தேவாரம்

ஐவீர் என்ற உபலக்கணத்தால் ஆன்மாவினறிவு தொழிற் படுவதற் கிடமாகிய கருவிகளனைத்தும் கொள்ளப்படும். ஆன்மாவை விட்டென்றும் பிரியாது உடனாய் நிற்கும் சிவனது சார்புணர்ந்து பெத்தத்தில் தனக்குச் சார்பாய் நின்ற கருவிகரணங்களை விட்டு நீங்கிய விடத்து, அச்சிவன் சிந்தையுட் புகுந்து (விளங்கித் தோன்றி) ஆன்மாவைத் தன்வண்ணமாகச் செய்தானாயினும், அவன் ஆன்மாவுக்கு என்றும் ஆண்டவனே என்பதனையும் ஆன்மா அவனுக்கு மீளா அடிமையே என்பதனையும் "எந்தை தன்னைத் தலைப்படுவேன்" என்றோதியவதனால் வற்புறுத்தியரு ளினார்கள் அப்பர் சுவாமிகள். சிவனைத் தலைப்பட்டவிடத்து அவனது நிறைவினுள், வியாபகத்துள, அடங்கி நின்று அவனருளால் சிவானந்தந் துய்த்தலே ஆன்மாவின் அடிமைத் திறம் என்றும், அவ்வான்மாவிற்கு அங்ஙனம் சிவானந்தம் அருளுதலே ஆண்டவரின் ஆளும் திறம் என்றும் சைவ நூல்கள் சாற்றும். இவ்வியல்பின் உண்மைப்பெற்றி தேறமாட்டாதார் பலப்பல கூறித் தடுமாறுவர்.

பொ - ரை

மேல் மந்திரங்களிற் பெறுவிக்கப்பட்ட இலக்கணங்களை யுடைய சிவபெருமானே வேதங்கள் உபநிடதங்கள் முதலிய

எல்லாக் கலைகளாலும் போற்றப்படும பரம்பொருளாவர். அவரே லோக காரணர் என்பதைப் பிரமதேவர் அறிகிறார். அவரை யறிந்த தேவர்களும் முனிவர்களும் சிவமயராய் முத்தர்களாயினார்கள்.

ஈண்டுக்கூறிய முத்தி, சைவசித்தாந்த்தில் கூறிய அத்துவித முத்தியேயாம் என்பதனை மேல்விளக்கி யுரைத்தவாறு பற்றி யுணர்க. இவ்வுண்மை இவ்வத்தியாயத்தில் இனிவரும் மந்திரங் களில் நிரூபிக்கபட்டிருத்தல் கொண்டு தெளிக. இதுகாறும் பரப்பிரமாகிய சிவனதியல்பும் அவனைத் தலைப்பட்டோராகிய முத்தரதியல்பும் உணர்த்திற்று. இனி, முத்தி பெறுதற் கதிகாரியாகிய ஆன்மாவினியல்பு வரைசெய்துணர்த்தத் தொடங்குகிறது.

மந்:
எ

குணாந்வயோ ய: பலகர்மகர்த்தா
க்ருதஸ்ய தஸ்யைவ ஸ சோபபோக்தா/
ஸ விஶ்வரூபஸ்த்ரிகுணத்ரி வர்த்மா
ப்ராணாதிப: சஞ்சரதி ஸ்வகர்மபி: //

இ - ள்

ய: - எவன், குணாந்வய:- குணத்தோடு கூடியவனும், பலகர்ம கர்த்தா - பலனைத் தருகின்ற கன்மத்தைச் செய்பவனுமா யிருக்கின்றானோ, ஸ ஏவ - அவனே, அங்ஙனம் செய்யப்பட்ட கன்மங்களின் பயனை, உபபோக்தா - அனுபவிப் பவனாகின்றான், விஶ்வரூப:- அனேக ரூபங்களை யேற்பவனும், த்ரிகுண:- (சாத்துவிகம், இராசதம் தாமதம் என்னும்) முக்குணங்களை யுடையவனும், த்ரிவர்த்மா (தேவயானம், பிதுருயானம், தூமமார்க்கம் என்னும் மூன்று நெறிகளை யுடையவனும் (மூன்று நெறிகளில் ஒன்றிற் செல்பவனும்), ப்ராணாதிப:- பிராணனுக்குத் தலைவனுமாகிய, ஸ - அவன், ஸ்வகர்மபி:- தன் கன்மங்களினால், ஸஞ்சரதி (பிறவிதோறும்) சஞ்சரிக்கின்றான் (ஒரு பிறவியிலிருந்து மற்றொரு பிறவிக்குச் செல்லுகின்றான்)

கு.பு.

"குணத்தோடு கூடியவனும்"

ஆன்மா எதனையெதனைப் பற்றினும் அதனதன் குணமே தன்குணமாய்க் கொண்டு நிற்குமியல்பினையுடையது. (இதற்கு இதுவே பொருள் என்பது இதனையடுத்து வரும் மந்திரத்தில் சுருதி தானே விளக்கியுரைக் குமாற்றாலறிந்து கொள்க) இவ்வியல் பினையே சார்ந்ததன் வண்ணமாமியல்பு என்பர்,

இம்மந்திரத்தில் இனிக் கூறப்படும் கன்மங்களைச் செய்வதற்கும் அவற்றின் பயனை நுகர்தற்கும், அக்கன்மங் களினாலே மாறி மாறிப் பிறந்துழலுதற்கும் அவவ்வியல்பே காரணமாதலால் அதனை முதலில் வைத்தார். சிவனைச் சார்ந்து நின்று (நிற்றலால்) அவனியல்பனைத்தும் தன்கண் விளங்கப் பெற்றுச் சிவமயமாய் ஆன்மா நிற்கும் என்பது மேல் மந்திரத்தில் கூறப்பட்டது.

பெத்தத்தில் கருவி கரணங்களைச் சார்த்து நின்றும், (குணாந்வய:), முத்தியில திருவருளைச் சார்ந்து நின்றும் (தன்மய:) அறிதலேயன்றி தானாகவே யறியமாட்டமையின் ஆன்மா யாண்டும் (பெத்தம், முத்தியாகிய ஈரிடங்களிலும்) பரதந்திரனே என்பதும், பெத்தத்தில் தன்னாற் சாரப்பட்ட கருவி கரணங்களனைத்தும் சடப் பொருள்களேயாயதனாலும் அங்கும் (பெத்தத்திலும்) திருவருளே தாரகமாய் நின்று ஆன்ம அறிவை யவற்றோடு கூட்டியுணர்த்தும் என்பது சுருதியின் இதயமாதல் தெளிந்துணர்க.

கடோபநிடதம்

"எதனால் ரூபம் ரசம் கந்தம் சப்தம் முதலியவற்றை (ஆன்மா) அறிகின்றானோ, அது பரப்பிரமம் என்றும், அடுத்த மந்திரம் "யாதொரு பிரமத்தினால் சொப்பனம் சாக்கிரமாகிய இரண்டையும் அறிகின்றானோ, அதனை, பிரமத்தை, அங்ஙனம் அறிந்தவ னுக்குத் துன்பமில்லை என்றும் கூறின" [20]

இவை முதலிய அநேக சுருதிகள் பெத்தத்தில் உயிர்க்கு உள்ளீடாய் நின்று திருவருள் உணர்த்தும் முறைமை கூறின.

இனி, முண்டகம்

(அந்தப் பரமான்மாவானவன்) கண்ணினாற் காணப்படுவ தில்லை, வாக்கினாற் சொல்லப்படுவதில்லை, ஏனை

இந்திரியங்களாலும் கிரகிக்கப்படு வதில்லை, தவத்தினாலும் அடையப்படுபவனல்லன். அவனது திருவருட் பிரசாதத்தினால் சித்த சுத்தி யுண்டாகிச் செய்யும் தியானத்தினால் நிஷ்களனாகிய அவனை ஆன்மாவானவன் அறிகின்றான்[21]

முண்டகம்

"இந்தப் பரமாத்மா சிரவண, மனன நிதித்தியாசனங்களால் அடையத்தக்கவனன்று, எவனை அப்பரமாத்மா விரும்புகின்றானோ, எவனுக்குத் தன்திருவளைப் புரிகின்றானோ, அவனால் அடையத்தக்கவன், அவனுக்கு அப்பரமாத்தமா தன்ஸ்வரூப த்தைக் காட்டுகி ன்றான்[22]

அஃதாவது" அவனருளே கண்ணாகக் காட்டினல்லால் இப்படி யளிவ்வுரு வனிவ்வண்ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே[23] என்றபடி.

இவை முதலிய சுருதிகள் முத்தி திசையில் உணர்த்தும் முறைமை கூறின. முடிவு யாதெனில், பரதந்திரனாகிய ஆன்மா யாண்டும் முதல்வனுக்கு அடிமையே என்பதும், இங்ஙனம் உணரும் நல்வினை யில்லாதோர், தம்மைப் பிரமமென்றும் சுதந்திர உணர்வின ரென்றும் கூற விழைந்து சுருதிகளைப் புரட்டுதல் அடாத செயல் என்பதுமாம்.

பொ - ரை.

தன்னாற் சாரப்பட்ட பொருட்களின் குணங்களைத் தன்குண மாகக் கொள்ளுமியல்பினையுடையவனும், கன்மங்களைச் செய்பவனும் (கர்த்தாவும்) அவற்றின் பயன்களை நுகர்பவனும் (போக்தாவும்) ஆகிய ஆன்மாவானவன், விசுவரூபனும் முக்குணனும், மூன்று நெறிகளை யுடையவனும் பிராணனுக்குத் தலைவனுமாய்த் தான் செய்த கன்மங்களினால் இறத்தல் பிறத்தல்களைச் செய்கின்றான்.

எண்ணரிதாய் நித்தமாயிருண்மலத்திலழுந்தி
இருவினையின் தன்மைகளுக் கீடான யாக்கை
அண்ணலரு ளால் நண்ணி அவையவரா யதனாலுலகினிகழ்
போகங்க ளருந்து மாற்றால்
புண்ணியபா வம்புரிந்து போக்கு வரவுடைத்தாய்[24]

சிவப்பிரகாசம்.

மந்:
அ

அங்குஷ்டமாத்ரோ ரவிதுல்யரூப:
ஸங்கல்பாஹங்கார ஸமந்விதோ ய:/
புத்தேர் குணேநாத்மகுணேந சைவ
ஆராக்ரமாத் ரோப்யபரோஅபி திருஷ்ட://

இ-ள்
ய:- எவனொருவன், அங்குஷ்டமாத்ர:-பெருவிரலளவினனும், ரவி துல்ய ரூப:-சூரியனையொத்த செவ்வொளி வடிவினனும், புத்தேர் குணேந ஆத்மகுணேநச ஏவ-(தன்னாற் சராப்பட்ட) அந்தக் காரணத்தின் குணத்தினாலும் சரீரத்தின் குணத்தினாலுமே, ஸங்கல்ப அஹங்கார ஸமந்வித:-சங்கல்ப அகங்காரங்களோடு கூடியவனாயிருக்கின்றானோ, ஸ- அவன், ஆரா அக்ர மாதர:- ஊசியின் நுனிப் பிரமாணத்தனாய், அபர: திஷ்ட:- சிறிய வனாகவன்றோ காணப்படுகின்றான்.

கு.பு.
இருளுக்குமேல் "சூரியனையொத்த செவ்வொளி வடிவினன்" (தைத்திரிய - ஆரணியகம்) என்று சுருதிகள் கினந்தெடுத்துக் கூறும் சிவபெருமானுக்குச் சரீரம் போலிருந்தலின் ஆன்மாவும் இங்ஙனம் சூரியனையொத்த செவ்வொளி வடிவினனென்னு கூறப்பட்டான்.

"சீவான்மா குணத்தோடு கூடிக் கர்த்தா போக்தாவாயுளன்" என்று மேல் மந்திரத்திலுரைத்தனை, இம்மந்திரம் "அந்தக் கரணத்தின் குணத்தினாலும். சரீரத்தின் குணத்தினாலும் சங்கற்ப அகங்கார ங்களுடையனாய்" என்று தெளித்துரைத்தது. சங்கற்ப அகங்காரங்களுடைமையே கர்தா போக்தாவாந் தன்மைக்கு ஏதுவாயிற்று. "சரீரம், இந்திரியம் என்பவற்றோடு[35] கூடியவனையே போக்தா என்பர்" என்றது கடோபநிடதம்.

பொ - ரை
பெருவிரலளவினனும், சூரியனை யொத்த செவ்வொளி வடிவினனும், கருவி கரணங்களைச் சாரந்து நின்று வினையைச் செய்பவனும், முன்வினைப்பயனை நுகர்பவனுமாகிய ஆன்மா வானவன் அணுவடிவமாய்க் காணப்படுகின்றான். இதனால் ஆன்மாவின் உண்மையியல்பு வியாபகம் என்பது கருத்தாயிற்று.

மந்:

௯ வாலாக்ரஶதபாகஸ்ய ஶததாகல்பிதஸ்ய ச/
போகோ ஜீவ: ஸ விஜ்ஞேய: ஸ சாநந்யயாய கல்பதே//

இ-ள்

வாலாக்ர ஶதபாகஸ்ய ஶததாகல்பிதஸ்ய- (ஒரு மயிர் முனையின், நூற்றிலொரு பாகத்தினது, நூற்றிவொருபாகமே, ஸ ஜீவ விஜ்ஜேய:- ஆன்மாவினது பிரமாணம் என்று அறியப்படுதல் வேண்டும், ஸ ச அநந்த்யாய கல்பதே - அவன் அளவறியப் படாதவன். (உயிர்கள் எண்ணில்லாதன என்பது கருத்து) இதனை சிவானந்தம் நுகர்தற்கு உரிமையுடைவன் என்றுரைப்பினு மனமயும் .

கு.பு.

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது தாயிர மாயினால்
ஆவியின் கூறுநூ றாயிரத்தொன்றே[26]

- திருமந்திரம்

பொ - ரை

ஒரு மயிர் முனையை நூறு கூறிவிட்டு அதில் ஒர் பாகத்தை நூறுபாகமாகச் செய்யின் அதில் ஒரு ஒர் பாகம்போல் ஆன்மா அறியப்பட வேண்டியவன், அவன் எண்ணில்லாதவன்.

மந்:

௧०

நைவ ஸ்த்ரீ ந புமாநேஷ நசைவாயம் நபும்ஸக:/
யத்யச்சரீரமாதத்தே தேந தேநஸயுஜ்யதே:[27]//

இ - ள்

ஏஷ - அவன், நைவஸ்த்ரீ - பெண்ணுமல்லன், ந புமாந்- ஆணுமல்லன், அயம் ந ச நபும்ஸ :- அலியமல்லன், யத் யத் சரீரம் ஆதத்தே - எந்த எந்த சரீரத்தை எடுக்கின்றானோ, தேநதேநஸ யுஜ்யதே - அந்த அந்த சரீரத்தோடு சேர்கிறான்.

பொ - ரை

ஆன்மா பெண்ணுமல்லன் ஆனுமல்லன் அலியுமல்லன், எந்த எந்த சரீரத்தை எடுக்கின்றானோ அதன் தன்மையாய் விளங்குகின்றான்.

மந்:
கக

ஸங்கல்பனஸ்பர்ஶந த்ருஷ்டி மோஹைர்
க்ராஸாம்பு வ்ருஷ்ட்யாத்மவிவ்ருத்திஜந்ம/
கர்மாநுகாந்யநுக்ரமேண தேஹீ
ஸ்தாநேஷ ரூபாண்யபிஸம்ப்ரபத்யதே//

இ - ள்

க்ராஸ அம்புவ்ருஷ்ட்யாச - உண்ணுதலினாலும் நீர் பருகுதலினாலும், ஆத்மவிவ்ருத்தி - (இச்)சரீரம் வளர்ச்சியுறுதல் போல, தேஹீ - ஆன்மாவானவன் - ஸங்கல்ப ஸ்பர்ஶந த்ருஷ்டி மோஹை:- ஸங்கற்பம் முதலிய அந்தக்கரணங்களின் தொழிலும் பரிசம் பார்வை முதலிய புறக்கரணங்களின் தொழிலுமாகிய இவற்றைத் தன்னுடையதென்றும் (அக்கரணங்களைத்) தான் என்றும் அபிமானிக்கும் மயக்கத்தினால், கர்மாணி அநுகாநி - கன்மத்துக் கீடான, அநுக்ரமேண - (அக்கன்மம் அனுபவித்தற் கேற்ற பக்குவ மெய்திய) முறைப்படி, ஸ்தாநேஷு - ஏற்ற இடங்களில், ரூபாணி - அதற்குரிய சரீரங்களை, ஸம்ப்ரபத்யதே - அடைகின்றான்.

பொ - ரை

உண்ணல் பருகுதல்களினால் சரீரம் வளர்ச்சியுறுமாறு போல, ஆன்மாவானவன் சுகதுக்க வடிவாகிய பிராரத்த போகங்களை நுகரும் காலங்களில் நான், எனது என்று அபிமானிக்கும் மயக்கத்தினால், ஆகாமியம் விளைய, அது பிராரப்தமாய்ப் பயன் தருதற்குப் பொருந்தும் முறைப்படி சுகதுக்கங்களாகிய போகங்க ளையுடைய புவனங்களில் ஏற்ற சரீரங்களையெடுத்து மீண்டும் மீண்டும் பிறந்திறந்து உழல்கின்றான்.

கு.பு.

மேல் மந்திரங்களிற் காட்டியபடி அசேதனமாகிய கருவி கரணங்களை யின்றி, தானே தனித்து நின்று ஒன்றை யறிய

மாட்டாத பரதந்திரனாகிய ஆன்மா விடத்தில் அந்தரியாமியாய் நின்று அவனறிவைக் கருவிகரணங்களிற் செலுத்திப் போகம் நுகர்விப்பது திரோதான சத்தி வடிவமாய் நிற்கும் இறைவன் திருவருளேயாம் என்றும், அதனால் தனக்கென்றொரு முதன் மையும். செயலும் யாண்டுமில்லை யென்னும் உண்மை யுனர்ந்து மயக்க மொழியின் (ஆகாமிய) வினையேறாது, பிறப்பொழிந்து இறைவன் திருவடியைச் சென்று தலைப் படுவன் என்பது கருத்தாகக் கொள்க.

நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமு மரனுடைமை - யாமென்னில்
எத்தநுவினின்று மிறைபணியார்க்கில்லை வினை
முற்செய்வினை யுந்தருவான் முன்[26]
என்றது சிவஞானபோதம்

"இறைபணியார்" என்றது, பசு பாசங்களினியல்பையுள்ளபடி யுணர்ந்து எல்லாச் செயலும் சிவனருள்வழி நிகழவனவே யென்று கண்டு கொண்டிருப்பவர்.

மந்:
கஉ

ஸ்தூலாநி ஸூக்ஷ்மாணி பஹூூநி சைவ
ரூபாணி தேஹீ ஸ்வகுணைர்வ்ருணோதி/
க்ரியாகுணைராத்மகுணைஶ்ச தேஷாம்
ஸம்யோகஹேதுரபரோ அபித்ருஷ்ட://

இ -ள்
தேஹீ - ஆன்மாவானவன், ஸ்தூலாநி ஸூக்ஷமாணி- தூலமும் சூக்குமமுமான, பஹூ"நிரூபாணி சை வ - பல சரீரங்களையே, ஸ்வகுணை - தன் குணங்களினாலே, வ்ருனோதி - பெறுகிறான், க்ரியா குணை:- கன்மங்களினியல்பாலும், ஆத்மகுணை:- சரிரத்தினியல்பாலும், தேஷாம் ஸம்யோக ஹேது:- எடுத்துக் கொண்ட அச்சரீரங்களோடு ஒன்றாந் தன்மையுடையனாயும், அபர: அபித்ருஷ்ட:- அவற்றின் வேறாகக் காரணப்படுகின்றான்.

பொ -ரை
ஆன்மா தன்கன்மத்துக்கீடாகத் தூலமும் சூக்குமமுமான பல சரீரங்களை எடுக்கின்றான். கன்மத்தினியல்பாலும் சரீரங்களினி

யல்பாலும் அச்சரீரங்களோடு தொடர்புற்றிருப்பினும் அவைபோலச் சடமாகாது சித்தாகவேயுளன்.

மந்:
கரு

அநாத்யநந்தம் கலிலஸ்ய மத்யே
விஶ்வஸ்ய ஸ்ரஷ்டாரமநேக ரூபம்/
விஶ்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம்
ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாஶைஶ:://

இ -ள்

அநாதி அநந்தம் - முடிவும் முதலுமற்றவராயும், கலிலஸ்ய மத்யே - சிதாகாயத்தின் மத்தியில், விஶ்வஸ்ய ஸ்ரஷ்டாரம் - உலகத் தைப் படைப்பவராயும், அநேக ரூபம்- அனேக வடிவம் கொள்பவ ராயும், விஶ்வஸ்ய பரிவேஷ்டிதாரம் - உலகத்தில் நிறைந்திருப்ப வராயுமுள்ள, ஏகம் தேவம் - ஒருவராகிய சிவபெருமானை, ஜ்நாத்வா - அறிந்து, முச்யதே ஸர்வபாஶைஶ:- எல்லாப் பந்தங்களி னின்றும் விடுபடுகின்றான். சிவபெரு மானை யறிந்தது பற்றி, சிவமயமாகின்றான் என்பது மேல் ஆறாம் மந்திரத்திற் காட்டப்பட்டது.

பொ - ரை

முடிவும் முதலுமற்றவரும். அருட் சத்தியினால் உலகினைத் தோற்றச் செய்பவரும், அனேக வடிவங் கொள்பவரும், எங்கும் நிறைந்தவரும் ஒருவருமாகிய சிவபெருமானையறிதலாகிய சிவஞானத்தினால் ஆன்மா எல்லாப்பந்தங்களினின்றும் விடுபட்டு வீட்டினைப் பெறுகின்றான்.

மந்:
கச

பாவக்ராஹ்ய மநீடாக்யம் பாவாபாவகரம் ஶிவம்/
கலாஸர்க்க கரம் தேவம் யேவிதுஸ்தே ஜஹுஸ்தநும்//

இ - ள்

பாவக்ராஹ்யம் - உண்மை ஞானத்தினால் அறியப்படுபவரும், அநீடாக்யம்-சரீரசம்பந்தமற்றவரும், பாவாபாவகரம் - உலகினைத் தோற்றியொடுக்கியவரும், கலா ஸர்க்க கரம் -

நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் பஞ்ச கலைகளை ஆன்மாவோடு கூட்டுபவரும், தேவம் ஶிவம் - ஒளிவடிவினருமாகிய சிவபெருமானை, யே விது:- எவர்கள் அறிகிறார்களோ, தே - அவர்கள், தநும் ஜஹு:- உடற்சம்பந் தத்தை விட்டவர்களாகின்றார்கள்.

பொ -ரை

உண்மை ஞானத்திலறியப்படுபவரும் சேதனரும் படைத்தல் முதலிய ஐம்பெருந்தொழில் செய்பவரும், (சிருட்டிக் கிரமப்படி), சாந்தியதீதை முதலிய பஞ்சகலைகளை ஆன்மாவோடியைப்ப வரும், ஒளிவடிவினருமாகிய சிவபெரு மானை யறிந்தவர்கள் (சிவஞானிகள்) இனிப்பிறக்க மாட்டார்கள். பாவக்ராஹ்யம் என்பதற்கு சிவோகம் பாவனையினால் அடையப்படுவரும் என்றுரைப்பினும்மையும்.

ஆறாமத்தியாயம்

1, 2 மந்திரங்களுக்குரிய உரைப்பிரதிகள் கிடைத்தில.
மந்திரங்களைத் தமிழ் எழுத்துப் பெயர்ப்பில்
கீழே தருகின்றோம். (பதி.ஆ)

மந்:

க ஸ்வபாவமேகே கவயோ வதந்தி
காலம் ததாந்யே பரிமுஹ்யமாநா:/
தேவஸ்யைஷ மஹிமா து லோகே
யேநேதம் ப்ராம்யதே ப்ரஹ்மசக்ரம்//

மந்:

உ யேநாவ்ருதம் நித்யமிதம் ஹி ஸர்வம்
ஜ்ஞ: காலகாரோ குணீ ஸர்வவித்ய:/
தேநேதம் கர்ம விவர்த்தேஹ
ப்ருதிவ்யப்தேஜோநிலகாநி சிந்த்யம்//

மந்:

ங தத்கர்ம க்ருத்வா விநிவர்த்ய பூய
ஸ்தத்வஸ்ய தத்வேந ஸமேத்ய யோகம்/
ஏகேந த்வாப்யாம் த்ரிபிரஷ்டபிர்வா
காலேந சைவாத்மகுணைஶ்ச ஸூக்ஷ்மை://

இ - ள்

தத் கர்ம க்ருத்வா விநிவர்த்ய - அந்த (ச் சிருட்டி)த் தொழிலைச் செய்து முடித்து, பூய:- பின்னர், தத்வஸ்ய தத்வேந- தத்துவத்தின் (சேர்க்கையைத்) தத்துவதத்தினோடு, ஸமேத்ய, யோகம் (பவதி)- இயைத்து விடுபவராக ஆகிறார், (எங்ஙனமெனில்) ஏகோ-

ஒன்றினாலும், த்வாப்யாம் - இரண்டினாலும், த்ரிபி:- முன்றினாலும், அஷ்டபி:- எட்டினாலும், காலேநச ஏவ ஸூஃம்மை: ஆத்மகுணை:- காலத்தினோடும், சூக்குமமான ஆன்ம குணத்தினோடும் இயைத்து விடுகிறார்,

கு.பு:(க)
"ஒன்றினாலும், இரண்டினாலும் மூன்றினாலும் எட்டினாலும்"

ஒன்று என்றது திரோதான சத்தியையை. தடையிலா ஞானம் எனப்படும் பராசத்தியை என்றுரைப்பது மமையும். இரண்டு முதலியன, அச்சத்தி ஒன்றே, ஐந்தொழில் செய்யுங்கால் பிரமா முதலியோரிடத்து நின்று, தொழில் வேறுபாட்டில் வைத்து எண்ணப்படும் சத்திபேதங்கள்.

இரண்டு ஞான, கிரியா சத்திகள். இச்சா சத்தி ஞானசத்தி யிலடங்கும் இதுபற்றியே

....

வல்லியர் கிரியை ஞானவல்லியின்கிளையாய்ச்சூழப்
பல்லுயிர்க்கருளைப்பூத்து பவநெறிசாய்த்திட்டன்ப
ரெல்லவர் தமக்கு முத்தியிருங்கனியுதவுமென்றும்[1]

என்று இரு சத்திகளை மட்டும் கூறினார், கந்தபுராண ஆசிரியர். அங்ஙனம் கூறினராயினும் சத்திகளின் தொழிற்பாடு கூறுமிடத்தில் (குறித்த செய்யுளின் ரும் சம் அடிகளில்) கிரியா சத்தியின் தொழிலாகிய "பவநெறிசாய்த்திட்டு" என்பதும், ஞானசத்தியின் தொழிலாகிய "முத்தியிருங்கனியுதவும்" என்பதுமாகிய இவற்றோடு இச்சா சத்தியின் தொழிலாகிய "பல்லுயிர்க் கருளைப் பூத்து" என்பதும் ஓதப்பட்டது. அருள் பூத்தல் கேவலத்திலும், ஏனைய இரண்டும் முறையே சகலத்திலும், சுத்தத்திலும் செய்யப்படுவன. சகலம் கலையோடு கூடியது.

மூன்று ஆரணி, சனனி. ரோதயுத்தரி(?) என்பன- இச்சத்திபேதங் களின் இயல்புகளை யெல்லாம் ஆகமங்களிற் காண்க.

கு.பு:(உ)
இவ்வத்தியாயத்து முதல் மந்திரத்திற் கூறிய சுவபாவவாதி (பொருள்களின் இயற்கையே உலகத்தோற்றத்திற்குரு காரணமெ ன்போர்), காலவாதி முதலிய சமயவாதி களனை

வரையும் மறுத்துரைத்திருப்பவற்றைத் தொகுத்துக் காட்டி முடிக்கின்றது இம்மந்திரம். எங்ஙனமெனில், மாயையும், அதன் காரிய சமூக மாகிய எப்பொருட்களும் அறிவற்ற சடப் பொருட்களே யாதலின், அவைதாமே ஒன்றோ டொன்றியைந்து காரியப்படமாட்டா. அவற்றை அங்ஙனமியைத்துக் காரியப் படுத்தற்கு அவற்றினும் வேறாயுள்ள பேரறிவும் பெருஞ்செயலு முடைய முதல்வனொருவன் வேண்டும் என்பதைப் புலப்படுப் பாராய் "தத்துவங்களோடு தத்துவங்களை இயைத்து விடுகின்றார்" என்றனர்.

இதனால், சுபாவவாதி பூதவாதி முதலியோர் மறுக்கப்பட்டனர். "காலத்துடன் தத்துவங்களோடியைத்தனர்" என்பதனால், காலம் சுதந்திரமாக நின்று உலகத்தைத் தோற்றுவிக்கும் என்னும் காலவாதி மறுக்கப்பட்டான். அனைத்தும் மாயையிலிருந்து தோன்றி ஆன்மாவின் அறிவை வரையறைப் படுத்தி நிற்குமென உணர்க. இனி இவற்றிற்கெல்லாம் வேறாகிய ஆன்மா அறிவுடைப் பொருளாயினும், தானாகவே அறியவும் செய்யவம் மாட்டாத பரதந்திரமுடைமையின், அது உலககாரணமாக மாட்டாது என்பதை அறிவுறுத்தற் பொருட்டு "சூக்குமமாகிய ஆன்மகுணங் களோடு தத்துவத்தை இயைத்து விடுகின்றார்" என்றனர்.

இதனால் புருடனாகிய ஆன்மாவே காரணமாகிய பிரமம், புருடனுக்க வேறாக ஒரு பிரமமும் இல்லை என்றுரைக்கும் மயாவாதி மறுக்கப்பட்டான். இவ்வாற்றால், சைவசித்தாந்தி யொழிந்த எல்லாச் சமயவாதிக்கும் இம்மந்திரத்தில் சுருங்கிய சொற்களினால் பூர்வ பக்கம செய்யப்பட்டமை நுண்ணுர்வாற் கொள்க.

மேற்கூறியவாற்றால், சிருட்டித் தொழிலைச் செய்து பின், திருவருள்நெறியில் ஆன்மாக்களுக்கு வினைப்போகம் நுகர்வித்தற் பொருட்டு ஒரு தத்துவத்தோடு மற்றொரு தத்துவத் தினை இயைத்து விடுகிறார். "ஆன்மாவிற்கு வினைப்போகம் நுகருதற்பொருட்டு" என்பது எஞ்சி நின்றது.

மந்:
௪

ஆரப்ய கர்மாணி குணாந்விதாநி
பாவாம்ஶ்ச ஸர்வாந் விநியோஜயேத்ய:/
தேஷாமபாவே க்ருதகர்மநாஶ:
கர்மக்ஷயே யாதி ஸ தத்வதோ (அ) ந்ய: //

இ - ள்

(ய): எவன், குணாந்விதாநி கர்மாணி - குணங்களோடு கூடிய கன்மங்களை, ஆரப்ய - செய்து, ஸர்வாந் பாவாந் விநியோஜயேத் - எல்லாப் பாவனைகளையும் (தனக்கு வினைப்பயன்களை ஊட்டி நிற்கும் முதல்வனுக்கு) ஆக்குகின்றானோ, ஸ:- அவன், தேஷாம் அபாவே- அந்தக் கன்மங்களின் இன்மையினால், க்ருதகர்மநாஶ: செய்த கன்மங்களின் பயன்களுமில்லா தொழிகின்றனவாதலான், கர்ம க்ஷயே- கன்ம ஒழிவில், தத்வத: அந்ய:- தத்துவங்களுக்கு வேறாயுள்ள (அம்முதல்வனை), யாதி - அடைகின்றான்.

கு.பு.

செய்த கன்மங்களை முதல்வனுக்கு ஆக்குதல் என்பது, எல்லாம் முதல்வன் செயலேயன்றித் தனக்கென்றொரு செயல் யாண்டு மில்லை யென்றறிந்து தன் முதன்மையினீங்கிநிற்றல். இதனை,

யான் செய்தேன் பிறர் செய்தார் என்னதியான் என்னு
மிக்கோணை ஞானவெரியால் வெதுப்பி நிமிர்த்துத்
தான் செவ்வே நின்றிடவத் தத்துவன்தான் நேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொளித்திட்டோடும்[2]

என்னும் சிவஞானசித்திச்செய்யுட் பொருளை வல்லார்வாய்க் கேட்டுத் தெளிக, அபக்குவர்க்குப் பக்குவத்தை வருவித்தற் பொருட்டுக் கூறியிருக்கும் கருமயோகமே இதுவாம் என மயங்கற்க, மேலதனை இறைபணி நிற்றல் என்ப.

மேல் மூன்றாம் மந்திரத்திற் கூறியபடி முதல்வன் தம் அறிவோடு தத்துவங்களையியைவித்து வினைப்பயன்களை யூட்டுவன் என்னும் உண்மையை நல்லாசிரியன் முன்னிலையில் தெளியவுணர் ந்தோர் இந்நிலை கைவரப்பெறுவர்.

பொ - ரை

செய்கின்ற எச்செயலிலும், தம்முதன்மை காணாது இறைவன் முதன்மையையே காண்போர், வினைக்கட்டிவிருந்து விடுபட்டு அவ்விறைவனை யடையும் பெருநிலை வாய்க்கப் பெறுவர்.

மந்:
ரு

ஆதி: ஸ ஸம்யோகநிமித்தஹேது:
பரஸ்த்ரிகாலாதகரோ (அ) பித்ருஷ்ட:/
தம் விஶ்வரூபம் பவபூதமீட்யம்
தேவம் ஸ்வசித்தஸ்தமுபாஸ்ய பூர்வம்//

இ - ள்

ஸ:- அவர், ஆதி:- முன்னுள்ளார், ஸம்யோக நிமித்த ஹேது:- (எல்லாப் பொருட்களின்) கலப்புக்களுக்கு நிமித்த காரணராயுள்ளவர், த்ரிகாலாத் பர:- மூன்றாகப் பகுக்கப்பட்ட காலதத்துவத்திற்கு மேலாயுள்ளவர், (அதனால்) காலமின்றி விளங்குகின்றார்,[3] விஶ்வரூபம் - எல்லாமாயுள்ளவரும், பவபூதம் - உலக காரணரும், ஈட்யம் - வழிபாட்டிற்குரியவரும், ஸர்வசித்தஸ்தம் - தன்னுள்ளத்தி லிருப்பவரும், பூர்வம்- உலகத்தோற்றத்திற்கு முன்னுள்ளவரும் ஆகிய, தம் தேவம் - அந்தத் தேவரை, உபாஸ்ய - உபாசித்து, (தத்துவத்திற்கு வேறாயுள்ள அவரை) அடைகிறான்.

கு.பு.

தத்துவத்திற்கு மேலாயுள்ளவர்" நித்தனென் றுரைப்பர் காலநீங்கிய நிலைமையாலே[3] என்றது சிவஞான சித்தி. தத்துவத்திற்கு வேறாயுள்ள அவரை யடைகின்றான் என்பது மேல் மந்திரத்திலிருந்து வருவித்துரைக்கப்பட்டது.

பொ-ரை

சிவபெருமான் உலகிற்கு நிமித்த காரணராகிய பரம முதற் பொருளாயுள்ளவர், காலம் கடந்தவர் விசுவரூபரும். விசுவகாரணரும், வழிபாட்டிற்குரியருமாகிய அந்தத் தேவரைத் தன்னிடத்திற் கண்டு உபாசிப்பவன் அவரை யடைகின்றான்.

மந்:
சு

ஸ வ்ருக்ஷகாலாக்ருதிபி பரோ அன்யோ
யஸ்மாத் ப்ரபஞ்ச: பரிவர்த்ததே (அ)யம்/
தர்மாவஹம் பாபநுதம் பரேஶம்
ஜ்ஞாத்வாஆத்மஸ்தமம்ருதம் விஶ்வதாம//

இ-ள்

யஸ்மாத் - எவரிலிருந்து, அயம் ப்ரபஞ்ச : பரிவர்த்ததே- இந்த உலகமானது சுழலுகின்றதோ, ஸ:- அவர், வக்ஷ்ருக்ஷகால ஆக்ருதிபி: பர:- உலகவிருக்ஷம் காலம் என்பவற்றின் வடிவங்களிலும் பெரியோர், அந்ய: - வேறாயுமுள்ளவர். தர்மாவஹம் பாபநுதம்- தருமத்தை நிலைநிறுத்திப் பாவத்தைப் போக்குபவரும், பரேஶம் - மகேசரும் (பவேஶம் என்பது பாடமாயின் சம்சாரத்திற்குத் தலைவரும் என்றுரைக்க), ஆத்மஸ்தம் - ஆன்மாவில் (அறிவிற் கறிவாய்) இருப்பாவரும், விஶ்வதாம - எல்லா ஒளிப்பொருளும் தாமாய் இருப்பவருமாகிய, அம்ருதம்- சிவபெருமானை, ஜ்நாத்வா- அறிந்து (வீட்டினை அடைகிறான்)

பொ - ரை

எவரால் இவ்வுலகம் சுழலுகின்றதோ, அவர் உலகம், காலம் என்பவற்றைக் கடந்துள்ளவர் புண்ணியத்தை நிறுத்திப் பாவத்தைப் போக்குபவர் மகேசர் ஆன்மாவில் சோதியாய் விளங்குபவர், இவ்வாறு சிவபெருமனை அறிந்து உபாசிப்பவன் வீட்டின்பத்தை அடைகின்றான்.

மந்திரங்கள் 7-11, உரைப்பகுதிப் பிரதிகள் கிடைத்தில.
மந்திரங்களைத் தமிழ் எழுத்துப் பெயர்ப்பில்
கீழே தருகின்றோம். (பதி.ஆ)

மந்:
எ

தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்
தம் தேவதாநாம் பரமம் தைவதம்/
பதிம் பதீநாம் பரமம் பரஸ்தாத்
விதாம தேவம் புவநேஶமீட்யம்//

மந்:
அ

ந தஸ்ய கார்யம் கரணம் ச வித்யதே
ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே/
பராஸ்ய ஶக்திர்வி விதைவ ஶ்ரூயதே
ஸவபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச//

மந்:
க

ந தஸ்ய கஶ்கித் பதிரஸ்தி லோகே
ந சேஶிதா நைவ ச தஸ்ய லிங்கம்/
ஸ காரணம் கரணாதிபோ
ந சாஸ்ய கஶ்சிஜ்ஜநிதா ந சாதிப://

மந்:
க0

யஸ்தந்துநாப இவ தந்துபி:
ப்ரதாநஜை: ஸ்வபாவத:/
தேவ ஏக: ஸ்வமாவ்ருணோத்ஸ
நோ ததாத் ப்ரஹ்மாப்யயம்//

மந்:
கக

ஏகோ தேவ: ஸர்வபூதேஷு கூட:
ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா/
கர்மாத்யக்ஷி: ஸர்வபூதாதிவாஸ:
ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணஶ்ச//

மந்:
கஉ

ஏகோ வ! நிஷ்க்ரியாணாம் பஹூநா
மேகம் பீஜம் பஹூதா ய: கரோதி /
தமாத்மஸ்தம் யே (அ) நுபஶ்யந்தி தீரா
ஸ்தேஷாம் சுகம் ஶாஶ்வதம் நேதரேஷாம் //

இ - ள்
ய: - எவர், நிஷ்க்ரியாணாம் பஹூநாம் - தொழிலற்றிருக்கும் சடப்பொருள்களை, ஏக: வஶீ- ஒருவாராய் நின்றியக்கும்

சுதந்திரரோ, (யா:- எவர்), ஏகம் பீஜம் பஹுதா கரோதி- ஒன்றாகிய முதற்காரணமாகிய மாயையைப் பலவாகச் செய்கின்றாரோ, ஆத்மஸ்தம் - ஆன்மாவினிடத்திற் பரமான்மாவாக இருக்கும் அவரை, யே தீரா:- எந்தத் தீரர்கள், அநுபஶ்யந்தி - தொடர்ந்து காணுகின்றார்களோ, தேஷம்- அவர்களுக்கே, ஶாஶ்வதம் சுகம்- அவர்களுக்கே நித்தியமான சுகம் உண்டாகிறது.

கு.பு.

தீரர் - திடசித்த முடைய மெய்ஞ்ஞானிகள்.

"தொடர்ந்து காணுகின்றார்களோ" என்ற அதனால் "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பார் பதார்த்தங்கள் பாரார்"[4] என்பது பெற்றாம். சிவஞானங் கைவரப்பெற்ற பெரியோர் அம்முதல்வனைத் தம்மிடத்தே கண்டு கொண்டு வேறின்றியிருப்பார். அந்நிலைக்கு மாறாக அந்நிலையி ற்றீர்ந்து உலக சுக துக்கங்களில் வீழ்ந்து அல்லலுறுதற் கேதுவாகிய காரியங்கள் எவைவரினும், அவற்றையெதிர்த்து வென்று, தம்குறிக்கோளிற் சலியாது நிற்பராகலின், அவர்கள் தீரர் எனப்பட்டனர்.

தெய்வச் சேக்கிழார் பெருமானும் அவர் பெருமையை பின்வரும் செய்யுளிற் பாராட்டியிருத்தல் காண்க:

ஆரங்கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரமீசன் பணியலா தொன்றிலர்
ஈர அன்பினர் யாதுங்குறைவிலார்
வீர மென்னால் விளம்புந் தகையதே[5]

பொ - ரை

சடமும் சித்துமாகிய எப்பொருட்களிலும் அந்தரியாமியாய் நின்று எவற்றையும் இயக்குபவரும், முதற் காரணமாகிய மாயையை உயிர்களின் போகானுபவத்தின் பொருட்டுத் தனுகரண போகங்களாய் விரியச் செய்பவருமாகிய சிவபெருமானைத் தம்மிடத்திலே கண்டு வேறின்றியிருக்கும் சிவஞானிகளே வீட்டினைத் தலைப்படுவர். ஏனையோர் பிறப்பிறப்புகளில் வீழ்ந்து துயருவர்.

ஆன்மாவாகிய தன்னை விவேகத்தினால் விசாரித்தறிந்து அதுவே பிரமமென மயங்கியலமரும் பசு ஞானிகள் பிறப்பிறப் புகளிற்

பட்டுத் துயருறுவர் என்பது கருத்து. அது இம்மந்திரத்தில் ஆன்மாவை யறிந்து என்று கூறாது, ஆன்மாவிலுறைபவரை (ஆத்மஸ்தம்) அறிந்து என்று விதந்தெடுத்துக் கூறியவாற்றால் வலியுறுத்தப் பட்டது.

அறிவிலவை யறியுமவர்கள்
குறியுள் புகுதுங்குணவன்..........................
என்றும்,

தாம்பிரமங் கண்டவர்போல் தம்மைக் கண்டாங்குவே
நான்பிரம மென்பவர் பால் நண்ணாதே.............[6]

என்றும் உமாபதி சிவாசாரிய சுவாமிகள் தம்நெஞ்சுக் கறிவுறுத்தியமை காண்க. (நெஞ்சு விடுதூது)

மந்:
கங

நித்யோ நித்யாநாம் சேதநஶ்சசேதநாநா
மேகோ பஹூ நாம் யோவிததாதி காமாந்/
தத் காரணம் ஸாம்க்ய யோகாதிகம்யம்
ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாஶை://

இ-ள்
ய:- எவன், நித்யாநாம் நித்ய:-நித்யர்களுக்குள் நித்தியரும், சேதநாநாம் சேதந:- சேதநர்களுக்குள் சேதநரும், ஏக:- தான் ஒருவராயுமிருந்து, பஹூநாம்காமாந் விததாதி - பலவாகிய, ஆன்மாக்களுக்கு வேண்டியவற்றைத் தருபவருமா யிருக்கின் றாரோ, ஸாங்க்யயோக அதிகம்யதே-சாங்கியயோகத் தினா லறியப்படுகின்ற, தத் தேவம் காரணம் - அந்தத் தேவராகிய சிவபெருமானுடைய காரணத்தன்மையை, ஜ்நாத்வா முச்யதே ஸர்வபாஶை:- அறிந்து எல்லாப் பாசங்களிலிருந்தும் விடுபடுகிறான்.

பொ-ரை
நித்தியர்களுள் நித்தியரும், சேதனர்களுக்குள் சேதனரும், எண்ணிறந்த உயிர்களுக்கு வேண்டியவற்றைச் செய்யும் ஒருவரும் சாங்கியயோகத்தால் அறியப்படுபவருமாகிய சிவபெருமானது காரணத்தன்மையை அறிய வல்ல சிவஞானி-கள் பாசக்கூட்டங்க ளிலிருந்து நீங்கித் திருவடிப்பெரும் பேறு பெறுகின்றார்கள்.

மந்:
கச

ந தத்ர ஸூர்யோ பாதி நசந்த்ரதாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோ(அ) யமக்நி :/
தமேவ பாந்தமநுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி //

இ- ள்

தத்ர - அவரிடத்தில், ஸூர்ய : ந பாதி - சூரியன் பிரகாசிப்பதில்லை, சந்த்ர தாரகம் - சந்திரனும் நட்சத்திரங்களும் பிரகாசிப்பதில்லை, இமா வித்யுத: ந பாந்தி- இந்த மின்னல்களும் பிரகாசிப்பதில்லை, அயம் அக்நி: குத:- இந்த அக்கினி எங்கே பிரகாசிக்கப் போகிறது, ஸர்வம் - எல்லாவற்றையும், விளக்குகின்ற, சூரியன் முதலிய ஒளிப் பொருட்கள் யாவும், பாந்தம் தம் ஏவம் அநுபாந்தி - சோதியாயுள்ள அவரைச் சார்ந்து நின்றே பிரகாசிப்பனவாகும், தஸ்ய பாஸா - அவருடைய (திருவருள்) ஒளியினால், இதம், ஸர்வம் பாதி-இந்த எல்லாம் பிரகாசிக்கின்றன.

கு.பு.

இந்த எல்லாம் என்றது சூரியன் முதலிய ஒளிப்பொருட் களையும், அவற்றால் விளக்கப்படும் ஏனைச் சடப்பொருட் களையும், சித்துப் பொருளாகிய உயிர்வர்க்கத்தையும் கருதும். "சோதிக்குள் சோதியாயுள்ள அவரை[7]"- பிருஹத்தாரண் யோபநிடதம்

ஓதியாருமறிவாரில்லை யோதியுலகெலாம்
சோதியாய் நிறைந்தான் சுடர்ச் சோதியுட்
சோதியான்-[8]

ஞா- தேவாரம்

நாயகன் கண்நயப்பால் நாயகி புதைப்பவெங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பின்
தேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுக்குத் தேசது என்னார் [9]

இச்செய்யுள் புராணக் கதையை ஆதர்சமாகக் காட்டி, உலகின்கண்ணுற்ற ஒளிகளெல்லாம் சிவனது திருமேனிப்பிர காசமே என்பதை வலியுறுத்திற்று.

பொ- ரை

சூரியன் சந்திரன் தாமே சுதந்திரமாக விளங்கமாட்டா, பிறவனைத்தையும் விளக்க மாட்டா. சிவபெருமானது திருவருளொளியினாலேயே சடமும் சித்துமாகிய இவ்வுலகனைத்தும் விளங்குகின்றன.

மந்:

கரு

ஏகோ ஹம்ஸ: புவநஸ்யாஸ்ய மத்யே
ஸஏவாக்நி: ஸலிலே ஸம்நி விஷ்ட: /
தமேவ விதித்வா அதிம்ருத்யுமேதி
நாந்ய: பந்தா வித்யதே (அ)யநாய //

இ-ள்

அஸ்ய புவநஸ்ய மத்யே - இந்தம் புவனத்தின் மத்தியில், ஹம்ஸ ஏக:-அமிஸராகிய ஒருவருளர், ஸ ஏவ- அவரே, ஸலிலே ஸம்நி விஸ்ட அக்நி:- நீரில் வைக்கப்பட்டிருக்கிற (விளக்கு) அக்கினியாவர், தம் ஏவ விதித்வா - அவரையே யறிந்து, அதி ம்ருத்யும் ஏதி - ஆணவமல இருளைக் கடக்கிறான், அயநாய- (அங்ஙனம் மலபந்தத்தினீங்கி) வீட்டினை யடைதற்கு, ந அந்ய: பந்தா வித்யதே- வேறு வழியொன்றும் (வேதங்களில்) அறியப்படவில்லை

கு.பு - க

மிருதயு என்பது ஆணவத்தின் பரியாய நாமம் என்று மிருகேந்திரம் கூறும். மிருத்யு முதலிய பரியாய நாமங்களினால் குறிக்கப்படுவது ஆணவ மலமே என்பதைப் பல நூல்கள் செய்தவர்கள் அறியமாட்டார்கள் என்று அப்பிரகரண...வது செய்யுள் கூறுகின்றது"[10]

கு.பு:உ

"நீரில் விளங்கும் அக்கினி யாவர்" என்பது நீர்போலச் சலனசுபாவமுடைய அந்தக் கரணத்தில் விறகில் நெருப்புப் போல நிறைந்திருப்பவன் என்பதைக் குறிக்கும்.

பொ - ரை

எல்லாப் பொருட்களிலுமொருவராக நிறைந்திருக்குந் தன்மையினால் "அமிச" என்று கூறப்படுபவரும், நீரினுள் விளங்கும் நெருப்பாயுள்ளவருமாகிய சிவபெருமானை யறிந்து ஆணவமலக் கட்டிலிருந்து விடுபடுகின்றான். அப்பேறு பெறுவதற்கு வேறு வழியில்லை.

மந்திரங்கள்16-23 உரைப் பகுதிப் பிரதிகள் கிடைத்தில.
மந்திரங்களைத் தமிழ் எழுத்துப் பெயர்ப்பில்
இங்குத் தருகின்றோம். (பதி. ஆ.)

மந்:
கசு

ஸ விம்வக்ருத் விம்வவிதாத்ம யோநிர்
ஜ்ஞ: காலகாரோ குணீ ஸர்வவித்ய:/
ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞபதிர் குணேமு :
ஸம்ஸார மோக்ஷஸ்திதி பந்தஹேது://

மந்:
கா

ஸ தந்மயோ ஹ்யம்ருத ஈமஸம்ஸ்தோ
ஜ்ஞ: ஸர்வகோ புவநஸ்யாஸ்ய கோப்தா/
ய ஈமே(அ)ஸ்ய ஜகதோ நித்யமேவ
நாந்யோ ஹேதுர்வித்யத ஈமநாய//

மந்:
கஅ

யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்
யோ வைவேதாம்ம்ச ப்ரஹிணோதி தஸ்மை/
தம் ஹ தேவம் ஆத்மபுத்திப்பரகாமம்
முமுக்ஷுர்வை மரணமஹம் ப்ரபத்யே//

மந்:
கக

நிஷ்கலம் நிஷ்க்ரியம் மாந்தம் நிரவத்யம் நிரஞ்சநம்/
அம்ருதஸ்ய பரம் ஸேதும் தக்தேந்தநமிவாநலம்//

மந்:
உ ௦

யதா சர்மவதாகாஶம் வேஷ்டயிஷ்யந்திமாநவா:/
ததா தேவமவிஜ்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி//

மந்:
உக

தப: ப்ரபாவாத் தேவப்ரஸாதாச்ச
ப்ரஹ்ம ஹ ஶ்வேதாஶ்வ தரோ(அ) த வித்வாந்/
அத்யாஶ்ரமிப்ய: பரமம் பவித்ரம்
ப்ரோவாச ஸம்யக்ரிஷிஸங்கயுஷ்டம்//

மந்:
உஉ

வேதாந்தே பரமம் குஹ்யம் புராகல்பே ப்ரசோதிதம்/
நா(அ)ப்ரஶாந்தாய தாதவ்யம்நா (அ)புத்ராயா
ஶிஷ்யாய வாபுந://

மந்:
உ௩

யஸ்ய தேவே பரா பக்தி: யதா தேவே ததா குரௌ/
தஸ்யைதே கதிதா ஹ்யர்தா: ப்ரகாஶந்தே மஹாத்மந/
ப்ரகாஶந்தே மஹாத்மந இதி//

அனுபந்தம்

கிடைக்கப் பெறாத உரைப்பகுதிகளுக்குரிய மந்திரங்களின் தமிழாக்கம். தமிழாக்கம் எம்முடையது. (பதி.ஆ.)

முதலாமத்தியாயம்

மந்:

௯ பிறப்பில்லாதன இரண்டு: ஒன்று அறிவது; ஆளுமாற்றலுள்ளது. மற்றது அறிவற்றது; ஆளுமாற்றலற்றது. இன்னறான்றுளது. இவ்விரண்டனையும் இணைத்து நிற்பது; அது கிரியைகளுக்கப்பாற்பட்டது; அனைத்துருவங்களும் தன்னுடையனவாக உள்ளது; அந்தமில்லாதது; இம்முன்றையுமொன்றாய்க் கண்டால்; அது பிரமம்.

மந்:

௧௦ பிரகிருதி அழிவுள்ளது. சிவபெருமான் அழிவற்றவன், அமிர்தம். பிரகிருதியையும், ஆன்மாவினையும் ஒளிமயமான ஒருவன் ஆள்கின்றான். அவனை இடையறாது தியானிப்பதனாலும், இணங்கி உறவு பூண்டிருப்பதனாலும், "நீ அது" என்னும் தத்துவார்த்த பாவனையினாலும், முடிவில் அனைத்து மயக்கங்களும் நீங்கும்.

மந்:

௧௧ சோதி வடிவினான தேவனைக் காண சர்வ பாசங்களும் அறும், பாசங்களற்றுப்போக, துன்பங்கள் தேய்ந்து தேய்ந்து போகும்; மரணமும் பிறப்புமில்லை. அவனை இடையறாது தியானித்தலினால், உடம்பு இறந்தே விட்ட நிலையில், அனைத்துலக இறைமை; ஒருவனென்னு மொருவனென நிற்கும் நிலை; திருவனைத்தும் பெற்ற திருப்தி நிலை.

மந்:
கஉ நித்தியமாய், ஆத்மாவில் ஆத்மாவாய் உள்ள இது அறியப்பட வேண்டியது. இதனைத் தவிர அறியப்பட வேண்டியது வெறொன்று சிறிதுமில்லை. போகி, போகப்பொருள், இரண்டனையும் பிரேரித்து நிற்பது. இவை மூன்றும், எல்லாமாகச் சொல்லப்பட்டது. மூன்றாகிய இவை இயைந்து நின்றால் அது பிரமம்.

மந்:
கங அக்கினி அதன் பிறப்பிடமாகிய விறகில் காணப்படுவதில்லை எனினும், விறகு அது அதுவாக அழிவின்றி இருக்கும். அக்கினி மீண்டும், அதன் பிறப்பிடமாகிய விறகில் பெறப்படலாம். அவ்வாறே, இரண்டனையும், ஆன்மாவையும் பரமான்மாவையும் உடம்பில் பிரணவத்தினால் பெற்றுக்கொள்ளலாகும்.

மந்:
கச சுய உடம்பினைக் கீழ்க்கோலாகவும், பிரணவத்தினை மேற்கோலாகவும் கொண்டு, தியானமென்னும் கடைதலினை அப்பியசித்தலினால், மறைந்துள்ளவன் போலிருக்கும் தேவனைக் காணுதல் வேண்டும்.

மந்:
கரு எள்ளில் எண்ணெய் போலவும், தயிரில் நெய்போலவும் ஆற்றுப் படுகையில் நீர் போலவும், கடை கோலில் தீ போலவும், சத்தியத்தினாலும், தவத்தினாலும் அவனையே நோக்குகின்றவன் ஒருவன், அவனை ஆத்மாவில் ஆத்மாவாகக் கண்டு அகப்படுத்திக் கொள்ளுதல் ஆகும்.

மந்:
கசு ஆத்ம வித்தையிலும் தவத்திலும் விளங்கித்தோன்றும் இயல்பினனும், சர்வ வியாபியும், பாலில் நெய்போலபவனாகிய அவன், பிரமம், மேலான பிரமோபநிடத்தப் பொருள், மேலான பிரமோபநிடதப் பொருள்.

இரண்டாமத்தியாயம்

மந்:
க

சத்திய தர்சனத்தின் பொருட்டு, சவிதா முதற்கண் மனத்தைப் புததியோடு சேர்த்து, அக்கினியின் சோதியினை பூமியிலிருந்து வெளிக்கொணர்ந்தான்.

மந்:
உ

சவிதாவினருளால், ஒருங்கிய மனத்தோடு, விண்ணுலக வாழ்வுக்காக இய்ன்ற சத்தியோடு முயல்வோமாக.

மந்:
ந

சவிதா, மனத்தினோடு புத்தியினைப் பொருத்திப் பரஞ்சோதியினைக் காண்பதன் நிமித்தம் கருவி கரணங்களைப் பக்குவப் படுத்துவாராக.

நாலாமத்தியாயம்

மந்:
சு

ஒரு மரத்தில் அழகிய சிறகுகளையுடைய இரு பறவைகள்: இணைபிரியாதவை, நட்புக் கொண்டவை, ஒன்றையொன்று தழுவிக்கொண்டிருக்கின்றன. இவற்றிலொன்று கனிந்த பழத்தை உண்கின்றது. மற்றது, உண்ணாது பார்த்துக் கொண்டிருக்கின்றது.

மந்:
எ

ஒரு மரத்தில் புருடன் அஞ்ஞானத்திலகப்பட்டு, மயங்கித் துன்புறுகின்றான். பக்குவம் வருதலும் ஆள்பவனாகிய மற்றவனைக் கண்டு, இதுவெல்லாம் அவனது மகிமையே என்று துன்பங்களினின்றும் விடுபடுகின்றான்.

மந்:
கக

எவன் ஒருவன் ஒவ்வொரு உயிரின் தோற்றத்திலும் அதிட்டித்து இருக்கின்றானோ, எவனில் இது எல்லாம் ஒடுங்கி மீண்டும் தோன்றுகின்றனவோ, எவன் ஆள்கின்றவனாக இருக்கின் றானோ, எவன் வரங்கள் நல்குபவனாக இருக்கின்றானோ, எவன் ஒளிமயமாக இருக்கின்றானோ எவன் வழிபாட்டுக் குரியனாக இருக்கின்றானோ அவனைக் கண்டு, ஒருவன் சாசுவதமான சாந்தியினை அடைக்கின்றான்.

ஆறாமத்தியாயம்

மந்:
க

புலவர்களிற் சிலர் சுவபாவம் காரணம் என்றும், இன்னும் சிலர் காலம் காரணம் என்றும் மயங்கிக் கூறுவர் இத்தேவனது மகிமையினாலேயே, இப்பிரமசக்கரம் சுழல்கிறது.

மந்:
உ

எவனால் இது எல்லாம் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ, அவன் அறிபவன்; காலகர்த்தா; எல்லா அறிவும்; நிலம், நீர், தீ, வாயு, ஆகாயம், பற்றிய காரியப்பாடுகளைத்தும் அவன் விருப்பினால் நடந்து கொண்டிருக்கின்றன. இது சிந்தனைக்குரியது.

மந்:
எ

அவன் ஈஃவார்களில் பரமேஃவரன்: மகாஈஃவரன்: தெய்வங்களில் தெய்வம்: பதிகளில் பதி: அப்பாலுக்கப் பாலானவன், புவனங்களை ஆள்பவனும், வணக்கத்திற்குரியனும் ஒளிமயமானவனுமாகிய அவனைக் கண்டு, அறிந்தோம்:

மந்:
அ

அவன் செய்யும் காரியமில்லை, கரணமுமில்லை. -அவன் அறியப்படுவனவல்லன். அவனுக்கொப்பாரு மிக்காருமில்லை. அவனது மேலான சத்தி - பராசத்தி - பலவாறு புலப்பட்டுத் தோன்றும் எனக் கூறுகின்றார்கள். அவனுடைய ஞான கிரியா சத்திகள் அவனுக்கியல்பாக உள்ளன.

மந்:
௬

அவனுக்குப் பதியென ஒருவருமில்லை. உலகில் அவனை ஆள்பவரும் இல்லை; அவனை உணர்த்தும் குறியும் இல்லை. அவனுக்கு மேலான காரணரும் இல்லை. கரணங்களுக் கெல்லாம் தலைவனாய தலைவன் அவன். அவனைப் பெற்ற-வனும் இல்லை, அவனுக்கு அதிபதியுமில்லை

மந்:
௧0

சிலந்தி, நூலினால் தன்னைச் சுற்றி மூடிக்கொள்வது போலே ஏகனாகிய, ஒளிமயமான அவன், பிரகிருதியில் விளைவன வற்றால் தன்னை, தனக்கே யமைந்த ஒரு முறையில், மூடிக் கொள்கிறான். அவன், நித்தியமான தன்னுடன் நம்மை இணைத்துக் கொள்வனாக

மந்:
௧௧

ஒளிமயமான ஒருவனென்னும், ஒருவனாகிய அவன் அனைத்-துயிர் களிலும் மறைந்து உள்ளான், அனைத்தும் அவனிலடக்கம். அனைத்துயிர்களிலும், உயிர்க்குயிராய் உள்ளே இருக்கின்றான். எம் கண்மங்களை, செயல்களைக் கண்காணித்து கொண்டிருக் கின்றான். அனைத்துக்கும் அவனே ஆதாரம், சாக்ஷி,அறிபவன், நிர்க்குணன், தனிப்பெருந் தன்மையன்.

மந்:
௧௬

செயலெல்லாம் அவன் செயல். எல்லா அறிவும் அவன் அறிவு. அவன் தன்னிலே தோன்றித், தானாக இருப்பவன். அறிபவன், காலத்தின் கர்த்தா, குணங்களைக் தன்னுடையனவாகக் கொண்டவன், அனைத்தும் அறிந்தவன், உலகில்பிறந்துழலும் உயிர்களை ஆளுந்தலைவன், முக்குணங்களை ஆளும் ஈசன். அவனே. வாழ்வு, பந்தம், நிலைபேறு, முத்தி ஆகிய இவற்றுக்குக் காரணன்.

மந்:
கா

தான் தானாகவே உள்ள அவன் அமிர்தம்; இராஜாவாக இருக்கினறான். அவன் அறிபவன், எங்கும் நிறைந்தவன், புவனங்களின் காவலன், நித்தியமாய் இவ்வுலகத்தினை ஆள்பவன். ஆள்வதற்கு வேறு காரணர் ஒருவரும் அறியப்படவில்லை.

மந்:
கஅ

எவன் பிரமனை முனைநாள் படைத்து, அவனுக்கு வேதங்களை வெளிப்படுத்தினானோ, எவன் ஆன்மஞானத்தில் பிரகாசிப்பவனோ, எவன் ஒளிமயமானவனோ, அவனை வீட்டின்பத்தினை விரும்புகின்ற யான் சரணடைகின்றேன்.

மந்:
ககூ

அவன் பகுதிகளற்றவன், கிரியைகளுக்கு அப்பாற்பட்டவன். சாந்தசொரூபன், வாக்கில் அகப்படாதவன், மறுவற்றவன். அமரத்துவத்திற்கு மேலான பாலமாக அமைந்த அவன், புகையற்ற அக்கினிச் சுவாலை.

மந்:
உ०

எப்பொழுது மானிடர்கள் ஆகாயத்தைத் தோல்போலே உரித்துப் போர்த்துக் கொள்வார்களோ, அப்பொழுது அவர்கள் ஒளிமயமான தேவனாகிய சிவபெருமானைக் காணாது, துன்பங்களின் முடிவினைக் காண்பர்.

மந்:
உக

மேலானதும், பவித்திரமானதும், சாதுக்கள் கூட்டத்திற்கு இன்பம் விளைப்பதும் ஆகிய மெய்ப்பொருள் பற்றிய இதனை, தவவலி மையினாலும், திருவருட்பிரசாதத்தாலும் சுவேதாசுவதர மகரிஷி பக்குவிகளுக்குத் திருவாய்மலாந்தருளினார்.

மந்:
உஉ

முன்னர், ஒரு கற்பத்திலே, வேதமுடிபாக இப்பரம இரகசியம் கூறப்பட்டது. இது புலனடங்கி மனவமைதியில்லாதவனுக்கு வழங்கப்படுதல் கூடாது, இன்னும் சற்புத்திரனல்லாதவனுக்கும், நல்ல சீடனல்லாதவனுக்கும். வழங்கப்படுதல் கூடாது.

மந்:
உங

எவன் கடவுளிடத்தில் மேலான பத்திசெய்கின்றானோ, எவ்வாறு கடவுளிடத்திலோ, அவ்வாறே குருவிடத்தும் பத்தி செய்கின் றானோ, அவனிடத்தில் இங்குக் கூறப்பட்டவை பிரகாசிக்கும். அவன் மகான், மகாத்மா, அவனிடத்தில் பிரகாசிக்கும்.

சுவேதாசுவதர மஹர்ஷி வெளிப்படுத்திய
சுவேதாசுவதரோபநிடதம் முற்றிற்று.

மேற்கோள் விபரக் குறிப்புகள்

சாந்தி மந்திரம்

முதலாமத்தியாயம்

1. குருவும் சீடனும் ஞானவிசாரம் தொடங்குவதற்கு முன் உச்சரிக்கும் வணக்கமும், வேண்டுதலும்.
2. யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே/
   யேந ஜாதாநி ஜீவந்தி/
   யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி/
   தத்விஜ்ஞாஸஸ்வ/
   தத்ப்ரஹ்மேதி//
   தைத்திரிய உப. 3.1.
   108 உபநிடதங்கள் பக் 26.
3. சம்பந்தர் I, 128 திருவெழுகூற்றிருக்கை. அடிகள் 2-4 பக். 197
4. சிவஞா. சித். (சுப) சூத் 1 (அதி.2) 33 பக்.57
5. மேற்படி., சூத் 2 (அதி.3) 55 பக் 133.
6. மேற்படி., சூத் 2 (அதி.3) 56 பக் 133.
7. சிவஞா. போ. சிவஞா. பாடி. சூத்2 அதி.2 பக் 216
8. சிவஞா. சித் (சுப) சூத் 1, (அதி. 1) பக். 30-42
9. இம்மேற்கோள் உறுதி செய்யப்படவில்லை.
10. இம்மேற்கோள் உறுதி செய்யப்படவில்லை.
11. சிவஞா. போ. சிவஞா. பாடி. சூத்.9 அதி.1 வெண்பா 2 பக் 505
12. இம்மந்திரக்குரிய உரைப்பகுதி கிடைக்கவில்லை.
13. நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ

நமேதயா ந பஹு¬நாஸ்ருதேந/
யமேவைஷ விவ்ருணுதே தேநலப்ய
ஸ்தஸ்யைஷ ஆத்மா தநாம்ஸ்யாம்//
கடோபநிஷத். 1, 2, 22,
108உபநிடதங்கள் பக். 6

14. ந சக்ஷீஸ க்ருஹ்யதே நாபி வாசா
நாந்யர்தேவைஸ்தபஸா கர்ணா வா
ஜ்ஞாந ப்ரஸாதேந விஶுத்தஸத்வஸ்ததஸ்து
தம் பஶ்யதே நிஷ்கலம் த்யாயமாநா:
முண்டகோபநிஷத். iii, i, 8
108 உபநிடதங்கள் பக். 17

15. சிவஞா. சித் (சுப) சூத் 9, 1 பக் 272

16. அப்பர் vi, 25.1 திருவாரூர், திருத்தாண்டகம் பக் 946

17. திருவண்டப்பகுதி அடிகள் 131-2

18. சிவபுராணம் அடி17 பக் 5

19. காரைக்காலமமையார்: அற்புதத்திருவந்தாதி
பதினோராம் திருமுறை, பக்.1.6

20. சிவஞா. சித்.சூத்.9, (அதி.1), 2, பக் 274

21. ப்ருதிவீச ப்ருதிவீமாத்ராச ஆபோஶ்சாபோ மாத்ராச
தேஜஶ்ச தேஜோமாத்ரா ச...
ப்ரஶ்நோபநிஷத் ஙை, 8
108 உபநிடதங்கள் பக் 12

22. சிவஞா போ. சிவஞா. பாடி. சூத். 6. அதி.2 பக் 436

23.24. இம் மேற்கோள்கள் உறுதிசெய்யப்படவில்லை

25. அப்பர் vi, 38, 7 திருவையாறு, திருத்தாண்டகம். பக்979

26. காரைக்காலம்மையார். அற்புதத் திருவந்தாதி 20. பக் 11

27. த்வா ஸு பர்ணா ஸயுஜா ஸகாயா
ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே/
தயோரந்ய: பிப்பலம் ஸவத்வாத்த்யநஶ்ந்
அபிசாகஶீதி//

28. இம்மேற்கோள் உறுதி செய்யப்படவில்லை.

29. ந ஜாயதே ரு ம்ரியதே வா விபஶ்சி
த்நாயம் குதஶ்சிந்ந பபூவ கஶ்சித்/

அஜோ நித்ய: மாஸ்வதோ (அ) யம் புராணோ
நஹந்யதே ஹந்யமாநே மரீரே//
கடோப நிஷத் 1,2,18
108 உபநிடதங்கள் பக். 6.

30. ஹந்தா சேந்மந்யதே ஹந்து ஹதம்சேந்மந்யதே ஹந்தம்
உபௌ தௌ நவிஜாநீதோ நாயம் ஹந்தநஹந்யதே
கடோபநிஷத் 1,2,19

31. அணோர் அணீயாந் மஹதோ மஹீயா
நாத்மா (அ) ஸ்ய ஜந்தோர் நிஹிதோ குஹாயாம்
தமகரது: பம்யதி வீதமோகோ
தாதுப்ரஸாதாந் மஹிமாநமாத்மந:
கடோபநஷத் 1, 2, 20
108 உபநிடதங்கள் பக்.6

32. அப்பர் vi, 45 9 திருவொற்றியூர், திருத்தாண்டகம் பக் 995.

33. சிவஞா. சித். (சுப)சூத் 2, (அதி.1) 2; பக் 109

34. இம்மேற்கோள் உறுதி செய்யப்படவில்லை.

35. அப்பர் vi, 95, 3 தனித்திருத்தாண்டகம பக் 1110.

36. சம்பந்தர் i, 11,3 திருவிழிமிழலை பக். 21

37. திருக்களிற்றுப்படியார் 86. சித்தாந்தசாத்திரம் பக். 703

38. இம்மேற்கோள் உறுதி செய்யப்படவில்லை

39. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை

40. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை

41. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை

42. பார், மேல் பக் 05

43. சிவஞாபோ. சிவஞா. பாடி சூத்1 அதி.2, மேற்கோள் பக் 87

44. ஸத்ஏவ ஸௌம்ய இதம் அக்ர ஆஸீத்
சாண்டோக்கியோபநிஷத் vi.2.1.
108 உபநிடதங்கள் பக். 59.

45. சம்பந்தர் i, 22.7 திருமறைக்காடு பக்.38.

46. அப்பர் iv 112, 7 தனித்திரு விருத்தம் பக் 745.

47. கோயில் நான் மண்மாலை 24. பாட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடல்கள் பகுதி,1 பக் 48

48. சிவ ஞா. சித் (சுப) சூத். 1, (அதி 2) 32 பக் 56
49. மேற்படி சூத். 1, (அதி2) 48 பக். 70.
50. சிவஞா.போ.சிவஞாபாடி. சூத்.1, அதி.2.பக்.107.
51. யதோர்ண நாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச
யதா ப்ருதிவ்யாமோஷதய: ஸம்பவந்தி
யதா ஸத: புருஷாத் கேஸ லோமாநி
ததாக்ஷராத் ஸம்பவந்தி விஸ்வம்
முண்டகோபநிஷத் 1,1,7
108 உபநிடதங்கள் பக் 14.15
52, 53, 54 இம்மேற்கோள்கள் உறுதி செய்யப்படவில்லை.
55. சிவஞா. சித் (சுப) சூத்.2,(அதி.4) 74 பக் 147
56. இம்மேற்கோள் உறுதி செய்யப்படவில்லை
57. இமம் மத்வதம்வேத ஆத்மாநம் ஜீவமந்திரகாத்
ஈஸ பூதபவ்யஸ்ய ந ததோ விஜிகுப்ஸாரும்
ஏதத் வை தத்
கடம் ii, i 5
108 உபநிடதங்கள் பக். 7
58. அப்பர் v, 98, 3 உள்ளத்திருக்குறுந்தொகை. பக் 882
59,60. இம்மேற்கோள்கள் உறுதி செய்யப்படவில்லை.
61. சிவஞா. போ. சிவஞா. பாடி. சூத்தி5, அதி. 2, வெண்பா1, பக் 385
62. சிவஞா. சித் (சுப.) சூத் 5, பக். 203
63. மேற்படி., சூத் 5, (அதி.2) 6 பக் 204
64. மேற்படி., சூத் 2(அதி. 4) 80. பக் 151
65. மேற்படி., சூத் 8, (அதி2) 28 பக் 255
66. திருவிடைமருதூர் மும்மளிக்கோவை, 13. பட்டினத்துப்பிள்ளை யார் திருப்பாடல்கள் பகுதி1, பக். 181
67. கோயிற்றிருப்பதிகம் 7. பக். 360
68. பராபரக்கண்ணி 877 பக். 539
69. எந்நாட்கண்ணி, 28 பக். 656
70. குழைத்தபந்து,7 பக். 479.

இரண்டாமத்தியாயம்

1. அத்யாத்மயோகாதிகமேன தேவம்
மத்வா தீரோ ஹர்ஷஶோகௌ ஜஹாதி
கடோபநிஷத் I, 12
108 உபநிடதங்கள். பக் 6.
2. யச்சேத்வாங்மநஸீ ப்ராஜ்ஞஸ்தத்யச்சேஜ்ஞாந ஆத்மநி
ஜ்ஞாநமாத்மநி மஹதி நியச்சேத்தத்யச்சாந்த ஆத்மநி
கடோபநிஷத் 1,3,13
108 உபநிடதங்கள் பக்.7.
3. சிவஞா. சித் (சுப) சூத்4 (அதி2) 2, பக். 169.
4. கோயிற்றிருப்பதிகம் 7, பக். 391.
5. தில்லைவாழ் அந்தணர் புராணம்1, பக். 242.
6. தடுத்தாட் கொண்டபுராணம் 106. பக் 209..
7. சிவஞா. சித். (சுப) சூத்.2 (அதி.2) 16 பக் 103.
8. அப்பர் iv, 99, 1, திருவேகம்பம், விருத்தம் பக். 731.
9. அற்புதப்பத்து, 3 பக். 527.
10. அப்பர் iv, 92, 14 திருவையாறு, திருவிருத்தம் பக். 722.
11. தடுத்தாட் கொண்டபுராணம் 193 பக்.239.
12. சிவஞா. சித் (சுப) சூத் 8(அதி4) 38 பக். 269.
13. அப்பர் vi, 95, 3 தனித்திருத்தாண்டகம் பக். 1110.
14. இம்மந்திரம் இவ்விடங்களிலும் வருகின்றது என்பது.
15. அறிஞர்களிலும் அறிஞன்.
16. சம்பந்தர் 1, 126,7 திருக்கழுமலம், திருத்தாளச்சதி. பக் 194.
17. அப்பர் vi, 27,3 திருவாரூர், திருத்தாண்டகம் புக் 951.
18. திருமந்திரம் vi 120, தவம் 1, பக். 231
ஒடுங்கி - பாடபேதம்?.
19. இம்மந்திரம் முன்னரும் மேற்கோளாகக் காட்டப்பட்டது.
பார் மந். 1 மந் 3. கு.பு. 3. அத். 1, பக் 14.
20. அப்பர் iv, 75, 3. திருநேரிசை. பக் 699.
21. இருபாவிருபது, 18, சித்தாந்த சாத்திரம் பக் 629.

22. இவ்வைந்து மந்திரங்களிலும் இவ்விடங்களிலும் வருவன என்பது சுவே உப 1-5.

23. இது உறுதி செய்யப்படவில்லை

24. ஸௌம்ய இதமேவஅக்ர ஆஸீத்.
சாண்டோக்கியோபநஷடத் vi, 2,1,
108 உபநிடதங்கள் பக் 59.

25. அப்பர் vi, 559 திருக்கைலாயம், திருத்தாண்டகம் பக் 1020.

26. மேலது iv, 38,7 திருவையாறு, திருநேரிசை பக் 652.

27. பூர்த்தம் - பாடபேதம்?.

28. இது உறுதி செய்யப்படவில்லை.

29. அப்பர் iv, 76, 8 தனித்திருநேரிசை பக் பக். 701.

30. சிவபுராணம் அடி 18 பக். 5.

31. சிவஞா. போ. சிவஞா. பாடி. சூத்10 அதி.2 வெண்பா. 1 பக் 530.

32. அப்பர் iv,77,4 தனித்திருநேரிசை பக். 702.

33. இவ்வுபந்தடங்களுக்கும் உரையாசிரியர் உரையெழுத நினைத்திருந்தார் எனத் தெரிகிறது. சிவற்றுக்கு எடுதியுமிருந்தார். பிரதிகள் முழுமையாகக் கிடைக்கவில்லை.

34. விவிக்த தேஶே சஸுகாஸநஸ்த சுசி:
ஸமந்கரீவஸிர: ஶரீர: அந்த்யாஶ்ரமஸ்த:
ஸகலேந்திரியாநி நிருத்ய......................
கைவல்யோபநிஷத் 1,5
108 உபநிடதங்கள் பக் 128.

35. உறுதி செய்யப்படவில்லை.

36. அத கஸ்மாதுச்யதே ஓம்காரோ யஸ்மாதுச்சார்யமாண ஏவ ப்ராணாநூர்த்வமுத்கராமயதி
தஸ்மாதுச்யதே ஓம்கார
அத கஸ்மாதுச்யதே ப்ரணவ: யஸ்மாதுச்சார்யமாண
ஏவ ருக்யு: ஸாமாதர்வாணங்கிரஸம்
ப்ரஹ்ம ப்ராஹ்மணேப்ய: ப்ரணமயதி நாமயதிச
தஸ்மாதுச்யதே ப்ரணவ ஶ்ரீ அதர்வசிரஸ் உபநிஷத் 2,4
108 உபநிடதங்கள் பக் 155.

37 ஓம் காரரதமாருஹ்ய விஷ்ணும் க்ருத்வா அத ஸாரதிம்
ப்ரஹ்மலோகபதாந்வேஷீ ருத்ராராதநதத்பர:...........

அமிர்தநாதோபநிஷத் 2.
108 உபநிடதங்கள் பக் 152.

38. மேற்கோள் விபரம் தவறு மாண்டூக்யோபநிஷக் 7
108 உபநிடதங்கள் பக் 18.

39. மேற்கோள்விபரம் தவறு. மாண்டூக்யயோபநிஷத் 12
108 உபநிடதங்கள் பக் 19.

40. மேற்கோள் உறுதி செய்யப் படவில்லை.

41. உண்மைவிளக்கம் 34. சித்தாந்த சாத்திரம் பக். 648.

42. திருக்களிற்றுப் படியார் 44. சித்தாந்த சாத்திரம் பக். 688.

43. மேற்கோள் உறுதி செய்யப்படவில்லை.

44. சம்பந்தர் ii, 40, 2 பிரமபுரம் பக் 275.

45. அப்பர் iv, 25, 9 திருவதிகை. பக் 636.

46. சிவபுராணம் அடிகள் 33, 34 பக் 8.

47. திருமந்திர ix, 213 பிரணவ சமாதி, 2, 3 பக் 380.

48. ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம ஓமித்யேதேந ரேசயேத்/
திவ்யமந்த்ரேண பஹுதா குர்யாதா
மலமுக்தயே//
அமிர்தநாதோபநிஷத் 21
108 உபநிடதங்கள் பக் 153.

49. திருமந்திரம் iii, 60 இயமம் 2, பக் 80.

50. மேலது iii, 61 நியமம், 3 பக் 81.

51. சிவஞா. சித். (சுப) சூத் 8. (அதி.2), 21 பக் 246.

52. திருமந்திரம் iii, 63, பிராணாயாமம், 9 பக் 246.

53. யஸ்த்வாவி ஜ்ஞநவாந்பவத்யயுக்தேந மநஸாஸதா/
தஸ்யேந்த்ரியாண் யவஶ்யாநி துஷ்டாஶ்வா இவ ஸாரதே://
கடோபநிஷத் 1,3,5
108 உபநிடதங்கள் பக்.7.

54. திருமந்திரம் iii, 66இ தியானம் பக் 87.

55. விவிக்ததேஶே ச ஸுகாஸநஸ்த: ஶுசி: ஸமக்ரீவஶிர: ஶரீர:/
அந்தயாஶ்ரமஸ்த: சகலேந்த்ரியாணி நிருத்ய பக்த்யா ஸ்வகுரும் ப்ரணம்ய ஹ்ருத்புண்டரீகம் விரஜம் விஶுத்தம் விசிஞ்த்ய மத்யே விஶதம் விஶோகம்/

அசிந்தயமவ்க்தமநந்த ரூபம் ஶிவம் ப்ரஶாந்தமம்ருதம் ப்ரஹ்மயோநிம்//
தமாதி மத்யாந்த விஹீநமேகம் விபும் சிதாநந்தமரூபத்புதம்
உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீல கண்டம் ப்ரஶாந்தம்//
த்யாத்வா முநிர்கச்சதி பூதயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம்
தமஸ: பரஸ்தாத்//
கைவல்யோபநிஷத் 1-7
108 உபநிடதங்கள் பக் 128.

56. திருமந்திரம் iii, 67இ சமாதி 9 பக் 91.

57. மேற்படி., 67, சமாதி 11 பக் 91.

58. மேற்படி., iii, 63 பிராணாயாமம் 12, பக் 83.

59. மேற்படி., iii, 76 கேசரியோகம் 7 பக் 116.

60. அப்பர் vi, 48, 1 திருவொற்றியூர், திருத்தாண்டகம் பக் 994.

61. சிவஞா. போ: சிவஞா. பாடி., சூத் 9, அதி. 1, வார்த்திகப் பொழிப்பு. பக் 503.

62. உண்மை நெறி விளக்கம் 4, சித்தாந்த சாத்திரம். பக் 1156.

63. அப்பர் v, 91,8 தனித்திருக்குறுந்தொகை பக். 870.

64. ஹிரண்யமயே பரே கோஶே விரஜம் ப்ரஹ்ம நிஷ்கலம்
தச்சுப்ரம் ஜோதிஷாம் ஜோதி: யத்தத் ஆத்மவிதோ விது:
முண்டகோப நிஷத் 12,2,
108 உபநிடதங்கள் பக். 16, 17.

65. சம்பந்தர் I, 11, 2 திருவீழிமிழலை பக் 21.

66. அப்பர் v, 91,7 தனிக்குறுந்தொகை பக் 870.

67. அப்பர் iv, 81, 2 திருவிருத்தம் பக் 707.

68. போற்றித்திருவகவல் அடிகள் 136-142 பக் 25.

மூன்றாமத்தியாயம்

1. திருமந்திரம் iv, 84, சத்திபேதம் 84, 9 பக்.151.

2. சிவஞா. சித் (சுப) சூத் 1(அதி1) 18 பக். 43.

3. அப்பர் iv, 40இ 4 திருவையாறு, திருநேரிசை பக்.655.

4. ஸஞ்சுகோ - பாடம்?

5. அதர்வசிரோ 3-4
108 உபநிடதங்கள் பக். 152.
6. அப்பர் iv, 95, 2 திருவீழிமிழலை, திருவிருத்தம் பக் .726.
7. திருத்தெள்ளேணம்18 பக்.291.
8. ப்ரஹ்ம விஷ்னு ருத்ரேந்த்ரஸ்தே ஸம்ப்ரஸுயந்தே
.... அதர்வஸிகோபநிஷத்13
108 உபநிடதங்கள் பக்.159.
9. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை.
10. அப்பர் v, 100, 3 ஆதிபுராணக் குறுந்தொகை பக்.885.
11. அப்பர் vi, 95, 3 தனித்திருத்தாண்டகம. பக்.1110.
12. சுந்தரர் vii, 13, 2 திருத்துறையூர் பக்.1145.
13. திருப்புலம்பல், 3 பக்.519.
14. யசுர் வேதம், iv சதருத்ரீயம் 3,4
15. அப்பர் iv, 45,8 திருவொற்றியூர், திருநேரிசை பக் 662
16. திருத்தெள்ளேணம் 1 பக்.281.
17. அப்பர் vi, 19,8 திருவாலவாய், திருத்தாண்டகம் பக்.933.
18. குழைத்தபத்து, 5 பக்.478.
19. கடவுள் வாழ்த்து 6.
20. யுத்தகாண்டம், தேவர்கள் போற்றுபடலம் 7.
21. அப்பர் iv, 92, 5 திருவையாறு, திருவிருத்தம் பக் .721.
22. இம்மேற்கோள் உறுதி செய்யப் படவில்லை.
23. அப்பர் iv, 4,8 திருவரரூர், பக்.605.
24. உரையாசிரியரது இக்குறிப்பு உறுதி செய்யப்படவில்லை.
25. என்பது உறுதி செய்யப்படவில்லை.
26. உறுதி செய்யப்படவில்லை.
27. அப்பா vi, 38,6 திருவாரூர், திருத்தாண்டகம் பக்.978.
28. திருக்கோத்தும்பி. 9 பக்.273.
29. சிவஞா போ: சிவஞா. பாடி சூத் 11 பக்.536.
30. காரைக்காலம்மை: அற்புதத்திருவந்தாதி 20. பக். 11.
31. அப்பர் vi, 98,7 மறுமாற்றத்திருத்தாண்டகம் பக்.1118.

32. பராபரக்கண்ணி, 309 பக்.584.
33. சம்பந்தர், iii, 54,6 திருப்பாசுரம் பக்.485.
34. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம் 838 பக்.732.
35. சிவஞா. போ. சிவஞா பாடி சூத் 6 அதி. 2, வெண்பா 4 பக். 409.
36. காரைக்காலம்மையார்: அற்புத்திருவந்தாதி 61 பக்.16.
37. சம்பந்தர் iii, 54,5 திருப்பாசுரம் பக்.485.
38. பெரியபுராணம்: திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்புராணம் 834 பக்.731.
39. மேலது 835 பக்.732.
40. அப்பர் v, 27, 5 திருக்குறுந்தொகை, திருவையாறு பக்.785.
41. கருவூர்த்தேவர் திருவிசைப்பா, கங்கை கொண்டசோளேச்சரம் பக்.36.
42. சிவஞா. சித். (சுப) பாயிரம் 5 பக்.9.
43. அப்பர் vi, 97, 10 திருவினாத்திருத்தாண்டகம் 1117.
44. மேலது vi, 84,7 திருச்செங்காட்டங்குடி, திருத்தாண்டகம. பக்.1088.
45. சிவஞா. போ: சிவஞா. பாடி. சூத் 11, அதி. 2 பக்.549, 550.

நான்காமத்தியாயம்

1. அத கஸ்மாதுச்யதே ஓம்: ஸர்வாந் ப்ராணாந் ....
அதாவஸிரஸ் உபநிஷத் 4.
108 உபநிடதங்கள் பக் 156.
2. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை.
3. அப்பர் vi, 34,1 திருவாரூர், திருத்தாண்டகம் பக்.968.
4. மேலது vi, 6, 5. திருவதிகை, திருவடித் திருத்தாண்டகம் பக்.900.
5. மேலது v, 100, 3. ஆதி புராணத்திருக்குறுந்தொகை, பக்.285.
6. திருவண்டப்பகுதி அடி 43. பக். 49.
7. அப்பர் vi,45, 9 திருவாற்றியூர், திருத்தாண்டகம் பக்.995.
8. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம் 826 பக்.730.
9. சிவஞா. போ: சிவஞா. பாடி சூத் 5 அதி. 2 வெண்டா3. பக்.388.
10. திருவாசகம்: கோயிற்றிருப்பதிகம் 7 பக் 391.

11. ஆரணம்2 பக். 356.
12. திருமந்திரம், viii, 175 பராவத்தை, 21 பக்.325.
13. சம்பந்தர் I, 128 திருவெழுகூற்றிருக்கை, பிரமபுரம் பக்.197.
14. சிவஞா. சித் (சுப) சூத் 1, (அதி3) 65 பக்.84.
15. சம்பந்தர் i, 50, 1, வலிவலம் பக். 79.
16. இருக்குவேதம் i,164,20
17. அப்பர் vi 94,5 நின்றதிருத்தாண்டகம் பக்.1108.
18. மேலது., vi, 95, 1 தனித்திருத்தாண்டகம் பக்.1110.
19. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை.
20. சிவஞா. சித் (சுப) சூத் 2 அதி, 3, 57 பக். 134.
21. அப்பர் v, 33, 4 திருமறைக்காடு, திருநேரிசை பக். 645.
22. சின்மயானந்த குரு 6. பக்.70.
23. வேத மோதிலென் வேள்விகள் செய்யிலென் - பாடம்
24. அப்பர் iv, 99, 4 பாவநாசத்திருக்குறுந்தொகை பக்.884.
25. திருமந்திரம் பாயிரம், 2,1 வேதச் சிறப்பு 1, பக்.8.
26. அமிர்தநாத உப, 17
108 உபநிடதங்கள் பக். 153.
27. மௌனகுரு வணக்கம் 2 பக் .88.
28 பார்க்க மேல் பக்.75.
29. இருக். வே 10, 121,3.
30. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை.
31. கஜபம் மேகபதிம் ருத்ரம் ஜலாகஷபேஷஜம்/
தச்சம்யோ: ஸும்நமீமஹே// இருக்குவேதம் 1,43, 4.
32. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை.
33. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை.
34. திருவண்டப்பகுதி அடி 49 பக்.49.
35. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை.
36. அத கஸ்மாதுச்யதே ஈஶாந: ய: ஸார்வாந்
தோவந் ஈஶதே ஈஶநீபி : ஜஞநீஶச
பரமஶக்திபி:............... அதர்வ சிரஸ் உபநிடதம் 4
108 உபநிடதங்கள் பக்.156.

37. கோயில் மூத்ததிருப்பதிகம் 1 பக்.377.

38. அசிந்த்யம் அவ்யக்தம்நந்தரூபம் ஶிவம்.........
கைவல்யோபநிஷத். 6.
108 உபநிடதங்கள் 130.

39. சிவபுராணம் அடி 5, பக்.5.

40. சிவஞா. சித் (சுப) சூத்2, (அதி4) 74 பக்.147.

41. ஸ்த்திரோபிரங்கை: புருரூப உக்ரோ.........
இருக்குவேதம் 1, 133, 9.

42. இம்மேற்கோள் உறுதி செய்யப்படவில்லை.

43. சிவஞா. போ: சிவஞா பாடி, சூத் 10. பக்.520.

44. சம்பந்தா I, 132,6. திருவீழிமிழலை. பக்.207.

45. அப்பர் iv, 77, 5. தனித்திருநேரிசை பக்.702.

46. பார்க்க. அத்தி. 4, மந் 16, கு.பு. 1, பக்.119.

47. உண்மைநெறிவிளக்கம் தக்கம் 4
சித்தாந்த சாத்திரம் பக்.1156.

48. உண்மை நெறிவிளக்கம் 3. சித்தாந்த சாத்திரம் பக்.1156.

49. கோயிற்றிருப்பதிகம், 7 பக். 391.

50. சிவப்பிரகாசம் சூத் 9, 3 சித்தாந்த சாத்திரம் பக்.981.

51. இது உறுதி செய்யப்படவில்லை.

52. ஸ்மிந் த்யௌ ப்ரிதிவீ சாந்தரிக்ஷமோதம்
மந: ஸஹ ப்ராணைஶ்ச ஸர்னவ:
108 உபநிடதங்கள் பக்.16.

53. ந தத்ர சக்ஷீஉ கச்சதி வாக் கசதி நமந:
ந வித்மோ விஜாநீஞந்மோ யதா ஏதத் அநுஶிஷ்யாத்
கேநோபநிஷத் 1,3
108 உபநிடதங்கள் பக். 2.

54. திருமந்திரம் I, 27 அன்புடமை 3. பக்.40.

55. கந்தபுராணம் ததீசி யுத்தரப்படலம் 46.

56. கல்லாலின்...........1, பக்.513.

57. அப்பர் iv, 105, 1 திருப்புகலூர் திருவிருத்தம். பக். 738.

ஐந்தாமத்தியாயம்

1. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை.
2. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை.
3. தஸ்மாத்வா ஏதஸ்மாத் ஆந்மந ஆகாஸஸ ஸம்பூத: ஆகாஸாத்வாயு:
   வாயோர் அக்நி அக்நே ஆப: அப்யஹ் ப்ரிதிவீப்ரிதிவ்யா
   ஓஷதய: ஓதயோ அந்நம் அந்நாத் புந: 2, 1,1.
   தைத்திரியயோபநிஷத் 2,1
   108 உபநிடதங்கள் பக் // 23.
4. யதாஸத: புருஷாத்க்லேஸலோமாநி ஸம்பவந்தி.
   முண்டகநிஷத 1,1,8
   108 உபநிடதங்கள் பக்.15.
5. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை.
6. தில்லைவாழந்தணர் புராணம் 1.பக்.242.
7. அப்பர் vi, 60, 3 கற்குடி, திருத்தாண்டகம் பக்.1031.
8. போற்றித் திருவகவல் அடிகள் 137 - 142 பக்.84.
9. சிவஞா. போ: சிவஞான பாடி. சூத் 2, அதி. 2 வெண்பா 2 பக்.146.
10. அப்பர் iv, 99,1 திருவேகம்பம், திருவிருத்தம் பக்.731.
11. பார்க்க:குறிப்புகள், அத்தி. 4,29.
12. இம்மேற்கோள் உறுதி செய்யப்படவில்லை.
13. இம்மேற்கோள் உறுதி செய்யப்படவில்லை.
14. சுவேதாசுவதரம் அத் 4, 18.
15. இம்மேற்கோள் உறுதிசெய்யப்படவில்லை.
16. சம்பந்தர் iii, 125, 9 திருநல்லூர்ப் பெருமணம். பக்.596.
17. அப்பர் iv, 100, 1. திருவின்னமபர், திருவிருத்தம் பக்.732.
18. சிவஞா போ: சிவநா பாடி சூத் 12, அதி 4, வெண்பா 3 பக்.572.
19. அப்பர் vi, 27, 4 திருவாரூர் திருத்தாண்டகம் பக்.951.
20. யேந ரூபம் கந்தம் ஸப்தாந் ஸபர்ஸாம்ஸ்ச மைதுநாந்/
    ஏதேனைவ விஜாநாதி பரிஸிஷ்யத ஏத்த் வைதத்//
    கடோபநிஷத் ii, 1,3
    108 உபநிடதங்கள் பக் 7.

21. நசுஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா நாந்யதேவைஸ்தபஸா கர்மணா வா/
ஜஞாநப் ரஸாதேநே விசுத்த ஸத்வததஸ்து தம்பம் யதே நிஷ்கலம் த்யாயமாந://
முண்டகோப நிஷத் iii,1,8.

22. நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ நமேதயா நபஹுநா ஶ்ருதேந//
யமேவைஷ வ்ருணுதே தேநலப்யஸ் தஸ்யைஷ விவ்ருணுதே தநூம்ஸ்வா// முண்டகம் iii,2,3
108 உபநிடதங்கள் பக் 17.

23. அப்பர் vi, 97, 10 திருவினாருத்திருத்தாண்டகம் பக்.1117.

24. சிவப்பிரகாசம் சூத் 2, i, சித்தாந்த சாத்திரம் பக்.783.

25. ஆத்மேந்த்ரியமேநோயுக்தம் போக்தேத்யாஹுஃ......
கடோபந்வித் 1, 3, 4
108 உபநிடதங்கள் பக்.7.

26. திருமந்திரம் 158, சீவன், vii, 1. பக்.286.

27. ரக்ஷ்யதே பாடம்.

28. சிவஞா. போ: சிவஞா. பாடி. சூத்10, அதி. 2 வெண்பா1 பக். 530.

ஆறாமத்தியாயம்

1. கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப்படலம் 258.
2. சிவஞா. சித் (சுப) சூத் 10 (அதி1), 2 பக்.295.
3. மேலது., சூத்.1, அதி.3, 66, பக்.101.
4. மேலது.,11, 2 பக்.306.
5. பெரியபுராணம்: திருக்கூட்டச் சிறப்பு 9 பக்.176.
6. நெஞ்சுவிடு தூது. 33, 112, சித்தாந்த சாத்திரம். பக்.1121, 1141.
7. இம்மேற்கோள் உறுதி செய்யப்படவில்லை.
8. சம்பந்தர் ii 6,7 திருவையாறு பக்.225.
9. சிவஞா. சித் (சுப) சூத் 1, (அதி. 2) 52 பக்.73.
10. இம்மேற்கோள் உறுதி செய்யப்படவில்லை.

நூற் பட்டியல்

மேற்கோள் விபரக்குறிப்புகளில் பக்கங்கள் தரப்பட்டிருந்தால், இப்பதிப்புகளிலெனக் கொள்க.

1. **மெய் கண்ட சாத்திரம்**, மெய்கண்ட சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், 2ம் பதிப்பு, சென்னை: சைவ சித்தாந்த மகா சமாஜம், 1940, vi, 1206 பக்.

2. **சிவஞான போதம்,** மெய்கண்ட தேவர் அருளிச் செய்த சிவஞான போதமும் சிவஞான சுவாமிகள் அருளிச் செய்த சிவஞான பாடியமும், சென்னை : சைவ சிந்தாந்த மகா சமாஜம், 1936 28, 57ம் பக்.

3. **சிவஞானசிந்தியார்**, சுபக்கம் மூலமும் சிவஞான சுவாமிகள் அருளிச் செய்த பொழிப்புரையும் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அருளிச் செய்த பதவுரையும், சென்னை : சைவ சிந் நூற் பதி கழகம், 1923 (1954 மறு பதிப்பு) 17, (2), 236 பக்.

4. **தேவாரம்,** அடங்கள் முறை : தேவாரத் திருப்பதிகங்கள், பதிப்பாசிரியர் : அ. ச. ஞானசம்பந்தன், சென்னை: கங்கை புத்தக நிலையம், 2002 ** 23, 125, அ 26, (2) 1430 பக்.

5. **திருவாசகம்,** கா. சுப்பிரமணிய பிள்ளை உரை, சென்னை: இரத்தினநாயக்கர், 1947, 519 பக்.

6. **திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமறை,** 2ம் பதிப்பு, திருப்பறந்தான் காசிமடம், 1989 80 பக்.

7. **திருமந்திரம்,** திருமூலர் திருமந்திரம், கொழும்பு மௌனாச்சிரமம், 1993, 466 பக்.

8. **பதினோராந் திருமறை,** சென்னை : சைவசித்தாந்த மகாசமாஜம், 1933, 347 பக்.

ISBN 978-955-659-111-7

குமரன் புத்தக இல்லம்

விடயம் : இந்துசமயம்

விலை ரூபா 600.00